விற்பனை உரிமை:

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1

# பௌத்த தருமம்

ஆசிரியர் :
**ப. ராமஸ்வாமி**

ஹிலால் பதிப்பகம்
திருநெல்வேலி

முதற் பதிப்பு : 1956

[2500-ஆம் ஆண்டு புத்த ஜயந்தி வெளியீடு]

விலை ரூபாய் மூன்று

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி.

# முன்னுரை

புத்தர் பெருமான், ஆறு ஆண்டுகள் அருந்தவம் செய்து, தமது முப்பத்தைந்தாவது வயதில், கி.மு. 538, வைகாசிமீ", 6-ஆம் தேதி, புதன்கிழமை, 'மதிநாண் முற்றிய மங்கலத் திருநா'ளான பூர்ணிமையன்று, மெய்ஞ் ஞானமாகிய போதியடைந்தார். அவர் அமர்ந்திருந்த போதிமரத்தடியிலும், அருகிலும், ஏழு வாரங்கள் தங்கி யிருந்துவிட்டு, அவர் காசி மாநகரை அடுத்திருந்த சாரநாத்தில் மான்சோலை என்னுமிடத்திற்குச் சென்ருர். அங்கே தங்கியிருந்த கௌண்டின்யர், காசியபர், பாஷ்பர், அசுவஜித், பத்திரகர் என்ற ஐந்து தாபதர்களும் முன்னல் கௌதம புத்தரோடு உருவேலா வனத்தில் தவம் செய்து கொண்டிருந்தவர்கள். புத்தர் அவர்களைக் கண்டு, முதன் முதலாகத் தமது தருமத்தை அவர்களுக்கு உபதேசம் செய்தார். இதுதான் தரும சக்கரப் பிரவர்த்தனம் — பெருமான் பௌத்த தருமமாகிய அற ஆழியை உருட்ட ஆரம்பித்தமை, சுமார் 2,500 ஆண்டுகளாக அந்த ஆழி சுழன்றுகொண்டே யிருக்கின்றது.

ஊர் ஊராக நடந்துசென்று, நாடும் நகரும் நன் கறியும்படி, புத்தர் எண்பது வயதுவரை தமது தருமத்தை உபதேசித்து வந்தார். அதை ஏற்றுக்கொண்டு மக்கள் பௌத்த தரும உபாசகர்களாயினர்; அதன்படி வீட்டை விட்டு வெளியேறிய துறவிகள் சீவர உடையணிந்து, சீலம் மிக்க பிக்குகளாயினர்; பெண்களும் துறவு பூண்டு பிக்குணிகளாயினர். இவர்கள் அனைவரையும் கொண்டது தான் பௌத்த சங்கம்.

பௌத்தர்களுக்குப் புத்தர், தருமம், சங்கம் ஆகிய மூன்று சரணங்கள் உண்டு. பெருமானின் உபதேசங்கள்

திரிபிடகங்கள் என்ற பௌத்தத் திருமுறைகளாக அமைந்து தருமத்திற்கு வழிகாட்டி வருகின்றன. சங்கத்திற்குரிய விநய விதிகளும் அவர் காலத்திலேயே அமைந்திருந்தன.

11-ஆம் நூற்றாண்டு வரை பாரத நாடு முழுதும் பரவியிருந்த தருமம், பின்னால் இந்நாட்டை விட்டே மறைந்துபோய், மற்ற ஆசிய நாடுகள் பலவற்றில் வளர்ந்து வந்தது. 25-நூற்றாண்டுகளுக்குப் பின் இப்போது பௌத்த தருமத்தைப் பற்றியும், போதி வேந்தராகிய புத்தரைப் பற்றியும், இந்தியாவிலும் உலகிலேயும் பெரு விழிப்பு ஏற்பட்டுளது. இது உலகின் மாபெரும் விந்தைகளிலே ஒன்று. பௌத்த தருமம், பழமை பழமையென்று ஒதுக்கித் தள்ளப் பெறாமல், பின்னைப் புதுமைக்கும் புதுமையாக விளங்கிவரும் பெருமைக்குக் காரணம் அதிலுள்ள உண்மையும், அதன் ஆற்றலுமேயாம். இந்த நவநாகரிகக் காலத்திலும், நமது அணுயுகத்திற்கு அப்பாலும், பேரறிவாளர்கள் கண்டுபிடிக்கக் கூடிய விஞ்ஞானப் புதுமைகளால் பௌத்த தருமத்தை அசைக்க முடியாது. ஏனெனில் அதுவே விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பொருத்தமாகவும், பகுத்தறிவை ஆதாரமாய்க் கொண்டும் அமைந்த தருமமாகும்.

உலகிலே சமயங்கள் பெரும்பாலும் பரம்பொருள், ஆன்மா இரண்டையும் அடிப்படையாகக்கொண்டு அமைந்திருக்கின்றன. பரம்பொருளை விட்டுவிட்டு, ஆன்மாவே நிலையானது என்றும், அதுவே பரம்பொருளாகும் என்றும் ஒரு கொள்கையுண்டு. பூதவாதம், பொருளியல்வாதம், நாத்திகம் ஆகியவை, மாறுதலையும் அழிவையும் இயல்பாய்க் கொண்ட பொருள்களைத் தவிர உலகிலே வேறு நித்தியமான எதுவுமில்லை என்றும், ஜடப் பொருளிலிருந்தே உயிரும் தோன்றியது என்றும் கூறுவன.

இவை அனைத்திலிருந்தும் பௌத்த தருமம் மாறுபட்டது. அதில் இறைவனுமில்லை, ஆன்மாவுமில்லை — எனினும் அது வெறும் நாத்திகமன்று. பிரபஞ்ச இயல்புக்கு மேலான ஒரு பதம் — துக்கமில்லாத சாந்தி நிலையம் — நிருவாணம் — இருப்பதாக அது கூறுகின்றது. 'நானே பிரமம்' என்ற நிலையை ஜீவான்மா அடையக்கூடிய நிலையைப் போதிக்கும் வேதாந்த அத்வைதத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாகத் தோன்றும் பௌத்த தருமம் அத்வைதமும் அன்று. சரீரத்துள் இருந்து கொண்டே, அதனோடு ஒட்டாமல், பார்ப்பவனும், கேட்பவனும், அநுபவிப்பவனும் 'ஆத்மன்' விளங்குகிறான் என்றால், 'அந்த ஆத்மன் செவிகளால் பார்க்க முடியுமா, கண்களால் கேட்க முடியுமா?' என்று பிற்காலத்துப் பௌத்த ஆசாரியர் நாகசேனர் கேள்வியை எழுப்புகிறார். சருவவல்லமையுள்ள ஆன்மா செவிகளில்லாமலே கேட்கவும், கண்களில்லாமலே காணவும் சக்தி பெற்றிருக்க வேண்டுமல்லவா? ஆகவே, பௌத்த தருமத்தைப் பற்றி அவசரப்பட்டு முடிவுகளைச் சொல்லாமல், ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியமாகும். ஆராய்ச்சி முடிவுகளில் கருத்து வேற்றுமைகள் இருப்பதும் இயல்பே.

ஆனால் பொதுவாகப் புத்தர் போதித்த ஒரு பேருண்மையை நாம் நினைவிலிறுத்திக் கொள்ளவேண்டும். ஒவ்வொருவரும் தமது சொந்த முயற்சியாலேயே (துக்கத்திலிருந்து) விடுதலை பெற வேண்டும். மரணத் தருவாயில் அவர் செய்த இறுதி உபதேசம்: 'உங்களுடைய விமோசனத்திற்காக இடைவிடாமல் கருத்தோடு உழையுங்கள்!'

இன்றைய உலகில் அன்பும் அருளும் அருகி, வெறுப்பும் பகைமையுமே செறிந்து வளர்ந்துள்ளன. அணுகுண்டு,

வாயு குண்டுகளால் சருவநாசம் ஒருபுறம், அன்பு,நேசம், சகிப்புத்தன்மை, நல்லொழுக்கம் முதலியவற்ருல் எல்லா நாடுகளையும் ஒரே உலகமாக ஒன்றுசேர்ந்துச் சாந்தியோடும், சமத்துவத்தோடும் வாழச் செய்தல் மற்றெரு புறம் — இந்த இரண்டு நிலைகளே இருக்கின்றன. உலகத்தை வாழவைக்கப் புத்தர் போதித்த அருளறம் இன்று மிகவும் பயன்படும். தனி, மனிதரோ, நாடோ, 'நான், நான்' என்று அகங்காரம் கொண்டிருக்கும்வரை அன்புக்கு இடமில்லை.

'ஒரு துளி தண்ணீர் எக்காலத்திலும் காய்ந்து போய் விடமால் 'காப்பது எப்படி?' என்று ஒரு சமயம் புத்தர் சீடர்களை வினவினுர். எவர்க்கும் வழி தெரியவில்லை. பெருமானே வழியையும் தெரிவித்தார்: 'அதைக் கடலுள் சேர்ப்பதால்!' உண்மைதான். மனிதன் தன்னை மானிட சமூகமாகிய கடலுள் சேர்த்துக் கொள்ளாவிட்டால் வரண்டுதான் போவான்.

இந்நூலைப் படிக்கு முன்னுல் தெரிந்து கொள்ள வேண்டிய புத்தருடைய திவ்விய சரிதையைப் 'போதி மாதவன்' என்ற நூலாக எழுதியுள்ளேன். அவர் உபதேசங்களும் தனி நூல்களாக வெளிவந்துள்ளன. உலகில் தோன்றிய ஆறு தீர்க்கதரிசிகளிடையே பெருமானின் நிலை பற்றிப் 'புத்த ஞாயிறு' என்ற நூலில் விவரித்துள்ளேன். அவரைப் பற்றி ஓரளவு தெரிந்து கொண்ட பின்பு இந்நூலைப் படித்தல் பெரும் பயனுகும்.

ப. ராமஸ்வாமி
நெல்லை

# உள்ளுறை

---


| | | | |
|---|---|---|---|
| 1. | நான்கு வாய்மைகள் | பக்கம் | 17 |
| 2. | அஷ்டாங்க மார்க்கம் | ... | 47 |
| 3. | அடிப்படைக் கொள்கைகள் | ... | 87 |
| 4. | நிருவாணம் | ... | 135 |
| 5. | பௌத்தமும் சாதிப் பிரிவினையும் | ... | 148 |
| 6. | பௌத்த சங்கம் | ... | 174 |
| 7. | பௌத்தத் திருமுறைகள் | ... | 187 |
| | உதவி - நூல்கள் | ... | 221 |

## பௌத்த தரும சம்பந்தமான முக்கியமான சொற்களும் சொற்றொடர்களும்

அத்தா — ஆன்மா.

அநத்தா — ஆன்மா இல்லாதது.

அநாகாமி — இனிப் பிறப்பில்லாத நிலையை அடைந்தவர்.

அநாத்மம் — ஆன்மா அற்றது.

அநித்தம்
அநித்தியம் } — நிலையில்லாமை.

அபிதருமம் — பௌத்த சமயக் கொள்கைகளின் நுட்பங்களை விளக்கும் திரிபிடகப் பகுதி.

அப்பமாதம் — கருத்துடைமை, இடைவிடாத முயற்சியுடன் கூடிய சிரத்தை; 'அப்பமாதோ அமத பதம் — கருத்துடைமையே நித்தியமான நிருவாண மோட்சத்திற்கு வழி' என்பது புத்தர் திருவாக்கு; இதற்கு நேர் எதிரானது பமாதம் - மடிமை.

அமிதாபா — எல்லையற்ற ஜோதி நிறைந்தவர்; புத்தர்.

அருகத்து — நிருவாணத்திற்கு உரியராகும் நிலையிலுள்ளவர்.

அருவுரு — நாமமும் உருவமும்.

அவதானம் — வீர வரலாறு, புகழத்தக்க செயல்.

அவா — திருஷ்ணை, ஆசை, வேட்கை.

அவித்தை — பேதைமை, அஞ்ஞானம்.

அஷ்டாங்க மார்க்கம் — நிருவாண மார்க்கத்திற்குரிய எட்டுப் படிகள்.

ஆசை — அவா.

ஆனந்தம் — புத்தர் வகுத்த வழிகளின்படி, விலக்க வேண்டிய பத்துத் தீவினைகளையும் விலக்கி, கொள்ள வேண்டிய பத்துச் சீலங்களையும் மேற்கொண்டு ஒழுகுவதில் அடையும் இன்பம்.

ஆன்மா — உடலை இடமாகக் கொண்டுள்ள அழிவில்லாத சரீரி, பிராணன், உயிர்.

இந்திரியங்கள் — சிரத்தை, வீரியம், ஸதி, சமாதி, பிரஞ்ஞை என்ற ஐந்து ஆற்றல்கள்.

இருத்திபாதங்கள் — சந்தம், வீரியம், சித்தம், மீமாம்சை என்ற மன நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையான ஆற்றல்கள்.

உணர்ச்சி — விஞ்ஞானம்.

உணர்வு — சைதந்யம் என்ற உள்ள உணர்வு.

உதானம் — உயிர்ப்பித்தது, கூறியது என்று பொருள் — கட்டுரைத் தொகுதி.

உபவஸதம் — (உபோசதம்) உபவாசம்: விரத நாள்.

உபஸம்பதை — பிக்குவாகச் சேர்ந்து பயிற்சி பெற்றவர் முழுத் தீக்கையும் பெறுதல்.

உபேட்சை — விருப்பு வெறுப்பின்றிச் சமமாகப் பார்க்கும் நிலை.

உருவம் — நிலம், நீர் முதலியவை சேர்ந்த ரூபஸ்கந்தம்.

ஊறு — ஸ்பரிசம்.

கந்தகை — பகுதி.

கந்தங்கள் — ஸ்கந்தங்கள் பார்க்கவும்.

கருமம் — செயல், வினை: வினைகள் காரணமாக எழும் பயன்.

கருமத் தொகுதி — வினைப் பயன்கள், பவம்.

காதை — கவிதை, செய்யுள்.

காமம் — ஆசை.

காயானுபாஸனை — உடல் அசுத்தமானது என்று கருத்தைச் செலுத்துதல்.

குத்தகம் — சிறிது.

குறி — ஆறு புலன்களின் மூலம் பெறும் அறிவு.

சங்கம் — பௌத்த பிக்குகளின் திருக்கூட்டம்.

சந்தம் — ஒருமையுடன் மனோதத்துவ ஆற்றலின் சிகரத்தை அடைய ஆவலளிப்பது.

சமாதி — நல்லமைதி, தியானம்.

சம்சயவாதி — பரம்பொருள், நித்தியமான ஆன்மா பற்றி உறுதியான முடிவில்லாமல் சந்தேகப்படுவோர்.

சம்சார சக்கரம்— இறப்பும் பிறப்புமாக மாறி மாறி வரும் வளையம்.

சம்யுத்தம் — தொடர்புள்ளது.

சார்புகள் — நிதானங்கள் பார்க்கவும்.

சித்தம் — உள்ளம் பரிசுத்தமாயுள்ள நிலை.

சித்தானுபாஸனை — சிந்தனைகளைப் பிரித்துப் பரிசீலனை செய்தல்.

சிரத்தை — நம்பிக்கை.

சிராவக போதி — அருகத்தாகிப் போதியடைதல்.

சீலங்கள் — பத்து ஒழுக்கங்கள்: கொல்லாமை, திருடாமை, வியபசாரம் செய்யாமை, பொய்யாமை, போதைதரும் பொருள்களை உண்ணாமை, இரவில் தூய உணவை மிதமாக உண்ணல், அணிகள் முதலியவற்றை விலக்கல், தரையில் பாய்மீது உறங்குதல், களியாட்டங்களைத் தவிர்த்தல், பொன், வெள்ளியைத் தீண்டாமை.

சுத்தம் — சூத்திரம், உபதேச வசனங்கள்.

சுள்ளம் — குள்ளம், சிறிய.

சூனியம் — வெறுமை.

சூனிய வாதி — வாழ்வு மரணத்தோடு முடிந்துவிட்டது, வேறு நிலை யில்லை யென்ற கொள்கையுடையோர்.

செய்கை — ஸம்ஸ்காரங்கள்.

தகோபா — தாதுகோபம், அஸ்தி போன்ற அங்கங்களைப் புதைத்து வைத்து மேலே கட்டும் ஸ்தூபம்.

தச சீலங்கள் — சீலங்கள் பார்க்கவும்.

ததாகதர் — புத்தர், முன்னோர் வழியிலே செல்பவர்.

ததாகத கர்ப்பம் — புத்தக் கரு.

தத்துவங்கள் — முப்பத்தேழு தத்துவங்கள் பார்க்கவும்.

தம்மம் — தருமம்.

தருமம் — பொருள்கள், உயிர்களின் தன்மை; அவைகளுக்குரிய நியமம்; உண்மை; ஒழுக்க முறைகள்; சமயக் கொள்கைகளின் தொகுதி, சமயம்.

தரும சக்கரப் பிரவர்த்தனம் — அற ஆழி உருட்டுதல்.

தரும விசாரம் — திரிபிடகங்கள் முதலிய நூல்களின் ஆராய்ச்சி.

தருமானுபாஸனை — தளைகள், போத்தியாங்கங்கள், புலன்களைப் பகுத்துப் பரிசீலனை செய்தல்.

தாதுகோபம் — தகோபா பார்க்கவும்.

தானம் — ஈகை.

தியானம் — சிந்தையை ஒரு நிலைப்படுத்தும் சமாதி.

திரிசரணங்கள் — புத்தர், பௌத்த தருமம், பௌத்த சங்கம் ஆகிய மூன்று அடைக்கலங்கள்.

திரிபிடகங்கள் — மூன்று தொகுதிகளான திருமுறைகள்.

தீக — நீண்ட.

தீவினைகள் — பாவங்கள் பத்து: பிறர் பொருளை விரும்புதல், கோபம், பொல்லாக் காட்சி, பொய், கோள், கடுஞ்சொல், வீண் பேச்சு, கொலை, காமம், களவு.

துக்கம் — பிறவி காரணமான பிணி, மூப்பு, பிரிவு, சாக்காடு, நிலையாமை ஆகியவற்றால் வரும் துக்கம்.

துக்க காரணம் — பிறப்பு துக்கத்திற்குக் காரணம், பிறப்புக்குக் காரணம் பேதைமை, அவா முதலிய 12-சார்புகள் அல்லது நிதானங்கள்.

துக்க நிவாரணம் — அவா, பேதைமை முதலிய சார்புகளை ஒழித்தல்.

துக்க நிவாரண மார்க்கம் — அஷ்டாங்க மார்க்கத்தின் மூலம் தியானத்தில் நிலைத்து, நிருவாணம் பெறுதல்.

துடிதலோகம் — துஷித உலகம்: பூவுலகுக்கு வரு முன்னால் புத்தர் அங்கு தங்கியிருந்தார்.

தேரர் — ஸ்தவிரர், பௌத்த சங்கத்தில் பத்து ஆண்டுகட்குக் குறையாமல் பிக்குவாயிருந்தவர்.

தேரவாதம் — பௌத்தத் திரிபிடகங்களை ஆதாரமாய்க் கொண்டு, புத்தர் போதித்த ஆதிக் கொள்கைகளைச் சிறிதும் மாற்றாமல் பின்பற்றுவோரின் சித்தாந்தம்.

தேரி — தேரருக்குப் பெண்பால்.

தோற்றம் — பிறப்பு.

நல்லமைதி — தியானம், சமாதி, யோகம் என்பது; நிர்விருத்தி என்ற சாந்தி நிலை.

நல்லூக்கம் — தீய எண்ணங்களை அவித்து, அவை எழாதபடி காத்து, நல்லெண்ணங்களை வளர்த்தல்.

நல்லூற்றம் — நல் விருப்பங்கள், நல் ஆர்வம், நற் சிந்தனை ஆகியவை: புலன் இன்பங்களைத் துறந்து, துவேஷமின்றி, அஹிம்ஸையோடு உறுதியாக நிற்றல்.

நல் வாய்மை — சத்தியமான வாக்கு; பொய், புறம் பேசுதல், பயனற்ற பேச்சு ஆகியவற்றை விலக்கி, நயம்பட உரைத்தல்.

நல் வாழ்க்கை — ஜீவனத்திற்கு வேண்டிய வருவாயை நியாயமான வழிகளில் சம்பாதித்து வாழ்தல்.

நற்கடைப்பிடி — நல்ல உறுதியும், நன்னினைவும்; கருத்தோடு, உறுதியோடு, நினைவோடு, ஊக்கத்தோடு செயல் புரிதல்.

நற்காட்சி — தெளிந்த மெய்க் காட்சி, பொருள்களின் உண்மை நிலையைப் பகுத்துணர்தல்; இதற்கு எதிர் மறையானது பொய் அல்லது பொல்லாக் காட்சி, தவறான பார்வை.

நற்செய்கை — கொலை, களவு, முறை தவறிய சிற்றின்ப உணர்ச்சிகளை ஒதுக்கி, நல்வினை புரிதல்.

நாம ரூபங்கள் — ஐந்து கந்தங்களின் சேர்க்கையால் தோன்றும் அருவும் உருவும்.

நால்வகை (நான்கு) வாய்மைகள் — துக்கம், துக்க காரணம், துக்க நிவாரணம், துக்கநிவாரண மார்க்கம் என்ற சத்வாரி ஆரிய (மேலான) சத்தியங்கள்.

நிகந்தநாத புத்தர் — ஜைனசமயத் தலைவரான மகாவீரர்.

நிகாயம் — தொகுதி.

நிதானங்கள் — பேதைமை, செய்கை, உணர்ச்சி, அருவுரு, வாயில், ஊறு, நுகர்ச்சி, வேட்கை, பற்று, கருமத் தொகுதி, தோற்றம், வினைப்பயன் என்ற பிறப்புக்குக் காரணமான 12-சார்புகள்.

நித்தேசம் — விளக்கம்.

நிபாதம் — தொகுதி.

நியமங்கள் — விதிகள், முறைகள்.

நிருவாணம் — பௌத்த தருமத்தின்படி மனிதன் பெறக் கூடிய பேரின்ப நிலை.

நுகர்ச்சி— புலன்களின் மூலம் பெறும் உணர்வு, வேதனை.

பகவர் — பகவான், புத்தர்.

பஞ்ச சீலங்கள் — கொல்லாமை, திருடாமை, முறை தவறிய சிற்றின்பம் விலக்கல், பொய்யாமை, இலாகிரிப் பொருள்களை விலக்கல் ஆகிய ஐந்து ஒழுக்கங்கள். பௌத்தசங்கத்தில் சேருவோர், புத்தர், தருமம், சங்கம் ஆகிய மூன்று சரணங்களையும் மும்முறை கூறி, இந்த விரதங்களை மேற்கொள்ள வேண்டும்.

படிச்ச சமுப்பாதம் பிரதித்ய சமுத்பாதம் பார்க்கவும்.

பதம் — வழி, மார்க்கம்.

பமாதம் — மடிமை, அசிரத்தை: மனிதன் மடிமையில் வீழ்ந்துவிடக்கூடாதென்று புத்தர் வாழ்நாள்முழுதும் உபதேசித்துக் கொண்டேயிருந்தார்: 'பமாதோ மச்சுநோ பதம் — மடிமையே மரணத்திற்கு வழி.' இதற்கு எதிரான மொழி அப்பமாதம் - கருத்துடைமை, இடைவிடாத முயற்சியுடன் கூடிய சிரத்தை.

பரி நிருவாணம் — நிருவாணமடைந்து வாழ்வு முற்றுப் பெறுதல்.

பலங்கள் — சிரத்தை, வீரியம், ஸதி, சமாதி, பிரஞ்ஞை என்ற ஐந்து ஆற்றல்கள்.

பற்று — உபாதானம்.

பன்ஞ — (பன்ஹா) கேள்வி.

பன்னிரு நிதானங்கள் — பேதைமை, செய்கை, உணர்ச்சி, அருவுரு, வாயில், ஊறு, நுகர்ச்சி, வேட்கை, பற்று, கருமத்தொகுதி, தோற்றம், வினைப்பயன் ஆகிய 12-சார்புகள்.

பாதி மொக்கம் — பிராதி மோட்சம்.

பாரமிதைகள் — தானம், சீலம், பொறுமை, வீரியம், தியானம், பிரக்ஞை உபாயம், தயை, பலம், ஞானம் ஆகிய பத்து.

பாவனை — மன, மொழி, மெய்களால் உண்டாகும் வினைகள்.

பிக்கு — பௌத்தத் துறவி.

பிக்குணி — ஷை பெண்பால்.

பிடகம் — பெட்டி, கூடை

பிரஞ்ஞை — சமாதியின் பயனாகப் பேரறிவு பெற்ற நிலை.

பிரதித்ய சமுத்பாதம் — நிலையாமையுடன் ஓயாமல் மாறிக் கொண்டிருப்பதே பிரபஞ்ச இயற்கை: ஒன்றின் காரணமாக மற்றொன்று; அதைக் காரணமாகக் கொண்டு வேறு ஒன்று என்று மாறுவதே இயற்கை; ஆனால் ஒன்றே மற்றொன்றாக ஆவதில்லை: இந்தத் 'தொடர்பற்ற தொடர்ச்சி'யைக் குறிப்பிடப் புத்தர் பெருமான் இந்தச் சொற்றொடரை அமைத்தார்: இதை 'dependent origination' 'discontinuous continuation' எனலாம்.

பிரத்தியேக போதி — ஒருவர் தாம் மட்டும் போதி யடைந்து, உலகிற்குப் போதிக்காமல் தனித்திருத்தல்.

பிரவ்ரஜ்யை — (பப்பஜ்ஜா) சங்கத்தில் பிக்குவாகச் சேரும் சடங்கு; வீடற்ற வாழ்க்கையை மேற் கொள்ளல்.

பிராதி மோட்சம் — அமாவாசியை, பௌர்ணமி ஆகிய தினங்களில் சங்கம் கூடிப் பிக்குகளும், பிக்குணிகளும் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டு திருந்த உறுதி கொள்ளும் ஓர் சடங்கு: அவர்களின் ஒழுக்கத்திற் குரிய விநய விதிகளடங்கிய நூலின் பெயர்.

பிராமணர் — வேதியர்.

பிராம்மணங்கள் — வேதங்களை யடுத்து இரண்டாவதாகத் தோன்றிய வசனத் தொகுப்பு நூல்கள்; இவற்றைத் தொடர்ந்து ஆரண்யகங்களும், உபநிடதங்களும் தோன்றின.

பிருமம் — பிரமம், பரம்பொருள்.

புக்கலம் — ஆன்மா அல்லது உயிர்.

புங்கி — புகழுக்குரியவர், பர்மிய தேரர்.

புத்தர் — போதியடைந்த கௌதம புத்தர்.

புத்தர்கள் — பல பிறவிகளில் சீலங்கள் பேணிப் போதி சத்துவராயிருந்து மெய்ஞ்ஞானம் பெற்றவர்கள்.

பேதைமை — அறியாமை, அவித்தை.

பொருளியல் வாதி — பௌதிகவாதி.

பொறிகள் — மனத்தோடு சேர்ந்து ஆறு பொறிகள்.

போதி — மெய்ஞ்ஞானம்.

போதிசத்துவர் — புத்த நிலைக்கு உரிய தகுதியை அடைந்தவர்.

போத்தியாங்கங்கள் — போதி அடைவதற்குரிய ஸதி, தரும விசாரம், வீரியம், ஆனந்தம், மனனம், சமாதி, உபேட்சை ஆகிய ஏழு.

பௌதிகவாதி — பௌதிகப் பொருள்களைத் தவிர உலகில் நிலையான வேறு எதுவுமில்லை என்ற கொள்கையுடையவர்.

பௌத்த உபாசகர் — பௌத்த தருமத்தைச் சேர்ந்த இல்வாழ்வோர்.

பௌத்த தருமம் — புத்தர் போதித்த அருளறம்.

பௌத்தம் — பௌத்த தருமம்.

·பௌத்தர் — பௌத்த சமயத்தைச் சேர்ந்தோர்.

மகாயானம்— பெரிய அல்லது உயர்ந்த வாகனம், பௌத்த சமயப் பிரிவுகளில் முக்கியமான ஒன்று.

மகா ஸ்தவிரர் — மகா தேரர், 20-ஆண்டுகளுக்கு மேல் பிக்குவா யிருந்தவர்.

மக்கம் — மார்க்கம், வழி.

மனனம் — தெளிவோடு அமைதியாயிருத்தல்.

மஜ்ஜிம — மத்திய, நடுத்தர.

மாரன் — நல்லொழுக்கத்தின் விரோதி, சயித்தானைப் போன்றவன்.

மீமாம்சை — உண்மையை நாடும் ஆராய்ச்சி.

முப்பத்தேழு தத்துவங்கள் — ஸதிப் பிரஸ்தானங்கள் 4, ஸம்யக் பிரதானங்கள் 4, இருத்தி பாதங்கள் 4, இந்திரியங்கள் 5, பலங்கள் 5, போத்தியாங்கங்கள் 7, அஷ்டாங்க மார்க்கம் 8, ஆக 37 நியமங்கள்.

வக்கம் — வர்க்கம்.

வத்து — வஸ்து.

வாயில் — ஆறு பொறிகள்.

விகாரை — பிக்குகள், பிக்குணிகள் தங்கும் பௌத்தப் பள்ளி, மடாலயம், கோயில்.

விசுத்தி மார்க்கம் — பரிசுத்தமான வழி : புத்த கோஷர் எழுதிய நூல்.

விஞ்ஞானம் — (விக்ஞானம்) - பிரக்ஞை, மறுபிறப்புக் குரிய தாது, ஐந்து கந்தங்களில் ஒன்று, 12 நிதானங் களில் ஒன்று.

விபங்கம் — தொகுதி.

**வினை** — செயல், கருமம்.

**வினைப் பயன்** — கருமத்தின் விளைவு.

**விசிகித்ஸை** — சந்தேகம், ஐயப்பாடு.

**வீரியம்** — இடைவிடா முயற்சி.

**வேட்கை** — அவா, திருஷ்ணை.

**வேதனானுபாஸனை** — பொறிகளின் மூலம் ஏற்படும் உணர்ச்சிகளைப் பாகுபடுத்திப் பார்த்தல்.

**வேதனை** — கந்தங்களுள் ஒன்று.

**ஜென் பௌத்தம்** — சீனா, ஜப்பானிலுள்ள பௌத்தர்களின் தியான மார்க்கம்.

**ஸக்ருதாகாமி** — (ஸகதாகாமி) மேற்கொண்டு ஒரு பிறப்புக்கு மட்டும் உரிய பிக்கு.

**ஸதி** — நற்கடைப்பிடி.

**ஸதிப் பிரஸ்தானங்கள்** — உடல், புலன்களின் உணர்ச்சிகள், மனம், நிருவாணம் ஆகியவை சம்பந்தமான மனோதத்துவ உண்மைகள்: இவை காயானுபாஸனை, வேதனானுபாஸனை, சித்தானுபாஸனை என நான்கு.

**ஸத்காய திருஷ்டி** — உடலை நிலையானது என்று நம்புதல்.

**ஸமாதி** — நல்லமைதி.

**ஸம்யக் பிரதானங்கள்** — தீய எண்ணங்களைக் களைந்து, நல்லெண்ணங்களை வளர்க்கும் முறைகள்.

**ஸம்மா ஸம்போதி** — புத்தர் தாமாகப் போதியடைந்து, மற்ற மக்களுக்கும் வழி காட்டியது.

**ஸ்கந்தங்கள்** — உருவம், நுகர்ச்சி, குறி, பாவனை, உணர்வு ஆகிய ஐந்து.

**ஸ்தவிரர்** — தேரர் பார்க்கவும்.

**ஸ்ரோதாபன்னர்** — (ஸோதாபன்னர்) — நிருவாண மார்க்கத்தில் முதற் படியில் தேறியவர்.

**ஷடாயதனங்கள்** — (சளாயதனங்கள்) ஆறு புலன்கள் அல்லது வாயில்கள்.

**ஹேது** — காரணம்.



பகவான் புத்தரின் தருமச் சக்கரப்
பிரவர்த்தனம்

## நான்கு வாய்மைகள்

*'சகல பாவங்களையும் நீக்குதல்,*
*நற் கருமங்களைக் கடைப்பிடித்தல்,*
*உள்ளத்தைச் சுத்தம் செய்தல்—*
*இதுதான் புத்தருடைய உபதேசம்.'*

—புத்தர்

புத்தர் பெருமான் போதித்து வந்த அறம் பௌத்த தருமம். அதை மதம், சமயம் என்று கூறுவதைப் பார்க்கிலும், அறம், அல்லது தருமம் என்று குறித்தலே அதிகப் பொருத்தமாகும். ஏனெனில் அது வாழ்க்கை முறை, அல்லது நெறியேயாம்.

பௌத்த தருமத்தில் பரம்பொருள், ஆன்மாக்கள், பிரபஞ்சத்தின் தோற்றம், நிலைபேறு, ஒடுக்கம் ஆகியவை பற்றி விரிவான தத்துவநூல்கள் இல்லை, தருக்க சாத்திரங்களும் இல்லை. புத்தர் ஆண்டவனின் தூதரும் அல்லர்; அவரும் தம்மை அவ்வாறு கூறிக்கொள்ளவில்லை. அவர் மனிதராகவே பிறந்து, மனிதராகவே மறைந்தார். ஆனால் எத்தகைய மனிதர்? 'மெய்ஞ்ஞானம் பெறுவதற்கு முன் புத்தர்களும் சாதாரண மனிதர்களே; ஞானமடைந்தபின் சாதாரண மனிதர்களும் புத்தர்களே!' என்று சீன அறிஞர் ஒருவர் கூறியுள்ளது போல், புத்தர் சாதாரண மனிதரல்லர், மெய்ஞ்ஞானம் பெற்ற அதியற்புத மனிதர்! அவருடைய உபதேசங்கள் யாவும் தலைசிறந்த ஒரு மெய்ஞ்ஞானி, மற்ற மக்களுக்காக அருள் சுரந்து அருளிய வழிகாட்டிகள் என்றே கொள்ளத்தக்கவை.

மெய்யறிவு பெற்ற புத்தருடைய உபதேசங்களின் உயர்வுக்கு முதன்மையான காரணம், அவை அனைத்தும் அவருடைய சொந்த அநுபவத்திலிருந்து விளைந்தவை என்பது. தாம் மெய்யாகக் கண்டவற்றைத் தவிர, அவர் அநுமானங்களையோ, சாத்திரங்களையோ ஆதாரமாய்க் கூறவில்லை. தாம் கூறியவைகளை மக்கள் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் வற்புறுத்தவில்லை; அவைகளைத் தத்தம் அறிவு அநுபவங்களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்த பிறகே ஏற்றுக்கொள்ளும்படி சொல்லிவந்தார்.

புத்தர் சரிதையிலே இயற்கைக்கு மாறுதலான புராண வரலாறுகளும், மானிட இயல்புக்கு மேம்பட்ட ஆற்றல்களைப்பற்றிய செய்திகளும் பல குறிக்கப் பெற்றுள்ளன. ஆயினும் அவைகளை யெல்லாம் புத்தர் வாழ்க்கையின் முக்கிய சம்பவங்களாகக் கொள்ளவேண்டியதில்லை. பகுத்தறிவு வளர்ந்து பெருகிவரும் இக்காலத்தில், பலர், அவைகளை ஒதுக்கிவிட்டு, முக்கியமான சரித்திர சம்பவங்களையே எடுத்துக்கொள்ளக் கூடும்.

உலகின் பல பாகங்களில் புத்தருடைய தாது கோபங்களையும், சிலைகளையும் பௌத்தர்கள் வணங்குகிறார்கள் என்பதைக் கொண்டும் அவரை ஓர் அவதார புருஷர் என்று கொள்ளவேண்டியதில்லை. மக்களின் வணக்கம் கட்டிடங்களுக்கும் கற்சிலைகளுக்கும் அன்று; அவை குறிக்கும் பெருமானின் சீரிய ஒழுக்கம், நல்லுபதேசங்கள் ஆகியவற்றிற்கே யாகும். இதுபோன்றதுதான், 'புத்தம் சரணம் கச்சாமி' என்று புத்தரைச் சரணமடைதலும். போதியடைந்து அறவழியை உணர்த்திய புத்தரை அடைக்கலமாகக் கொண்டு நன்றி தெரிவித்தலே இச்சரண

மாகும். மேலும் 'புத்தர்' என்பதும் புத்தர் ஒருவரை மட்டும் குறிப்பதுமன்று. போதியடைந்த எல்லாப் புத்தர்களையும் அது குறிக்கும்.

புத்தருடைய உபதேசங்களிலே பிரும்மா, இந்திரன், தேவர்கள், முதலியோரைப் பற்றியும், சுவர்க்கம், நரகம், தேவலோகம், துடிதலோகம் முதலியவை பற்றியும் இடையிடையே கூறப்பட்டிருக்கின்றது. இந்தத் தேவர்களையும், உலகங்களையும் பற்றிப் புத்தர் காலத்தில் நாட்டிலே மக்களிடையே உலவி வந்த கதைகளிலும், சாத்திரங்களிலும் காணப்பெற்ற விஷயங்களையே அவர் கையாண்டிருக்கிறார். பலதிறப்பட்ட மக்களுக்கு அவர் உபதேசம் செய்கையில், அவரவர் பக்குவத்திற்கு ஏற்ற கதைகள், செய்திகளைக் கூறித் தமது தருமத்தை விளக்கி வைப்பதற்காக அவைகளைக் கூறியதாகவே கொள்ள வேண்டும். தரும விரோதியாகிய மாரன் புத்தரைப் பலமுறை கண்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. மாரன் நல்லன யாவற்றிற்கும் பகைவன். மரணத்தைக் குறிக்கும் 'ம்ரு' என்ற அடியிலிருந்து பிறந்தது 'மாரன்' என்ற அவன் பெயர். அவா, அறியாமை, வெறுப்பு, வெகுளி, அடக்கமின்மை, அழுக்காறு, அயர்வு, அசத்தியம், அசிரத்தை முதலிய தீமைகளுக்கு அறிகுறியாகக் கற்பிக்கப் பட்டுள்ளவனே மாரன். அத்தீமைகளின் பயன் மரணம், அல்லது அழிவு. எனவே மாரன் அழிவுப் பாதைக்கு வழிகாட்டி. புத்தர் குறித்துள்ள தேவர்கள் யாவரும் அநித்தியமானவர்கள்; மாறுதலுக்குரியர், மரணத்திற்கும் உட்பட்டவர்கள்; அவர்கள் அவரிடம் வந்து உபதேசம் பெற்றுச் சென்றவர்களாயும், பெற்றவர்களாயும் இருந்தார்கள். அவர் குறித்த சுவர்க்கம், நரகம் முதலிய உலகங்களும்

மாறுதல், அழிவு என்னும் விதிகளுக்கு உட்பட்டவைகளே. அவர் கருத்துப்படி நிருவாணம் ஒன்றே நிலையானது. மற்றவை யெல்லாம் நிலையற்றவை. ஆதலால் புத்தர் சரிதையிலும், மொழிகளிலும், ஏலாதவற்றை ஒதுக்கிவிட்டு, அடிப்படையாக, ஆணித்தரமாக, அவர் கூறியுள்ள முக்கியமான உறுதிப்பாடுகளை ஆராய்ந்து உண்மை காண்பதே நன்மை பயக்கும். அவருடைய பௌத்த தருமம் விவாதத்திற்காக அமைந்ததன்று, அது வாழும் வகை. எனவே அதன்படி வாழ்ந்து பார்த்தாலே அதன் உண்மையை உய்த்துணர முடியும்.

புத்தர் பெருமான் நூல்கள் எதையும் எழுதி வைக்கவில்லை. பல இடங்களுக்கு யாத்திரை சென்று, ஆங்காங்கே, அவ்வப்போது, அவர் கூறிய திருமொழிகளைக் கேட்டிருந்த அடியார்கள் பின்னால் அவைகளைத் தொகுத்து வைத்தார்கள். பெருமானோடு இடைவிடாது வாழ்ந்து வந்த ஆனந்தர், உபாலி, மகா காசியபர் ஆகியோர் பௌத்த பிக்குகளின் பேரவையிலே அவைகளை முதலில் கூறி, யாவரும் அவைகளை ஏற்றுக்கொண்ட பின்பு, அவைகளைத் தொகுத்து வைத்தார்கள். பெருமான் பூத உடலோடு இருக்கும் போதே அவருடைய உரையாடல்கள் உடனுக்குடன் குறித்து வைக்கப் பெறவில்லை. இதனால்தான் பின்னால் தொகுக்கப் பெற்ற சூத்திரம் ஒவ்வொன்றிலும், ஆரம்பத்தில், '*ஏவம் மா சுதம்—இவ்வாறு நான் கேள்வியுற்றேன்*' என்று கூறப் பட்டுளது. அந்தச் சூத்திரத்தைக் கூறியவர் தாம் கேட்டதைக் கூறினார்; அவர் கூறியது பின்னால் குறிக்கப் பெற்றது. இத்தைய சூத்திரங்கள் யாவும் 'திரிபிடகங்கள்' என்று மூன்று பிரிவுகளாகத்

தொகுக்கப் பெற்றன. இச் சூத்திரங்களில் ஆங்காங்கே சில முரண்பாடுகள் காணப் பெறினும், பொதுவாகப் பௌத்த தருமத்தின் அடிப்படைக் கொள்கைகளையும், பிக்குகள் மேற்கொண்டு ஒழுக வேண்டிய முறைகளையும் பற்றி இவைகளிலே தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். மேலும், ஒவ்வொரு விஷயத்தையும் பரிசீலனை செய்து பார்க்கையில், 'இது புத்தர் திருவாக்குத்தானா?' என்று சந்தேகம் தோன்றினால், 'எந்த விஷயமும் சரியான முறையில் தவறில்லாமல் கூறப்பட்டிருக்குமானால், அது புத்தருடைய உபதேச மென்றே கொள்ளத் தகும்' * என்று 'சிட்சா சமுச்சயம்' என்ற நூல் கூறுவதுபோல், நாம் உரையிலிருந்தே உண்மையைத் தெளிதலும் கூடும்.

உண்மையைக் கண்டுபிடித்து, அதன்படி ஒழுகுவதற்குப் புத்தர் கூறியுள்ள வழி இதுதான்:

'சந்தேகம் தோன்றுவது இயற்கை. பல தலைமுறைகளாகப் பல இடங்களிலே தொடர்ந்து வந்துள்ளவை என்பதற்காக மட்டும் பழைய சம்பிரதாயங்களை நம்ப வேண்டாம்; பலர் கூடிப் பேசுகிறார்கள் என்றோ, பரப்பி வருகிறார்கள் என்றோ, வதந்திகளாகிய எதையும் நம்ப வேண்டாம்; எவரோ பழங்காலத்து முனிவர் ஒருவர் எழுதி வைத்ததைக் காட்டினால், அதை நம்பி விட வேண்டாம்; நீங்களாகக் கற்பனை செய்து கொள்ளும் விஷயம் ஆச்சரியமானதா யிருப்பதைக் கொண்டு, அது ஒரு தேவனாலோ, வேறு அற்புதத் தேவதையாலோ, தோற்றுவிக்கப் பெற்றது என்று நம்ப வேண்டாம். ஒரு விஷயத்தைக் கண்ணால் கண்டு,

* 'யத்கிஞ்சித் ஸுபாஷிதம் தத் புத்த பாஷிதம்.'

கருத்தால் ஆராய்ந்து, அது பகுத்தறிவுக்குப் பொருத்தமாயும், சகலருக்கும் நன்மை பயக்கக்கூடிய தாயும் இருந்தால், அதை ஏற்றுக்கொண்டு, அதன் படி நடக்கவும்.' ¹

### நால்வகை வாய்மைகள்

பௌத்த தருமத்தின் மூலாதாரமான கொள்கைகள் நான்கு. அவை துக்கம், துக்க காரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்ற நான்கு வாய்மைகள் (சத்வாரி ஆரிய சத்தியங்கள்) எனப்படும்.

### துக்கம்

உலக வாழ்வு துக்கமயமானது என்பது முதலாவது உண்மை. பிறப்பு, இறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு எல்லாம் துன்பமே. அன்புக்குரியவர்களைப் பிரிதல் துன்பம், அன்பற்றவர்களின் தொடர்பும் துன்பம். விரும்பியவைகளைப் பெருமை துன்பம், விரும்பாதவைகளை அடைதலும் துன்பம். ஐம்புலன்களின் வழியே அறிந்து ஆசைகொண்ட யாவும் துன்பத்திலேயே முடிகின்றன. ஒரு சமயம் இன்பமாகத் தோன்றுபவைகளும், பின்னால் துன்பமாக உணரப்படுகின்றன. வாழ்விலே பற்றுக்கொண்ட பொருள்களையும் உற்றார் உறவினரையும் விட்டுப் பிரிக்கும் மரணம் பெருந் துன்பமாகவே கருதப் படுகின்றது. மரணத்தின் உண்மையான காரணம் பிறப்பே. உலகில் தோன்றிய எல்லாம் மாறி நசித்தலே இயல்பு. எனவே மரணத்திற்கும் மற்ற வேதனைகளுக்கும் காரணமாயுள்ளது பிறப்புத்தான். ஐந்து கந்தங்கள் சேர்ந்து தோன்றிய உடலைப் பெறுவது பிறப்பு. துக்கத்திற்குக் காரணம் பிறப்பு

¹ 'காலாமா சூத்திரம்; அங்குத்தர நிகாயம்.'

எனில். பிறவிக்குக் காரணம் எது என்பதைத் தெரிந்து கொண்டால், அதுவே துக்கத்திற்கு மூலகாரண மாகும்.

### துக்க காரணம்

பிறவிக்குக் காரணமாயுள்ளது பேதைமை. அதனாலேயே பிறப்பும் இறப்பும் மாறி மாறி ஏற் பட்டுச் சம்சார * சக்கரம் சுழன்று கொண்டே இருக் கின்றது. பேதைமை காரணமாகச் செய்கைகள் ஏற்படுகின்றன. செய்கைகள் காரணமாக உணர்ச்சி தோன்றுகின்றது. உணர்ச்சியிலிருந்து உயிரும் உடலும் தோன்றுகின்றன. உயிரோடு இயங்கும் உடலில் ஆறு பொறிகள் † செயற்படுகின்றன. இவற்றின் மூலமே உடலுக்கு வெளியுலகத் தொடர்பு ஏற்படுகின்றது. இத் தொடர்பிலிருந்து ஏற்படும் உணர்ச்சிகள் அனைத்தும் நுகர்ச்சியாம். நுகர்ச்சி யினால் அவா ஏற்படுகினறது. அவாவிலிருந்து பற்று உண்டாகின்றது. பற்றுக் காரணமாகக் கருமத் தொகுதி ஏற்படுகின்றது. கருமத் தொகுதி அடுத்த பிறவிக்குக் காரணமாகின்றது. பிறப்பினால் பிணி, மூப்பு, சாக்காடு முதலிய வினைப் பயன்கள் மீண்டும் விளைகின்றன. இவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புடைய இத்தனை சார்புகளும் 'பன்னிரண்டு நிதானங்கள்' எனப்படும். இவைகளை மொத்த மாகப் 'படிச்ச சமுப்பாதம்' (சார்ந்து நின்று ஏக காலத்தில் தோன்றுவது) என்று குறிப்பிடுவதுண்டு.

---

* சம்சாரம் — பிறப்பும் இறப்பும்.

† ஆறு பொறிகள் — ஐம் பொறிகளோடு மனத்தையும் சேர்த்து ஆறு பொறிகள்.

சார்புகள் பன்னிரண்டும் * வருமாறு:

| | |
|---|---|
| பேதைமை | (அவித்தை—ignorance) |
| செய்கை | (ஸம்ஸ்காரங்கள்— thought ideations) |
| உணர்ச்சி | (விஞ்ஞானம்—cognitions) |
| அருவுரு | (நாமரூபங்கள்—name and form) |
| வாயில் | (ஷடாயதனங்கள்—six organs of sense) |
| ஊறு | (ஸ்பரிசம்—contact) |
| நுகர்ச்சி | (வேதனை—feelings or emotions) |
| வேட்கை | (திருஷ்ணை—craving) |
| பற்று | (உபாதானம்—attachment) |
| கருமத் தொகுதி | (பவம்—accumulated karma) |
| தோற்றம் | (பிறப்பு—birth) |
| வினைப் பயன் | (மரணம்—old age, death etc.) |

* இந்தப் பன்னிரு சார்புகளையும் பற்றிப் புத்தர் பெருமான் தனித் தனியாக விளக்கிக் கூறியுள்ளார்.

பேதைமை என்பது, துக்கம் எது என்பதையும், துக்க காரணத்தையும், துக்க நிவாரணத்தையும், துக்க நிவாரணத்திற்குரிய மார்க்கத்தையும் அறியாதிருத்தல்.

மனம், மொழி, மெய் ஆகிய மூன்றில் ஒவ்வொன்றும் செயற்படுவதால் ஏற்படுவது செய்கை.

கண், காது, நாசி, நா, மெய், மனம் ஒவ்வொன்றின் உணர்வும் உணர்ச்சியாகும்.

உணர்ச்சி, பகுத்தறிதல், தீர்மானித்தல், வெளித் தொடர்பு கொள்ளல் ஆகிய மனநிகழ்ச்சிகள் அருவம் (நாமம்) எனப்படும். உரு அல்லது உருவம் என்பது ஐந்து கந்தங்களாலாகிய உடலைக் குறிக்கும். அருவுரு என்பது மன நிகழ்ச்சிகளையும் உடலையும் சேர்த்துக் குறிக்கும்.

இந்தச் சார்புகளில், முந்திய பேதைமை, செய் கைகளால் பிறவி ஏற்படுகிறது; இப்பிறவியில் உணர்ச்சி, அருவுரு, வாயில், ஊறு, நுகர்ச்சி, வேட்கை, பற்று, கருமத் தொகுதி ஆகிய எட்டும் ஏற்பட்டு, அடுத்த பிறவிக்குக் காரணமாக அமை கின்றன. தோற்றமும் வினைப் பயனும் பிந்திய பிறவிக்கு உரியவை என்பர்.

---

*வாயில்கள் ஆறு பொறிகள்: அவை கண், காது, நாசி, நா, மெய், மனம்.*

*ஊறு ஆறு வகைப்படும்: மேற்கூறிய ஆறு பொறிகளின் மூலம் ஏற்படும் தொடர்புதான் ஊறு.*

*நுகர்ச்சியும் ஆறுவகை: அவை மேற்கூறிய ஆறு பொறி களின் மூலம் ஏற்படும் தொடர்பினால் விளையும் உணர்வுகள்.*

*வேட்கை என்பது அவா: இதைத் 'தண்ஹா' என்றும், 'திருஷ்ணை' என்றும் கூறுவர்.*

*பற்று நான்கு வகைப்படும்: ஆசைகள், கருத்துக்கள் அல்லது கொள்கைகள், யக்ஞம் பூசை முதலிய கிரியைகள், 'நான்' என்ற அகங்காரம் ஆகியவைகளில் பற்றுக்கொண் டிருத்தலே அந்நால்வகை.*

*பவம் என்ற கருமத் தொகுதி அடுத்த பிறவிக்குக் காரணமான கருமங்களின் கூட்டம். சுவர்க்கம் முதலிய உலகங்களிலோ, பூவுலகம் போன்ற உலகங்களிலோ, கட்புலனாகாத உலகங்களிலோ தோன்றுவதை இது குறிக்கும்.*

*தோற்றம் என்பது பிறப்பு.*

*வினைப் பயன் என்பது மூப்படைந்து, ஆயுள் குறைந்து, அழிவுறுதல்.*

**—சுத்த நிபாதம்**

பேதைமை அடியோடு அழிந்தால், செய்கை நின்றுவிடும்; செய்கை நின்றால், உணர்ச்சிக்கு இடமில்லை; உணர்ச்சி யில்லாவிடில், அருவுரு (நாமமும் உருவமும்) இல்லை; அருவுரு இல்லாதபோது, வாயில்களும் இல்லை. வாயில்களாகிய புலன்கள் இல்லாமல் வெளியுலகத் தொடர்பான ஊறு இல்லா தொழிகின்றது; ஊறு ஒழிந்தால், நுகர்ச்சியில்லை; நுகர்ச்சி நீங்கியபின், வேட்கையில்லை; அதனால் பற்றும் ஒழிகின்றது. பற்று இல்லாத இடத்துக் கருமத் தொகுதி ஏற்பட இடமில்லை; கருமத் தொகுதி அற்றுப் போகையில், புதிய பிறப்பும் இல்லை; பிறப்பு ஒழிக்கப்பட்டால், மூப்பு, மரணம், துயரம், சோகம் முதலிய வினைப்பயன் இல்லா தொழிகின்றது. ஆகவே பரம்பரையாகத் தொடர்புடன் வரும் பிறவியை ஒழிப்பதற்கு முதற்கண் பேதைமையை அறிவால்—மெய்ஞ்ஞானத்தால்—ஒழிக்கவேண்டும். பின்னர் மற்றைச் சார்புகள் யாவும் முறையே ஒழிந்து விடுகின்றன.

மனிதன் எப்பொழுதுமே வாழ்வில் ஆசை கொண்டவன். உயிர்களிடத்தும் பொருள்களிடத்தும் அவனுக்குப் பற்று ஏற்படுகின்றது. அவன் மனம் இன்பத்தையே நாடுகின்றது. ஆயினும் அவனைச் சுற்றியிருக்கும் எல்லாப் பொருள்களும், உயிர்களும் ஓயாமல் மாறிக்கொண்டே வந்து அழிவடை வதையும் அவன் பார்த்துக்கொண்டே யிருக்கிறான். அவ்வாறிருப்பினும் தன் வாழ்வு மட்டும் நிலையானது —நித்தியமானது—என்று அவன் கருதுகிறான். உண்மையை உணரமுடியாதபடி பேதைமை அவன் கண்களை மறைக்கின்றது. வாழ்க்கை நிலையானது என்ற கருத்தில் அவன் தன் ஆசைகளைப் பெருக்கிக் கொண்டே செல்கிறான். தேவைப்பட்ட பொருள்க

ளெல்லாம் கிடைப்பினும், பின்னும் வேறு பல தேவைகள் தோன்றுகின்றன. இவ்வாறு அவன் தன் வேட்கைக்கு-ஆசைக்கு-அவாவுக்கு-அடிமைப் பட்டே கிடக்கிருன். அவன் நாடிய இன்பங்க ளெல்லாம் துன்பங்களாக முடிகின்றன.

துன்பத்திலெல்லாம் பெருந் துன்பத்திற்குக் காரணமாயுள்ளது நிலையற்ற வாழ்வை அவன் நிலை யானதென்று கருதுவதுதான். திடீரென்று மரண மும் நெருங்குகின்றது; அப்பொழுதுகூட அவனுடைய 'நான்' என்ற ஆணவம் போவதில்லை.

உலகிலே பெரும்பாலான மக்கள் பசியாலும் பயத்தாலும் எப்பொழுதுமே வாடி வதங்குவதைப் பார்க்கிருேம். வைத்தியசாலைகளிலும், சிறைச்சாலை களிலும், அநாதை விடுதிகளிலும் மக்கள் படும் அவஸ்தைகளைக் கண்டால், உலகின் துக்கம் எத்தகையது என்பதை ஓரளவு உணரலாம். போர்க் களங்களிலே அரிந்து தள்ளப்பெறும் மக்களையும், இரத்த ஆறுகள் ஓடுவதையும் பார்த்தல் இன்பக் காட்சியன்று. மொத்தத்தில் செல்வர், வறியோர், யாவருடைய வாழ்விலும் துக்கமே செறிந்து விளங்கு கின்றது.

தனி மனிதர்கள் 'நான்' 'எனது' என்று கொள்ளும் அகங்கார மமகாரங்களிஞலேயே, அவர் களுக்கும் மக்கள் சமுதாயத்திற்கும் பெருங் கேடு விளைவிக்கிருர்கள். சுயநலத்தால் அவர்கள் தேடிச் சேர்க்கும் பொருள் எதுவும் முடிவில் அவர்களோடு செல்வதில்லை. ஆயினும் அவர்கள் இந்தச் சுயநலத்தையே அடிப்படையாகக் கொண்டு, இரவும், பகலும், வெறிபிடித்தது போல் உழைத்து வருகிருர்கள்.

மனிதனின் அவாவுக்கு அடிப்படையாயுள்ளது 'நான்' என்ற அகம் — ஆணவம். ஒவ்வொரு மனிதனும் தன் நலம் வேறு, சமுதாயம் வேறு என்று கருதுகிறான். 'நான்' என்பது நிலையான ஒன்றா? உண்மையில் 'நான்' என்பதே இல்லை என்று உபதேசித்தார் புத்தர் பெருமான். உலக முறையில் ஒருவரிலிருந்து மற்றவர்களை வேற்றுமைப் படுத்தித் தெரிந்துகொள்ள 'நான்' 'நீ' என்று கூறிக்கொள்வதைத் தவிர, 'நான்' என்பது உண்மையற்ற ஒரு தோற்றமேயாம்.

மனிதன் உருவு, நுகர்ச்சி, குறி, பாவனை, உள்ள அறிவு ஆகிய ஐவகைக் கந்தங்களின் சேர்க்கையால் தோன்றியவன். நாமமும் உருவமும் பெற்று விளங்கும்போது, அவன் 'நான்' என்ற அகங்காரத்தை மேற்கொள்கிறான். பொறிகளாலும், புலன்களாலும் அவன் பெறும் அநுபவங்களையெல்லாம் இந்த 'நான்' என்ற அகங்காரத்திற்கே அவன் அர்ப்பணித்து வருகிறான். 'நான்' என்று சொல்லத்தக்க மாறாத, அழியாத, ஒரு பொருள் அவனுள்ளே தனித்து நிலைபெற்றிருக்கிறதா? உடல் மாறும் போதெல்லாம் அவனுடைய 'நானும்' மாறிக்கொண்டே யிருக்கின்றது; உடல் அழியும் போது 'நானும்' மாண்டு போகின்றது. ஒரு தேரைப் பிரித்துப் பலகைகள், சக்கரங்களை யெல்லாம் வேறு வேறாக அடுக்கி வைத்து விட்டால், அந்தக் குவியலை யாரும் தேர் என்று சொல்லமாட்டார். இதைப்போல வேதான் மனிதன் நிலையும். நாம ரூபங்களை வைத்தே அவன் தன்னுள் நிலையான 'நான்' என்ற அகம் தங்கியிருப்பதாக எண்ணுகிறான்.

மனிதனின் உடலில் ஒவ்வொரு கணத்திலும் கோடிக்கணக்கான உயிர் அணுக்கள் மடிந்து,

கோடிக்கணக்கான புது அணுக்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. பழைய அங்கங்கள் யாவும் மாறிவிடுகின்றன. குழந்தைப் பருவத்தில் இருந்த மனிதன் வேறு, பிற்காலத்தில் விளங்கும் மனிதன் வேறு — இடையில் உருவத்திலும், குணத்திலும் எத்தனை எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும் அவன் எந்தப் பருவத்திலும், 'நான்' என்பதை மட்டும் கைவிடாமல், ஒரே 'நான்' என்பவனே எல்லாத் தசைகளிலும் நிலைத்திருப்பதாக நம்புகிறான். இது வெறும் மயக்கமேயாகும்.

உலகில் எங்கும் ஜீவராசிகள் ஒவ்வொரு கணத்திலும் மாறிக்கொண்டேயிருக்கின்றன, பிறப்பிலிருந்து வாழ்க்கை வழியாக மரணத்தை நோக்கிப் போய்க்கொண்டேயிருக்கின்றன. மலைகள், ஆறுகள், மாட மாளிகைகள், யாவும் மாறிக்கொண்டே வந்து அழிவு விதிக்குள் அமைந்து விடுகின்றன.

மாற்றமே உலகின் நியதி. எல்லாப் பொருள்களும் உயிர்களும் அந்த விதிக்கு உட்பட்டு மாறிக்கொண்டேயிருக்கின்றன. மாற்றம் ஏற்படாது ஒரு கண நேரங்கூடக் கழிவதில்லை. ஆதலால் ஒரே உருவாக, ஒரே தன்மையுடையதாக, இங்கே நிலைத்திருப்பது எதுவுமில்லை. எனவே உலகம் சம்பவங்களின் பிரவாகமாக-இடையீடில்லாத நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாகவே-இருந்து வருகின்றது. சங்கிலிக் கோவை போல் எல்லாம் மாற்றங்களின் தொடர்ச்சியாக இருக்கின்றன. ஆனால் எதுவும் காரணமில்லாமல் நடைபெறவில்லை. காரணத்திலிருந்து காரியம், காரியத்திலிருந்து அடுத்த காரணம் என்ற முறையில் மாறுதல் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. உலகம் அனைத்திற்கும் இயற்கையின்

சட்டம் — விதி — ஒன்று இருக்கின்றது; ஒன்றுக் கொன்று காரண—காரியத் தொடர்பாகவே எல்லாம் அமைந்துள்ளன; ஒரு பொருளின் பிந்திய நிலைமை முந்திய நிலைமைகளைக் காரணமாகக் கொண்டவை. நன்மை, தீமை, இன்பம், துன்பம், ஒழுக்கம், ஒழுக்கமின்மை—யாவும் காரணங்களால் தோன்றுபவை.

இந்நிலையில் மனிதன் தன்னைமட்டும் நிலையானவன் என்று கருதுவது எவ்வளவு பேதைமை! அவனுடைய அவா, நிலையற்ற துன்பகரமான வாழ்வையும் விரும்பும்படி செய்கின்றது. மெய்யான அறிவைப் பெறாததால், அவன் உண்மை நிலையை உணர முடியாமல் தத்தளிக்கிறான். அவா காரணமாக வாழ்வில் அவன் பற்றுக்கொள்கிறான். பற்றினால் பல செயல்களைச் செய்கிறான். அந்த வினைகளின் பயன் ஒருமிக்கச் சேர்ந்து, அந்த வினைப்பயனை அநுபவிக்க அவன் மீண்டும் மீண்டும் பிறவியெடுக்க நேருகின்றது.

அவாவே மனிதனின் துக்ககாரணமாயுள்ளது. அதனாலேயே வள்ளுவப் பெருந்தகையும்,

*'அவாஎன்ப எல்லா உயிர்க்கும், எஞ்ஞான்றும்,*
*தவாஅப் பிறப்பீனும் வித்து'*

என்று கூறியுள்ளார். பிறப்புக்கு வித்து அவா. அவாவுக்கு மூல காரணம் பேதைமையே.

### துக்க நிவாரணம்

ஆசைகளை வேரோடு அறுத்து அழித்தலே துக்கத்திலிருந்து நீங்கும் வழி. துக்கத்தின் காரணத்தைத் தெரிந்துகொண்ட பின், அக்காரணத்தை அகற்ற உறுதி கொள்ள வேண்டும்.

அவா அறுத்தலைப்பற்றிப் புத்த பகவர் 'தம்மபதம்' என்ற நூலில் கூறியுள்ள சில வாக்கியங்கள் வருமாறு:

'கலங்கிய சிந்தனைகளும்' உணர்ச்சி வெறிகளும் இன்பத்தில் நாட்டமும் உள்ள மனிதனுக்கு அவா வளர்ந்து கொண்டேயிருக்கும்; அவன் தன் கட்டைப் பலப்படுத்திக் கொள்கிறான்.

'ஒரு மரத்தை மட்டும் வெட்டினால் போதாது. ஆசைக் காட்டையே அரிந்து தள்ளுங்கள்! ஆசைக் காட்டிலிருந்தே அபாயம் வருகிறது. காட்டையும் புதர்களையும் வெட்டி வீழ்த்திய பிறகு நீங்கள் விடுதலை பெறுவீர்கள்.

'ஆசைப்பட்டதிலிருந்து சோகம் தோன்றுகிறது, ஆசைப்பட்டதிலிருந்து அச்சம் தோன்றுகிறது. ஆசையற்றவனுக்குச் சோகமில்லை—பயம்தான் ஏது?

'கருத்தில்லாமல் இருக்கவேண்டாம், மனத்தின் சிந்தனைகளை அடக்கிக் காக்கவும். சேற்றில் விழுந்த யானையைக் கரையேற்றுவது போல் தீயவழியிலிருந்து உன்னை மீட்டுக் கொள்க.

'காமிய இன்பங்களைக் கைவிட்டு, எதையும் தனதென்று கொள்ளாமல், ஞானி மனமாசுகளை அகற்ற வேண்டும்; அந்நிலையில் அவன் ஆனந்தமடைவான்.'

### துக்க நிவாரண மார்க்கம்

புத்தர் பெருமான் மக்களின் துக்கத்தைக் கண்டு, அதன் காரணத்தையும், அதை நீக்கும் வழியையும் கண்டுபிடிப்பதற்காகவே, ஆறு வருடம் அருந்தவம்

செய்து, சொல்லொணுத் துயரங்களை எல்லாம் அநுபவித்தார். முடிவில் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்து மெய்ஞ்ஞானம் பெற்றவுடன், அவை அவருக்குத் தெளிவாகப் புலப்பட்டன. அவர் கருத்துப்படி துக்கத்தையும், துக்க காரணத்தையும், துக்க நிவாரணத்தையும பற்றி மேலே குறித்துள்ளோம். இனி துக்க நிவாரண மார்க்கத்தைப் பற்றிக் கவனிப்போம்.

பௌத்த தருமத்திலும், புத்தர் பெருமான் உபதேசங்களிலும் இந்தத் துக்க நிவாரண மார்க்கமே முதன்மையான சிறப்புடையது. 'சத்தியமே ஜயம்!' என்றும், 'அன்புடைமையே அருந்தவம்!' என்றும், 'எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்!' என்றும் வெறும் இலட்சியங்களைக் கூறி அவர் விட்டுவிடவில்லை. யாதொரு துக்கமும் அண்ட முடியாத, ஒப்பற்ற, அழிவில்லாத, சாந்தி நிறைந்த இன்பகரமான நிலையை அடைவதற்கு அவர் வழியைக் கூறியுள்ளார்: அந்த வழியிலே சென்று மேற்கொண்டு பிறவியில்லாத பெரும் பதத்தை அடைய விரும்புவோர், முதலிலிருந்து முடிவுவரை என்னென்ன முறைகளைக் கையாள வேண்டும் என்பது பற்றி அவர் விரிவாக வகுத்துக் கூறியுள்ளார். மனிதனின் முடிவான இலட்சியம் பிறவா நிலையாகிய நிருவாணம்—அதுவே விடுதலை, வீடு, பேரின்பம். அந்த நிலையை அடைவதற்குரிய வழி நிருவாண வழி.

நிருவாண வழி எளிதான வழியன்று. உலக போகங்களில் ஆழ்ந்து, 'நான்' என்னும் முதலையின் வாயில் சிக்கிக் கொண்டு உழல்வதுதான் எளிதான வழி. அவ்வழியை விட்டுக் கடைத்தேற்றம் பெறுவது எளிதான வழியன்று.

நிருவாண வழியிலே செல்வோன் எப்பொழுதும் கருத்தோடு இருக்க வேண்டும். புத்தர் பெருமானுடைய உபதேசங்களைப் பரிசீலனை செய்தால், 'கருத்தோடு இருங்கள்! கருத்தோடு இருங்கள்!' என்று அவர் அடிக்கடி, ஓயாமல், கூறி வந்திருப்பது தெரியவரும். கருத்துடைமையை 'அப்பமாதம்' என்றும், கருத்தின்மையாகிய மடிமையைப் 'பமாதம்' என்றும் அவர் (பாலி மொழியில) குறித்து வந்தார். 'அப்பமாதோ அமத பதம், பமாதோ மச்சுநோ பதம் — கருத்துடைமையே நித்தியமான நிருவாண மோட்சத்திற்கு வழி, மடிமையே மரணத்திற்கு வழி' என்று அவர் கூறியுள்ளார். மடிமையுடையவர்கள் —சோம்பேறிகள்—கருத்தில்லாதவர்கள் — உயிரோடிருந்தும் இறந்தவர்களே என்பது அவர் கருத்து. கருத்துடைமையில் களிப்படைய வேண்டும், அதிலேயே திளைக்கவேண்டும், அதுவே முதன்மையான அருந்தனம். கருத்தோடிருப்பவன் இடைவிடாமல் முயற்சி செய்துகொண்டேயிருப்பான்; உடைமைகளிலெல்லாம் சிறந்தது ஊக்கமுடைமையே. அயர்வு அவனை அண்டாது; அவன் எப்போதும் விழிப்புடனிருப்பான். களிப்புடைமை, தெளிவான சித்தம், இடைவிடாத முயற்சி ஆகிய இணையற்ற செல்வங்களைப் பெற்றவனே இறுதியில் வெற்றி காண்பான்.

*'அறிவாளி மடிமையில் ஆழ்ந்தவர் நடுவே, முயற்சியுடையோனாகவும், உறங்குவோர் நடுவே விழிப்புள்ளவனாகவும் இருப்பான்; பந்தயக் குதிரை வாடைக் குதிரையைப் பிந்த விட்டுவிட்டு முன்னேறிப் பாய்வதுபோல், அவன் மற்ற யாவர்க்கும் முன்னால் செல்கிறான்.*

'மடிமையைக் கண்டு அஞ்சி, கருத்துடைமையில் களிப்படையும் பிக்கு தவறி விழ முடியாது — அவன் நிருவாண மோட்சத்தின் அருகில் இருப்பவன்.' *

இவ்வாறு பகவர் அருளியுள்ளார்.

நிருவாண வழியிலே செல்பவன் சீலம்— ஒழுக்கம்—நிறைந்தவனா யிருக்க வேண்டும்; ஒழுக்கத்தை உயிரைவிட மேலாகக் கருதவேண்டும். ஒழுக்கமே விழுப்பம் † தரும். நல்வாழ்வுக்கு—இன்பத்திற்கு— வித்து ஒழுக்கமே. ஒழுக்கமுடையவன் தீவினைகளைத் தீயைப் பார்க்கினும் அதிகமாக அஞ்சி ஒதுங்குவான்; நல்வினைகளைப் போற்றிச் செய்து வருவான்.

தீவினைகள் பத்து; அவை மூவகைப்படும். உள்ளத்தில் தோன்றும் தீவினைகள் மூன்று: வெஃகல் (பிறர் பொருளை விரும்புதல்), வெகுளல் (கோபம்), பொல்லாக் காட்சி (உண்மையை அறியாது மயங்குதல்). வாக்கில் தோன்றும் தீவினைகள் நான்கு: பொய், குறளை (கோட் சொல்லுதல்), கடுஞ்சொல், பயனில் சொல் (வீண் பேச்சு). உடம்பில் தோன்றும் தீவினைகள் மூன்று: கொலை, களவு, காமம்.

மேலே கூறிய பத்துத் தீவினைகளையும் நீக்கிச் சீலங்களை மேற்கொண்டு; தானம் முதலிய நற்பணிகளைச் செய்து வருதல் நல்வினைகளாம். சீலங்களைப் பேணுதலே நிருவாண வழியில் முதற்படி, சீலங்கள் கோணினால், எல்லாம் கோணிவிடும். சீலங்களில் தவறியவன் பௌத்த தருமத்திற்கே உரியவனல்லன்.

* 'தம்மபதம்' † விழுப்பம் – மேன்மை

சீலங்கள் ஆகிய ஒழுக்கங்கள் பத்து: கொல்லாமை, திருடாமை வியபசாரம் செய்யாமை, பொய்யாமை, போதைதரும் பொருள்களை உண்ணாமை, இரவில் தூய உணவை மிதமாக உண்ணல், கந்தப் பொருள்கள், அணிகள், அலங்காரங்களை விலக்குதல், சயனத்திற்குக் கட்டில், பஞ்சணை முதலியவற்றை நீக்கித் தரையிலே பாய் விரித்து உறங்குதல், இசை, நடனம் முதலிய களியாட்டங்களைத் தவிர்த்தல், பொன், வெள்ளி ஆகியவைகளை ஏற்றுக்கொள்ளாமை. முதல் தோற்றத்தில் இச் சீலங்கள் சாதாரணமானவையாகத் தோன்றினும், இவைகளை முறையாகக் கடைப்பிடித்து வருதல் மிகவும் கடினமே. எனவே புத்தர் பிரான் இவைகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, முதல் ஐந்து சீலங்களையும் சாதாரண இல்லறத்தார்கள் மேற்கொள்ளவும், பத்துச் சீலங்களையும் துறவறத்திலுள்ள பிக்குகள் மேற்கொள்ளவும் விதி செய்தார். பிக்குகளுக்குச் சிற்றின்பம் அறவே ஒதுக்கப்பட்டுள்ளது; செல்வத்தையும் அவர்கள் தீண்டலாகாது.

சீலங்களைப் பேணுவதால் சகல உயிர்களிடத்திலும் அன்பு ஏற்படுகிறது. கனவிலும் பிறர் பொருள்களில் ஆசை ஏற்படுவதில்லை, அழுக்காறும் ஒழிகின்றது; வாய்மையால் உள்ளம் பரிசுத்தமாகின்றது; சோம்பரையும் வெறியையும் அளிக்கும் பொருள்களை உட்கொள்ளாததால் மனம் தெளிவாயிருக்கின்றது; மிதமான தூய உணவு உள்ளப் பண்பை வளர்க்க உதவுகின்றது; துக்கம் அடர்ந்துள்ள உலகிலே களியாட்டங்களையும் காட்சிகளையும் விலக்குவதால், கருத்துடைமைக்குக் கேடு வராமல் காக்கப்படுகின்றது; அலங்காரங்களைக் கைவிடுவதால் அடக்கம் வளர்கின்றது; உண்ணல்,

உறங்கல் எல்லாவற்றிலும் ஆடம்பரத்தை ஒழிப்பதால் எளிய வாழ்வு அமைகின்றது; விலைமதிப்புள்ள பொருள்களை மறுத்தல் எல்லா ஆசைகளையும் களைந்தெறிய உதவுகின்றது; சிற்றின்பத்தைத் துறத்தலால், உடலின் ஆற்றலையும் மன வலிமையையும் ஒரே குறிக்கோளாகிய நிருவாணத்தை அடைவதற்கு எவ்விதத் தடையுமின்றிப் பயன்படுத்த முடிகின்றது.

சீலங்களைக் கண்ணும் கருத்துமாய்ப் பேணி வருவதோடு, ஒருவன் தியான முறைகளில் பயிற்சி பெறவேண்டும். தனியிடத்தில் இருந்துகொண்டு, சிந்தையை ஒருநிலைப்படுத்திச் சமாதியில் நிலைத்து நின்று பழகவேண்டும். அந்நிலையிலே உடல், உலகம், வாழ்வு, மரணம் முதலியவைகளையும், பற்றிச் சிந்தித்து, விலக்கவேண்டியவைகளை விலக்கியும், கொள்ளவேண்டியவைகளைக் கொண்டும் பழகிவந்தால், ஆறு புலன்களினால் உண்டாகும் ஆசைகளையும், பற்று, பகை, கோபம், மறதி, சந்தேகம் முதலியவற்றையும் அறவே களைந்துவிட மிகவும் உதவியாகும். உள்ளப் பண்பாட்டிற்கும், உபசாந்திக்கும் தியானம் அல்லது சமாதியே உறு துணையாகும். பௌத்த தருமத்தில் நால்வகைத் தியானங்கள் குறிக்கப் பெற்றுள்ளன.

வயலை உழுது பயிரிட்டு, எருவிட்டு, நீர் பாய்ச்சி, களை பறித்து, அல்லும் பகலும் அதனைக் காத்து வருதலைப் போலச் சமய வாழ்வும் ஒருவகை விவசாயமே. பின்னதில் நிலமாக விளங்குவது மனம் அல்லது உள்ளம். மனத்தில் ஏற்படும் விகாரங்களைக் கணக்கிட முடியாது. கணந்தோறும் மனம் மாறிக்கொண்டேயிருக்கும். ஆசைகளும்

பாசங்களும் அதிலே அடர்ந்து வளரவிட்டு விட்டால், பிறகு அந்தக் காட்டை அழிக்கவே முடியாமற் போகும். உலகிலே திடீரென்று எவரும் தீயோராவதில்லை; அதுபோலவே திடீரென்று எவரும் நல்லோராவதுமில்லை. இந்த நிலைகளை அடைவதற்குக் காரணம் பழக்கம் அல்லது பயிற்சியே. ஆகவே நல்ல வழிகளிலே இந்தப் பயிற்சியைச் செய்து வந்தால், நன்கு பேணப்பெற்ற வயல் பயனளிப்பதைப்போல், மனமும் நல்ல பயனை அளிக்கும்.

மனத்தை வைத்தே மனிதனின் வாழ்வு. மனமது செம்மையானால், மனிதனுக்கு வேறு துணை தேவையில்லை. மனமது தீமையானால், அவனுடைய அழிவுக்கு வேறு பகைவன் தேவையில்லை. இதனால் தான் திருவள்ளுவரும், 'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்' என்றும், 'மனநலத்தின் ஆகும் மறுமை' என்றும் கூறியுள்ளார். அறத்தைப் பற்றிக் கூறுகையில், 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்' என்றும் அவர் முடிவு கட்டியுள்ளார்.

மனத்துக்கண் மாசுகள் உண்டாவதற்கு ஒரு முயற்சியும் செய்யவேண்டியதில்லை; அவை தாமாகவே முளைத்துக் கொப்பும் கிளையுமாகப் பணைத்து வளர்ந்துவிடக்கூடும். ஆனால் முளைத்த மாசுகளை நீக்குவதற்கு மட்டுமே முயற்சி வேண்டும். அது மட்டுமன்று, மாசுகளை நீக்கிய பின் நல்லெண்ணங்கள், விழுமிய கருத்துக்கள் மனத்திலே முளைப்பதற்கு ஒரே சிந்தனையாக அரும்பாடு படவேண்டும். அவ்வாறு முளைத்த நல்லெண்ணங்களைப் பேணிக் காத்து வளர்க்கவேண்டும். தீயவைகளை விலக்கி, நல்லவைகளை வளர்ப்பதற்குப்

புத்தர் பெருமான் மிக விரிவாகவும், மிகவும் நுணுக்கமாகவும், படிப்படியாக மேலேறுவதற்குரிய வழிகளை அறிவுறுத்தியிருக்கிறார்.

மனத்தின் முக்கியத்தையும், மன நிகழ்ச்சிகளில் தீயவைகளுக்கும், நல்லவைகளுக்கும் ஏற்றபடி பயன்கள் விளைந்தே தீரும் என்பதையும் பற்றிப் பெருமான் 'தம்மபத'த்தின் முதல் இரண்டு சூத்திரங்களிலேயே குறிப்பிட்டுள்ளார்:

*'மனிதனை மனோதர்மமே உருவாக்குகின்றது. சிந்தனைகளே அதன் அடிப்படை. சிந்தனைகளாலேயே அது ஆக்கப்படுகின்றது. மனிதன் தீய எண்ணத்தோடு பேசினாலும், செயல் புரிந்தாலும், வண்டிச் சக்கரம் மாட்டைத் தொடர்ந்து செல்வதுபோல், துக்கம் அவனைத் தொடர்ந்து செல்லும்.*

*'மனிதனை மனோதர்மமே உருவாக்குகின்றது; சிந்தனைகளே அதன் அடிப்படை. சிந்தனைகளாலேயே அது ஆக்கப்படுகின்றது. மனிதன் நல்லெண்ணத்துடன் பேசினாலும், செயல் புரிந்தாலும், நிழல் தொடர்ந்து செல்வதுபோல், இன்பம் அவனைத் தொடர்ந்து செல்லும்.'*

தீய வினைகளைப் பற்றி அவர் தெளிவாகவும், திட்டமாகவும் கூறியுள்ளதாவது:

*'மனிதன் பாவத்தைச் செய்துவிட்டால், அதையே திரும்பத் திரும்பச் செய்யாதிருப்பானாக. அவன் அதில் திளைத்திருக்க வேண்டாம்; பாவ மூட்டை மிகவும் துக்ககரமானது.*

*'"என்பக்கம் அண்டாது" என்று பாவத்தை இலேசாக எண்ண வேண்டாம். துளித் துளியாக விழும் தண்ணீராலேயே குடம் நிரம்பிவிடும். பேதை கொஞ்சம் கொஞ்சமாகப் பாவத்தைச் சேர்த்தாலும், அவன் பாவத்தால் நிரம்பிவிடுகிறான்.*

'மனிதன் தன் பாவ கருமத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது; தப்பித்துக்கொள்ளும் இடம் பரந்த வானத்திலும் இல்லை, ஆழ்ந்த கடலிலும் இல்லை, மலையின் குகைகளிலும் இல்லை.' *

நல்வினைகளைப் பற்றி அவர் கூறியுள்ள சில வாக்கியங்கள் வருமாறு:

'நல்லதை விரைவாக நாடவேண்டும்; பாவத்திலிருந்து சித்தத்தை விலக்கவேண்டும். புண்ணிய கருமத்தைச் செய்வதில் தாமதித்தால், மனம் பாவத்தில் திளைக்க ஆரம்பித்து விடும்.

'"என் பக்கம் அண்டாது" என்று புண்ணியத்தை இலேசாக எண்ணவேண்டாம். துளித்துளியாக விழும் தண்ணீராலே குடம் நிரம்பிவிடும். ஞானி கொஞ்சம் கொஞ்சமாகப் புண்ணியத்தைச் சேர்த்தாலும், அவன் புண்ணியத்தால் நிரம்பிவிடுகிறான்.

'மனிதன் புண்ணியத்தைச் செய்வானாகில், அதையே திரும்பத் திரும்பச் செய்வானாக. அவன் அதில் திளைத்திருக்கட்டும்; புண்ணிய மூட்டை மிகவும் இன்பகரமானது.' *

சிரத்தையோடு சீலங்களைப் பேணி, தியானத்தில் பழகி வருபவன் உள்ளத்தில் எழும் தீய எண்ணங்களை அழித்துவிட முடியும். அதனால் உள்ளமும் தூய்மையாகும். ஆனால் ஞானத்தின் உதவி யில்லாவிட்டால், உள்ளத்தின் அடித்தலத்திலே மறைந்து நிற்கும் தீய எண்ணங்களும், மன உணர்ச்சிகளும் மறுபடி தலைதூக்கி மேலே வந்துவிடக் கூடும். நுண்ணறிவாகிய ஞானத்தினாலேயே அவைகளை வேரோடு அழிக்க முடியும். ஞானத்தைப்

* 'தம்மபதம்'

பாலிமொழியில் 'பஞ்ஞா' என்று கூறுவர். ஞானத்தினாலேயே நற்காட்சி—தெளிந்த பார்வை—ஏற்படுகின்றது; அதனாலேயே உண்மை புலப்படுகின்றது.

தியானத்தையும் ஞானத்தையும் பற்றிப் புத்தருடைய வாக்கியங்கள் வருமாறு:

*'தியானத்திலிருந்து ஞானம் உதயமாகின்றது; தியானமில்லாவிடில் ஞானம் குறைகின்றது. ஆக்கமும் கேடும் வரக்கூடிய இந்த இரு வழிகளையும் அறிந்து அறிவு பெருகும் வழியை மனிதன் மேற்கொள்வானாக.*

*'ஞானமில்லாதவனுக்குத் தியானம் இல்லை. தியானமில்லாதவனுக்கு ஞானம் இல்லை. தியானமும் ஞானமும் சேர்ந்திருப்பவனே நிருவாணத்தின் பக்கம் இருக்கிறான்.*

*'எவன் தியானத்தின் முடிவான உபசாந்தியை அடைந்துள்ளானோ, எவன் பயத்தையும் பாசத்தையும் பாவத்தையும் ஒழித்துவிட்டானோ, அவன் பிறவியாகிய முட்களைக் களைந்தெறிந்தவன்; இந்தச் சடலமே அவன் எடுக்கப்போகும் கடைசி உடம்பாம்.'* *

மனத்தின் போக்குகளை நன்கறிந்து, அதனைப் பண்படுத்துவதற்காகவே சீலம், தியானம், ஞானம் ஆகிய மூன்றையும் புத்தர் வற்புறுத்தியுள்ளார். மனம் ஓர் இளங் கன்று போன்றது. அது கண்ட இடங்களிலெல்லாம் துள்ளித் திரியும். அதை வசப் படுத்தி முறையாக இருக்கும்படி செய்வதற்கு, அதன் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டி, அக் கயிற்றை ஒரு முளையில் கட்டிவிடவேண்டும். ஆரம்பத்தில் வெகு நேரம் கன்று துள்ளிக் குதிக்கும். கயிறு எவ்வளவு நீளமுள்ளதோ அவ்வளவு தூரத்திற்கு ஓடி ஓடிச்

* 'தம்மபதம்'

செல்லும்; அதற்கு மேலே செல்ல முடியாமல் திரும்ப முளையருகே வந்து சேரும். பின்னால் தன் முயற்சி வீணானது என்று கண்டு அது முளையடியிலேயே படுத்துவிடும். தியான முறையில் பழக முயல்வோனைப் புத்தர் இத்தகைய கன்றுக்கு ஒப்பிடுகிறார். மன அடக்கமில்லாதவன் நல்ல விஷயம் ஒன்றைக் கருத்திற்கொண்டு தியானம் செய்ய அமர்கிறான். அந்த விஷயமதான் முளை. அவன் மனம் முதலில் சுற்றிச் சுற்றித் திரிந்து வந்தாலும், சிறிது நேரத்திற்குப்பின் அந்த முளையடியில் வந்து படுத்துவிடும். இப்படியே பழகப் பழக, மனம் ஒருநிலைப்பட்டுக் குறித்த விஷயத்திலே நிலைத்து நின்றுவிடும்.

பௌத்த நூல்கள் மனத்தை ஒளியளிக்கும் தீபச் சுடருக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றன. இது மிகவும் பொருத்தமானதே. மனத்தின் ஒளியினாலேயே — ஒளிச் சக்தியினாலேயே — மனிதனின் காரியங்கள் யாவும் நடந்தேற வேண்டும். சாதாரண மனிதனின் மனத்தில் இந்தச் சுடர் நிலையாக நிற்பதேயில்லை. பல சிந்தனைகள், தீய கருத்துக்கள் ஆகிய காற்றினால் இச்சுடர் அடிக்கடி நடுங்கி ஆடுகின்றது; பல சமயங்களில் அணைந்துபோகின்றது. ஒரு விநாடி நேரத்தில் இலட்சக் கணக்கான முறை இப்படி நேருகின்றது. இவ்வாறு நேராமல், உள்ளத்தின் ஒளி குன்றாமல் சுடர்விட்டுக் கொண்டிருக்கத் தியானமே உற்ற துணையாகும்.

சித்தத்தை ஒருநிலைப்படுத்தும் தியானத்தினால் விளையும் ஆற்றல் அல்லது சக்தியினாலேயே மனித உடல் இயங்குகின்றது. சிறு குழந்தை நடக்க முயல்வது, புதுப் புதுச் சொற்களைப் பேசப் பழகுவது முதலியவற்றைக் கவனித்தால், அவைகளும் ஒரு

வகைத் தியானம் என்பது தெரிய வரும்—அதாவது மனத்தை ஒருநிலைப்படுத்தி விஷயங்களில் பயிற்சி பெறுதலாகும். மனிதனுக்குக் கிடைத்துள்ள இந்த ஆற்றலை அவன் முழுதும் பயன்படுத்திக்கொள்வதில்லை. அவன் ஒரு விஷயத்தைக் கருத்திலே பதிய வைத்துக் கொண்டிருக்கும்பொழுது, அதற்கு எதிரான வேறொரு விஷயம் முளைக்க ஆரம்பிக்கின்றது. முதல் விஷயத்திற்குச் செலவாகும் சக்தியை எதிரிடையான விஷயம் வீணாக்கி விடுகின்றது. அம்மனிதன் மனவுறுதியற்றவனாகிறான். கட்டிடம் கட்டுபவன் ஒரு கையால் கட்டுவதை மறு கையால் அழித்துக்கொண்டு வந்தால் என்ன பயனுண்டு? அந்தப் பயன்தான் மனவுறுதியற்றவனுக்கும்.

ஆகவே சித்தம் தளராமல், ஒரே உறுதியுடன் இருக்கப் பழக வேண்டும். தீய எண்ணங்கள் தோன்றுகையில், அவைகளுக்கு நேர் எதிரான நல்லெண்ணங்களைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். இவ்வாறு பழகி வந்தால் தீயவை அருகி வந்து ஒழிந்து விடக்கூடும். பின் மனத்தின் ஆற்றல் வீணாகாதபடி நல்லெண்ணங்களையே போற்றி வளர்த்து வரமுடியும். மனிதனின் உறுப்புக்கள் யாவும் பழக்கத்திற்கு அடிமைப்பட்டவை. அவன் மனமும் அவ்வாறே யுள்ளது. தீய கருத்துக்களை வேரோடு பறித்துவிட்டு, நற்கருத்துக்களையே சிந்தித்து வரப் பழகினல், நாளடைவில் நற் கருத்துக்கள் சிரமமில்லாமலே நிலைத்து நிற்கக் கூடியவை. முதலில் உலகப் பொருள்கள், நம இயல்புகள் பற்றிச் சிந்தித்து, அவைகளின் உண்மை யான தன்மைகளை அறிந்து கொண்டால், அவைகளிலிருந்து நற் கருத்துக்களைப் பற்றிச் சிந்தித்து,

அவைகளின் வலிமையால் உள்ளத்தைப் பண்படையச் செய்யலாம். இந்த இரண்டு நிலைகளையும் முறையே 'ஸம்மா ஸதி' 'ஸம்மா ஸமாதி' என்பர். தியானத்திற்குரிய விஷயங்கள் பலவற்றையும் நாற்பது தலைப்புக்களின் கீழே மிக விரிவாகப் பௌத்த நூல்கள் குறிப்பிடுகின்றன. சிந்திக்க வேண்டிய பொருள்களைத் தேர்ந்தெடுக்கவும், நன்மை தீமைகளைப் பகுத்தறியவும், எல்லாப் பொருள்களின் உண்மைத் தன்மைகளையும் உணர்ந்து கொள்ளவும், தியானத்தோடு ஞானம் சேர்ந்து உதவி புரிய வேண்டும்.

உள்ளப் பண்பாட்டைப் பற்றிப் புத்தர் பெருமான் தமது கருத்துக்களை யெல்லாம் சுருக்கி ஒரே சூத்திரத்தில் தெளிவாகக் கூறியுள்ளார். அது வருமாறு:

*'ஸப்ப பாபஸ்ஸ அகரணம்,*
*குஸலஸ்ஸ உபஸம்பதா,*
*ஸசித்த பரியோதபனம்—*
*ஏதம் புத்தானுஸாஸனம்.'* *

*'சகல பாவங்களையும் நீக்குதல்,*
*நற்கருமங்களைக் கடைப்பிடித்தல்,*
*உள்ளத்தைச் சுத்தம் செய்தல்—*
*இதுதான் புத்தருடைய உபதேசம்.'*

—*தம்மபதம்*

---

* *பௌத்தர்கள் இந்தச் சூத்திரத்தை மிகவும் சிரத்தையோடு ஓதுவார்கள். இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு:*

'Avoid all evil,
Fulfil all good,
Keep the mind pure—
This is the teaching of the Buddha.'

உள்ளத்தைச் சுத்தம் செய்தால், மனிதனின் சிந்தனையும், பேச்சும், செயலும், வாழ்வு முழுதுமே சுத்தமாகி விடும். பின்னர் அவனிடம் 'நான்' என்னும் ஆணவப் பேய்க்கு இடமிராது. ஆணவம் ஒழியும்போது சுயநலம் அறவே ஒழிந்து ஆசைகள் அவிந்து, அறியாமையும் அடியோடு ஒழியும். இந்த முறையே துக்கத்தை நீக்க ஏற்ற வழி.

மனோ தத்துவத்தைப் பற்றி 2,500 ஆண்டுகட்கு முன்னர் புத்தர் பெருமான் ஆராய்ந்து கூறியுள்ள விவரம் இன்றுவரை அறிஞர்களால் பாராட்டிப் புகழப் பெறுகின்றது. விஞ்ஞான வளர்ச்சி பெருகியுள்ள இக் காலத்திலும் அது பொருத்தமாயுள்ளது. பெருமானுடைய உளநூல் ஆராய்ச்சி முறையைப் பற்றிப் பண்டித ஜவாஹர்லால் நேரு, 'விஞ்ஞான சாத்திரங்களில் மிகவும் நவீனமாகவுள்ள இந்தச் சாத்திரத்துள்ளே அவருடைய நுண்ணிய விசாரணை எவ்வளவு ஆழமுடையதாக விளங்கிற்று என்பதைக் காண வியப்பாகவேயிருக்கின்றது' * என்று குறித்துள்ளார். இதே போலப் புத்தருடைய தத்துவ விளக்கத்தைப் பற்றியும் அவர் பாராட்டியுள்ளார். நவீன காலத்துப் பௌதிக நூல், நவீன தத்துவ ஞானம் ஆகியவற்றின் சில கொள்கைகளோடு அவ் விளக்கத்திற்கு எவ்வளவு நெருங்கிய ஒற்றுமை

* '.. It is surprising to find how deep was his insight into this latest of modern sciences .

—'Discovery of India' — Jawaharlal Nehru.

யிருக்கிறது என்பது மிகவும் விசேஷமாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.†

ஆங்கில நாட்டுப் பேரறிஞர் காலஞ் சென்ற திரு. எச். ஜி. வெல்ஸும் புத்தருடைய உபதேசத்தைப் பாராட்டியுள்ளார்: 'கௌதமருடைய அடிப்படையான உபதேசம் தெளிவாயும் எளிதாயுமுள்ளது, நவீன காலத்துக் கருத்துக்களோடு மிக அதிகமான ஒற்றுமையுடையது. உலகம் இதுவரை அறிந்துள்ள அறிவாளர்களிலே, தலைசிறந்த, ஆழ்ந்த அறிவுள்ள ஒருவருடைய பெரிய சாதனையே அது என்பதில் கருத்து வேற்றுமையே இருக்க முடியாது.'*

புத்தர் பெருமானின் உபதேசப்படி உள்ளத்தில் தோன்றும் தீய எண்ணங்களை அகற்றவும், நல்ல எண்ணங்களை வளர்க்கவும், எப்பொழுதும் உள்ளத்தைப் பரிசுத்தமாக வைத்துக் கொள்ளவும் பல நாள், பல ஆண்டுகள் பயிற்சி வேண்டும். அந்தப் பயிற்சிக்குரிய திட்டத்தையும் அவரே வகுத்துள்ளார். அதில் மிக மிக முக்கியமானது அஷ்டாங்க மார்க்கம். அம்மார்க்கம் வாழ்க்கை முழுவதையுமே அளாவி நிற்பது. அத்துடன் மற்ற

---

† 'It is remarkable how near this philosophy of the Buddha brings us to some of the concepts of modern physics and modern philosophic thought.'

— '*Discovery of India*' — Jawaharlal Nehru.

* 'The fundamental teaching of Gauthama is clear and simple and in the closest harmony with modern ideas. It is beyond all dispute the achievement of one of the most penetrating intelligences the world has ever known.'

— *'The Outline of History'*—H. G. Wells.

முறைகளேயும், அவற்ருல் ஏற்படும் பயன்களேயும் அவர் மேற்கொண்டு இருபத்தொன்பது தத்துவங் களாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த முப்பத்தேழு தத்துவங்களேப் பற்றியும் அடுத்த இயலில் தனியாக ஆராய்வோம்.



புத்தகயைக் கோயில்

இங்குள்ள போதி மரத்தடியில்தான்
புத்தர் மெய்ஞ்ஞானம் பெற்ருர்



சாரநாத்தில் புத்தர் முதல் உபதேசம் செய்த தலம்



சாரநாத்திலுள்ள புத்தர் ஆலயம்

## இரண்டாம் இயல்

# அஷ்டாங்க மார்க்கம்

*'துன்பம் தோற்றம் பற்றே காரணம்;*
*இன்பம் வீடே பற்றிலி காரணம்...'*

—மணிமேகலை

மெய்ஞ்ஞானம் பெறுவதற்குப் புத்தர் பெருமான் வகுத்துள்ள தத்துவங்கள் அல்லது நியமங்கள் முப்பத்தேழு. அவை ஏழு பிரிவுகளில் அடங்கி யுள்ளன. அவையாவன:

| | | பாலி மொழியில் |
|---|---|---|
| (1) | நான்கு ஸதிப்பிரஸ்தானங்கள் | — ஸதிபட்டாணங்கள் |
| (2) | நான்கு ஸம்யக் பிரதானங்கள் | — ஸம்மப்பதானங்கள் |
| (3) | நான்கு இருத்திபாதங்கள் | — இத்திபாதங்கள் |
| (4) | ஐந்து இந்திரியங்கள் | — இந்திரியங்கள் |
| (5) | ஐந்து பலங்கள் | — பலங்கள் |
| (6) | ஏழு போத்தியாங்கங்கள் | — போஜ்ஜங்கங்கள் |
| (7) | அஷ்டாங்க மார்க்கம் | — ஆரிய அட்டாங்கிக மக்கம் |

இவைகளைப் பற்றி அபிதரும பிடகத்தில் விரிவான விளக்கங்களைக் காணலாம். இவைகளே பௌத்த தருமம் விதித்துள்ள ஒழுக்க இயலாம். இவைகளை நன்கு தெரிந்துகொண்டு, கருத்தோடு கடைப்பிடித்து வந்தால், உள்ளத்தின் மலங்களைப் போக்கிப் பரிசுத்தமடைந்து, நன்மை பெருகி, மேலான ஆற்றல்களைப் பெற்று, போதியடைந்து, முடிவாகத் துக்கத்தை அறவே நீக்க முடியும்.

### அஷ்டாங்க மார்க்கம்

மேற்கண்ட ஏழு பிரிவுகளில் துக்க நிவாரண மார்க்கமாக முதன்மையாகக் கூறப்படுகிறது அஷ்டாங்க மார்க்கம். அது எட்டுப் படிகளுள்ளது. சத்தியத்தை நாடிச் செல்லும் மனிதன், வழியிலே சோர்வுறாமலும், மயக்கமுறாமலும், முன்னேறிச் செல்வதற்கு அப்படிகள் உறுதுணையாக விளங்குபவை. அவைகளின் விவரம் வருமாறு:

| படிகள் | | பாலி | ஆங்கிலம் |
|---|---|---|---|
| 1. நற்காட்சி | — | ஸம்மாதிட்டி | — Right view |
| 2. நல்லூற்றம் | — | ஸம்மாஸங்கல்ப | — Right aspiration |
| 3. நல்வாய்மை | — | ஸம்மாவாசா | — Right speech |
| 4. நற்செய்கை | — | ஸம்மாகம்மந்த | — Right activity |
| 5. நல்வாழ்க்கை | — | ஸம்மாஜீவ | — Right living |
| 6. நல்லூக்கம் | — | ஸம்மாவாயா | — Right effort |
| 7. நற்கடைப்பிடி | — | ஸம்மாஸதி | — Right mindfulness |
| 8. நல்லமைதி | — | ஸம்மா ஸமாதி | — Right contemplation |

இவைகளில் ஒவ்வொரு படியாகத் தாண்டிச் செல்லவேண்டும் என்பதில்லை. வாழ்க்கையில் எப்பொழுதுமே இவை அனைத்தையும் கடைப்பிடித்து வரவேண்டும். இந்த எட்டு அங்கங்களும் வாழ்க்கையின் சகல துறைகளையும் கட்டுப்படுத்தி, மன, மொழி, மெய்களைப் பரிசுத்தப் படுத்தக் கூடியவை. அகங்காரப் பொக்கிஷமாயும், கோபக் களஞ்சியமாயும், ஆஸவத்தின் அரண்மனையாயும், பொய்க் கூடமாயும் காமவிலாசமாயும் விளங்கும் உடல், இந்த முறைகளால் மலங்கள் நீங்கி, மனத்திற்கு அடங்கி, நற்பணிகளைச் செய்யும் ஊழியனாக மாறும். மேலும்,

'ஓயாமற் பொய் சொல்வார், நல்லோரை நிந்திப்பர்,
உற்றுப்பெற்ற
தாயாரை வைவர், சதிஆயிரம் செய்வர்,
சாத்திரங்கள்
ஆயார், பிறர்க்(கு)உப காரம்செய்யார், தமை
அண்டினர்க்(கு) ஒன்று
ஈயார்......'

என்று பட்டினத்தடிகள் பரிதாபத்துடன் கூறும் மாக்கள் இந்த எட்டு முறைகளையும் கையாண்டு வந்தால், உயர்ந்த மக்களாகிவிட முடியும். உயர்ந்த பண்புகள் பெறுவதுடன், அவர்கள் மெய்யறிவு பெற்று, இனிப் பிறவாத பேரின்ப நிலையையும் அடைய முடியும்.

அசுவகோஷர் விவரித்துள்ளது போல, நிருவாண வழியில் செல்பவனுக்கு நற்காட்சியே ஒளியளிக்கும் தீபம்; நல்லூற்றமே வழிகாட்டி; நல் வாய்மையே இடை வழியில் தங்குமிடம்; நற் செய்கையே அவன் நிமிர்ந்து நிற்கும் நிலை; நல் வாழ்க்கையே பிரயாணத்தில் அருந்தும் உணவு; நல்லூக்கமே அவனது நடை; நற்கடைப்பிடியே அவனது சுவாசம்; நல்லமைதியே அவன் சாந்தியுடன் இளைப்பாறும் கட்டில்.

இனி அஷ்டாங்க மார்க்கத்தின் படிகளை ஒவ்வொன்றாகக் கவனிப்போம்.

***நற்காட்சி:*** மனிதனுடைய தனிப் பெருமை பகுத்தறிவு. மனிதனைத் தவிர வேறு எந்தப் பிராணியும் தனது அநுபவத்தைத் தன்னிடமிருந்து வேறாகப் பிரித்து, அதைப் பற்றிச் சிந்திப்பதில்லை. தன்னையே சாட்சியாகவும் கருத்தாவாகவும் கருதி, 'நான் இதைச் செய்கிறேன்' என்று வேறு எந்த

உயிரும் தனக்குள்ளே சொல்லிக் கொள்வதில்லை. ஒப்பற்ற பகுத்தறிவை உபயோகித்துக் கொண்டு பார்ப்பதே மனிதனுடைய காட்சி அல்லது பார்வை. இந்தப் பார்வையே கோளாறு யிருந்தால், பார்க்கப் படும் பொருளின் தன்மையும் மாறுபாடாகவே தோன்றும். தவறான காட்சி அல்லது பார்வையே எல்லாத் தீமைகளுக்கும் அடிப்படையாக அமை கின்றது. ஏனெனில் அதனால் தவறான நம்பிக்கைகள், கொள்கைகள், இலட்சியங்கள் ஏற்படுகின்றன. மானிட சரித்திரத்தின் போக்கு மனிதன் கொண்ட நம்பிக்கைகள், கொள்கைகளின் போக்காகும். அவனுடைய செய்கைகள் பெரும்பாலும் இந்த நம்பிக்கைகளையே ஆதாரமாய்க் கொண்டவை. தவறான பார்வையுள்ளவன் பகுத்தறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்த மில்லாத விஷயங்களி லெல்லாம் நம்பிக்கை கொள்ளக்கூடும். இதனாலேயே மூட நம்பிக்கைகள் முதிர்ந்து வளர்கின்றன, ஆராய்ச்சி அவமதித்து ஒதுக்கப்படுகின்றது.

பொருள்களின் உண்மையான இயல்பை அறிவதே நற்காட்சி. அதுவே அறிவு பெற்றிருப் பதன் பயன்:

> *'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
> *மெய்ப்பொருள் காண்பது அறிவு.'* *

ஒவ்வொரு செயலுக்கும் காரணமாவது நோக்கம் அல்லது இலட்சியம். நோக்கத்திற்குத் தூண்டு கோலாக விளங்குபவை நம்பிக்கையும் கொள்கையும். ஆதலால்தான் காட்சி நற்காட்சியா யிருக்க வேண்டும் என்று கூறப்பெற்றுள்ளது. நற்காட்சி

---

* *'திருக்குறள்.'*

என்பது உண்மையான பார்வை. சந்தேக மயக்கங்களுடன் பார்த்தல் தீக்காட்சி அல்லது பொய்க் காட்சியாகும். ஒருவன் ஒன்றில் நம்பிக்கை கொள்கிருன் என்ருல், அவன் முதலில் அதை நன்கு அறிந்திருக்க வேண்டும். அந்த அறிவை அடித்தலமாகக் கொண்டே, மேற்கோட்டைகளாகிய பேச்சும், செயலும் கட்டப் பெறுகின்றன. அஸ்திபாரமே ஆட்டங் கொடுத்தால் மேற்கோட்டைகளின் கதி என்னவாகும்?

வாழ்க்கையின் உண்மைகளேயும், பிரபஞ்சத்தைப் பற்றிய உண்மைகளேயும், பொருள்கள், உயிர்கள், யாவற்றையும் சூழ்ந்து நிற்கும் விதிகளேயும் ஆதாரமாகக் கொண்டு அவற்றிற்கு ஏற்றபடி அமைவதே நற்காட்சி—நல்லறிவு.

மனிதன் எதையும் தன் புத்தியைக் கொண்டு அறிந்திருந்தால் போதாது, அதனே அவன் தன் வாழ்க்கையிலேயே அநுபவித்தும் உணர்ந்திருக்க வேண்டும்.

பொய்க் காட்சியும், அறியாமையுமே உலகில் நிறைந்துள்ளன. தொட்டில் முதல் சுடுகாடுவரை பொய்களும், போலி உண்மைகளும, மூட நம்பிக்கைகளும், சுயநலங்களும் மனித வாழ்வைச் சூழ்ந்து அரித்துக்கொண்டே யிருக்கின்றன. மக்களின் கண்கள் உண்மையைப் பார்க்கக் கூசுகின்றன. விழித்துப் பார்த்தவுடன் தெள்ளத் தெளிவாகத் தெரியக்கூடிய உண்மையை விட்டுவிட்டு, அவர்கள் போலிகளேயே நம்பி வாழ்கின்றனர். இதனுல் தடுக்கிவிழும் இடங்களிலெல்லாம் 'மாடன்க'ளும் பீடங்களும் நிறைகின்றன; 'கல்லினும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே?' என்று பாடிக்

கொண்டே, உளியிட்ட கற்களையும், புளியிட்ட செப்புச் சிலைகளையும் வணங்கும் பெருங் கூட்டமான மக்கள், தம் வாழ்க்கையைச் சீர்திருத்தாமல் வீணுக்கு கிறார்கள்; பல நாடுகளிலும் பல மக்களினங்களிலும் துவேஷமும் குரோதமும் பெருகி வருகின்றன; மானிட வாழ்வின் இலட்சியம் மறக்கப்பெற்று, மந்திரங்களிலும், தந்திரங்களிலும், பூசனைகளிலும், ஆராதனைகளிலும் பொழுதெல்லாம் போக்கப்படு கின்றது. மனித சமூகம் முழுதும் ஒரே குலம் என்ற உண்மையும் தேய்ந்து மறைந்து ஒழி கின்றது. பொய்க் காட்சியால் உலகில் ஏற்பட்ட போர்கள், உயிர்ச் சேதங்கள், துயரங்களைப் போல, உலகிலே வேறு எதனாலும் ஏற்படவில்லை.

சத்தியம் தருமம் இரண்டும் மனித அறிவின் பரிணாமங்கள். ஆதலால் அவைகளைப்பற்றி முடிவு செய்வதற்கு உரிய அதிகாரி நமது புத்திதான். பல்லாயிரவர் சேர்ந்து ஒரு விஷயத்தை ஒப்புக் கொண்ட பின், கடைசியிலுள்ள ஒருவனுக்கும் அது உண்மையாகிவிட முடியாது, அந்த ஒருவனுடைய நல்லறிவு அதை ஏற்றுக் கொண்டால்தான் அவ னுக்கு அது சத்தியமாகும். அறியாமை, பயம், பிடிவாதம், சுயநலம் முதலியவற்றாலேயே மதி மயக்கம் ஏற்படுகிறது. மயக்கத்தின் காரணங்களை நீக்கி, ஐயங்களைத் தெளிந்து காண்பதே நற்காட்சி. மக்களில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு விஷயத்தை யும் தானே கண்டு தெளியவேண்டும்; பிறர் அநுப வங்கள் அவனுக்கு உதவியாக இருக்கமுடியுமே அன்றி, அவைகளே அவனுடைய அநுபவங்களாக ஆகிவிட முடியாது.

புத்தர் பெருமான் சமய வாழ்க்கையின் முதற் படியாக நற்காட்சியை அமைத்திருப்பதன் காரணம் என்ன? அதைக்கொண்டுதான் துக்கம், துக்க காரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் ஆகிய அவர் அருளிய நான்கு வாய்மைகளையும் பற்றி அறிந்துகொள்ள முடியும். அப்படி அறிந்து கொள்வதே நற்காட்சி என்று அவர் கூறியுள்ளார். நற்காட்சியினாலேயே ஒவ்வொருவரும், 'நான்' என்ற ஆணவம் வெறும் கானல் நீர் என்றும், எல்லா உயிரும் ஒன்றே என்றும், இந்த உயிர் கரும நியதிக்கு உட்பட்டிருப்பது என்றும், வாழ்க்கை துக்க மயம் என்றும் கண்டுகொள்ள முடியும். கல்வியும் ஞானமும் இல்லாமல் நற்காட்சி ஏற்பட முடியாது. கல்வி என்றால் வெறும் எழுத்தறிவன்று—மனத்தை ஒருநிலைப்படுத்தும் தியானம் வரை கொண்டு செல்லும் வித்தையையே கருத்திற் கொள்ளல் வேண்டும். பேதைக்கு நற்காட்சி அரிது:

> 'கற்றான் தளரின் எழுந்திருக்கும்; கல்லாத
> பேதையான் வீழ்வானேல், கால்முரியும்.' *

மெய்யான கல்வியுடையவர்களுக்கே—வித்தையில் தேர்ந்தவர்களுக்கே--ஞானமும், அதிலிருந்து தனித் தனியாகப் பிரித்தறியும் விஞ்ஞானமும், விஞ்ஞானத் திலிருந்து ஒழுக்கம், தவம், தியானம் முதலியவை களும் முறையாக உண்டாகின்றன.

நற்காட்சி பற்றித் திருவள்ளுவர் கருத்தைத் தெரிவிக்கும் குறள் வருமாறு:

> 'இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி
> மாசறு காட்சி யவர்க்கு.'

---

* 'நான்மணிக்கடிகை'

*நல்லூற்றம்:* 'நல்லூற்றம் என்பது என்ன, பிக்குகளே? (புலன் இன்பங்களைத்) துறத்தல், மனக் காழ்ப்புக் கொள்ளாமை, அஹிம்சை ஆகியவற்றில் உறுதியாக நிற்றலேயாகும்' என்று புத்தர் கூறியுள்ளார். மனிதன் எதில் நாட்டம் கொள்ள வேண்டும், எதில் ஆர்வம் கொள்ள வேண்டும் என்பது இதனால் விளக்கப்பெற்றுள்ளது. வாழ்விலே இன்பங்களைத் தேடித் திரிந்தால், துன்பங்கள் பலவாக அடர்ந்து வந்து பற்றிக்கொள்கின்றன. ஆகவே புலன்களால் வரும் இன்பங்களைத் துறக்கப் பழக வேண்டும். பிறரால், பிற உயிர்களால் ஏற்படும் தீமைகள், இன்னல்களை யெல்லாம் மனத்திலே பதியவைத்துக்கொண்டு காழ்ப்புக் கொள்ளலாகாது.

> *' "என்னை நிந்தித்தான்; என்னை அடித்தான்; என்னை வென்றான்; என்னைக் கொள்ளையிட்டான்"— இத்தகைய எண்ணங்களை உடையாரிடம் துவேஷம் நீங்காது நிலைத்திருக்கும்'*

என்று 'தம்மபதம்' கூறுகின்றது. இன்னா செய்தார்க்கும் நன்னயம் செய்யவேண்டுமென்றும், புண்ணில் தீயை வைப்பது போன்ற இன்னா விளைக்கப்படும் போதும் வெகுளாதிருத்தல் நலமென்றும் நாயனாரும் அறிவுறுத்தியுள்ளார். எந்த உயிர்க்கும் கேடு செய்யாமலும், செய்ய எண்ணாமலும் இருப்பதோடு, எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தப் பழகுவதே உண்மையான அஹிம்சை. ஆகவே நல்லூற்றம் என்பது சத்தியத்தை அடிப்படையாகக் கொண்ட உன்னதமான ஆசைகளை வளர்த்தல் என்று காணப் பெறுகின்றது.

நல்லூற்றம் நல் விருப்பங்கள் என்றும், நல் ஆர்வம் என்றும், நற்சிந்தனை என்றும் பலவாறு

மொழிபெயர்க்கப்பட் டிருக்கின்றது. இவை எல்லாமுமே ஒன்றுக்கொன்று தொடர்புடைய சொற்ளுடர்கள். நல்லூற்றம் நற்காட்சியோடு இணைப்புள்ளது. இவை இரண்டும் சேர்ந்து நிருவாண நிலைக்குரிய 'பிரஞ்ஞை' என்ற மெய்யறிவை அளிக்க வல்லவை. எனவே சத்தியத்தை நாடிச் செல்பவன், மகான்கள் என்றும், மகரிஷிகள் என்றும், எவரெவர்களோ, எவ்வெக் காலத்திலோ சொல்லிவைத்தவைகள் யாவும் உண்மையென்று நம்பிக் கொண்டிராமல், தானாக முயன்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அறிவுக்குப் பொருத்தமில்லாதவைகளை உதறிவிட வேண்டும். கல்வி கேள்விகளில் சிரத்தை கொண்டு, உலகியல் அறிவுகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். விருப்பு வெறுப்புக்கள், கோபம், அச்சம், மடமை ஆகியவைகளை விலக்க வேண்டும். மதவாதிகளின் முடிவில்லாத தத்துவங்கள், விவாதங்கள், மனப் பண்பாட்டுக்கு இடையூறான ஏனைய விஷயங்கள் யாவற்றிலும் சிறிதும் தலையிடாது ஒதுங்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகத் தான் மேற்கொண்டுள்ள இலட்சியத்தை மறவாமல், அதை அடைவதற்குரிய மார்க்கத்தினின்றும் சிறிதும் விலகாமல், வேறு சிந்தனைகளுக்கோ ஆராய்ச்சிகளுக்கோ இடங்கொடாமல் இருந்து வரவேண்டும். மானிட அறிவுக்கும் ஆற்றலுக்கும் மேற்பட்டு, மனிதனால் யூகித்துக்கூட அறிய முடியாத ஜீவான்மா, பரமான்மா போன்ற விஷயங்களிலும், உலகிலே மலைமலையாக விளங்கும் சொற்குவியல்களான சாத்திரங்களின் ஆராய்ச்சியிலும் அவன் ஈடுபடுதல் ஒருகாலும் நன்மை யளிப்பதில்லை; அது அவன் முன்னேற்றத்திற்குப் பெருந் தடையுமாகும். வில், வாள், வேல் முதலிய கொலைக் கருவிகளோடும்,

பயங்கரமூர்த்திகளாயும், அழகு வடிவும் ஆனந்த மூர்த்திகளாயும், உலகிலே சந்திகளிலும், வீதிகளிலும், சாலைகளிலும், சோலைகளிலும் விளங்கும் சிலைகளை யெல்லாம் வணங்கிக் கொண்டிருந்தால், அவன் கால மெல்லாம் வீணாவதோடு, கருமத் தொகுதியும் பெருகிக்கொண்டே யிருக்கும். நீர், நெருப்பு, வாயு, வானம், பூமி முதலியவைகளிலே விளங்கும் எண்ணற்ற தெய்வங்கள், தேவதைகளைப் பற்றிய கதைகளிலே அவன் மனம் நாடலாகாது. அவன் வணங்கவேண்டிய தேவதைகள் அன்பு, தயை, அருள் முதலியவைகளே. செய்யத்தகாத பாவங்களை யெல்லாம் செய்துகொண்டே ஒருவன் சில பக்திப் பாடல்களைப் பாடிப் பஜனை செய்து விட்டும், சில மந்திரங்களை முணுமுணுத்துவிட்டும், பேரின்ப நிலைக்குப் பறந்து பாய்ந்துவிட முடியாது. புனித வாழ்வுக்கோ, நிருவாணப் பேற்றுக்கோ குறுக்கு வழி கிடையாது; நீதியால் வந்த நேரிய தரும நெறியே அவற்றிற்குரிய பாதை. தாயுமானவர் உடலைக் 'காமவேள் நடனசாலை' என்றார். சமயவாழ்வில் ஈடுபடும் உபாசகனோ, துறவியோ, கருத்தை மயக்கும் ஆடம்பரமான தத்துவங்களை நம்பிக்கொண்டு, காமவேளின் நடனசாலையைப் பேய்களின் நடனசாலையாக மாற்றிக் கொள்ளக் கூடாது.

அறத்தில் ஆர்வமுள்ளவன், ஆசைகளை அறுப்பதில் ஆசை கொண்டவன், தெளிந்த அறிவும், குறிக்கோளில் கருத்தும், இடைவிடாத ஊக்கமும் கொண்டு முயற்சித்து வந்தால், சந்தேகங்களும், மயக்கங்களும், போலித் தத்துவங்களும் அவனைத் தடுத்து நிறுத்த முடியாது. அவன் துக்கத்தை மாற்ற

வேண்டிய பெரும் பொறுப்பை நிறைவேற்றவேண்டி யிருப்பதால், அதற்குரிய சீலங்கள் யாவையும் அவன் போற்றிவருவான். செருக்கும், சினமும், சிறுமையும், அழுக்காறு, அவா, இன்னுச் சொல் முதலியவைகளும் நீங்கி, அவன் உள்ளம் பரிசுத்தமா யிருக்கும். தெளிவான காட்சியாலும், உயர்ந்த விஷயங்களில் உறுதியுடன் கொள்ளும் ஆர்வத்தாலும்,

> 'கருமருவு குகையனைய
> காயத்தின் நடுவுள்
> களிம்பு தோய் செம்பனைய...'*

உள்ளங்கூட மாற்று மதிக்கமுடியாத பசும்பொன் ஞகிவிடும். தானே தனக்கு உதவி என்றும், தான் சரணடையக்கூடிய இடம் தன்னைத் தவிர வெளி யிலே எங்குமில்லை என்றும் பௌத்த உபாசகன் முழு நம்பிக்கை கொண்டிருப்பான். அதனுலேயே அவனுக்குக் கடைத்தேற்றம் உறுதி.

> 'நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
> நிலைகலக்கிக் கீழிடு வானும்,—நிலையினும்
> மேன்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
> தலையாகச் செய்வானும் தான்.'†

தன்னைச் செம்மைப் படுத்திக் கொண்ட ஒருவ னின் உள்ளம் பரிசுத்தமா யிருக்கும். பரிசுத்தம் பயத்தை ஒழிக்கும், முகத்தை மலரச் செய்யும், சொல்லை இனிமையாக்கும், செயலை நெறிப்படுத்தும், அளவற்ற வலிமையை அளிக்கும், அன்பை விரி வடையச் செய்யும். அன்பு விரிவாகி விரிவாகி உயிர் கள் அனைத்தையுமே அணைத்துக் கொள்ளும். அந்த நிலையிலே, நல்லூற்றத்தில் நிலைத்துள்ள

---

* தாயுமானவர் † நாலடியார்

ஒருவன் விரும்பக்கூடிய இனிய நிலையைப்பற்றிப் 'போதிசாரியாவதாரம்' என்ற நூலில் ஓர் அரிய வசனம் காணப்படுகின்றது. அது வருமாறு:

*'நோயாளருக்கு நான் நன் மருந்தாகப் பயன்பட வேண்டும்; நோய் மறுபடி வராமலிருக்கும் வரை. அவர்களுக்கு நான் மருத்துவனுகவும், ஊழியக்காரனுகவும் இருந்து வர வேண்டும், உண்ணும் உண்டிகளையும் பருகும் பானங்களையும் மழையாகப் பொழிந்து பசி, தாகங்களாகிய துயரத்தை நான் தணிக்க வேண்டும்......என் செல்வமெல்லாம் ஏழைகளுக்கு உரிமையா யிருக்கட்டும்; அவர்களுடைய தேவைகளுக்கு நான் பல வழிகளிலும் தொண்டு புரிந்து வரவேண்டும். என்னையும், என் இன்பங்களையும், முற்பிறவியிலும், இப்பிறவியிலும், இனிவரும் பிறவியிலும் நான் செய்யும் புண்ணியங்களையும் நான் மன அமைதியோடு தத்தம் செய்கிறேன்—அதனுல் எல்லா உயிர்களும் தத்தம் இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காக...என்னை நிந்திப்பவர்கள், எனக்குத் தீமை செய்பவர்கள், என்னை ஏளனம் செய்பவர்கள் யாவரும் போதியடைவார்களாக. பாதுகாப்பற்றவர்களுக்கு நான் பாதுகாப்பாளனுயும், வழிப் போக்கர்களுக்கு வழிகாட்டியாயும், ஆற்றின் மறுகரையாகிய நிருவாணத்தை அடைய விரும்புவோர்க்குக் கப்பலாயும், அணையாயும், பாலமாயும் விளங்குவேன். (வழியிலே) ஒளி வேண்டுவோர்க்கு நான் தீபமாயும், சயனிக்க அமளி விரும்புவோர்க்கு அமளியாயும், குற்றேவல் புரிய அடிமை தேவையாயுள்ளவர்களுக் கெல்லாம் நான் அடிமையாயும் விளங்குவேன்...'*

*நல்வாய்மை:* சத்தியமான வசனமே நல்வாய்மை. 'பொய்யுரையிலிருந்தும், புறங்கூறுவதிலிருந்தும், நிந்தைப் பேச்சிலிருந்தும், பயனற்ற சோம்பேறிப் பேச்சிலிருந்தும் ஒதுங்கியிருத்தல்,

பிக்குகளே, அதுவே நல்வாய்மை எனப்படுவது!' என்பது புத்தர் திருவாக்கு. எவர்க்கும் எத்தகைய தீமையும் இல்லாத சொற்களே வாய்மையென்று நம் வள்ளுவர் விளக்கியுள்ளார். சிந்தனையிலிருந்தே பேச்சுப் பிறப்பதால், முதற்கண் நற்காட்சியும், நல்லூற்றமும் கூறப்பட்டன. தவறான சிந்தனையிலிருந்து தவறான பேச்சே வெளிவரும், அதிலிருந்து தவறான செயல் விளையும்.

நாள்தோறும் வாழ்க்கையில் மக்கள் சிறிதும் கருத்தில்லாமல் கூறும் புளுகுகளும் பொய்களும் எத்தனை! நீதி மன்றங்களிலே கூறும் அசத்தியங்கள் எத்தனை! தொழில்களிலும், வாணிபத்திலும் பொய்களுக்கு ஒரு வரையறையேயில்லாமலிருக்கிறது. இத்தகைய பொய்மைகள் அனைத்திற்கும் நல்வாய்மையில் இடமில்லை. வாய்மை என்பது வாயின் தன்மை — உண்மையே வாயின் இயல்பு * என்று தமிழர் முன்பே வகுத்துள்ளனர்.

நல்வாய்மை நயம்பட உரைத்தலுமாம். பேச்சில் அன்பும் மரியாதையும் கலந்திருக்கவேண்டும்; வசைமொழி, பிறரை நோவச் செய்யும் கடுஞ்சொற்கள், முன்னால் நிற்கும்போது உளம் கனிய உரையாடிவிட்டுப் பின்னால் இழித்துரைக்கும் பேடித்தன்மை ஆகியவைகளை அறவே விலக்கிப் பழகவேண்டும். கனிகள் பல இருக்கப் புளிக்கும் காய்களை உண்ணலாகாது; அதுபோல மக்களினத்தை ஆதரத்துடன் அணைத்து வாழ்த்தக்கூடிய எண்ணற்ற இனிய சொற்கள் இருக்கும்போது, இன்னாச் சொற்களை

* வாயின் தன்மை வாய்மை என்பதுபோல், உள்ளத்தின் தன்மை உண்மையாயிற்று; மெய்யின் தன்மை மெய்ம்மையாயிற்று.

ஏன் பேசவேண்டும்? பிறர் நம்மை நிந்தித்தால், அந்தத் தீமை அவர்களையே சாரும்படி விட்டுவிட வேண்டும். நாம் பதிலுக்கு ஏசினால், அக்குற்றம் நமக்கு வந்துவிடும். புத்தர் பெருமான் ஒருசமயம் பிட்சைக்குச் சென்றிருக்கையில், இல்வாழ்வோன் ஒருவன் அவரைப் பார்த்து நிந்தை மொழிகளைக் கூறினான், பிட்சையளிக்காமல், அவன் நிந்தனையையே அவருக்குத் தானமளித்தான். அவர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தார்: 'அப்பா! உனது நிந்தனையை நான் ஏற்றுக்கொள்ள முடியாது; அது உன்னிடத்திலேயே இருக்கட்டும்!' என்றார். கிருகஸ்தன் திகைத்தான். 'நீ பிட்சை யளித்து, அதை நான் வேண்டாமென்று மறுத்துவிட்டால், அது யாரைச் சார்ந்தது? உன்னையே சாரும். அது போல நீ யளித்த நிந்தனையை நான் அங்கீகரிக்கவில்லை. அது உன்னிடமே யிருக்கட்டும்!' என்று பெருமான் விளக்கியுரைத்தார். நிந்தைக்கு நிந்தை, ஏச்சுக்கு ஏச்சு என்ற முறையை மேற்கொள்ள நல்வாய்மையைக் கடைப்பிடிப்பவனுக்கு உரிமையில்லை.

சொல்லின் சிறப்பைப் பற்றியும், முறையைப் பற்றியும் திருவள்ளுவர், 'இனியவை கூறல்', 'சொல்வன்மை,' 'பயனில சொல்லாமை', 'புறங் கூறாமை', 'வாய்மை' என்ற ஐந்து தனி அதிகாரங்களிலும், பிறவிடங்களிலும் விளக்கிக் கூறியுள்ளார். அவருடைய கருத்துக்கள் யாவர்க்கும் நன்னெறி காட்டுபவை. மெய்ப்பொருள் கண்டவர்களின் வாய்ச் சொற்களில் வஞ்சனையின் வாசனை இராது, அவை அன்பிலே தோய்ந்து வரும் இனிய சொற்களாம். பணிவும் இன்சொல்லுமே ஒருவனுக்கு அழகு தரும் அணிகளாம். எதைக் காக்கா விடினும்

நாவைக் காத்துவர வேண்டும். பண்புடையவர்கள் பயனற்ற சொற்களைக் கூறிவந்தால், அவர்களுடைய சீர்மையும் சிறப்பும் நீங்கிவிடும். பயனற்ற பேச்சிலேயே பழகியவன் மனிதனல்லன் — அவன் மக்களிலே பதர். வாய்மையைப்பற்றி வள்ளுவ முனிவர், 'பொய்யா விளக்கே விளக்கு' என்றும், 'பொய்யாமை அன்ன புகழில்லை' என்றும் பலவாருகப் போற்றி யுரைத்துள்ளார். நல்லவற்றை நாடி, இன்சொற்கள் பேசிவந்தால், அல்லவை (பாவங்கள்) தேயும், அறம் பெருகுமென்றும் அவர் வழி காட்டியுள்ளார்.

> 'நாற்றம் உரைக்கும் மலர்உண்மை; கூறிய
> மாற்றம் உரைக்கும் வினைநலம்......'*

நற்செய்கை: நற்செய்கை யாதெனில், 'உயிர்க் கொலை, தமக்கு அளிக்கப் பெருதவைகளைக் கவர்ந்து கொள்ளல், முறை தவறிய சிற்றின்ப உணர்ச்சிகள் ஆகியவற்றிலிருந்து விலகல்' என்று புத்தபகவர் தெரிவித்துள்ளார். உயர்தர வாழ்க்கையில் நோக்க முள்ளவன், அதற்கு முரணுயுள்ளவை அனைத்தை யும் விலக்கி, நன்மையானவற்றையும் மேன்மை யானவற்றையுமே செய்துவருவான். உள்ளத்தை யும் நாவையும் நன்னிலையில் நிறுத்திக்கொண்டவ னுடைய செய்கையும் நல்லதாகவே அமையும். புனித ஆறுகளிலும் குளங்களிலும் குளிப்பதால் புண்ணியம் வந்துவிடாது; கொல்லாமை முதலிய சீலங்களை வளர்த்துக் கொள்வதாலேயே புண்ணியம் பெறமுடியும். தீவினைகளை விலக்கிவிட்டாற் போதாது; நல்வினைகளை ஊக்கத்தோடு செய்து

* 'நான்மணிக்கடிகை'

வரவும் வேண்டும். அதுவே இவ்வாழ்க்கையில் நாம் ஆற்ற வேண்டிய அருந் தவம்.

பௌத்த தருமத்தின் திட்டங்கள் ஏட்டுச் சுரைக்காய்களல்ல; அவை ஒவ்வொன்றும், வாழ் விலே, செயலிலே கடைப்பிடிக்க வேண்டியது. எனவே கொல்லாமை என்ற விதியை, ஒருவன் தன் உயிரை இழக்க நேர்ந்தாலும், பின்பற்றியாக வேண்டும். காடுகளில் வசிக்கும் பிக்குகள் கூடக் கொடிய விலங்குகளேயோ, விஷப் பாம்புகளேயோ கொல்லுதல் ஆகாது. உயிரைக் காக்கவேண்டிய மனிதன் உயிர்வதை செய்யலாகாது. உயிர்கள் உயிர்களே உண்ணக் கூடாது. ஆறறிவு பெற்ற மனிதன், மனப் பண்பாடுகள் நிறைந்த மனிதன், மற்றெல்லா உயிர்களுக்கும் நண்பனுக விளங்க வேண்டும். அவன் அகத்திலே அன்பு அரும்பினுல் தான், தருமம் மலரும். அகத்திலே அன்பில்லாத உயிர்வாழ்க்கை கற்பாறைமீது முளேத்த மரம்போல் பட்டுவிடும். அருளில்லாதவன் செய்யும் அறம் மனத் தெளிவில்லாதவன் மெய்ப்பொருளேக் கண்டு பிடிப்பது போலவே முடியும்.

'அறவினே யாதெனில் கொல்லாமை' என்ருர் வள்ளுவர். 'எல்லா இடத்தும் கொலேதீது' என்றும், 'திரு ஒக்கும் தீதில் ஒழுக்கம்' என்றும் 'நான்மணிக் கடிகை' கூறுகின்றது. இதேபோலப் புத்தர் பெருமானும் பன்முறை கூறி வந்திருக்கிருர். உயிரைப் பலிகொடுத்துச் செய்யும் யாகங்களே அவர் தடுத்து வந்தார். ஆயினும் எக்காரணத்தாலோ, பிற்காலத்தில், பௌத்தர்கள் நிறைந்துள்ள நாடு களில், கொலே மறுத்தல் நிலேத்திருந்த போதிலும்,

உயிர்க் கொலையால் கிடைக்கும் ஊனை உண்பது மட்டும் இதுவரை நிற்கவில்லை. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டு, வெளியே திரியும் உயிர்ப் பிராணிகளை வயிற்றுள் அடக்குதல் எந்த முறையில் நியாயமாகுமோ தெரியவில்லை. இத்தகைய நிலைமையை உணர்ந்தே நாயனார், கொல்லாமையைப் பற்றிக் கூறியது போலவே, புலால் மறுத்தலையும் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

*'தினற் பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்*
*விலைப்பொருட்டால் ஊன் தருவார் இல்'*

என்று அவர் எடுத்துக்காட்டியுள்ளார். பலகோடி மக்கள் புலாலுண்பதாலேயே, பிராணிகளை வதைத்தலும், வதைத்தவைகளின் ஊனை விற்றலும் நடைபெறுகின்றன.

பௌத்தர்கள் புலாலுண்பதைக் காந்தியடிகளும் கடிந்துள்ளார். உயிர்கள் அனைத்தையும் அன்போடு ஆதரிப்பது பற்றிப் புத்ததேவர் கண்டிப்பான முறையில் உபதேசித்ததைப் பாராட்டிவிட்டு, வெளி நாடுகளிலுள்ள அவர் அடியார்கள் புலால் மறுத்தலை மேற்கொள்ளாம லிருப்பது முறையன்று என்பதை அவர் எடுத்துக் காட்டியுள்ளார். அவர் கூறியதாவது:

*'உலகிலே எந்தச் சமயாசாரியராவது காரண-காரியத் தொடர்பு பற்றிய அசைக்கமுடியாத விதியை வற்புறுத்திக் கூறினர் என்றால், அவர் நிச்சயமாகக் கௌதமரேயாவார்; ஆயினும், இந்தியாவுக்கு வெளியேயுள்ள எனது பௌத்த நண்பர்கள், தங்களால் முடிந்தால், தங்கள் செயல்களின்*

*கருமபலன்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறார்கள்.'* *

தவறான முறையிலே பெறும் பொருளெல்லாம் களவால் வந்ததாகவே கருதலாம். பிறர் பொருளை உள்ளத்தால் நினைத்தலும் தீதாகும். பிறனுடைய செல்வத்தை மனத்தாலும் விரும்பாமையே நம் செல்வத்தைப் பேணும் முறை. இதே போலக் காம இன்பத்திலும் முறைதவறி நடத்தலாகாது. பிறர் மனை விரும்புதல், விலைமாதர் தொடர்பு முதலிய வற்றை நற்செய்கை விரதத்தை மேற்கொண்டவன் ஒதுக்கிவிட வேண்டும். பொதுவாகப் புலன்களின் இன்பமாகிய வஞ்சனை வலையிலே சிக்கிக்கொள்ளாது அவன் தன் செயல் ஒவ்வொன்றிலும் கண்ணும் கருத்துமா யிருக்க வேண்டும். அவன் செய்யும் ஒவ்வொரு வினையும் தூயதா யிருக்க வேண்டும். 'வினை நலம் வேண்டிய எல்லாம் தரும்' என்றும்,

*'என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு*
*நன்றி பயவா வினை'*

என்றும் வள்ளுவர் வகுத்துள்ளார்.

*நல்வாழ்க்கை:* 'தவறான வழியில் வாழ்க்கை நடத்துவதை விட்டு, நியாயமான முறையில் ஆரியச் சீடன் † தன் ஜீவனத்திற்கு வேண்டிய வருவாயைப் பெறுகிறான்—பிக்குகளே, அதுவே நல் வாழ்க்கை' என்று புத்தர் அருளியுள்ளார். இது மிகச் சுருக்கமான உபதேசமாகத் தோன்றினும்,

* 1927-ல் *கொழும்பு நகரில் ஆற்றிய சொற்பொழிவி லுள்ளது.*

† *பௌத்த உபாசகன் அல்லது பிக்கு.*

மிகவும் முக்கியமானதாகும். ஒவ்வோர் உயிரும் உலகில் வாழப் பிறந்ததே; ஒவ்வொரு மனிதனும் வாழ உரிமை பெற்றவன். ஆனல் மனிதன் தன் வாழ்வுக்கு வேண்டிய தொழிலை மேற்கொள்வதில் இரண்டு வகைகள் இருக்கின்றன. அவன் தானும் தன் குடும்பத்தாரும் வாழ்வதற்காகத் தேர்ந்தெடுத்து நடத்தும் தொழிலால், தனக்கு ஊதியம் கிடைக்கும்படியும், தன்னைச் சுற்றியுள்ள சமுதாயத்தின் நன்மை பெருகும்படியும் செய்தல் முதல் வகை. இரண்டாம் வகை சமுதாயத்தின் நலத்தைப் புறக்கணித்துவிட்டுத் தன்னலம் ஒன்றையே கருதுவது. இந்த இரண்டாவது முறையைப் பலரும் கையாள்வதால், கோடிக்கணக்கான மக்களுக்கு இடையூறு ஏற்படுகின்றது. சிலர் மட்டும் தம் தொழில்களில் கோடிக்கணக்கான செல்வத்தைப் பெறும்போது, இலட்சக் கணக்கான மக்கள் பட்டினியும் பசியுமாகத் துன்புற வேண்டியிருக்கின்றது. பெருந்தொழில்களிலும், வாணிபத்திலும் பிறரை வஞ்சித்துப் பொருள் ஈட்டுதல் சாதாரணமாகி விட்டது. ஒவ்வொருவனும் தன்னலம் ஒன்றையே கருதும்போது, அவனைச் சூழ்ந்து வசித்துவரும் மக்களின் நலம் பாழாகின்றது.

புலால் விற்றல், மீன் விற்றல், வெட்டுவதற்காக விலங்குகளை விற்றல், மது வகைகளையும் மற்றும் இலாகிரிப் பொருள்களையும் விற்றல், விஷப்பொருள்கள், கொலைக் கருவிகள் முதலியவைகளில் வாணிபம் செய்தல், மனிதர்களை (அடிமைகளாக) விற்பனை செய்தல் முதலியவை யெல்லாம் விலக்கப்பட்ட ஜீவனோபாயங்கள். இவை ஒருகாலும் நல் வாழ்க்கை ஆகமாட்டா. எந்த உயிருக்கும் தீமையா யில்லாத தொழிலே நல் வாழ்க்கையில் அமையும். ஜோசியம்

ஆரூடம், மாந்திரிகம், வேடம் புனைந்து ஆடுதல் முதலிய தொழில்களும் தீவினையின்பாற் பட்டவை. பாமர மக்களையும், துயரத்தில் உழலும் மக்களையும் ஏமாற்றி, எதையும் செய்து, எவ்வகையிலும் பணம் தேடுதல் கேடு விளைக்கும் வினையேயாம். சட்டமும், அதிகாரிகளும், நீதிமன்றமும் தலையிடாதவரை, எந்த அக்கிரமத்தையும் செய்யலாம் என்று துணிதல் முறையன்று. ஒவ்வொருவரும், தம் உள்ளத்தையே நீதிபதியாகக் கருதி, அதை வஞ்சியாமல் நேர்மையான தொழிலைச் செய்து வரவேண்டும். புத்தருடைய சீடன் பொன்னைப் பார்க்கிலும் சீலமே மேலெனக் கொள்ளவேண்டும். நேர்மையாகத் தொழில் செய்துவரும் மக்கள் தான தருமங்களில் முதன்மையாக நிற்பர்.

*'இம்மி அரிசித் துணையானும் வைகலும்*
*நும்மில் இயைவ கொடுத்துண்மின்!'*

என்று 'நாலடியார்' கூறுவதுபோல், பசியோடு வாடும் மக்களை முதலிலே கவனிக்கவேண்டும். பேரறிவாளன் பெற்ற செல்வம், ஊருணி நீர் போல் யாவர்க்கும் பயனளிக்கும்.

**நல்லூக்கம்:** இதைப்பற்றிப் புத்தர் பெருமான் கூறியுள்ளது வருமாறு: 'பிக்குகளே! இதிலே, இதற்குமுன் தோன்றியிராத ஒழுக்கக் குறைவான நிலைமைகள் எழாதபடி சித்தஉறுதியை ஏற்படுத்திக் கொள்கிறான்: அவன் முயற்சி செய்கிறான், (அதற்குரிய) ஆற்றலைப் பயன்படுத்துகிறான், உள்ளத்தை (அதன்மீது) செலுத்திப் போராடுகிறான். இதே போல, ஏற்கனவே எழுந்துள்ள தீய ஒழுக்கக் குறைவான நிலைமைகளை நீக்குவதற்கும் அவ்வாறே செய்கிறான். இதே போல, இதுவரை தோன்றியிராத நல்ல நிலைமைகளைத் தோற்றுவிப்பதற்காக

அவன் அவ்வாறே செய்கிறான். ஏற்கனவே எழுந்துள்ள நல்ல நிலைமைகள் நிலைபெறுவதற்காகவும் அவை பழுதாவதைத் தடுப்பதற்காகவும், அவை பெருகும்படி செய்வதற்காகவும், அவைகளைப் பழக்கப்படுத்திப் பயன் பெறுவதற்காகவும் அவன் அவ்வாறே செய்கிறான்.'

செம்பு, பித்தளைகளில் களிம்பு பற்றாமல் தினமும் அவைகளைக் கவனமாக விளக்கச் சொல்லுவது போல, உள்ளத்தையும் விளக்கி வரவேண்டும் என்பதற்காகப் புத்தர் அதற்குரிய முறைகளைக் கூறியுள்ளார். தீய எண்ணங்கள் முளைத்து மேல்வராமல் முன்கூட்டியே உள்ளத்தைக் காத்து வரவேண்டும் என்றும், முன்னால் முளைத்துள்ள தீய எண்ணங்களை அழித்துவரவேண்டும் என்றும் அவர் முதற் படியை விளக்கியுள்ளார். இரண்டாம் படியாகிய நல்லெண்ணங்கள் முளைவிட்டு மேல்வருவதற்குரிய பக்குவத்தில் உள்ளத்தைப் பண்படுத்தி வரவேண்டும் என்றும், முன்கூட்டி முளைத்துள்ள நல்லெண்ணங்களாகிய முளைகள் கருகிவிடாமல் கருத்தோடு வளர்த்து வரவேண்டும் என்றும் அவர் காட்டியுள்ளார். மனத்திலுள்ள தீய எண்ணங்களை அழித்து, அவை மீண்டும் தோன்றாமல் காத்து வருவதோடு நின்று விட்டால், ஒரு பயனும் கிடைக்காது; தீயவைகளுக்குப் பதிலாக நல்லெண்ணங்களை வளர்க்கவேண்டும். ஏனெனில் மனம் ஒருபோதும் ஒன்றுமில்லாமல் வெறுமையாக இருப்பதில்லை, அதில் ஏதாவது ஒன்று முளை விட்டுக்கொண்டேயிருக்கும். புலன்களின் மூலம் ஏற்படும் அநுபவங்களால் உள்ளத்தில் புதுப் புது எண்ணங்கள் முளைத்துக்கொண்டே யிருப்பது இயல்பு. புலன்களை

யானைகள் என்று கருதி, அவைகளை 'உரன் என்னும் தோட்டியால்'* காத்து வருபவன் பெருமையை வள்ளுவர் கூறியுள்ளார். ஆறு புலன்களாகிய ஆறு யானைகளும், அவைகளை அடக்குவதற்குரிய அங்குசம் இல்லாத மாவுத்தனுடன், மதம் பிடித்துத் தோன்றிய திசைகளிலெல்லாம் திரிந்து கொண்டிருந்தால், எவ்வளவு அழிவு ஏற்படும்! அவைகளால் உலகத்திற்கு ஏற்படும் அழிவு ஒரு புறமிருக்க, முடிவில் அவைகள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளவும் கூடும். ஆகவே, நல்லாற்றலைத் உதவியாகக் கொண்டே நல்லூக்கம் செயற்பட வேண்டும். தெளிந்த ஞானமும், நல்லவைகளில் விருப்பமும் இல்லாமல், நல்லூக்கம் பயன்படாமற் போகும்.

*நற்கடைப்பிடி*: கடைப்பிடி என்பது உறுதி, கருத்துடைமை, நினைவு என்று பொருள்படும். எனவே நற்கடைப்பிடியை நல்ல உறுதி, நல்ல நினைவு என்று கொள்ளலாம். பாலி மொழியில் இதை 'ஸம்மா ஸதி' என்பர். 'ஸதி' † என்ற சொல் பௌத்த தரும விளக்கங்களில் அடிக்கடி காணப் பெறும். ஒவ்வொரு காரியத்தையும் கருத்தோடு, மன உறுதியோடு, நினைவோடு, ஊக்கத்தோடு செய்தல் ஸதி ஆகும். சரியான சமயத்தில் சரியான வேலையைப் புரிதல் ஸதி. மனம் துளங்காமல், நிதானத்துடன், நினைவோடு திடமாக நிற்பது ஸதி. ஸதி மறதிக்கு எதிர்மறையானது, எப்போதும் விழிப்புடன் எச்சரிக்கையாக இருக்கும் நிலையை

* உரன் என்னும் தோட்டியால் - அறிவு என்னும் அங்குசத்தால்.

† ஸதி —வடமொழியில் 'ஸ்மிருதி.'

அது குறிக்கும். பூர்வஜன்மங்களைப் பற்றிய அறிவும் ஸதியுள் அடங்கும். எனவே 'ஸம்மா ஸதி' என்பதற்கு முந்திய பிறவிகளின் நிகழ்ச்சிகளை அறிதல் என்றும் பொருள் கூறப்படுகின்றது. ஆனால் இந்த இடத்தில் மற்றப் பொருள்களைக் கொண்டாலே போதும், அதுவே பொருத்தமுமாகும்.

நற்கடைப்பிடி பற்றிப் புத்தர்பிரான் கூறியுள்ள விளக்கம் வருமாறு:

'பிக்குகளே! இதிலே ஒரு பிக்கு, உடல் (கந்தங்களாலாகிய) கலப்பு என்று கருதி, ஊக்கத்துடனும், நிலைத்த சிந்தையுடனும், உலகிலுள்ள பேராசையையும் அயர்வையும் அடக்குவதன் மூலம் சாந்தி பெற்றும் வசித்திருப்பான். (உடலைப் போலவே) உணர்ச்சி சம்பந்தமாயும், புலன்களின் அறிவு (இந்திரிய – ஞானம்) சம்பந்தமாயும், செய்கைகள் சம்பந்தமாயும்........மனத்தின் சிந்தனைகள் சம்பந்தமாயும் (அவன் அடக்க வேண்டியவைகளை அடக்கி) வாழ்ந்து வருவான்.'

கருத்துடைமை, ஊக்கம், உறுதி ஆகியவை ஒவ்வொருவருக்கும் ஏற்படுவது இயல்புதான். ஆயினும் பெரும்பாலோர்க்கு இவை நீடித்து நிற்பதில்லை; ஆரம்பத்திலிருந்த உற்சாகம் போகப் போகத் தளர்ந்துவிடும். பல்லாண்டுகள் கருத்தோடும் கவனத்தோடும் வாழ்ந்துவந்த போதிலும், ஒரு கண நேரம் சோர்வு ஏற்பட்டுக் கவனம் குறைந்துவிட்டால், அளவற்ற நஷ்டம் ஏற்பட்டுவிடும். குளம் நிறையப் பெருகியுள்ள நீர் கரையில் ஏற்படும் ஒரு சிறு துவாரத்தின் மூலம் வெளியே வழிந்து காலியாகிவிடும். கூரையைச் செம்மையாக வேயாதிருந்தால், வீட்டினுள் மழைநீர் பாய்ந்துவிடும். அது

போல், உலகப் பொருள்களையும், நம் வாழ்வையும் பற்றிய உண்மைகளை உணர்ந்து, அவைகளைப்பற்றி ஆர அமரச் சிந்தனை செய்வதில் பயிற்சி பெரு திருந்தால், திடீரென்று ஆசைப் புயலும் மழையும் நம்முள்ளே நுழைந்துவிடும்.

'நன்கு பழக்கப்பட்ட குதிரை, சவுக்கு மேலே பட்டதும் வேகமாக ஓடுவதுபோல், சிரத்தையுடனும், தீவிர முயற்சியுடனும் இருப்பாயாக. நம்பிக்கையாலும் நற்சீலங்களாலும், வீரியத்தாலும், தியானத்தாலும், தருமத்தை ஆராய்ந்த நிச்சயத்தாலும், ஞானம், ஒழுக்கம், கருத்துடைமை ஆகியவற்றில் நிறைவு பெற்று (உலக வாழ்வான) இந்தத் துக்கத்தை ஒதுக்கிவிட முடியும்.'

இவ்வாறு புத்தர் 'தம்மபத'த்தில் அறிவித்துள்ளார். பிறரை அடக்கி வெல்வது எளிது, தன்னைத் தான் அடக்கி வெல்வதுதான் உலகிலே சிரமமான காரியம். அதனால்தான் விழிப்போடிருந்து பயிற்சி செய்யவேண்டும் என்று பலமுறை வற்புறுத்தப்படுகின்றது. சோர்வில்லாதவர்களுக்கு அரியவை என்று எதுவுமில்லை. ஒருவன் எண்ணியதை இடைவிடாமல் சோர்வின்றி எண்ணி வந்தால் எளிதில் வெற்றியடைவான் என்பதைத் திருவள்ளுவரும்,

'உள்ளியது எய்தல் எளிதுமன், மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின்'

என்ற குறளில் குறித்துள்ளார். நாம் நினைப்பது, பேசுவது, செய்வது முதலிய விஷயங்களைக் கவனித்து, அவைகளிலே நல்லவை, தீயவை, இரண்டுமற்றவை எவை யெவை என்று குறித்துக் கொண்டே வரவேண்டும். அவைகளில் சுயநலம்,

ஆணவம், துராசைகள் முதலியவை இருக்கின்றனவா என்று பார்த்துப் பார்த்து அவைகளை நீக்கிவர வேண்டும்.

உடல், மன உணர்ச்சிகள், புலன் உணர்வுகள் ஆகியவற்றின் உண்மையான தன்மைகளை உணர்ந்து, அவைகளைப் பற்றிச் சிந்தனை செய்து பயிற்சி பெறவேண்டும் என்று புத்தர் கூறியுள்ளார். உடல் சம்பந்தமான உண்மையைப் பற்றி ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். சாதாரணமாக ஒருவனது உடலைப் பார்த்தால், அதன் தோற்றம் அழகு முதலியவற்றையே நாம் கருதுவோம். புத்தர் கண்ணுக்கு மனித உடல் எப்படிக் காட்சி யளித்திருக்கிறது? 'அஸ்திகளைக் கொண்டு ஒரு மாளிகை கட்டி, ஊனும் உதிரமும் கலந்த சாந்து பூசப்பட்டிருக்கிறது: இதிலே வசிக்கின்றன முதுமையும், மரணமும், கர்வமும், கபடமும்' என்று அவர் தம் கருத்தை வெளியிட்டிருக்கிறார். 'இந்த உடலாகிய வர்ணம் தீட்டிய பொம்மையைப் பார்!' * என்று உடலைப் பொம்மையாகவும் கூறியிருக்கிறார். இவ்வாறு காண்பதே உண்மையான தன்மையை உணரும் வழி.

*நல்லமைதி:* இது மேலே கூறிய ஏழு படிகளுக்கும் சிகரமாகும். ஞானத்தினால் நன்மை தீமைகளைப் பாகுபடுத்தி அறிந்து கொள்ள முடியுமே தவிர, அதனால் மனத்தை ஒருநிலைப் படுத்திவிட முடியாது. வெளியே ஓடித் திரியும் மனத்தை ஒரே நிலையில் அமர்ந்திருக்கச் செய்வது ஓர் அரிய கலை. அதைத் தியானம், சமாதி, யோகம் என்ற பெயர்களால் குறித்து வருகிறோம். உலகில் எத்தனையோ

* 'தம்ம பதம்'

இன்பக் காட்சிகளையும், விசித்திரங்களையும் நாம் தினந்தோறும் பார்க்கிறோம். மேலே வானத்தை நிமிர்ந்து பார்த்தால், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலியவை மிகவும் அற்புதமாக விளங்குகின்றன. ஆனால் நம் தினசரி வாழ்க்கையின் வேகத்தில், நாம் எதையும் நின்று நிதானமாகச் சிந்தித்துப் பார்க்கவே நேரம் கிடைப்பதில்லை. சிந்தனை செய்து பார்த்தால்தானே உண்மைகள் புலனாக முடியும்! அதற்குத்தான் மக்களுக்கு நேரமில்லை. ஆனால் அறவழியில் பல படிகளைத் தாண்டி, நல்ல நெறியிலே தன்னை நிலைநிறுத்திக் கொண்ட ஒருவனுக்குத் தியானத்தில் அமர்ந்து, பரிபூரணப் பக்குவத்தை அடையப் போதிய நேரமுண்டு. ஏனெனில் அவனுக்கு அதைத் தவிர வேறு வேலையில்லை. அவன் கூட்டத்தோடு சேர்ந்து கும்மாளமடிப்பவனல்லன்; அவன் சிந்தனையாளன், செயலாளன், கருத்துடையவன், துக்கத்தை நீக்க உறுதி கொண்டவன்.

உயிர்க்கொலை புரிவோருக்கும், சீலங்களைப் பேணாதவர்களுக்கும், புலன்களின் இன்பங்களிலே ஆழ்ந்தவர்களுக்கும் ஏற்பட்டதன்று தியானம். அவா, வெறுப்பு, மயக்கம், கர்வம், பொய்க்காட்சி ஆகிய தளைகளைக் கடந்து மேலேறியவர்களுக்கே அது உகந்தது. புலன்களின் ஆசைகள், துவேஷம், சோர்வு, பரபரப்பு, சந்தேகங்கள் முதலியவற்றை அறவே நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகப் பரிசுத்தம், அன்பு, உள்ளத்தின் விழிப்பு, தெளிவு, அறிவை ஆதாரமாய்க் கொண்ட நம்பிக்கை ஆகியவற்றைப் பெறவேண்டும். அதன் பின்னரே தியானம் அல்லது சமாதி எளிதாகும்.

தியானத்தின் மூலம் பரிசுத்தமான எண்ணங்களை வளர்த்து ஏகாந்த வாசத்தில் இன்பம் பெற முயற்சி செய்து வந்தால், முடிவில் முந்திய பிறவிகளின் வரலாறுகளும், எதிர்கால நிகழ்ச்சிகளும், பிரபஞ்சத்தின் நியதியும் தெளிவாகத் தெரிவதுடன் நிருவாண இன்பமும் சித்திக்கும் என்று புத்தர் போதித்துள்ளார்.

தியானம் நான்கு வகைப்படும். அவையாவன:

1. ஏகாந்த வாசத்தில் ஆராய்ச்சி, பரிசீலனை, ஏகாக்கிரக சிந்தனை ஆகியவற்றின் மூலம் பெறும் இன்ப நிலை.

2. ஆராய்ச்சி, சிந்தனை முதலியவற்றைக் கடந்து, மனச் சாந்தியும் ஆனந்தமும் பெறும் நிலை.

3. சகல உணர்ச்சிகளும், இராகத் துவேஷங்களும் ஒடுங்கும் இன்ப நிலை.

4. தன்னிலே தான் நிறைவுற்று, சலனமின்றி, இன்பதுன்பங்களைக் கடந்து, பூரணமான அமைதியைப் பெறும் நிலை.

நல்லமைதி பற்றிப் புத்தர் கூறியுள்ளதாவது:

'பிக்குகளே! இதிலே ஒரு பிக்கு புலன்களின் ஆசைகளிலிருந்து ஒதுங்கி, தீய நிலைகளிலிருந்தும் ஒதுங்கி, குறித்த ஒரு பொருளைச் சார்ந்து நிலைத்துள்ள சிந்தனையுடன் முதலாவது தியானத்தில் பிரவேசிக்கிறான். இது ஏகாந்த வாசத்தில் தோன்றுவது, ஆர்வமும் ஆனந்தமும் நிறைந்தது.

'பிறகு, நிலைத்த சிந்தனையையும் நீக்கிவிட்டு, அவன் இரண்டாவது தியானத்தில் பிரவேசிக்கிறான்; அது (அந்நிலை) உள்ளமைதியாகும், மன உறுதியை மேலும் வலுப்படுத்துவதுமாகும். அதிலே நிலைத்த சிந்தனையில்லை.

சித்தத்தை ஒருநிலைப் படுத்துவதில் அது தோன்றுவது, ஆர்வமும் ஆனந்தமும் நிறைந்தது.

'பிக்குகளே! பின்னர் ஆர்வமும் தேய்ந்து மறைவதால், அவன் சமநிலை (சமசித்தத்துவம் என்ற உபேட்சை நிலை) பெறுகிறான். அவன் சிரத்தையுடனும் மன நிறைவுடனும் இருக்கிறான்; அவன் உடலோடு இருக்கும்போதே ஆனந்த நிலையை அடைகிறான்—அந்நிலையையே ஆரியர்கள் (மேலோர்கள்) "இராகத் துவேஷங்களற்ற ஏகாக்கிர சிந்தனையுடைய மனிதன் ஆனந்த நிலையில் வாழ்கிறான்" என்று கூறுகிறார்கள். இவ்வாறு அவன் மூன்றாவது தியானத்தில் பிரவேசித்து, அதிலேயே நிலைத்திருக்கிறான்.

'பிக்குகளே! பின்னர், இன்பத்தையும் துன்பத்தையும் துறந்து, அவன் முன் பெற்றிருந்த ஆனந்தத்தையும் சோகத்தையும் நீத்து, அவன் நான்காவது தியானத்தில் பிரவேசித்து, அதிலேயே நிலைத்திருக்கிறான்: அந்நிலை இன்பதுன்பங்கள், ஆனந்தம் ஆகியவை அற்ற நிலை—சமநிலையும், நிறைவும் கொண்ட பரிசுத்த நிலை. இதுவே நல்லமைதி எனப்படும்.' *

இவ்வாறு நான்கு தியானங்களும் கைவரப் பெற்ற நிலை சமாதி எனப்படும். சமாதியால் புலன்கள் முறையாக அடங்கிச் சாந்தி பிறக்கின்றது. இதயத்திலே எல்லா உயிர்களிடத்திலும் அன்பு ஊற்றெடுத்துப் பாய்கின்றது, காமம், குரோதம் முதலிய தீக்குணங்கள் படிப் படியாகத் தேய்ந்து அறவே ஒழிகின்றன, புதிய தீமைகள் உள்ளே புகாமல் தடுக்கப் பெறுகின்றன, பரிசுத்த நிலையிலே அற்ப ஆசைகளுக்கு இடமேயில்லாமற் போகின்றது, பற்றும் அகந்தையும் தொலைகின்றன, ஆடாமல்

* 'தீக நிகாயம்.'

ஓய்ந்திட்ட பம்பரம் போல் மனம் விசையடங்கி நிற்கின்றது, விமுக்திக்குரிய வழியும் தெளிவாகின்றது. இந்நிலையை அடைந்தவன், சிறைப்பட்ட கழுகு விடுதலையாகி வானத்தினூடே வேகமாய்ப் பறந்து செல்வதுபோன்ற உணர்வைப் பெறுகிறான்.

சமாதியின் உறுதி பற்றிச் 'சிவஞானசித்தியார்' பாடல் அடியிலே யுள்ளது:

> 'அழிந்திடும் அராக மாதி
> அகற்றி, நல அறங்கள் பூரித்(து),
> இழிந்திடும் புலன்கள் போக்கி,
> இலபொடு துன்பம் வாட்டிப்
> பழித்திடாப பழுதில் வாழ்க்கை
> எட்டையும பாரித்(து) எல்லாம்
> ஒழிந்திடு ஞான சீலம்
> சமாதியின் உறுதி யாமே.' *

அஷ்டாங்க மார்க்கம் வெறும் ஒழுக்க விதிகளின் தொகுதியன்று என்பது மேலேயுள்ள விவரத்திலிருந்து தெளிவாகும். மலரின் மீது அமர்கிறவரைதான் வண்டு ரீங்காரம் செய்து சுற்றிக் கொண்டிருக்கும்; தேன் குடிக்க ஆரம்பித்து விட்டால், ரீங்காரம் நின்றுவிடும். அதுபோல், பிக்கு நற்காட்சி

* இதன் பொருள்: 'நன்மையைக் கெடுக்கும் காமக் குரோத லோப மோக மத மாற்சரியங்களை நீக்கி, நன்றான தன்மங்களை நிறையச்செய்து, பொல்லாங்கைச் செய்யும் புலன்வழிச் சேறலைக் கைவிட்டு, துன்ப இன்பங்களை ஒழித்துப் புண்ணிய பாவங்களைக் கெடுத்துப் பிறரால் பழிக்கப்படாத குற்றமில்லாத நல்வாழ்க்கை எட்டையும் (அஷ்டாங்க மார்க்கம்) விரித்து, மற்றும் தோஷங்களானவை யெல்லாம் ஒழித்திடும் ஞான குணமாவது சமாதியின் உறுதியாம்.'

முதலிய சாதனைகளை நிறைவேற்றிச் சமாதியை அடைகிறவரை மனம் சலனமடைந்திருக்கலாம். ஆனால் சமாதி நிலையில் மோனம் வந்துவிடும். இதனால் மெய்யறிவும், நிருவாண இன்பமும் எளிதா கின்றன. நிருவாணத்திற்குப் பின் பிறப்பில்லை, அதனால் வரும் பிணியுமில்லை. அதனால்தான் அஷ்டாங்க மார்க்கத்தைப் பற்றிப் புத்தர் பிரான், 'பிக்குகளே, இதுவே துக்க நிவாரண மார்க்கம் என்ற ஆரிய வாய்மை என்று அழைக்கப்படுவது' என்று கூறியுள்ளார்.

இனி நிருவாண வழிக்குரிய மற்றத் தத்துவங் களைப்பற்றிக் கவனிப்போம்.

### ஸதிப் பிரஸ்தானங்கள்

இவை உடல், புலன்களின் உணர்ச்சிகள், மனம், நிருவாணம் ஆகியவை சம்பந்தமான மஹா தத்துவ உண்மைகளாம். ஸதிப் பிரஸ்தானங்கள் நான்கு:

1. *காயானுபாஸனை:* தலை உரோமம் முதல் என்பு, தசை, தோல் முதலிய உடலின் 32-பகுதி களையும் பிரித்துப் பரிசீலனை செய்து பார்த்து, உடம்பு அசுத்தமென்று அறிய இது உதவுகின்றது.

2. **வேதனானுபாஸனை:** ஆறு பொறிகளின் மூலம் பெறும் உணர்ச்சிகளில் இன்பமானவை, துன்ப மானவை, இரண்டுமற்றவை என்று பாகுபடுத்தி, அவற்றால் விளையும் கேடுகளை அறிய இது உதவும்.

3. *சித்தானுபாஸனை:* உள்ளத்திலே எழும் சிந்தனைகளைப் பிரித்துப் பரிசீலனை செய்து,

அவற்றின் நிலையில்லாத் தன்மையை அறிய இது உதவுகின்றது. சிந்தனைகளிலே உணர்ச்சி காரணமானவை, உணர்ச்சியற்றவை, கோபச் சிந்தனைகள், கோபமற்ற சிந்தனைகள், அற்பச் சிந்தனைகள், உன்னதச் சிந்தனைகள் என்று பிரித்துப் பார்க்கும் முறைகளை இதில் அறியலாம்.

4. தருமானுபாஸனை: அவா, வெறுப்பு, மயக்கம், கர்வம், பொய்க்காட்சி ஆகிய ஐந்து தளைகளையும், மெய்ஞ்ஞானம் பெறுவதற்குரிய ஏழு போத்தியாங்கங்களையும், * ஐந்து கந்தங்களையும், ஆறு புலன்களையும் பகுத்துப் பார்த்துப் பரிசீலனை செய்யும் வழிகளை இது கூறும்.

ஸம்யக் ப்ரதானங்கள்

அஷ்டாங்க மார்க்க விவரத்தில் நல்லூக்கம் என்ற தலைப்பின் கீழே கூறப்பெற்றுள்ள நான்கு முறைகளே இவை. மனத்தில் தீய எண்ணங்கள் தோன்றாமல் தடுத்தல், முன் தோன்றியுள்ள தீய எண்ணங்களை அகற்றல், நல்ல எண்ணங்கள் தோன்றச் செய்தல், முன் தோன்றிய நல்ல எண்ணங்களைப் பேணி வளர்த்தல் ஆகிய நான்கு பிரிவுகளாக உள்ளவை இவை.

இருத்திபாதங்கள் †

இவை நான்கு: சந்தம், விரியம், சித்தம், மீமாம்சை. இவற்றுள் சந்தம் என்பது உள்ள ஒருமைப்பாட்டுடன் மனோதத்துவ ஆற்றலின் சிகரத்தை அடையவேண்டும் என்னும் விருப்பத்தை

---

* 80-ஆம் பக்கம் பார்க்க.

† இருத்திபாதங்கள் — **Foundations of psychical activity: urge, energy, thought, investigation.**

உண்டாக்குவது; வீரியம் என்பது குறித்த நோக்கத்தை அடைவதற்குரிய இடைவிடா முயற்சி; சித்தம் என்பது இழிவான தீய சிந்தனைகளை விலக்கி, உள்ளம் பரிசுத்தமா யிருக்கும் நிலை. மீமாம்சை என்பது உண்மையை நாடி எல்லா விஷயங்களையும் பிரித்துப் பிரித்துப் பரிசீலனை செய்யும் ஆராய்ச்சியாகும்.

### இந்திரியங்கள்

இந்திரியங்களாகிய மன ஆற்றல்கள் ஐந்து. இவை சிரத்தை, வீரியம், ஸதி, சமாதி, பிரஞ்ஞை என்பவை. *

*சிரத்தை* என்பது நம்பிக்கை. நம்பிக்கையின் மூலமே மனவலிமையைப் பெருக்கிக்கொள்ள முடியும். எல்லையற்ற மெய்ஞ்ஞானம் பெற்ற புத்தர் பெருமானிடம் நம்பிக்கை, சத்தியத்தின் ஆற்றலில் நம்பிக்கை, அருகத்துகளின் பூரணமான புனிதத் தன்மையில் நம்பிக்கை ஆகியவற்றுடன், ஒருவன் தன் ஒழுக்கத்தின் தூய்மையிலும், தானத்திலும் நம்பிக்கை வைத்தல் சிரத்தை எனப்படும்.

*வீரியம்*; அருகத்து நிலையை அடைய இடைவிடாது முயற்சி செய்வது வீரியம்.

*ஸதி*: அஷ்டாங்க மார்க்க விவரத்தில் நற்கடைப்பிடி (ஸம்மா ஸதி) என்ற தலைப்பின் கீழே குறிப்பிட்டுள்ளதே இதற்கும் பொருந்தும். அத்துடன்,

* இந்திரியங்கள் — Psychical powers: faith, strenuous effort, retentive memory, concentration, supreme wisdom.

இங்கே பூர்வ ஜன்மங்களின் விவரங்களை நினைவுறுத்திக்கொள்ளும் ஆற்றலை விசேடமாகக் கொள்ள வேண்டும்.

*சமாதி:* அஷ்டாங்க மார்க்க விவரத்தில் நல்லமைதி என்ற தலைப்பின் கீழே இது குறிப்பிடப் பெற்றுள்ளது.

*பிரஞ்ஞை:* மனோதத்துவ முறையில் படிப்படியாக முன்னேறி, மனம் பூரணமான பரிபாகம் (முதிர்ச்சி) அடையும் பொழுது, சமாதியின் பயனாகப் பேரறிவு தோன்றுகிறது. அவ்வறிவு சாதாரண அறிவுக்கு மிகவும் மேம்பட்டது, பிரபஞ்ச இயல்புக்கு அப்பாற்பட்டது என்று சொல்லப்பெறும். ஸதி, சமாதி, வீரியம், பிரஞ்ஞை ஆகியவை ஒருங்கே சேர்ந்து அபரிமிதமான இச்சா சக்தியை அளிக்கின்றன. பேரறிவு உதயமான பின், 'நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எங்கே செல்வேன்?' என்பன போன்ற விஷயங்களைப் பற்றி யாதொரு ஐயப்பாடும் இராது. துக்கத்தின் மூலகாரணமான அறியாமையும்—அவித்தையும்—அத்துடன் அடியோடு அழியும், நிருவாணத்தைப் பற்றிய உண்மையையும் நேர்முகமாக உணரலாகும்.

### பலங்கள்

*சிரத்தை, வீரியம், ஸதி, சமாதி, பிரஞ்ஞை* என்று பலங்கள்—ஆற்றல்கள்—ஐந்து.

*சிரத்தை* அறிவை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கை. *வீரியம்* (சாமர்த்தியம்) செய்கையை அடிப்படையாகக் கொண்ட விடாமுயற்சி. *ஸதி*

(ஞாபகம்) பழம் பிறப்புக்களைப்பற்றி அறியும் ஆற்றல். சமாதி நான்குவகைத் தியானங்களிலும் நிறைவு பெற்றுச் சாந்தியும் பரிசுத்தமுமான நிலை. பிரஞ்ஞை என்பது கருமவிதியின் தன்மையை நன்குணர்ந்து செய்யும் தியானத்தால் உண்டாகும் பேரறிவு.

### போத்தியாங்கங்கள்

போதி அல்லது மெய்ஞ்ஞானத்தை அடைவதற்குரிய ஏழு போத்தியாங்கங்களாவன: ஸதி, தருமவிசாரம் (திரிபிடக ஆராய்ச்சி), வீரியம், ஆனந்தம், மனனம், சமாதி (சாந்தி), உபேட்சை (சமதிருஷ்டி).

1. **ஸதி:** ஒவ்வொரு காரியத்தையும் கவனமாகச் சிந்தனை செய்து நிறைவேற்றிப் பழகி வந்தால், ஸதி என்ற போத்தியாங்கத்தை அபிவிருத்தி செய்துகொள்ள முடியும். காரணத்திலிருந்து காரியம், காரியத்திலிருந்து காரணம் என்ற முறையில் சிந்தித்துப் பார்த்து வந்தால் இதன் ஆற்றல் அதிகமாகும்.

2. *தரும விசாரம்:* திரிபிடக ஆராய்ச்சியும் மனோ தத்துவத்தை விளக்கும் நூல்களின் ஆராய்ச்சியும் வேண்டும். உடலமைப்பிற்குரிய கந்தங்கள், புலன்களின் உணர்வுகள், மன உணர்ச்சிகள், இந்திரியங்கள், பலங்கள், போத்தியாங்கங்கள், தியானங்கள் முதலியவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகளிலும் தேர்ந்திருக்க வேண்டும். மூடர்களுடன் கூட்டுறவு கொள்ளாது, விஞ்ஞானம் முதலியவற்றில் தேர்ந்தவர்களோடு உறவு கொள்ள வேண்டும். மனத்தையும் உடலையும் சமநிலையில் வைத்துக்கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

உடல், உணவு, உடை எல்லாவற்றிலும் பரிசுத்த மாக இருக்க வேண்டும். இந்த முறைகளில் தரும விசாரப் போத்தியாங்கத்தை அபிவிருத்தி செய்து வரவேண்டும்.

3. *வீரியம்:* வீரியம் என்பதே இடைவிடாத முயற்சியைக் குறிக்கும். இலட்சியத்தை அடை வதற்குக் கலக்க மில்லாத தைரியமும் உறுதியும் வேண்டும். இந்தப் போத்தியாங்கத்தை நன்கு பயிற்சி செய்வதற்கு, நற்குலத்திலே பிறந்த, நற் குணமுள்ள இளைஞர்கள் மிகவும் தகுதியுள்ளவர்கள் என்றும், அரசகுலத்திலே பிறந்து பூரணஞானம் பெற்ற போதி வேந்தரான புத்தர் பெருமானுடைய புனித நினைவுக்குப் பங்கம் வராமல் அவர் அடியார்கள் நடந்து வரவேண்டும் என்றும் தர்மபாலர் குறிப் பிட்டுள்ளார்.* புனிதமான முயற்சியின் பெரும் பயனைச் சோம்பேறிகள் உணர முடியாது.

4. *ஆனந்தம்:* புத்தரையும், அவருடைய புகழ் பெற்ற அடியார்களான அருகத்துகளையும் பற்றிச் சிந்தனை செய்து வருதல் மனம் பக்குவமடைய உதவியாகும். பெருமான் வகுத்துள்ள பத்துச் சீலங்களையும் மேற்கொண்டு முறையாக நிறை வேற்றுவதிலும், தீவினைகள் பத்தையும் விலக்கு வதிலும், அஷ்டாங்க மார்க்கத்தில் கூறியபடி நியாய மான வழியில் வாழ்க்கை நடத்துதல் முதலிய நியமங்களைக் கடைப்பிடிப்பதிலும் சிரத்தை கொண்டால், உள்ளம் தானாகவே ஆனந்தமடையும். இந்த அநுபவத்தைப் பெறுவதற்கேற்ற குளிர்ச் சியான சோலை முதலிய இடங்களிலே வசித்துவர

* 'The Psychology of Progress' by Anagarika Dharmapala.

வேண்டும். நண்பர்களாகத் துணைக்கு இருப்பவர்களும் நேர்மையாளராக இருக்கவேண்டும். மூடர்கள், தீயவர்கள் உறவை அறவே நீக்கிவிட வேண்டும்.

5. **மனனம்:** சிந்தனைகள், மன உணர்ச்சிகள், புலன்களின் உணர்வுகள் முதலியவற்றில் தெளிவோடும் அமைதியோடும் இருப்பது மனனம். இதற்கு உடலையும் உள்ளத்தையும் தக்க நிலையில் வைத்திருக்க வேண்டும். உணவை முறைப்படுத்த வேண்டும். உயிர் வதைக்குக் காரணமாயில்லாத தானியங்கள், கனிகள், பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியவற்றை உண்ணலாம், எதிலும் மிதமாயிருக்கவேண்டும். வசிக்கும் இடமும், சூழ்நிலையும் சாந்தி நிறைந்திருத்தல் நலம்.

6. **சமாதி:** உன்னதமான சிந்தனைகளை வளர்த்துப் பயிற்சி செய்து கொண்டு தியான முறைகளில் பழகி வந்தால், சமாதி நிலையைப் பெறமுடியும். ஆணவக் காட்டைக் களைந்து, அகங்காரத்தை ஒழித்து, பாவ கருமங்களை விலக்கி, உள்ளத்தைத் திருத்தி, அன்பு நீர் பாய்ச்சி வந்தால் உபசாந்தி கைகூடும்.

7. **உபேட்சை:** இகழ்ச்சியையும், புகழ்ச்சியையும் மதியாமல், விருப்பு வெறுப்பற்று, எல்லாவற்றையும் சமமாகப் பார்த்து வரும் நிலை உபேட்சையாம். செருக்கு, வெகுளி, அழுக்காறு, அவா முதலிய யாவற்றையும் அந்நிலையில் இடம் பெறாமல் ஒதுக்க வேண்டும். பொறுமைக்கு நிலைக்களமாக விளங்க வேண்டும். நண்பர், பகைவர் என்ற வேற்றுமையின்றி யாவரிடத்தும் அன்பு கொண்டு, கைம்மாறாக எதையும் விரும்பாமல் பிறருக்கு உதவிகள் செய்து வருதல் இந்தப் போத்தியாங்கத்திற்கு ஏற்றதாகும்.

## புத்தர் காட்டும் வழி

'ஒரே ஒரு விஷயத்தைத்தான் நான் போதிக்கிறேன்—துக்கமும், துக்கத்திலிருந்து நிவாரணமும்' என்று புத்தர் பெருமான் கூறியுள்ளார். நாற்பத்தைந்து ஆண்டுகளாக அவர் பாரத நாட்டில் ஊர் ஊராக யாத்திரை செய்து அருளிய உபதேசங்களைப் பார்ப்பவர்கள் இது உண்மைதான் என்று கண்டு கொள்ளக்கூடும்.

*'நோய் நாடி, நோய்முதல் நாடி, அது தணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்'*

என்று வள்ளுவர் கூறியிருப்பது போலவே, பிறவிப் பிணி மருத்துவரான புத்தர், முதலில் மக்களின் நோயை அறிந்து, அதன் காரணத்தை ஆராய்ந்து, அதற்குப் பரிகாரமான மருந்தையும் கண்டு, அம் மருந்தை உட்கொள்ள வேண்டிய முறையையும் வகுத்துள்ளார்.

மக்களிடம் அவர் கண்ட நோய் துக்கம்; அதன் காரணம் அறியாமையிலிருந்து தோன்றும் அவா; அதற்குப் பரிகாரம் அறியாமை, அவா முதலிய பன்னிரு சார்புகளையும் அழித்தல்; பரிகாரத்தை நிறைவேற்றுவதற்குரிய வழி அஷ்டாங்க மார்க்கமும், மேலே விவரித்துள்ள இருபத்தொன்பது தத்துவங்களும்.

துக்கம் என்ற நோயைப் பற்றி மக்கள் தாமாகவே கண்டு கொள்ளக்கூடும். ஆனால் அதற்குரிய காரணத்தையும், பரிகாரத்தையும் கண்டு பிடித்ததே புத்தரின் பெருமையாகும்.

நோயின் முதலை நாடும்* பொழுது, உலகில் எல்லாப் பொருள்களும், எல்லா உயிர்களும் ஹேது

* முதலை - காரணத்தை; நாடும் - ஆராயும்.

அல்லது காரணத்தைக் கொண்டே இயங்கிக் கொண்டிருந்தன என்று அவர் கண்டார். உலகில் எல்லாம் காரண — காரியத் தொடர்புகளாகவே இருப்பதை அறிந்து, ஹேதுவை அடிப்படையாகக் கொண்ட தமது தருமத்தை அவர் பிரசாரம் செய்தார்.

> ' யேதர்மா ஹேதுப்ரபாவா:
> தேஷாம் ஹேதும் ததாகத ||
> ஆஹதேஷாம் யோநிரோத:
> ஏவம்வாதீ மஹாஸம(ண): ' *

ஒரு காரணத்திலிருந்து நிகழும் காரியங்களைக் கண்டு, அந்தக் காரணத்தைத் ததாகதராகிய புத்தர் கூறியுள்ளார்; அதைத் தடுத்து நிறுத்தும் வழியையும் அந்த மகாசிரமணரே கற்பித்துள்ளார். பிரபஞ்சத்தில் எல்லாமுமே ஹேதுவை அடிப்படையாகக் கொண்டே ஏற்பட்டுள்ளன. ஹேதுவை நீக்கி விட்டால், ஹேதுவிலிருந்து எழும் தோற்றம் அல்லது பிறப்பையும் ஒழித்து விடலாம். இவ்வாறு புத்தர் உபதேசித்துவந்தார்.

உலகில் எல்லாமுமே கணந்தோறும் மாறியமைகின்றன. உலகம் சம்பவங்களின் பிரவாகமாகவே இருந்து வருகின்றது; உறுதியாக இங்கே நிலைத்து நிற்கக்கூடிய பொருள்களே யில்லை. நிலையாமையே எல்லாவற்றின் துக்கத்திற்கும் காரணமாயுள்ளது. தோன்றியதெல்லாம் மாறியே தீரவேண்டும் என்பது உலக நியதியாயுள்ளது. எனவே பிறப்புத் தான் மரணத்தின் காரணம். தோன்றுமலிருக்க வழி கண்டாலொழிய, எதுவும் மாருமல் இருக்க முடியாது.

---

* 'போதி மாதவன்' பக்கம் 212 பார்க்க.

மக்கள் என்றும் நிலைத்திருக்கக்கூடிய துக்கமற்ற இன்ப நிலை இருக்கின்றதா?

என்றும் நிலைத்திருக்கும் இன்ப நிலை தான் புத்தர் பெருமான் கூறியுள்ள நிருவாணம்.

அதை இந்தப் பிறவியிலேயே அடைய முடியுமா?

முடியும்; இந்த உலகிலேயே, இந்தப் பிறவியிலேயே, இந்த உடலோடு இருக்கும் போதே அடைய முடியும்.

மக்கள் மேற்கொண்டு பிறவி யில்லாமல் நிருவாணப் பேற்றை அடைவதற்கு வழி என்ன?

ஒவ்வொருவரும் பிரபஞ்சத்தைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும் உண்மையை உய்த்துணர வேண்டும். வாழ்க்கையைச் செம்மையான முறையில் அமைத்துக் கொண்டு, முறை பிறழாமல் மிகுந்த கவனத்துடன் நடந்துவர வேண்டும். அம் முறையைப் பற்றிப் புத்தர் விவரமாக அறிவித்து, அதன்படி தாமும் வாழ்ந்து காட்டியுள்ளார்.

புத்தர் அருளிய நெறி செயலில் கடைப்பிடிப்பதற்கே யன்றிப் படித்து விவாதம் செய்வதற்கு அன்று. அந்நெறியிலே சிறிதளவு பயிற்சி பெற்றாலும் பெரும் பயன் விளையும். அன்பு, இரக்கம், பரோபகாரம் முதலியவை எவ்வளவு அற்பமா யிருந்தாலும், அவை ஒவ்வொன்றும் வாழ்க்கைப் பள்ளத்தைத் தாண்டிச் செல்வதற்கேற்ற ஒரு படிக்கட்டாகும். 'நான்' என்பது கானல் நீர்; அதற்காக வாழ்தல் யானை சேற்றில் ஆழ்தலைப் போன்றது. உயிர் அகண்டமானது; அதிலே நாம் ஒவ்வொருவரும் ஒரு துளியே. 'மனப் பண்பாட்டிற்காகப்

பௌத்த தருமத்தில் அமைந்துள்ள முறைகள் யாவும், உயிர் ஒன்றே என்பதை உணர்ந்து, அதன்படி வாழ்வதற்கு உதவியானவை.' * ஐயப்பாடுகள் நீங்கி, மயக்கம் தெளிந்து, உண்மையை உள்ளபடி உணர்ந்தவருக்குத் தருமப் பாதை விசாலமாயுள்ளது; விடாமுயற்சியோடு நிருவாண இலட்சியத்தை நோக்கிச் செல்வோர் அதை அடைதல் உறுதி.

* 'To realise the Oneness of life, and live accordingly —that is the aim of every practice of the Buddhist Culture of the Mind.'

—*'The Religion of Burma'*— by Allan Bennet (Bhikkhu Ananda Maitriya.)

மூன்றும் இயல்

## அடிப்படைக் கொள்கைகள்

'அநித்தம், துக்கம், அநான்மா, அசுசியெனத்
தனித்துப் பார்த்துப் பற்றறுத்திடுதல்......'

—மணிமேகலை

பௌத்த தருமத்தின் அடிப்படைக் கொள்கைகள் மூன்று. அவை அநித்தம், துக்கம், அநான்மா என்பவை. * உலகம் அனைத்திலுமுள்ள உயிர்களும் பொருள்களும் நிலையற்றவை; அவை துக்கமயமானவை; அவை ஆன்மா அற்றவை என்பது இவற்றின் பொருள். புத்த பகவர் அவை ஒவ்வொன்றையும் தனித் தனியாகக் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார். †

' "ஸப்பே ஸங்காரா அநிச்சாதி"
யதா பஞ்ஞாய பஸ்ஸதி,
அத நிப்பிந்ததி துக்கே
ஏஸ மக்கோ விஸுத்தியா.'

' "படைக்கப்பெற்ற யாவும் அநித்தியம் — நிலையற்றவை" — இதை அறிவால் உணர்ந்தவன் துக்கத்தில் அழுங்குவதில்லை; இதுவே விசுத்தி (பரிசுத்தமான) மார்க்கம்.'

* அநித்தம் —அநித்தியா—பாலியில் அநிச்சா (நிலையற்றவை);
துக்கம் —துக்கம் — ,, துக்கா; (துன்பமயமானவை);
அநான்மா—அநாத்மம் — ,, அநத்தா (ஆன்மா இல்லாதவை).

† 'தம்மபதம்.'

*' "ஸப்பே ஸங்காரா துக்காதி"*
*யதா பஞ்ஞாய பஸ்ஸதி,*
*அத நிப்பிந்ததி துக்கே*
*ஏஸ மக்கோ விஸுத்தியா.'*

' "படைக்கப்பெற்ற யாவும் துக்கமயமானவை" —இதை அறிவால் உணர்ந்தவன் துக்கத்தில் அழுங்குவதில்லை; இதுவே விசுத்தி (பரிசுத்தமான) மார்க்கம்.'

*' "ஸப்பே தம்மா அநத்தாதி"*
*யதா பஞ்ஞாய பஸ்ஸதி,*
*அத நிப்பிந்ததி துக்கே*
*ஏஸ மக்கோ விஸுத்தியா.'*

' "படைக்கப்பெற்ற யாவும் அநான்மம்"—இதை அறிவால் உணர்ந்தவன் துக்கத்தில் அழுங்குவதில்லை; இதுவே விசுத்தி (பரிசுத்தமான) மார்க்கம்.'

### அநித்தம்

உலகில் எல்லாம் அநித்தியமானவை என்பதை, யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளக்கூடும். புத்தர் பெருமான் அநித்தியம் என்று வற்புறுத்திக் கூறுவதன் காரணம், எல்லாம் நித்தியமானவை என்று கருதி மயக்கத்தில் ஆழ்திருக்கக் கூடாது என்பதற்காக. மேலும், அநித்தியம் என்பதால்—சாவதற்கே — அழிவதற்காகவே — எல்லாம் தோன்றுவனவாக இருப்பதால், அந்நிலையின் உண்மையை உணர்ந்து, அதற்கு மாற்ருக வேறு நித்தியமான நிலையைத் தேடவேண்டும், அதிலே கருத்தைச் செலுத்தி வரவேண்டும் என்பதற்காகவும் பெருமான் 'அநித்தம், அநித்தம்' என்று கூறி வந்திருக்கிருர்.

'பொருள்களின் சேர்க்கையால் உருவாகியுள்ள யாவும்,* அந்தோ, நிலையற்றிருக்கின்றன! தோன்றி அழிவதே அவைகளின் இயல்பாயுள்ளது. அவைகள் தோன்றிய பிறகு, அவைகள் அழிந்து விடுகின்றன. அவைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவருதல் பேரின்பமாகும்' என்பது புத்தர் திருவாக்கு. †

## துக்கம்

உலகில் எல்லாம் துக்கமயம் என்பதையும் யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளக்கூடும். துக்க மயமா யிருப்பதால்தான், அந்நிலையிலிருந்து உடனே விடுதலை பெறவேண்டும் என்பதற்காகப் பெருமான் அதையும் வற்புறுத்திக் கூறி வந்திருக்கிறார்.

## அநான்மக் கொள்கை

உலகில் எல்லாம் அநான்மம் என்பதில்தான் கருத்து வேற்றுமை இருக்கின்றது. '*ஸப்பே தம்மா அநத்தா*' என்ற வாக்கியத்திற்குப் பொருள் கொள்ளுவதிலேகூட வேற்றுமைகள் காணப்பெறு கின்றன. ஆனால் வேறு பல இடங்களிலும் பெரு மான் கூறியுள்ள செய்திகளைக் கொண்டு, இங்கும் சரியான பொருளை அறிந்து கொள்ள முடியும். பாலியில் 'அத்தா' என்றால் ஆன்மா, 'அநத்தா' என்றால் ஆன்மா அல்லாதது என்று பொருள். மேலே காட்டியுள்ள வாக்கியத்திற்கு, சர்வ தருமங் களும் ஆன்மா அற்றவை என்பதே பொருளாகும். 'தருமங்கள்' என்பது பிராணிகளையும் பொருள் களையும் குறிக்கலாம், அல்லது பிராணிகளையே குறிக் கலாம், அல்லது எல்லா ஜந்துக்களுக்கும் இயல்பான

---

* all compounded things.

† '*தீகநிகாயம்.*'

குணங்களையும் செயல்களையும் குறிக்கலாம். எந்த முறையில் பார்த்தாலும், எந்த ஜந்துவுக்கும் ஆன்மா இல்லை என்றே பொருள்படும்; 'அநத்தா — அநான்மம்' என்பதே புத்தர் போதித்த கொள்கை.

ஆன்மா என்பது எது? உலகிலே சில சமயத்தார்கள், பிராணிகளில் (மனிதருள்ளிட்ட சகல ஜந்துக்களிலும்) ஒவ்வொன்றின் உடலுக்குள்ளும் அழியாத தன்மையுள்ள ஆன்மா ஒன்று தங்கியிருக்கின்றது என்றும், உடல் நசித்துப் போகும்போது அவ்வான்மா, கூட்டிலிருந்து பறவை வெளியேறிப் பறந்து செல்வதுபோல், வெளியேறி விடுகின்றது என்றும் நம்புகிறார்கள். உடல் அழியினும் தான் அழிவுறாத அத்தகைய ஆன்மா ஒன்று உடலுள் இல்லை என்று புத்தர் உபதேசித்திருக்கிறார் என்பதே பௌத்தர்கள் முடிவு.

இக்கால இந்துக்கள், ஒவ்வோர் உடலிலும் தனி ஆன்மா ஒன்று உறைகின்றது என்றும், அது அழிவற்றது என்றும், உடல் அழியும்போது அதுவும் வெளியேறுகின்றது என்றும், அதன் பாவ புண்ணியங்களுக்கு ஏற்றபடி அது மறுபடி வேறு உடலுடன் உலகிலே தோன்றுகின்றது, அல்லது சுவர்க்கத்தை அடைகின்றது என்றும் நம்புகின்றனர். வேறு சில சமயத்தவர்களும் அழிவற்ற ஆன்மாவில் நம்பிக்கை கொண்டிருப்பதையும் காணலாம்.

ஆனால் புத்தர் அழிவற்ற ஆன்மா ஒன்று இருப்பதாக நம்பவில்லை; கூடுவிட்டுக் கூடுபாய்வது போல், அது உலகிலே பல உடல்களில் மாறி மாறி வந்து அடைபட்டிருப்பதாகவும் நம்பவில்லை. அவர் இந்த அநான்மக் கொள்கையை மட்டும் கூறி

யிருந்தால், அவர் கருத்தை அறிவதில் இடர்ப்பாடு அதிகமிராது. ஆனால் அவர், ஒவ்வொரு மனிதனும் தன் பாவ புண்ணியங்களுக்குப் பொறுப்பானவன் என்றும், அவைகளுக்குத் தக்கபடி அவன் வேறு பிறவிகள் எடுக்க நேரும் என்றும், செய்கையின் பயனை கருமத் தொகுதியைக் கரும விதியின்படி அவன் பின்னால் அநுபவித்துத் தீர வேண்டும் என்றும் கூறியிருப்பதால், அறிஞர்களுக்குள்ளே கூட அநான்மக் கொள்கையைப் பற்றிய இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளது. 'அழிவற்ற ஆன்மா இல்லை என்றால், எது மறுபிறப்பு எடுத்து வருகின்றது?' என்று கேள்வி கேட்கப் படுகின்றது. இந்த இடத்தில், இந்துக்கள் கொண்டுள்ள கரும நியதிக்கும் புத்தர் கூறியுள்ள கரும நியதிக்கும் வேற்றுமை யுண்டு என்பதையும், இந்துக்கள் கருதும் மறுபிறப்பு, அல்லது புனர் ஜன்மத்திற்கும், புத்தர் கூறியுள்ள மறுபிறப்புக்கும் வேற்றுமை யுண்டு என்பதையும் நாம் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். முன்னதாக நம் மனத்திலே ஊறிப் போயிருக்கும் கொள்கைகளையும் சித்தாந்தங்களையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துக்கொண்டு, புத்தர்பிரான் கூறிய பல விஷயங்களையும் நிதானமாக ஆராய்ந்து பார்த்தால்தான், அவைகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும்.

உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் உயிர்களும் ஐந்து கந்தங்களின் சேர்க்கை அல்லது ஈட்டமாக அமைந்தவை. உருவம், நுகர்ச்சி, குறி, பாவனை,

உணர்வு என்ற ஐந்துமே அக்கந்தங்கள்.* உருவம், பொறி வாயில்களின் மூலம் நுகர்ச்சி, புலன்களின் மூலம் ஏற்படும் அநுபவம், மன, மொழி, மெய்களின் தொழிலால் அறிந்தவற்றைப் பாகுபடுத்தி விவரமாகத் தெரிந்து கொள்ளும் அறிவு, அறிவுக் கெல்லாம் ஆதாரமாயுள்ள சைதந்ய தத்துவம் ஆகிய ஐந்து வகைக் கந்தங்களின் (form, sensation, perception, discrimination and consciousness) சேர்க்கையாகவே மனிதனும் விளங்குகிறான். கந்தங்களின் பலவகையான உட்பிரிவுகளைப் பற்றிப் பௌத்த நூல்களில் விவரமாகக் காணலாம். கந்தங்கள் மனிதனின் உடலாயும், மனம் உட்பட்ட பொறிகளாயும், புலன்களாயும் ஒன்று சேர்ந்துள்ள சேர்க்கை மிக மிக நுணுக்கமானது. கந்தங்களில்

* **உருவம் (ரூப ஸ்கந்தம்):** *நிலம், நீர், தீ, காற்று என்னும் நான்கு பூதங்களும், உடம்பும், புலன்களும் இதில் அடங்கும்.*

**நுகர்ச்சி (வேதனா ஸ்கந்தம் அல்லது வேதனை):** *புலன்களின் மூலம் பெறும் இன்ப துன்ப உணர்வு.*

**குறி (ஸம்ஜ்ஞா ஸ்கந்தம்):** *ஐம்புலன்களும் மனமும் சேர்ந்த ஆறு புலன்களும், அவைகளின் மூலம் பெறும் அநுபவமும்.*

**பாவனை (ஸம்ஸ்கார ஸ்கந்தம்):** *மன, மொழி, மெய்களால் உண்டாகும் நல்வினை, தீவினைகள். ஸம்ஸ்காரம் பாலியில் 'ஸங்காரா' எனப்படும்.*

**உணர்வு (விஞ்ஞான ஸ்கந்தம்):** *உள்ளத்தின் உணர்வு, சாதாரணமாகப் பிரஞ்ஞை அல்லது சைதந்யம் எனப்படுவது.*

சாதாரணமாக ஜடப் பொருள்கள் என்று சொல்லக் கூடியவையும், உயிர்த் தாதுக்கள், அல்லது உயிர்ச் சக்திகளும், (life-elements or forces) கலந்திருக்கின்றன. அவைகளை நாம-ரூபங்களுக்குக் காரணமாகிய ஜடமும் மனமும் என்று பௌத்த நூல்கள் குறிக்கும். இவை இரண்டிலும் ஆன்மா அல்லது நிலையான உயிர் என்று கருதத்தக்கது எதுவுமில்லை.

எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் காரணமும் துணையான நிலைமைகளும் அமைந்திருக்க வேண்டும் என்பதைப் *பிரதித்ய சமுத்பாதத்தின்* மூலம் பௌத்த தருமம் விளக்கிக் கூறுகின்றது. ஒரு வித்திலிருந்து முளை வெளி வருவதை எடுத்துக் கொள்வோம். முளைக்கு முதல் காரணமாயுள்ளது வித்து; முளை வருவதற்குத் துணையாயுள்ள நிலைமைகளான மண், நீர், வெப்பம், காற்று, ஆகாயம், காலம் ஆகியவை துணைக்காரணம். வித்தும் முளையும் வெவ்வேறு பொருள்கள், எனினும் ஒன்றுக்கொன்று காரணமாக அமைந்துள்ளன. காரணமும் துணைகளும் பொருந்திச் சேரும்பொழுது காரியம் நிகழ்கின்றது.

எந்த மாறுதலும் தானுக ஏற்படுவதில்லை. உலகில் ஏற்படும் மாறுதல்கள் அனைத்தும் ஒன்றை ஒன்று காரணமாகக் கொண்டவை. உலகப் பொருள்களிடையே யுள்ள இந்தக் காரண சம்பந்தமே (Causal nexus) பிரதித்ய சமுத்பாதம். உலகப் பொருள்கள் ஒன்றிலிருந்து ஒன்ருக மாறுவதற்கு எப்பொழுது ஆரம்பித்தன, எப்பொழுது இந்த மாற்றம் நிற்கும் என்பவற்றை யாரும் உரைக்க முடியாது. ஆனல் ஒன்றுமட்டும் சொல்லலாம்: காரணம் இல்லாவிட்டால், காரியம் நிகழாது. புத்தர்

கூறியுள்ளது இது: 'ஒரு கனி தானாக உண்டாவதில்லை, மற்றொருவரால் அது உண்டாக்கப் படுவதுமில்லை; ஒரு காரணத்தைக் கொண்டு அது உண்டாகின்றது; காரணம் தீர்ந்ததும் அதுவும் தீர்ந்து விடுகின்றது.'

வெளிப் பொருள்களுக்கு அமைந்துள்ள இதே விதியை உட்பொருள்களுக்கும் — அத்யான்மிக விஷயங்களுக்கும்—பொருத்திப் பார்த்தால் உண்மை விளங்கும். உடலும், மனமும் ஒன்றுசேர்ந்து மனிதன் என்று சொல்லப்படும் ஒருவன் தோன்றுவதற்கும் வித்திலிருந்து முளை வருதலையே உபமானமாகக் கொள்ளலாம். அழிவற்ற ஆன்மா ஒன்றை வருவித்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

மனிதன் நாமரூபங்கள் (அருவும் உருவும்) அல்லது மனமும் ஜடப் பொருளும், அல்லது உயிரும் ஜடப் பொருளும் சேர்ந்தவன் என்பதைத்தான் ஐந்து கந்தங்கள் சேர்ந்து உண்டானவன் என்று கூறப்படுகின்றது. கந்தங்கள் மனிதனைப் பரிணமிப்பதற்கு ஏற்ற காரணமும், துணையான நிலைமைகளும் ஒத்திருக்கவேண்டும். காரணம் பேதைமை (அவித்தை) என்று கூறப்பட்டுள்ளது. பேதைமையிலிருந்து மன, மொழி, மெய்களால் நிகழும் நற்செயல்களும், தீச்செயல்களும் உண்டாகின்றன: அவா, துவேஷம், மயக்கம் முதலியவை தோன்றுகின்றன. பேதைமை என்ற வித்து முளை விடுவதற்குப் பஞ்ச பூதங்களோடு 'விஞ்ஞான ஸ்கந்தம்' எனப்படும் உணர்வும் சேர்ந்து பக்குவமான நிலைமைகளை அளிக்கின்றன.

எனவே மனிதன் உண்டாவதற்கு ஒரு கர்த்தா காரணமாக இல்லை; 'தரும சங்கேதம்' என்று

சொல்லப்பெறும் தாதுப் பொருள்கள், அல்லது மூலப் பொருள்கள், ஒன்றுசேர்ந்து பரிணமிப்பதற் குரிய நியதியே காரணமாயுள்ளது. 'அது இருப் பதால், இது இருக்கிறது; அது உண்டாகியிருப் பதால், இது உண்டாகியுளது' என்ற முறையில் காரண காரியத் தொடர்பாகவே, ஒன்றைக் காரண மாகக் கொண்டு ஒன்று தோன்றுவதாகவே, புத்தரும் விளக்கியுள்ளார்.

இதனுலேயே,

*துக்கமே உளது, துக்கிப்பவன் இல்லை;*
*செயல் உளது, செய்பவன் இல்லை;*
*நிருவாணம் உளது; நிருவாணமடைபவன் இல்லை;*
*மார்க்கம் உளது, அதில் செல்வோன் இல்லை' **

என்று சொல்லப்படுகின்றது.

மற்றைப் பொருள்களைப் போலவே, உடலும் மனமும் ஒவ்வொரு கணமும் மாறிக் கொண்டே யிருக்கின்றன. இந்த மாற்றத்தில் ஒருபுறம் புதுவளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டே யிருக்கின்றது; மறுபுறத்தில் பழையன அழிந்துகொண்டே யிருக் கின்றன. ஒரே உடலில் இந்த மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதையும், மாற்றம் வெகு விரைவாக ஏற்பட்டுக் கொண்டிருப்பதையும் கொண்டு, நாம் மாற்றமே இல்லாதது போன்ற எண்ணத்தைப் பெறுகிறேம். 'ஒரு விளக்கில் தீபச்சுடர் எரிகின்றது. இரவு முழுதும் எரிவது ஒரே சுடர் அன்று; கணந் தோறும் சுடர் மாறிக்கொண்டே வந்த போதிலும்,

---

* 'விசுத்தி மார்க்க'த்தில் புத்தகோஷர் குறித்துள்ள மேற்கோள் செய்யுள்.

நாம் முன்னிரவில் எரிந்த சுடரே பின்னிரவிலும் எரிவதாக எண்ணுவது வழக்கம். இது மன நினைப்பே தவிர உண்மையில்லை. ஒரு விளக்கில் சுடருக்குப் பின் சுடராக வெகு வேகமாகத் தொடர்ந்து தோன்றுகின்றன; ஒன்று அவியவும் மற்றொன்று தோன்றவும் இடைவெளியான நேரமில்லை. இதைத் 'தீப சந்தானம்' என்பர். ஏனெனில் முதற் சுடரின் சந்தானமாகவே அடுத்த சுடரும், அதன் சந்தான மாகவே அதற்கடுத்த சுடரும், இவ்வாறே எல்லாச் சுடர்களும் சந்தானமாகவே தோன்றுகின்றன. முதற் சுடர் இரண்டாவது சுடருக்குக் காரணமே தவிர, அது வேறு, இது வேறு என்றுவதுபோல, மற்றைச் சுடர்களையும் கொள்ளவேண்டும்.

மனித உடலுக்குத் தீபசந்தானத்தை உவமை யாகக் கூறியிருப்பதுபோல், வாயு(காற்று) சந்தானம், தாரா (நீரோட்டம்) சந்தானம் முதலியவற்றையும் கூறுவதுண்டு. கந்தங்கள் யாவும் இவ்வாறு சந்தானமாய்க் கணந்தோறும் தோன்றி அழிபவை. அவைகளில் விஞ்ஞானம் என்ற உணர்வு தோன்றி அழிகையில், முற்கணத்திலே அழியும் ஞானத்தில் தோன்றிய வாசனை பிற்கணத்திலே தோன்றும் ஞானத்தில் பற்றிக்கொண்டு சந்தானமாக விளங் குவதால், அறிவு தொடர்ச்சியாக நிகழ்கின்றது. இதுபோலவே ஒரு பிறவியிலிருந்து மறு பிறவி ஏற்படுதலும்; ஒன்றின் காரணமாக மற்றது தோன்று கிறது; இதிலே காரணம் என்பது கருமபலன். ஓர் உயிர், ஒரு கூட்டைவிட்டு மற்றொரு கூட்டினை அடைவது போன்றதன்று இப்பிறவித் தொடர். ஒரு

பிறப்பின் காரணமாகவே அடுத்த பிறவி ஏற்படுகின்றது; ஒரு பிறப்பின் விஞ்ஞான ஸ்கந்தத்தின் (உணர்வின்) ஒரு பகுதியாக அப்பிறப்பின் கருமத் தொடர்பு ஒட்டி நிற்கின்றது. அதுவே அடுத்த பிறப்புக்குக் காரணமாகின்றது. ஆகவே ஒரு மனிதனே மறு பிறவி எடுக்கிறான் என்பதுமில்லை, அவன் இல்லாமல் மறு பிறவி ஏற்படுவதுமில்லை. இவ்வாறு ஏற்படும் பிறவித் தொடரும் தீபச்சுடர், காற்று, நீரோட்டம் முதலியவை சந்தானமாக விளங்குவதைப் போன்றதே.

'மிலிந்தன் பிரச்னைகள்' என்ற நூலில் மறு பிறப்பைப் பற்றிக் காணப்பெறும் ஒரு பகுதி வருமாறு:

*'மறுபிறப்பெடுத்து வருவது யார்?'*

*'மனமும்—ஜடப்பொருளும்.'*

*'(இப்பொழுதுள்ள) இந்த மனமும் - ஜடப்பொருளுமா மறுபிறப்பாக வருகின்றது?'*

*'இல்லை, இந்த மன — ஜடப்பொருள் சேர்க்கையால் நல்வினை தீவினைகள் செய்யப் பெறுகின்றன, இவ்வினைகளால் (கரும நியதியால்) வேறொரு மன — ஜடப்பொருள் பிறவியெடுக்கின்றது.'*

*'அப்படியானால், அவ்வாறு பிறக்கும் மனிதன் (முந்திய தீவினைகளின் பயனான) கருமத்திலிருந்து விடுதலை பெறுவானா?'*

*'ஆம். அவன் பிறவியெடுக்காமலிருந்திருந்தால், விடுதலை பெறுவான். ஆனால், அவன் எப்போதும் புதுப்பிறவி எடுத்தாயிற்றே, அதனாலேயே அவன் தீய கருமங்களிலிருந்து விடுதலை பெறமாட்டான்.'*

வெளித் தோற்றத்திலே, இதைப் பார்த்தவுடன், முற்பிறப்பில் வினைகள் செய்பவன் ஒருவன், அவற்றின் பயன்களை இப்பிறப்பில் அநுபவிப்பவன் வேறொருவன் என்பதுபோல் தோன்றும். ஆழ்ந்து சிந்தித்தால், இருவருடைய தொடர்பும் விளங்கும். முன்னவன் இல்லாவிட்டால், பின்னவன் தோன்றியிரான்; பின்னவன் முன்னவனை யில்லாவிட்டாலும், அவனிலிருந்து முற்றிலும் வேறுபட்டவனல்லன்.

'ஹேது' நிகழ்ச்சி என்ற காரண - காரியத் தொடர்பு, குறித்த முறையில், குறித்த விதிப்படி நிகழ்ந்து கொண்டே யிருக்கின்றது; பூதங்களின் (தாதுக்கள் அல்லது மூலப்பொருள்களின்) தொடர்பும் 'தரும சந்ததி' என்ற விதிப்படி நிகழ்ந்து கொண்டே யிருக்கின்றது.

தற்காலத்து விஞ்ஞானிகளும், உலகில் எதுவும் நிலையாயில்லை என்றும், எல்லாம் எப்போதும் மாறிக் கொண்டே நிலையற்றிருக்கின்றன (everything is flux, movement, change) என்றும் கூறுகின்றனர்.

இந்நிலையில் 'நான்' என்று மனிதன் கருதுவது எதை என்று காணுதல் எளிது. உடலும் மனமும் கணந்தோறும் மாறிவரினும், அவற்றில் ஒரு தொடர்பும் இருக்கின்றது. முந்திய நினைவுகள், உணர்ச்சிகள், கருத்துக்கள், ஆசாபாசங்கள் ஆகியவை ஒரே உடலை அடிப்படையாகக் கொண்டு தேங்கி நிற்பதே 'நான்' என்ற அகங்காரத்திற்கு அடிப்படை. இந்த அகங்காரமும் மாறக்கூடியதே. ஏனெனில், குழந்தைப் பருவத்தில் ஒருவன் தன்னை 'நான்' என்று குறிப்பிட்டு வந்தும், பின்னால் வயோதி

கத்திலும் தன்னை 'நான்' என்றே குறிப்பிடுவதால், நாம் ஏமாற்றமடைந்துவிடக் கூடாது. முதலில் 'நான்' என்று குறிப்பிட்ட குழந்தைப் பருவமே போய்விட்டது; வயோதிகத்தை இப்போது 'நான்' என்று குறிப்பிடுகிருன். அதாவது 'நான்' என்பதன் தன்மை — உட்பொருள் — மாறிவிட்டது; பெயரளவிலேயே அது பொருத்தமாயுள்ளது.

மனம் என்பது தனியான ஓர் அவயவம் அல்லது அங்கமன்று. சிந்தனை செய்யும் முறை, சிந்தனை சக்தியையே மனம் என்று கருதுகிறோம். ஜடப் பொருளும் இந்தச் சிந்தனைசக்தியாகிய உணர்வும் ஒன்று சேர்ந்தே மனிதன் உண்டாகிருன். மனோ தருமங்கள் அல்லது சித்தவிருத்திகளின் தொகுதியே மனம் என்றும், அறிவு, உணர்வு, இச்சா சக்தி என்பவை அம்மனத்தின் உட்பிரிவுகள் என்றும் நவீன உளநூல் ஆசிரியர்களும் கூறுவர். இடையருது ஏற்பட்டு வரும் மனோதருமங்களின் ஓட்டத்திலிருந்து சில நினைவுகள், சிந்தனைகள், கருத்துக்கள் மட்டும் ஒன்றுசேர்ந்து ஒரே சித்திரமாகத் தோன்றுவதும் உண்டு. அவ்வாறு ஏற்பட்ட ஒரு சித்திரமே 'நான்' என்பது. மற்றைப்படி 'நான்' என்பதற்கு ஆதாரமாக, என்றும் நிலையாயுள்ள ஒரு பொருள் மனிதன் அகத்திலோ, புறத்திலோ இல்லை.

'நான்' என்ற அகங்காரத்தையும் நிலையற்றது என்று தள்ளிவிட்டால், மனிதனிடம் நிலையாக நிற்பது ஒன்றுமில்லை என்ருகின்றது. உடலில் ஏற்படும் மிக நுணுக்கமான, சேர்க்கையான மாறுதல்களும், இரசாயன மாறுதல்களுமே வாழ்க்கை அல்லது உயிர் வாழ்தல் என்று கூறும் அளவுக்கு

நவீன உளநூல் ஆசிரியர்கள் வந்துள்ளார்கள். சிந்தனையுள்ள சமயத்திலேயே மனிதன் வாழ்கிறான்; சிந்தனையற்ற சமயம் அவன் வாழ்வில்லை; சிந்தனையே உயிர்வாழ்வு என்றும் கருத முடியும்.

இவ்வாறு நவீன விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஒத்த முறையில் பௌத்த தருமத்தின் பிரதித்ய சமுத்பாதம் மனிதனின் வாழ்வைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. அது மட்டுமன்று: உலகில் தோன்றும் பிறப்புக்களான மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்கு, பேய் என்ற ஆறு வகையிலும், எந்தப் பிறப்புக்கும் நிலையான நித்தியமான உயிர் இல்லையென்று பௌத்த நூல்கள் கூறும். மேற்கூறிய பிறப்புக்கள் கரும வினையினால் ஏற்படும் தோற்றங்கள். ஆனால் எந்தப் பிறப்பிலும், உடலுக்குள் 'சரீரி' என்று அந்த உடலை இருப்பிடமாகக் கொண்ட ஆன்மா ஒன்றுளது என்பதைப் பௌத்த தருமம் ஒப்புக் கொள்ளவில்லை. எந்த உயிரானாலும், ஜடப்பொருளும் மனமும் சேர்ந்து உண்டானது தவிர வேறில்லை என்பது அதன் முடிவு. புத்தர்பிரானும் உயிர்கள் அனைத்தும் ஆன்மா அற்றவை என்று கூறியுள்ளார்.

### புத்தரும் முந்திய முனிவர்களும்.

இந்த 'ஆன்மா' விஷயத்திலிருந்துதான் புத்தருக்கும் அவருக்கு முன்னிருந்த மகரிஷிகளுக்கும் வேற்றுமை ஆரம்பமாகின்றது. மற்றும் அநேக விஷயங்களில் புத்தர் வாக்கைப் பார்த்தால்,

* 'Life is the general name for a number of complicated physical and chemical processes; not an added principle, a mysterious something over and above them.

— '*Outlines of Psychology*' — by Prof. Titcher.

ரிஷிகளின் வாக்கைப் போலவே தோன்றும்படி அவ்வளவு ஒற்றுமையுள்ளதா யிருக்கும். அவா அல்லது ஆசையை ஒழித்தல், அகங்கார மமகாரங்களாகிய 'நான்' 'எனது' என்ற பற்றுக்களை ஒழித்தல், பயன் கருதாமல் நிஷ்காமியமாகக் கடமைகளைச் செய்தல், அவித்தை என்ற பேதைமையை ஞானத்தால் அழித்து மெய்யறிவு பெறுதல், பொய், களவு, கொலை முதலிய தீவினைகளை விலக்கிச் சீலங்களைப் பேணித் தானங்களை மேற்கொள்ளல், கருமநியதியை ஒப்புக்கொள்ளல், உயர்ந்த ஞானத்தை அடைந்த பின் மோனநிலையில் அடங்கியிருத்தல் ஆகிய பல விஷயங்களில் வேதங்கள், உபநிடதங்கள், பகவத் கீதை முதலிய வைதிக நூல்களுக்கும் புத்தர் உபதேசங்களுக்கும் நெருங்கிய தொடர்பும் ஒற்றுமையும் இருக்கின்றன. ஆனால் ஆன்மா விஷயத்தில் நேர் முரணாக இருக்கின்றது.

வேத,உபநிடதங்கள் காமத்தைக் கடிந்துள்ளன. 'ஆரம்பத்தில் ஆசை—காமம்—இருந்தது; அதுவே உள்ளத்தின் முதல் விதை, ஞான முனிவர்கள் தங்கள் அறிவினால் வாழ்வின் பந்தத்தை வாழ்வற்ற நிலையிலிருந்து கண்டு கொண்டனர்' என்று 'இருக்கு வேதம்' கூறுகின்றது. 'உலகத்தைப் பந்தப் படுத்துவது ஆசையே, வேறு பந்தமில்லை' என்று 'தைத்திரீயப் பிராம்மணம்' குறிப்பிடுகின்றது. காமம் எல்லையற்றிருப்பதால் அது கடல் என்றும் வேத வாக்கியங்கள் கூறும். அவை காமத்தை அக்கினி யென்றும் வருணிக்கின்றன. 'இதயத்தினுள்ளே புகுந்த காமங்கள் கைவிடப் பெறும் பொழுது, உடனே அநித்தியமானவன் நித்தியனாகிறான், (இந்த வாழ்க்கையில்) இங்கேயே பிருமத்தை

அடைகிருன்' என்று 'பிருகதாரண்யக உபநிடதம்' கூறுகின்றது. 'இதயத்தின் பாசங்கள் அனைத்தும் அறுக்கப்பெறும் பொழுது, உடனேயே நரன் அமர ஞகிருன்' என்பது 'கதா உபநிடதம்.' 'பகவத்கீதை' காமத்தை (ஆசையை) மகாபாவம், மகாசத்துரு, நித்தியவைரி என்றெல்லாம் கூறும். பற்றற்று, விடுதலையடைந்து, 'நான்' 'எனது' என்ற எண்ணங்களற்றவனே சாந்தியடைவான் என்பதை அந்நூல் பலவாருக விளக்கியுள்ளது.

புத்த பகவரும் காமத்தை-ஆசையை-அவாவைப் பலமாகக் கண்டித்துள்ளார். காட்டுப் புல்லைப்போல் ஆசைகள் வளரும் என்றும், ஆசைக் காட்டையே அரிந்து தள்ளவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தியுள்ளார். அத்துடன் சுயநலம், துவேஷம் முதலியவற்றையும், எல்லாவற்றிற்கும் மூல காரணமான பேதைமையையும் அகற்ற வேண்டும் என்று அவர் உபதேசித்தார். 'இந்த உலகிலோ, அல்லது அடுத்த உலகிலோ, எந்தத் துன்பங்கள் இருந்தாலும், அவைகள் அனைத்துக்கும் வேராக உள்ளது பேதைமை (அவிஜ்ஜாமூலக)' என்றும், 'அவை (அத் துன்பங்கள்) விருப்பம் அல்லது ஆசை காரணமாக எழுபவை' என்றும் * அவர் கூறினார். உண்மையை உணராமை, அல்லது தவருக உணர்தலே பேதைமையாகும். பிரஞ்ஞா பாரமிதை என்று போற்றப்படும் மெய்ஞ்ஞானம் பெற்றவுடன் பேதைமை ஒழியும்.

உபநிடதங்களை ஆதாரமாய்க் கொண்ட வேதாந்திகளைப் போலவே, புத்தரும், திரவ்ய யக்ஞங்கள் (பொருள்களை ஆகுதியாக்கிச் செய்யும் யாகங்கள்)

* 'இதி உத்தகம்.'

பயனற்றவை என்றும், ஞான யக்ஞமே சிறந்த தென்றும் உபதேசித்து வந்தார்.

முன்னோர்களைப் போலவே, புத்தரும் கரும விதியை ஏற்றுக்கொண்டு உபதேசித்து வந்தார். வினைகளே முதலாய் நின்று உயிர்க்குப் பயனாகிய இன்ப துன்பங்களை அளிக்கும் என்று நம்புதலே கருமவிதி. மன, மொழி, மெய்களின் விருத்தியே—செயலே — கருமத்திற்குக் காரணமானது. ஞான மார்க்கத்தில் செல்வோனுக்கு மன நிகழ்ச்சியே கருமமாகும் (மானஸம் கர்மா) என்பதை, 'ஓ பிக்குகளே! இச்சா சக்தியை உபயோகித்தலையே (volition) நான் கருமம் என்று அழைக்கிறேன்' † என்று அவர் அருளியுள்ளார். 'பகவத் கீதை'யும், பற்றற்ற நிலையில், கேவலம் ஒருவனது உடலின் செயல் எதுவும் பாவமாகாது என்று பகர்வதை இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். பேதைமையே பந்த காரணம் என்பதையும், ஞானமே விடுதலைக்கு வழி என்பதையும், அவா (திருஷ்ணை) வேரோடு நீங்கினாலன்றிச் சாந்தி யில்லை என்பதையும் புத்தர், முன்னோர்களைப் போலவே, ஆணித்தரமாக விளக்கியுள்ளார்.

ஏடுகளைச் சுமந்து கொண்டு திரிதல் ஞானமாகாது. சாத்திரங்கள் பலவற்றையும் துருவித் துருவிப் பார்த்து, மனனம் செய்து கொண்டிருந்தால் போதாது. முன்னோர்களாகிய மேதாவிகள் கூற்று என்பதற்காக எதையும் நம்பிவிடக்கூடாது என்றும், பகுத்தறிவு காட்டும் பாதையிலே நடந்து வரவேண்டும் என்றும் புத்தர் கூறியது முன்னர் பலவிடங்களில் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளது. 'இந்தச்

† 'அங்குத்தர நிகாயம்'

சொற்களின் குவியலைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே யிருக்க வேண்டாம், ஏனெனில் அதனால் மூச்சுத் தான் வீணாகும்' என்று 'பிருகதாரண்யக உபநிடத' மும் கூறுகின்றது.

வேதாந்திகளைப் போலவே புத்தரும், தந்திரங்கள், கிரியைகள், சடங்குகளைக் கைவிட்டுத் தியானத்தில் நிலைத்திருக்கும் வழியைக் காட்டினார். வேதியர் ஒருவரிடம் பேசுகையில், புத்தர்பெருமான், 'அந்தணா! அக்கினியில் சமித்துக்களைச் சொரிவதால் மட்டும் பரிசுத்தம் வந்துவிடுவதாகக் கருத வேண்டாம், ஏனெனில், அது வெளியேதான் நிகழ்வது; ஆதலால் அந்த வழியை விட்டுவிட்டு, நான் எனது அக்கினியை அகத்தினுள்ளேதான் மூட்டியிருக்கிறேன், அது என்றும் எரிந்து கொண்டிருக்கும்' என்று கூறியதை 'சம்யுத்த நிகாயத்தி'லே காணலாம்.

ஆன்மா விஷயத்திலே மட்டும் புத்தர் 'உபநிடதங்கள்', 'பகவத் கீதை' முதலிய நூல்களிலிருந்து மாறுபட்ட கருத்தைக் கொண்டார். 'அவர் அறிவுறுத்திய உண்மை அநான்மா என்பது — அவருடைய முன்னோர்களிலே பெரும்பாலோர் கொண்டிருந்த கொள்கைக்கு அது நேர் விரோதமானது'. *

மகரிஷிகள் ஆன்மா ஒன்றே நித்தியமானது என்று கொண்டாடினார்கள். அதுவே சரீரத்தை இடமாகக் கொண்ட சரீரி என்று அவர்கள்

* 'The truth he propounded is Anatman—a doctrine diametrically opposite to that held by most of his predecessors.)'

— '*The Basic conception of Buddhism*' by Vidhushekara Battacharya.

கருதினார்கள். உடலின் தோற்றத்தின் போது அது உள்ளே புகுமென்றும், உடலின் அழிவில் அது வெளியேறுமென்றும் அவர்கள் கூறினார்கள். ஆனால் சாதாரண அறிவால் அது அறிய வொண்ணாதது என்பதும் அவர்கள் கூற்று.

'எல்லையற்றது, எங்குமுள்ளது, அதுவே நான், அதுவே ஆன்மா—என்பதைக் கண்டு உணர்ந்து, அதையே அன்புகொண்டு, அதிலே ஆனந்தித்து நிற்பவன் ஸ்வராஜ்யம் பெற்றவன்; அவனே சகல உலகங்களிலும் அதிபதி' என்று 'சாந்தோக்ய உபநிடதம்' கூறும்.

'ஒரு மனிதன் தன்னை (ஆன்மாவை)' "இதுவே நான்—அயம் அஸ்மி" என்று சொல்லி உணர்ந்து கொண்டால், பிறகு உடலைத் தொடர்ந்துகொண்டு அவன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய ஆசை அல்லது விருப்பம் என்ன இருக்க முடியும்?' என்று 'பிருகதாரண்யக உபநிடதம்' கேட்கின்றது.

அந்நூலில் யாக்ஞவல்கியர் ஆன்மாவைப் பற்றித் தமது மனைவி மைத்திரேயி தெரிந்து கொள்ளும்படி விளக்கியுள்ள பகுதியும் கவனிக்கத் தக்கது:

*'ஒரு பிடி உப்பு, உள்ளே, வெளியே என்ற வேற்றுமையின்றி, ஒரே சுவையைத் தவிர வேறில்லாமல் இருப்பது போலவே, இந்த ஆன்மாவும், அகம் புறம் என்றில்லாமல், ஞான மயமாக உள்ளது. இந்தப் பூதங்களிலிருந்து (தாதுக்களாகிய மூலப் பொருள்களிலிருந்து) தோன்றி, இவைகள் மறையும்பொழுது தானும் (வெளியேறி) மறைகிறது. அது வெளியேறிய பின்பு பிரக்ஞை இருப்பதில்லை...... அந்த*

ஆன்மா அழிவற்றது, அதை அழிக்கவும் முடியாது. இருவர் இருந்தால் ஒருவரை மற்றவர் பார்க்கலாம், ஒருவரை மற்றவர் (உருசியால்) உணரலாம், ஒருவரை மற்றவர் வணங்கலாம், ஒருவர் மற்றவர் கூறுவதைக் கேட்கலாம், ஒருவர் மற்றவரைத் தீண்டலாம், ஒருவா மற்றவரை அறியலாம். ஆனால் ஆன்மா ஒன்றுமட்டுமே இவை எல்லாமாக இருக்கும்போது, நாம் மற்றவரைப் பார்க்கவோ, உருசியால் உணரவோ, கேட்கவோ, தீண்டவோ, அறியவோ எவ்வாறு இயலும்? எவனுடைய சக்தியால் இவைகளையெல்லாம் நாம் அறிகிறோமோ, அவனை நாம் அறிவது எங்ஙனம்? அந்த ஆத்மனை " அன்று, அன்று—நேதி, நேதி " என்ற முறையிலேயே விளக்கிக் கூறலாகும். அவன் புரிந்துகொள்ளப் பெறாதவன் — ஏனெனில் அவனைப் புரிந்துகொள்ள முடியாது; அவன் அழிக்கப் பெறாதவன்—ஏனெனில் அவனை அழிக்க முடியாது; அவன் பற்றற்றவன் — ஏனெனில் அவன் எதையும் பற்றிக் கொள்வதில்லை: அவனுக்கு எவ்விதப் பந்தமுமில்லை, துக்கமுமில்லை, அழிவுமில்லை. ஏ, பிரியே! (எல்லாவற்றையும்) அறிபவனை ஒருவன் எங்ஙனம் அறிந்துகொள்ள முடியும்? '

மற்றோரிடத்தில், '......... அங்கே கதிரவனோ, தண்மதியோ, தாரகைகளோ, இந்த மின்னல்களோ பிரகாசிப்பதில்லை, இந்தத் தீயைப்பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. அவன் பிரகாசிக்கும் பொழுது, அவனைத் தொடர்ந்து ஒவ்வொன்றும் பிரகாசிக்கின்றது: அவனுடைய ஒளியால் உலகம் அனைத்தும் ஒளி செய்யப் பெறுகின்றது' என்று கூறப்பட்டுள்ளது.

'கண் அங்கே செல்வதில்லை, மொழிக்கும் மனத்திற்கும் அது அப்பாலுள்ளது, அதை எப்படிப் போதிப்பது என்பது நமக்கு விளங்கவில்லை. (நாம்) தெரிந்தவற்றிலிருந்து அது வேறுபட்டது நாம்

தெரியாதவற்றிற்கும் அது மேம்பட்டது, நமக்கு இதைப் போதித்த முந்தையோரிடமிருந்து நாம் இவ்வாறு கேள்விப் பட்டுள்ளோம்' என்றும், 'எவன் தனக்கு அது தெரியாது என்று எண்ணுகிருனே அவனுக்கு அது தெரிந்துளது, எவன் அதை அறிந்ததாக எண்ணுகிருனே அவனுக்கு அதைப் பற்றித் தெரியாது' என்றும் 'கேன உபநிடதம்' வருணித்துளது.

புத்தர் பெருமான் தாம் கூறிய பரமபதமாகிய நிருவாண நிலையை மண்வாசனையே யில்லாத அழிவற்ற அமர நிலையாக வருணித்திருப்பினும், ஆன்மாவைப் பற்றி மேலே குறித்துள்ள முறையில் எதுவும் கூறவில்லை. அவருடைய உபதேசங்களையும், கொள்கைகளையும், மக்களுக்கு அவர் வகுத்துள்ள பயிற்சித் திட்டத்தையும் பரிசீலனை செய்து பார்த்தால், ஆன்மாவைப் பற்றி அவர் வேண்டுமென்றே, உறுதியான முறையில், முன்னோர்களுடைய கூற்றை மறுத்திருப்பதாகத் தெரிகின்றது.

ஐந்து கந்தங்களில் எதுவும் ஆன்மாவாக இருக்க முடியாது; மரத்தோடு நிழல் சேர்ந்திருப்பது போல அது உளதா என்ருல், அதுவுமில்லை; பூவில் மணம் பொருந்தியுள்ளது போல அது உளதா என்ருல், அதுவுமில்லை; பெட்டியிலுள்ள இரத்தினம் போல அது உளதா என்ருல், அதுவுமில்லை என்று அருவுருக்களில் ஆன்மா இல்லை என்பதை அவர் பிரித்துப் பிரித்துக் கூறியுள்ளார். *

'இவ்வாறும், வேறு பல முறைகளிலும், மற்ற சித்தாந்தங்கள் ஏற்றுக்கொண்டுள்ள நிலையான ஓர்

* 'சுத்தநிபாதம்'

அகம் அல்லது ஆன்மா உளது என்பதைப் புத்தர் அறவே மறுத்து, அதனால் ஆசைக்கு இருப்பிடமாக அமையக்கூடிய அடிப்படையையே அகழ்ந்து எறிந்துவிட்டார்' என்று திரு. விதுசேகர பட்டா சாரியா தமது 'பௌத்த தருமத்தின் அடிப்படைத் தத்துவம்' என்ற நூலில் கூறியுள்ளார்.*

புத்தர் வகுத்துக்காட்டிய பன்னிரு நிதானங் களையும் கவனிக்கையில், உலகப் பொருள்கள், உயிர்கள் ஆகிய எதில் பற்று வைத்தாலும், அந்தப் பற்றினாலேயே துக்கம் வளர்வதை எளிதில் தெரிந்து கொள்ளலாம். எதுவும் நிலையற்றிருப்பதால், அவன் அந்த நிலையாமையை நன்குணர்ந்து பற்றை அறுத்துக் கொள்ளவேண்டும் என்பது அவர் கருத்து. இதற்கு நேர் மாறாக, அவனுடைய அகத்தி லேயே, என்றும் அழியாத, ஒளிமயமான ஆன்மா உளது என்று சொல்வதால், நித்தியமான அந்த ஆன்மாவைக் கருதி, அதற்காக அவன் பற்றுக் கொள்ளத்தக்க அடிப்படை அமைந்து விடுகின்றது. நான் என்ற பொய்மையான அகங்காரத்தை அகற்ற வேண்டும் என்பதை முன்னோர்களும் அழுத்த மாகக் கூறிவந்தார்கள். ஆனால் போலியான அந்த ஆணவத்திற்குப் பதிலாக, நிலையான ஆன்மாவைப் பற்றிய கொள்கையை அவர்கள் புகுத்திவிட்டார்கள்.

புத்தருக்குப் பின்னால் தோன்றிய பௌத்த ஆசிரியர்கள் பலரும் இதைப்பற்றி விரிவாக எழுதி

* 'Thus and in various other ways, the existence of a permanent Self or *Atman*, as accepted by other systems, was utterly denied by Buddha, thereby pulling down the very foundation of desire where it can rest.'

— '*The Basic conception of Buddhism*' — by Vidhu-shekara Battacharya.

யுள்ளனர். உதாரணமாக அசுவகோஷர் கூறி யிருப்பதாவது: 'தவறான சித்தாந்தங்கள் யாவும் இந்த ஆன்மா உளது என்னும் கொள்கை காரண மாகவே எழுந்தவை. இதிலிருந்து நாம் விடுபட்டு விட்டால், தவறான சித்தாந்தங்கள் ஏற்பட இட மிராது.'*

ஒரு பொருளைக் கண்ணால் பார்த்தறியும் காட்சியை உதாரணமாய்க் கொண்டு, காண்போனைத் தனியாக ஒருவன் இல்லை என்பதை நாகசேனர் தமது 'மிலிந்தன் பிரச்னைகள்' என்ற நூலில் விளக்கியுள்ளார். அவர் கூறியுள்ளது இது: 'கண்ணுக்கும் உருவத்திற்கும் உரிய சம்பந்தத்தினால் காட்சி உணர்ச்சி எழுகின்றது, அதே நேரத்தில் அத்துடன் (ஸ்பரிசம் என்ற) தொடர்பும், (வேதனை என்ற) உள்ள உணர்ச்சியும், (பொருளைப்பற்றிய) கருத்தும், சிந்தனை பற்றிய உணர்வும், கவனமும் ஏற்படுகின்றன — இந்தத் தருமங்கள் — விருத்திகள் — யாவும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு எழுந்தவை, ஆனால் ''காண்பவன்'' என்று தனியாக ஒன்றைக் காணவில்லை.'

நவீன ஆசிரியர்களில் பேராசிரியர் இலட்சுமி நரசு ஆன்மா பற்றிய பௌத்தக் கொள்கையை ஆராய்ந்து, தருமத்தின் முதன்மையான நன்மை, மனிதனின் தனிப் பண்பு, பிரபஞ்சத்தின் புதிர் என்ற தலைப்புக்களோடு விவரமாக எழுதியுள்ளார். 'பார்த்து அறியக் கூடிய பிரபஞ்சத்திற்கு வெளியே எதுவுமில்லை என்றும், இந்தப் பிரபஞ்சம் முழுதும் மானஸீக நிகழ்ச்சிகள், அல்லது தருமங்களின்

* 'சிரத்தோற்பாத சூத்திரம்.'

பிரவாகங்கள் என்றும் பௌத்த தருமம் விளக்கி யிருப்பதால், பிரக்ஞைக்கு (மனித அறிவுக்கு) அப்பாற்பட்ட ஒன்று—ஆன்மா—உளது என்பதை அத்தருமம் தெளிவாக நிராகரித்திருப்பது இயற்கையே யாகும்'* என்று அவர் குறித்துள்ளார்.

'தனியான ஓர் அகம் அல்லது ஆன்மா என்பதை மறுத்திருப்பதால் மனிதனின் தனிப் பண்பையும் (ஒப்புக்கொள்ளாமல்) ஒதுக்கிவிட்டதாக ஆகாது. ஆனால் அதனால் தனிமனிதன் தன் அறிவுத் திறனிலும் ஒழுக்க முறையிலும் வளர்ச்சி யுறுவதையும், பரிபூரண நிலை அடைவதையும் தடை செய்யக்கூடிய தவறுன ஒன்றிலிருந்து விடுதலை பெற்றதாகவே ஆகும். (பௌத்த) தருமம் வாழ்க்கையிலிருந்து "ஆன்மா" என்ற தற்செருக்கை அகற்றி விடுகின்றது' என்றும் அவர் கூறியுள்ளார்.†

'கண் அங்கே செல்வதில்லை, அது மொழிக்கும் மனத்திற்கும் அப்பாற்பட்டது. அதைப்பற்றி ஒருவர்

---

*'As Buddhism resolves the whole phenomenal universe, outside which nothing exists, into pure psychic processes (dharma), it is but natural that it should categorically reject the existence of an *atman*, a transcendental subject outside consciousness.'

'*The Essence of Buddhism*'— by P.Lakshmi Narasu.

† 'The denial of a separate self, an *atman*, does not obliterate the personality of a man, but liberates the individual from an error that is liable to stunt his intellectual and ethical development and hinder his attainment of perfection. The Dharma removes from life the vanity of self.'

—'*The Essence of Buddhism.*'

எப்படிப் போதனை செய்ய முடியும் என்பதே நமக்கு விளங்கவில்லை!' என்று 'கேன உபநிடதம்' வருணிக்கும் ஆன்மாவைப் பற்றிப் புத்தர் பெருமான் 'அது இல்லை' என்றே சொல்லியிருப்பாரா என்று சந்தேகம் தோன்றுவது இயல்பே. அவர் காலத்திலேயே சிலர் சந்தேகப்பட்டு அவரிடம் கேள்விகளும் கேட்டிருக்கின்றனர்.

### பரம்பொருள்

இதைப்பற்றி மேலும் ஆராயப் புகுமுன் பரம்பொருளைப் பற்றியும் புத்தருடைய கருத்து என்ன என்பதைத் தெரிந்துகொள்வது நலம்.

புத்தர் பரம்பொருளைத் தமது தருமத்திற்கு ஆதாரமாகக் கொண்டு உபதேசிக்கவில்லை. பௌத்த நூல்களில் இறை வணக்கம் கூறப்பெறவில்லை. உலகில் பல நாடுகளிலும் வசித்துவரும் பௌத்தர்களிடையிலும் இறைவணக்கம் இல்லை. இறைவனே இல்லாத ஒரு சமயமா பௌத்தம் என்றால், அப்படித்தான் அது இருக்கின்றது.

'எண்ணிலடங்காத எத்தனையோ விகாரமான தெய்வங்களை வணங்கிவந்த இந்தியாவில் பௌத்தம் அவைகளை விட்டுத் தாண்டிச் சென்றது' என்று உலக சரித்திர ஆசிரியரான அறிஞர் வெல்ஸ் குறித்துள்ளார். 'அவைகளை விட்டுத் தாண்டிச் சென்றது' -(it passed them by)'– என்ற சொற்றொடர் உண்மையையே குறிக்கின்றது. ஏனெனில் பௌத்த தருமம் அந்தத் தெய்வங்களின் உண்மையைப் பற்றியோ இன்மையைப் பற்றியோ வாதாடிக் கொண்டிருக்கவில்லை, அது தன் வழியே போய்க் கொண்டேயிருந்தது.

புத்தர் பெருமான் ஊர் ஊராகச் சென்று பிற சமயங்களைக் கண்டனம் செய்துகொண்டிருக்கவில்லை. வேதங்களும் உபநிடதங்களும் இறுதியாகக் கூறும் ஒரே தெய்வத்தைப் பற்றிய கொள்கையையும் அவர் ஏற்றுக்கொண்டு பிரசாரம் செய்யவில்லை. அதை மறுத்து வாதம் செய்யவுமில்லை.

இதற்குக் காரணம் காண்பது கடினமன்று. பெருமானுடைய குறிக்கோள் உலகின் துக்க காரணத்தைக் கண்டுபிடித்துத் துக்கத்தை நீக்க வேண்டும் என்பது. துக்கத்தின் காரணம் பேதைமையை அடிப்படையாகக் கொண்ட அவா முதலிய சார்புகள் என்று கண்ட பின்பு, அவைகளை நீக்கும் வழியை அவர் கண்டார். மெய்யறிவு பெற்று, ஒழுக்கங்களைப் பேணி, உள்ளத்தைப் பரிசுத்தமாக வைத்துக்கொண்டு, தியானம் செய்வதன் மூலம் பேதைமை முதலியவை நீங்கித் துக்கத்திலிருந்து விடுதலை பெறலாம் என்பதே அவர் கண்ட வழி. இத்தனைக்கும் இறை நம்பிக்கையோ, ஆன்ம நம்பிக்கையோ அவருக்கு அவசியமாயிருக்கவில்லை. இறை, ஆன்மா என்ற பெயர்களைக் கேட்டவுடனேயே, உலகில் தத்துவவிசாரங்கள் நடைபெற ஆரம்பமாகிவிடும். அவைகளை முடிவு செய்து, மெய்யறிவு பெறுதல் என்பது எளிதன்று. இந்தச் சிக்கலில் மக்கள் மதிமயங்கி நின்றுவிடக் கூடாது என்பதே புத்தர் பெருமானின் கருத்து.

பரம்பொருளைப் பற்றியோ, மனிதன் இறந்த பிறகு அவனுடைய ஆன்மநிலை பற்றியோ அவரிடம் எவராவது கேள்வி கேட்டால், அவர் மறுமொழி கூறாமல் மௌனமாயிருத்தல் வழக்கம். சில சமயங்களில் ஏதாவது மறுமொழி சொன்னால், அத்தகைய

கேள்விகளுக்குப் பதில் தெரிவதால் செயலுக்கு ஒருவித உதவியும் இல்லை என்றும், உணர்ச்சிகளை அடக்கவோ, அவாவை வெறுத்துத் தள்ளவோ, மனச்சாந்தி பெறவோ, அறிவைப் பெருக்கிக் கொள்ளவோ, ஞானம் பெறவோ, நிருவாண மடையவோ அது உதவியாயில்லை என்றும் கூறி விட்டு அவர் மௌனம் சாதிப்பார்.

புத்தருடைய மௌனத்தின் பொருள் என்ன ? ஒருவேளை அவரே அக்கேள்விகளுக்கு மறு மொழியை அறியாமல் இருந்திருக்கலாமா ? இல்லை, அவ்வாறு எவரும் கூறத் துணியமாட்டார். அவர் பேரறிவு பெற்ற பெரியார் என்பதிலே சந்தேகமில்லை. ஆனால் மக்களுக்கு எவை தேவையில்லையோ, அவைகளை முதலிலேயே கூறி, அவர்களை முன்னேற விடாமல் தடை செய்தும், பயமுறுத்தியும் வைக்க அவர் விரும்பவில்லை என்பதே சரியான காரண மாகும். அவர் தாம் அறிந்திருந்த எல்லா விஷயங் களையும் சீடர்களுக்கு உபதேசிக்கவில்லை; பயிற்சிக்கும் தெளிந்த சிந்தனைக்கும் உதவியான விஷயங்களை மட்டுமே அவர் கூறிவந்தார். தத்துவ விசாரங்கள், விவாதங்கள், சமயச் சண்டைகள் ஆகியவற்றை அவர் விரும்பவில்லை.

மேலும் மௌனம் என்பதும் தொன்று தொட்டே ஆன்றோர்கள் கையாண்டுவந்த ஒரு போதனை முறையாகும். உபநிடதங்களிலும், பிற நூல்களிலும் இதைக் காணலாம். பாஸ்கலின் என்பவன் தன் குருவிடம் ஆன்மா பற்றிய உண்மையைப் போதிக்கும்படி வேண்டினன். அவர் மௌனமாகிவிட்டார். சீடன் இரண்டு மூன்று முறை வற்புறுத்திக் கேட்க ஆரம்பித்தான். அப்போது

குருதேவராகிய பாத்வர், 'நான் சொல்லிக்கொண்டு தான் இருக்கிறேன், ஆனல் நீதான் புரிந்து கொள்ளவில்லை.—உபசாந்தோயம் ஆத்மா!' என்று கூறினராம்.

அதுபோல், சில சமயங்களில், சில வினக்களுக்கு மௌனமே தக்க பதிலாகும் என்பதைப் பிற்காலத்திலிருந்த நாகசேனரும் குறிப்பிட்டுள்ளார். 'மலடியின் மகன் கறுப்பா, வெண்மையா?' என்பது போன்ற வினக்களுக்குப் பதிலளிக்கக்கூடாது என்று அவர் விளக்கியிருக்கிருர். 'கந்தங்களும் ஜீவனும் ஒன்றுதான?' என்பதும் அத்தகைய கேள்வி என்பது அவர் கருத்து. பால், சர்க்கரை, தேன் போன்றவைகளின் இனிப்பிலுள்ள வேற்றுமைகளைக் கலைமகளேகூட விளக்க முடியாது; அவைகளையெல்லாம் ஒருவர் தமது அநுபவத்தின் மூலமே உணர்ந்துகொள்ள வேண்டும்.

மனித வாழ்வு மிகவும் சுருக்கமானது. அறிய வேண்டிய மார்க்கத்தை அறிந்தபின், ஐயங்கள், திரிபுகளுக்கு இடமில்லாமல், ஒருவன் பயிற்சியில் இறங்கிச் செயலாற்றிக்கொண்டேயிருக்கவேண்டும். செயலிலேயே பல ஐயங்கள் தீர்ந்துவிடவும் கூடும். அதைவிட்டு, வெறும் ஆராய்ச்சியிலும், விவாதத்திலும் இறங்குவோன், தன் ஆயுள் முழுவதும் சுருக்கு அரித்துவிட்டுக் குளிர்காய நேரமில்லாமலே போய்ச் சேருவான்.

புத்தர் காலத்தில் பலவிதமான கொள்கைகள் சமயப் போர்வைகளுடன் நாட்டில் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. ஒவ்வொரு சமயாசாரியரும் பல சீடர்களைச் சேர்த்துக்கொண்டு நாட்டில் சுற்றி வந்தனர். இவர்களுடைய சந்தடிகளின் நடுவே

புத்தர் தாம் கண்ட உண்மைகளைக் கூறி மக்களைத் தமது நேரிய வழிக்கு இழுக்கவேண்டியிருந்தது. 'வீணான விசாரங்களை விடுமின்! விடுமின்!' என்று அவர் போதிக்க வேண்டியது அவசியமாக இருந்தது.

வினைத்திட்ப மில்லாதவனைப் புத்தர் மதிப்பதில்லை. உறுதியற்றவன் ஒன்றுக்கும் உதவான். இடைவிடாத ஊக்கமும் கருத்தும் உள்ளவனே இலட்சியத்தை அடைய முடியும் என்று அவர் பலகாலும் கூறிவந்தார். அத்தகைய உபதேசம் செய்தவர், தமது மார்க்கத்திற்கு அப்பாலோ, இப்பாலோ, எங்கு எது இருந்தாலும், பொருட்படுத்தியிருக்க முடியாது. அவர் தம் உபதேசங்களைக் கூடச் சீடர்கள் அவருடைய பெருமையைக் கருதி ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும், தங்கத்தை வெட்டியும், புடமிட்டும், உரைத்தும் பார்ப்பதுபோல் சோதனை செய்தே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறிவந்தார். தவிர, அவர் தாம் நேராக அறிந்து அநுபவித்த விஷயங்களைத் தவிர வேறு எதையும் உபதேசிக்கவுமில்லை. பகுத்தறிவைக் கொண்டு பரிசீலனை செய்து பார்த்தபின்பே எதையும் ஏற்கும்படி சொல்லக்கூடியவர், காணமுடியாத, கருதமுடியாத, பிரபஞ்ச நிலைகளுக்கு மேற்போன விஷயங்களை வெறும் நம்பிக்கையைத் துணையாகக் கொண்டு ஏற்றுக்கொள்ளும்படி எப்படிச் சொல்ல முடியும்?

'சொல்லும், ஆராய்ச்சி அறிவும் ஒரு விளக்கு— அதைக் கொண்டு, சொல்லையும் ஆராய்ச்சி அறிவையும் கடந்து அப்பாற் சென்று, அநுபவ உண்மையாகிய மார்க்கத்தில் நடக்கவேண்டும்' என்று 'இலங்காவதார சூத்திரம்' கூறுகின்றது. இதன்படியேதான் புத்தர் உபதேசித்து வந்திருக்கிறார்.

புத்தருடைய உபதேசத்திற்கு முதல் ஆதாரம் தத்துவமோ, கொள்கையோ அன்று, பிரத்தியட்ச உண்மையே யாகும். துக்கம் கண்முன்பு காணப் பெறுவது. அதை அடிநிலமாக வைத்துக்கொண்டே, அதை நீக்கும் வழியை அவர் உணர்த்தினர். அநுமானமாக அவர் எதையும் கொள்ளவில்லை.

தெய்வத்தின் அருளாலோ, வேறு தேவதைகளின் ஆற்றலாலோ, மனிதன் துக்கம் தீர்ந்து நன்மையடைய முடியும் என்று நம்பிக்கொண்டிருந்தால், அவன் சொந்த முயற்சி எதுவும் செய்ய இடமிராது. இதற்கு நேர் மாருகப் புத்தர், அவன் தானே முயற்சி செய்ய வேண்டும் என்றும், தனக்குத் தானே அடைக்கலம் என்றும், அடைக்கலம் வெளியே எங்குமில்லை என்றும் உபதேசித்தார். அந்த உபதேசத்தால் அவன் தன் முயற்சியாலேயே முழு மலர்ச்சியடைவதற்கு எத்தனையோ வாய்ப்பு ஏற்படுத்தப்பெற்றது! ஞானமின்றேல், தியானமில்லை; தியானமின்றேல் ஞானமில்லை; இரண்டும் சேர்ந்தே அமைய வேண்டும் என்று அவர் கூறியதால், மனிதன் தன் மலங்களை நீக்கிக்கொண்டு விடுதலையை நெருங்கிச் செல்ல முடிந்தது. அந்த விடுதலையும், பயிற்சியாளனுடைய பரிபாகத்திற்குத் தக்கபடி, இப்பிறவியிலேயே, இங்கேயே, இப்போதே பெற முடியும் என்று அவர் காட்டியதைப் பார்க்கினும் நன்னம்பிக்கை அளிக்க வேறு என்ன செய்ய முடியும்?

முன்னோர் உரைத்த அரிய பெரிய விஷயங்களையெல்லாம் ஆராய்ந்து, புத்தர் பெருமான், தமது மார்க்கத்திற்குரிய கருத்துக்களையும், சொற்களையும், சொற்றொடர்களையும், உபதேசக் கதைகளையும்,

உபமான உபமேயங்களையும் அவற்றிலிருந்து எடுத்துக்கொண்டார். முன்னோர் கூறியவற்றில் தவருகத் தோன்றியவைகளை அவர் அப்படியே ஒதுக்கிவிட்டார்.

ஆன்மா, பரம்பொருள் பற்றிய தவருன கருத்துக்கள் ஒருபுறம் இருக்கட்டும். பிரபஞ்சத்திற்கு மூல காரணமான ஒரு சக்தியை — ஒரு நபராக — ஆண்டவனைக் கருதி வழிபடுதல் ஒருபுறம் இருக்கட்டும். துக்கமே நிறைந்துள்ள இப்பிரபஞ்ச வாழ்வுக்கு மேம்பட்ட நிலை ஒன்று உண்டா, இல்லையா? நிலையற்ற உலகுக்கு மேலாக நிலையான ஒன்று உண்டா, இல்லையா? புத்தருடைய உரைகளை ஆராய்ந்தால், இந்த வினக்களுக்கு உண்டு என்றே பதிலளிக்க வேண்டும்.

*‘ஓ பிக்குகளே! பிறப்பற்ற, ஆரம்பமற்ற, சிருஷ்டிக்கப் படாத, உருவாகாத ஒன்று இருக்கிறது. அப்படி ஒன்றில்லை யானல், பிறப்புள்ள, ஆரம்பமுள்ள, சிருஷ்டிக்கப்பட்ட, உருவுள்ள உலகிலிருந்து தப்பித்துக்கொள்ளவே முடியாமற் போகும்.’* *

*‘நிலமும் நீரும் இல்லாத, ஒளியும் இல்லாத, எல்லை யற்ற ஆகாயமும் (இடமும்) பிரக்ஞை உணர்வும் இல்லாத, வெறுமையும் இல்லாத, அறிதலும், அறிதலற்றதும் இல்லாத, இந்த உலகம் அந்த உலகம் என்றில்லாத, சூரியன் சந்திரன் இரண்டும் இல்லாத ஓர் இடம் (உலகம்) இருக்கின்றது. அதை வருதலும் போதலுமற்றது என்றும், நிற்றல், இயங்குதல், ஓய்வுறுதல், மரித்தல், பிறத்தல் ஆகிய எந்நிலையுமற்றது என்றும் நான் கூறுகிறேன். அதற்கு நிலையுமில்லை, சலனமுமில்லை ஆதரவுமில்லை. அதுவே துக்கத்தின் முடிவு.’* †

* உதானம், இதிஉத்தகம்.

† உதானம்.

புத்தரிடமிருந்து அபூர்வமாக வெளிவந்த ஒளித் துளிகள் போன்ற இத்தகைய வாக்கியங்களிலிருந்தே நாம் அவர் கருத்தை அறிந்துகொள்ள வேண்டி யிருக்கிறது.

இவை போன்ற கருத்துக்களைக் கொண்டும், தருமநியதி, பிறப்பின் தொடர்ச்சியான வேறு பிறவிகள், புண்ணியம், பாவம் ஆகியவை பற்றிய கருத்துக்களைக் கொண்டும், புத்தரை வெறும் பௌதிகவாதி அல்லது பொருளியல் வாதி (materialist) என்று கூற இயலாது. அவர் வெறும் பொருளியல் வாதியே என்றும், ஏதோ மக்களுக்கும் மன்னர்களுக்கும் விருப்பு ஏற்படுவதற்காகத் தமது கொள்கையைத் 'தருமம்' என்ற பெயரால் உயர்த்திக் கொண்டு, வேறு சில உவப்பான கொள்கைகளையும் சேர்த்துக் கொண்டார் என்றும் சிலர் கூறுவர். இத்தகைய கூற்றை ஒப்புக்கொண்டால், புத்தர் காட்டும் விடுதலையாகிய நிருவாணம் பொருளற்ற தாகிவிடும். மனித வாழ்க்கையின் முடிவு ஒருபிடி சாம்பல்தான் என்றாகிவிடும். புத்தர் அத்தகைய கொள்கையுடையவர் அல்லர் என்பது, ஆயிரக்கணக் கான ஆண்டுகளாக உலகிலே பலகோடி மக்கள் அவருடைய தருமத்தில் ஆறுதல் பெற்று உய்ந்து வந்ததிலிருந்தும், அவருடைய உபதேசங்களி லிருந்தும் தெரியவரும்.

பௌத்த தருமத்தைப் பற்றிப் பிக்கு சுபத்ரா எழுதியுள்ள கீழ்க்கண்ட வாக்கியங்கள் அதன் தனிப் பண்புகளை விளக்குவனவாக இருக்கின்றன:

'ஒரு தனி நபராக இறைவனை வருவித்துக் கொள்ளாமலே பூரணமான நன்மையும் ஞானமும் பெறும் வழியைப் பௌத்த தருமம் போதிக்கின்றது;

(இறைவனே வெளியிட்டருளியதாக) ஒரு வெளிப்பாடு இல்லாமலே மெய்ஞ்ஞானத்திற்குரிய வழியைப் போதிக்கின்றது; இயற்கையின் விதிகளின்படியும், நம் வாழ்வின் விதிகளின்படியும் உலகம் அனைத்திற்கும் பொதுவான ஓர் ஒழுக்க நெறியையும் நல்வினை தீவினைகளின் பலனை அநுபவித்தலையும் போதிக்கின்றது; "நித்தியமான ஆன்மா" என்ற தனித்த ஒன்று இல்லாமலே வாழ்வின் பின்னால் தொடர்ச்சியுண்டு என்பதையும் போதிக்கின்றது; ஒரு ஸ்தலத்தைச் சுவர்க்கம் என்று குறியாமல் நித்தியமான இன்பத்தை அடையும் நெறியைப் போதிக்கின்றது; (ஒருவருக்குப் பதிலாக) மற்றொருவர் தலையீடு இல்லாமலே விடுதலை பெறமுடியும் என்றும், ஒவ்வொருவரும் தாமே தமக்குக் கதி மோட்சம் தேடுபவராகி முக்தி பெறமுடியும் என்றும், அதையும் இப்பிறவியிலே, இந்த உலகிலேயே பெறக்கூடும் என்றும், பிரார்த்தனைகள், யக்ஞங்கள், தவங்கள், சடங்குகள், தீட்சை பெற்ற குருமார்கள், ஞானிகளின் தலையீடு, தெய்வகிருபை ஆகியவை இல்லாமலே பெறக்கூடும் என்றும் பௌத்த தருமம் போதிக்கின்றது.'*

* Buddhism teaches the way to perfect goodness and wisdom without a personal God; the highest knowledge without a "revelation"; a moral world-order and just retribution, carried out of necessity by reason of the laws of nature and of our being; continued existence without a separate "immortal soul"; eternal bliss without a local heaven; the possibility of redemption without a vicarious redeemer, a salvation in which everyone is his own saviour, and which can be obtained in this life and on this earth by the exercise of one's own faculties, without prayers, sacrifices, penances, or ceremonies, without ordained priests, without the mediation of saints and without Divine Grace.'

— '*Message of Buddhism*' — by Bhikkhu Subhadra.

பௌத்த தருமத்தின் முதல் சிறப்பு அதன் தெளிவு. எவ்வளவுக் கெவ்வளவு தெளிவாயிருக் கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது ஆழமும் உள்ளது. அதற்கு ஆதாரம் அல்லது அத்தாட்சி அதுவேதான். அதன் வாசகங்களை அறிந்தவுடன் மக்கள் மனம் அவற்றை நம்பும்படி ஏற்படுவதன் காரணம், அவர்கள் உள்ளங்களிலே மறைவாக இருக்கும் ஒழுக்க முறைமையையே அதிலும் காண் கிறார்கள் என்பதே. அதன் விதிகள் யாவும் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே அடக்கி வெற்றி கொள்வதற்காக அமைந்தவை. தம்மை அடக்கிக் கொள்ளல் எளிதன்று; ஆனால் அடக்கிக் கொள்ளா விடில், துராசைகளை நீக்கி, முடிவில் அவாவை வேரறுக்க முடியாது. தியானத்தின் முடிவில் மெய்யறிவு பூரணமாகின்றது. அந்நிலையில் விசேஷ ஆற்றல்களும் அமைகின்றன. சாதாரணப் புலன் களாலும், மனத்தாலும் அறிவதைப் பார்க்கிலும், நுணுக்கமான விசேஷப் பார்வை ஏற்படுகின்றது. அதிலிருந்து துக்கநீக்க வழியும் தெரிகின்றது.

இத்தகைய உபதேசத்திற்கு ஆதாரமாகவே புத்தர் இந்த இயலில் விளக்கியுள்ள அநித்தம், துக்கம், அநான்மம் என்ற அடிப்படைக் கொள்கை களை அமைத்துக் கொண்டார். உடலுள் அமைந் துள்ளதாகக் கூறப்படும் தனித்தனியான ஆன்மாவைக் குறித்து, அது இல்லை என்று புத்தர் கூறியதை ஒப்புக்கொள்ளுதல் எளிது. ஆனால் பொதுவாக மனிதருள் இலங்கும் ஆன்மாவும், பிரகிருதி அனைத்திலும் இலங்கும் ஆன்மாவும் ஒன்றேயென்று வேதாந்திகள் கூறுவது போன்ற கருத்தை அவர் எதிர்க்கவில்லை என்றும் சில அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

புத்தரைச் சர்சயவாதி (agnostic) என்றோ, சூனியவாதி (nihilist)என்றோ கருதுதல் அவருடைய உபதேசத்தின் முக்கியமான பகுதியை இழப்பதாகும் என்று டாக்டர் எஸ். இராதாக்ருஷ்ணன் கூறியுள்ளார். உலகின் நிலையாமையையும், துயரத்தையும் கண்டு அவைகளுக்கு மாற்றாக நிலையான இன்பமுள்ள இடம் ஒன்றை அவர் அறிந்திருந்தார் என்றும், அந்நிலையை உலக வழக்கிலுள்ள சொற்களால் எளிதாக விளக்க முடியாது என்பதால் அவர் மௌனமாயிருந்துவந்தார் என்றும் கருதவேண்டும் என்று அவர் கூறியுள்ளார். புத்தர் நாத்திகரல்லர் என்பதே அவர் முடிபு. 'உலகில் எல்லாம் மறைவனவாயிருந்தபோதிலும், மறையாது நிற்பது ஏதோ உளது. அது உலகிலே இயற்கை நியதியாகவும், ஆன்மிக நியதியாகவும் வெளித் தோன்றுகின்றது, அது மாறிக்கொண்டேயிருக்கும் பிரபஞ்சத்தின் தன்மைக்கு மேம்பட்ட நிலையாகும்' என்றும், 'தருமத்தைத் தேர்ந்து கண்டு கொள்வதே மெய்ஞ்ஞானம் பெறுதல்' என்றும், 'இந்த நுண்ணறிவு மனத்தை வெளியுலகப் பிர்த்தியட்ச நிலையிலிருந்து இழுத்துக் கொண்டு சாந்தி நிலையில் வைத்திருப்பதால் பெறப்படும்' என்றும் அவர் கூறியுள்ளார். * மேலும், உபநிடதங்கள் பிருமம் என்று அழைப்பது நிலையான உண்மைப் பொருள் (reality) என்பதைப்

* 'Though everything in this empirical universe is passing, there is something which does not pass. It expresses itself in the world as natural and spiritual law, which is the transcendental character of the empirical universe....Insight into *dharma* is enlightenment....This insight is attained by keeping the mind in a state of repose and detatchment from the outward reality.'

—'*Goutama the Buddha*' — by Dr. S. Radhakrishnan.

புத்தர் பல இடங்களில் குறிப்பாக உணர்த்தியுள்ளார் என்றும், அதையே அவர் தருமம் என்று வேறு பெயரால் குறித்தார் என்றும், உலகியல் முறையிலே நமக்கு ஒழுக்கத்தின் உயர்வைச் சிறப்பாக எடுத்துக் காட்டுவதற்காகவே அவ்வாறு செய்தார் என்றும், புத்தர் இலட்சியத்தைப் பார்க்கினும் மார்க்கத்தை அதிகமாக வற்புறுத்தி வந்தார் என்றும் அவர் விளக்கியுள்ளார்.

அமெரிக்காவில் பல்லாண்டுகள் தத்துவப் பேராசிரியராக இருந்த, கல்விமானும் கலைஞருமான காலஞ்சென்ற திரு. ஆனந்தகுமாரசாமியும் மேற்கூறிய பேராசிரியரைப் போலவே அபிப்பிராயப் பட்டிருக்கிறார்.

*'ஒருவன் தனக்குத்தானே தலைவன், தனக்குந்தானே புகலிடம். ஆதலால் வணிகன் உயர்ந்த குதிரையை அடக்கிப் பழகுவதுபோல உன்னை நீயே அடக்கிப் பழகவும்.'* (*தம்மபதம்*, 380)

என்ற வாக்கியத்தில் 'தனக்குத்தானே தலைவன்' என்பதில் முதலாவது 'தான்' 'நான்' என்ற ஆணவத்தைக் குறிக்கும் என்றும், இரண்டாவது 'தான்' மேலான நித்தியமான ஆன்மாவைக் குறிக்கும் என்றும், இவ்வாறே இது போன்ற பிற இடங்களிலும் பொருள் கொள்வதே பொருத்தமாயிருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். ஒவ்வோர் உடலுக்குள்ளேயும் ஒரு நித்தியமான ஆன்மா தங்கியிருப்பதாகக் கருதும் கொள்கையையே புத்தர் மறுத்தார் என்றும், என்றும் நிலையாயுள்ள ஒன்றை அவர் மறுக்கவில்லை என்றும் அவர் கருதுவர். பரம்பொருள், ஆன்மா, நித்தியத்துவம் ஆகிய மூன்றில், புத்தர்

எதையுமே மறுக்கவில்லை என்று அவர் குறித்துள்ளார்.*

டாக்டர் ஹரிசிங் கோர் தமது 'பௌத்தத்தின் உட்பொருள்' என்ற நூலில் குறிப்பிடுவதாவது:

'அவருடைய (புத்தருடைய) சித்தாந்தத்தில் ஆன்மா உண்மை ஒரு முக்கியமான அமிசமாகும். ஏனெனில் அவர் தமது மறுபிறப்புக் கொள்கைக்கு அதையே ஆதாரமாய்க் கொண்டார்.........

'பொருள் அனைத்திலும் நிறைந்துள்ள பிரபஞ்ச சக்தி இருப்பதைப் புத்தர் நிச்சயமாக அங்கீகரித்துள்ளார். அந்தச் சக்தி, தன் இயக்கங்கள் யாவிலும், பிரபஞ்சம் அனைத்திற்கும் பொதுவான நித்தியமான, தவிர்க்க முடியாத நியதியால் ஆட்சி செய்யப் பெறுவது.'†

புத்தர் தருமவாதி — சத்தியவாதி — ஆதலால் அவர் எவரையும் எதையும் ஏற்றுக்கொள்ளும்படி சொல்லவில்லை. தாம் தம் வாழ்க்கையில் அறிந்து அநுபவித்ததை மக்களுக்குக் கூறி, அவரவரை வந்து

---

* 'In short, it is quite certain that the Buddha neither denied a God, denied a Soul, (nor) denied Eternity.'

—'*Gotama the Buddha*'—by Ananda K. Coomaraswamy.

† 'Indeed, the existence of Soul was an integral part of his (Buddha's) system, for upon it he based his theory of reincarnation ..........

'Buddha had certainly granted the existence of Universal Energy which permeated all matter and was in all its movements controlled by an eternal universal inexorable law.'

—'*Spirit of Buddhism*'—by Dr. H. S. Gour.

பார்த்து உண்மையை உணர்ந்துகொள்ளவே அவர் அழைத்தார். மன, மொழி, மெய்களுக்கு எட்டாத விஷயங்களை, அவைகளைத் தவிர வேறு துணையில்லாத மக்களிடம் கூறினால், ஒன்று இருக்கிற அறிவும் குழம்பும், அல்லது ஆராய்ச்சி யில்லாமல் எதையும் நம்பக்கூடிய இயல்பு பிறக்கும். பிறகு அவரவர் மனம் போன போக்கில் கற்பனைகளே மிகுந்துவிடும். உளதாய், இலதாய், உளதும் இலதுமாய், உளதன்றுமாய், இலதன்றுமாய் என்று வருணிக்கப்படும் நான்கு நிலைகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தியைப்பற்றி மானிடஅறிவால் யார்,எவ்வளவு, தெரிந்து கொள்ள முடியும்? 'உயர்ந்தோருக்குத் தலைசிறந்த அல்லது பிரபஞ்ச நிலைக்கு மேலான உண்மை மௌனமே' * என்று சந்திர கீர்த்தி என்ற உரையாசிரியர் கூறியுள்ளார். பரத்தைப் பற்றி உண்மை ஞானிகள் எதுவும் கூறமாட்டார்கள், மௌனமாகவே இருப்பார்கள்.

புத்தரும் அவ்வாறே மௌனமா யிருந்து வந்தார். ஆனால் நாற்பத்தைந்து ஆண்டுகள் அவர் அவ்வாறு மௌனமாயிருந்த போதிலும், அவருக்குப் பின்னால் வெகு விரைவிலேயே பல வகைப்பட்ட தத்துவங்கள் பெருக ஆரம்பித்து விட்டன. அதனால் பௌத்த தருமமும் சில பிரிவுகளாகப் பிரிய நேர்ந்தது.

புத்தர் தத்துவங்களை விட்டுப் பிரத்தியட்ச நிலைமைகளைப் பார்த்து உண்மையை உணரச் சொல்லிவந்ததாலேயே ஒழுக்கம் நிறைந்த ஒரு

* 'மூலமத்தியமக — காரிகை'யின் உரை — சந்திர கீர்த்தி.

மார்க்கத்தில் பயமின்றிச் சென்றுகொண்டிருக்க வழி காட்டினார். வெறும் நம்பிக்கையை மேற்கொண்டு, காரியத்தைக் கைவிடலாகாது என்பதை வற்புறுத்தினார். ஒன்றைக் கொடுத்து மற்றொன்றை வாங்குவது போல், பிரார்த்தனைகள் செய்து பயன்களைப் பெறலாம் என்ற நம்பிக்கையை அவர் வளர்க்கவில்லை. ஒவ்வொருவரும் தியானத்தின் மூலம் தம்மையே பண்படுத்திக்கொள்ள முடியும் என்பதை அவர் நிரூபித்துக் காட்டினார். எல்லையற்ற பரம்பொருள் என்று வருணிக்கப் புகாமல், மக்கள் ஓரளவு புரிந்துகொள்ளத் தக்க முறையில், துக்க நிவாரணம் என்பது நிருவாண நிலை என்று கூறி, அதை அவர் ஓரளவு விளக்கிக் காட்டினார்.

பிரபஞ்சத்தில் நாம் காண்பவை யாவும் நிலையற்றும், உண்மையற்றும் இருக்குமானால், இவற்றிற்கு எதிரான நிலை ஒன்று இருக்க வேண்டும், பிரபஞ்சம் அதன் நிழலைப் போலவே இருக்கலாம். அது நிலையுள்ளதாயும், சாந்தியுள்ளதாயும், இன்பமுள்ளதாயும் இருக்கவேண்டும். இல்லாவிடில் இந்தப் பிரபஞ்சத்திற்கு அது மாறாக அமையாது. அதுவே நிருவாணம். அநித்தம், துக்கம், அநான்மா, அசுசி ஆகியவற்றிற்கு மாறாக அது அமைந்துள்ளது. ஆனால் புத்தர் பெருமான் அதன் உண்மைகளைப் பற்றியும் விரிவாக விளக்கிக் கூற மறுத்துவிட்டார். மகா சமுத்திரம் உப்புச் சுவை என்ற ஒரே சுவையைப் பெற்றிருப்பதுபோல் தமது தருமமும் விடுதலைச் சுவை என்ற ஒன்றையே பெற்றிருப்பதாக அவர் கூறினார்.

### கரும நியதி

கரும நியதியும் பௌத்த தருமத்தில் முக்கிய மான ஓர் அங்கமாகும். கருமம் என்பது சாதாரண மாகச் செயல் என்று பொருள்படும். இங்கே கருமம் என்பது செயலின் பயனைக் குறிக்கும்.

செயல் என்பது மனம், மொழி, மெய் ஆகிய மூன்றின் தொழிலையும் உணர்த்தும். மனத்தால் நினைப்பதும், மொழியால் உரைப்பதும், மெய்யால் வேலை செய்வதும் செயலாகும். மனத்தின் சிந்தனையே மற்ற இரண்டுக்கும் காரணமாகின்றது. ஒரு சிந்தனை, மொழியாகவோ, உடலின் செய லாகவோ, உருவாகாமலிருந்தாலும், அதுவும் செயலே யாகும்.

### வினைப் பயன்கள்

நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளுக்கும் பயனுண்டு; நல்வினைக்கு நல்ல பயனும், தீவினைக்குத் தீய பயனும் ஏற்படும். வினைப் பயனை ஒவ்வொரு வரும் அநுபவித்தே யாகவேண்டும். ஒருவனுடைய நிழல் அவனைத் தொடர்வது போலவும், மாட்டைத் தொடர்ந்து வண்டிச் சக்கரம் செல்வது போலவும், வினைப்பயன் மனிதனைத் தொடர்ந்து சென்று கொண்டே யிருக்கும். சாதாரணமாக உலக வாழ்வில் நாம் செய்யும் செயல் ஒவ்வொன்றின் பயனையும் உடனுக்குடன் பார்க்கிறோம். அதிகமாக உணவு உண்டால், அஜீரணம் ஏற்படுகின்றது; நோய் ஏற்படுகையில் உபவாசமிருந்தால், அது விரைவில் குணமாகின்றது. இத்தகைய பயன்களைப்போலப் பின்னால் அநுபவிக்க வேண்டிய வினைப் பயன்களும் உண்டு.

மனிதன் மரிக்கும்போது அவன் உடல்தான் அழிகின்றதேயன்றி, உலகிலே அவன் செய்த செயல்கள் அவனோடு அழிந்து விடுவதில்லை. அவனுடைய செயல்களால் ஏற்பட்ட பயன்கள் மக்களிடையே நெடுங்காலம் நிலைத்து நின்று, மக்களின் வாழ்க்கையோடு கலந்துவிடுகின்றன. ஒருவன் கட்டிய கட்டிடங்கள், ஒருவன் போதித்த போதனைகள், ஒருவன் செய்த உதவிகள், ஒருவன் சமூகத்திற்குச் செய்த தீங்குகள், ஒருவன் சிந்தித்த சிந்தனைகள் ஆகியவை அவைகளின் கருத்தாக்கள் மறைந்த பிறகும் நின்று சமூகத்திற்கு நன்மையோ தின்மையோ செய்து வருவதை நாம் காண்கிறோம்.

'மனிதன் தன் பாவ கருமத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது; தப்பித்துக் கொள்ளும் இடம் பரந்த வானத்திலும் இல்லை, ஆழ்ந்த கடலிலும் இல்லை, மலையின் குகைகளிலும் இல்லை'* என்று புத்தர் கூறியுள்ளார். இது போலவே நற்கருமத்தின் பயனும் மனிதனைவிட்டு நீங்குவதில்லை. ஆகவே கரும விதி – வினைப்பயன் – என்பது வெளியிலிருந்து யாரோ விதிப்பதன்று, ஒவ்வொருவனும் தன் கரும விதியைத் தானே நிர்ணயித்துக்கொள்கிறான். முந்திய பிறவியில் செய்த கருமத்தின் பயனை இந்தப் பிறப்பில் அநுபவிக்கிறான்; இந்தப் பிறப்பில் செய்த கருமத்தின் பயனை அடுத்த பிறவியில் அநுபவிக்கிறான்.

கருமவிதி மாற்ற முடியாத தலைவிதி அன்று. அது இரண்டு பகுதியாக உள்ளது; ஒன்று முற்பிறப்பின் வினைப்பயனை இப்போது அநுபவித்தல், மற்றது

* 'தம்ம பதம்'

இப்பிறப்பின் வினைப்பயனை அடுத்த பிறவியில் அநுபவித்தல். முற்பிறப்பிலிருந்து வந்ததை மாற்ற முடியாது; இப்பிறப்பில் எச்சரிக்கையாயிருந்து, தீய வினைகளை விலக்கி, நல்வினைகளைப் பெருக்கி, அடுத்த பிறவிக்கு வேண்டிய நற்பயன்களைப் பெறக்கூடிய சுதந்திரம் மனிதனுக்கு இருக்கத்தான் செய்கின்றது. மேலும் கரும நியதி வாழ்வின் எல்லா அமிசங்களையும் பாதித்து நிற்பதுமில்லை. அதன் பயனை ஏற்றுக்கொண்டே தீரவேண்டும் என்பதுதான் விதி. ஆகையினால், 'எல்லாம் தலை விதி!' என்று சொல்லிக்கொண்டு, மனிதன் செயலற்றுக் கிடப்பது அறிவீனமேயாகும் அவன் தானாகப் படைத்துக் கொள்வதே கருமத்தின் பயன்.

மேலும் முற்பிறப்பின் கருமப் பயனை முழுதும் மாற்ற முடியாது என்பதில்லை. இப்பிறப்பில், மிக உன்னதமான முறையில், கருத்தோடு வாழ்க்கையை நடத்தி, நன்னெறியிலே நின்றால், இந்த வினைப் பயனைக் கொண்டு முந்தியதையும் ஓரளவு மாற்றிக் கொள்ள முடியும்.

உலகிலுள்ள ஏற்றத் தாழ்வுகளுக்கு மக்களுடைய கருமப்பயனே காரணம். ஆனால் எதிர் காலத்தில் நன்மை பெறக்கூடிய கருமப் பயனை அவர்கள் இப்போது தேடிவைத்துக் கொள்ள உரிமை பெற்றிருக்கிறார்கள். நல்வினைகளின் பயனை அடையாமல் தடுக்கும் சக்தியும் உலகிலில்லை; தீவினைகளின் பயனை மன்னித்துவிடவேண்டும் என்று

மன்றாடினாலும், மன்னித்து ஒதுக்கிவிடக் கூடிய அதிகாரியும் இல்லை.*

கரும விதி மனித முயற்சிக்குத் தடையாக நிற்கவில்லை. ஆனால் மனிதன் தன் வினையின் பயனை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். இவை இரண்டும் முரண்பட்ட விஷயங்கள் அல்ல, இரண்டும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாக விளங்குகின்றன.

முற்பிறப்புக்களின் வினைப் பயனால் ஒருவன் இந்தப் பிறவியில் செல்வ நிலையிலோ, தரித்திரத் திலோ பிறக்கிறான், அறிவாளியாகவோ, அறிவிலி யாகவோ விளங்குகிறான். ஆனால் இந்தப் பிறப்பில் நல்ல சூழ்நிலை அமைந்து, அவனும் நல்வினைகளை இடைவிடாமற் செய்துவந்தால், முந்திய கருமப் பயனுக்கும் மேலே பறந்து நற்பயனைப் பெற முடியும். ஆகவே வள்ளுவர் கூறியுள்ள ஊழுக்கும் பௌத்த தருமத்தின் கருமப் பயனுக்கும் இந்த வேற்றுமையுளது. 'ஊழைப் பார்க்கினும் வல்லமை யுள்ளவை வேறு எவை இருக்கின்றன? அந்த ஊழை ஒழித்துவிட முயன்றால், அங்கேயும் அவ்

* 'Buddhism is fatalistic in the sense that the present is always determined by the past,but the future remains free. Every action we make depends on what we have come to be at any time,depends on the direction of the will. The karmic law merely asserts that this direction cannot be altered suddenly by the forgiveness of sins,but must be changed by our own efforts.'

—'*Buddha and the Gospel of Buddhism*'

by Dr. Ananda Coomaraswamy.

ஊழே முன்வந்து நிற்கும்' என்ற பொருளில் வள்ளுவர் கூறியுள்ள குறள் வருமாறு:

*ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று*
*சூழினும் தான் முந் துறும்.'*

'சோர்வே யில்லாமல் இடையறாத முயற்சி யுடையவர் தம்மைத் தடுத்து நிற்கும் ஊழையும் வெற்றி கொள்வர்' என்ற கருத்தில் வள்ளுவர் கூறியுள்ள குறள் இந்தக் கருமப் பயனை ஒட்டி நிற்பது:

*' ஊழையும் உப்பக்கம்* காண்பர் உலைவின்றித்*
*தாழாது உஞற்று பவர்.'*

வாழ்வில் ஒரு பகுதியிலேதான் பழைய ஊழின் ஆதிக்கியமுள்ளது; மறு பகுதியில் புதிய ஊழ் நம்மாலேயே உண்டாக்கப்படுகின்றது.

கரும நியதியைப் பற்றிப் புத்தகோஷர் தமது 'விசுத்தி மார்க்கம்' என்ற நூலில் தெளிவாக விளக்கியுள்ளார். அவர் கூறுவதாவது:

*' கருமப் பயனைக் காரணமாகக் கொண்டு முந்திய பிறப்பிலே கந்தங்களின் தொகுதி ஒன்றுசேர்ந்து வாழ்க்கை ஏற்பட்டது; அந்தக்கந்தங்கள் அந்தப் பிறப்பிலேயே அழிந்து போய்விட்டன. முந்திய பிறப்பின் கருமம் காரணமாக இந்தப் பிறப்பில் வேறு கந்தங்களின் தொகுதி சேர்ந்து வாழ்க்கை ஏற்பட்டுளது. முந்திய பிறப்பிலிருந்த மூல*

* உப்பக்கம்—முதுகு; மற்போரில் மல்லரை முதுகு மண்ணில் தோயும்படி வீழ்த்தி வெற்றி கொள்ளலைக் குறிக்கும்.

தாதுக்களில் எதுவும் இந்தப் பிறப்பில் சேரவில்லை (இந்தப் பிறப்பில் புலன்கள், பொறிகள். உடல் ஆகியவற்றின் அமைப்புக்கு அவை காரணமாக மட்டும் இருந்தன). முந்திய கருமம், இந்தப் பிறப்பில் சேர்ந்துள்ள கந்தங்கள் யாவும் இதிலேயே அழிந்துபோகக் கூடியவை; அடுத்த பிறப்பில் வேறு கந்தங்கள் சேர்ந்து கொள்ளும்; ஆனால் இப்பிறப்பிலுள்ள சேர்க்கைகளில் எதுவும் அடுத்த பிறப்புக்குப் போவதில்லை. ஒரு குரு தமது சீடனுக்கு உபதேசம் செய்கிறார் என்றால், அவர் அவனுடைய வாய்க்குள் போய் அமர்ந்து கொள்வதில்லை; ஆயினும் சீடன் அவர் போதித்தவைகளைத் தன் வாயால் திரும்பச் சொல்கிறான். ஒருவனுடைய முகத்தின் அமைப்புக்கள் யாவும் கண்ணாடியில் தெரிகின்றன. ஆயினும் அந்த அமைப்புக்கள் தாமே கண்ணாடிக்குள் போய் அமைந்திருக்கவில்லை; எனினும் முகத்தின் அமைப்புக்கள் காரணமாகவே பிரதிபிம்பத்தின் தோற்றங்களும் அமைகின்றன. ஒரு விளக்கின் திரியிலுள்ள சுடரிலிருந்து மற்றொரு விளக்கைப் பொருத்தும் பொழுது, முதல் விளக்கின் சுடரே அடுத்த விளக்குக்குப் போவதில்லை; ஆயினும் அதுவே பிந்திய சுடர் எரிவதற்குக் காரணமாயிருக்கின்றது. இவைகளைப் போலவே முந்திய பிறப்பிலிருந்த கந்தத் தொகுதிகளில் எதுவும் இந்தப் பிறப்பில் வருவதில்லை, இதற்குப் பின் வரும் பிறப்பிலும் இப்போதுள்ள கந்தத் தொகுதிகள் செல்லப் போவதில்லை. ஆயினும் முந்திய பிறப்பிலிருந்த கந்தத் தொகுதிகள், பொறிகள், புலன்கள், புலன்களின் உணர்வு, பிரக்ஞை ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டே அடுத்த பிறப்புக்குரிய கந்தத் தொகுதிகள், பொறிகள், புலன்கள், புலன்களின் உணர்வு, பிரக்ஞை ஆகியவைகள் தோன்றும்.'

**வினைப் பயன்கள் எப்படி மனிதனைப் பாதிக்கின்றன என்பதை இவ்வாக்கியங்கள் சுருங்கச்**

சொல்லி விளங்கவைக்கின்றன. ஒரு மனிதனுடைய வினைப் பயன்கள், அடுத்த பிறப்பில் எப்படி வந்து சேருகின்றன என்பதை இவைகள் கூறுகின்றன. இவைகளைப் பார்க்கும் பொழுது முந்திய மனிதன் தானா அடுத்த பிறப்பில் தோன்றுகிறான் என்று சந்தேகம் ஏற்படும். இதற்கு 'ஆம், இல்லை' என்ற இரண்டு பதில்களும் பொருந்தும். அடுத்த பிறப்பில் தோன்றுபவன் முந்திய மனிதன் அல்லன்; ஆயினும் அவன் வேறொருவனும் அல்லன். அதாவது முந்திய மனிதனைக் காரணமாகக் கொண்டு, அவனுடைய கரும வினைகளின் பயனாக எழுந்தவனே பிந்தியவன். முந்தியவன் இல்லா திருந்தால், இவனும் தோன்றியிருக்க மாட்டான்.

ஆசிரியன் சீடனுக்குப் போதித்தல், கண்ணாடியின் பிரதிபிம்பத்தைப் பார்த்தல், தீபச் சுடரிலிருந்து வேறு சுடரை ஏற்றுதல் ஆகியவைகளை நாம் நேரே பார்த்து உண்மையை உணர்ந்து கொள்ள முடிகின்றது. ஆனால் கரும வினையின் பயன்கள் ஒரு பிறப்பிலிருந்து மறு பிறப்புக்கு எப்படி வந்து சேருகின்றன என்பது பற்றி முழுதும் விளக்கமாகத் தெரியவில்லை என்று சில பௌத்தர்களே கருதுகின்றனர் என்றும், அந்த முறையில் விளக்கப் பெறாத மறைவான விஷயம் ஏதோ இருப்பதாக அவர்கள் எண்ணுகின்றனர் என்றும் பேராசிரியர் இலட்சுமி நரசு குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த தருமம் கூறும் கரும நியதி வையகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகள், குண வேற்றுமைகள், (புலி மானைத் தின்பது போன்ற) கொடுமைகள், பிறப்பிலேயே பிணிகளுடன் தோன்றல் முதலியவைகளுக்கு விளக்கம் கண்டுபிடிக்க ஆதாரமாயுள்ளது.

உலகில் எதுவும் காரணமில்லாமல் தோன்றுவதில்லை. உயிர்களின் நிலைமைக்குக் காரணமாக விளங்குவது கரும நியதி. இதைக் குற்றத்திற்குரிய தண்டனையாகவோ, நற் செயலுக்குரிய பரிசாகவோ கருதுவதற்கில்லை. அவனவன் செயலின் பயனே கரும விதியாகச் சேர்ந்து விடுகின்றது. இதுவே அடுத்த பிறப்பின் செயலுக்கு மூலகாரணமாகின்றது. மனிதன் கரும விதிக்கு உட்பட்டவன்தான்; ஆனால் அவனே அக்கருமத்தின் கருத்தாவாகவும் விளங்குகிறான். அவன் தான் செய்த நன்மை தீமைகளுக்கு ஏற்றபடியே இன்ப துன்பங்களை அநுபவிக்க நேருகின்றது.

கரும விதி ஐந்து நியாமங்களாகப் பௌத்த தருமத்தில் பிரித்து விளக்கப்பட்டிருக்கின்றது. அவை *கரும நியாமம், உது நியாமம், பீஜ நியாமம், சித்த நியாமம், தரும நியாமம்* என்பவை.

செய்கைக்கு ஏற்ற பயன் விளைவதைக் கரும நியாமம் என்றும், ஜடப் பொருள்களின் நியமங்களை விளக்குவது உது நியாமம் என்றும், வித்திலிருந்து செடி முளைப்பது போன்ற நியமத்தைப் பீஜ நியாமம் என்றும், மன உணர்ச்சிகள் சம்பந்தமான ஒழுங்கினைச் சித்த நியாமம் என்றும், புத்தர் பெருமானின் வாழ்க்கையில் நேர்ந்த பூமியதிர்ச்சி போன்ற அற்புதங்களை விளக்குவது தரும நியாமம் என்றும் கூறப்படுகின்றன.

வினைப்பயன் — கருமத்தின் விளைவு — விட்டு நீங்காது என்பதை நன்குணர்ந்தவர்கள், இந்த வாழ்விலேயே உள்ளத்தைச் செம்மையாக வைத்துக்கொண்டு, நற்கருமங்களையே செய்து

வருவார்கள். தானம், சீலம், பாவனை என்று வகுக்கப்பெற்ற ஈகை, ஒழுக்கம், தியானங்களால் அவர்கள் புண்ணியங்களைக் கருவூலமாகச் சேர்த்து வைத்துக் கொள்வார்கள். ஈகையால் பெறக்கூடிய முதல் இன்பத்தை வள்ளுவர் 'ஈத்து உவக்கும் இன்பம்' என்று கூறுகிறார். ஒழுக்கம் என்ற சீலங்களைப் பற்றிப் பௌத்த தருமத்திற்கு மேலாக வேறு எந்த மார்க்கமும் உபதேசித்ததில்லை; பௌத்தமே சீல மார்க்கம் எனலாம். பாவனைகள் மைத்திரீ பாவனை, கருணை பாவனை, முதித பாவனை, அசுப பாவனை, உபேட்சா பாவனை என முக்கியமாக ஐந்து வகைப்படும். இவை முறையே அன்பை யும், தயையையும், ஆனந்தத்தையும், உடலின் அசுத்தத்தையும், சமதிருஷ்டியோடு விருப்பு வெறுப் பற்று இருத்தலையும் குறிக்கின்றன.

நான்காம் இயல்

# நிருவாணம்

'அருள் நெறியால் பாரமிதை
ஆறைந்தும் உடனடக்கிப்
பொருள்முழுதும் போதியின்கீழ்
முழுதுணர்ந்த முனிவரன்தன்
அருள்மொழியால் நல்வாய்மை
அறிந்தவரே பிறப்பறுப்பார்,
மருள்நெறியாம் பிறநூலும்
மயக்கறுக்கு மாறுளதோ!'

—சித்தாந்தத் தொகை

நிருவாணம் என்ற சொல் இயக்கமின்மை, அவிதல், அணைதல் என்ற பொருள்களுள்ளது. வாழ்க்கை காற்றைப்போல் சலனமுள்ளதாக இயங்கிக் கொண்டே யிருப்பது. நிருவாணம் சலனமற்ற, கிளர்ச்சியற்ற, குழப்பமற்ற சாந்திநிலை. அணைதல், அவிதல் என்ற பொருள்களில், அது காமம் முதலிய விகாரங்கள் அழிதலைக் குறிக்கும். பௌத்த தருமத்தின்படி நிருவாணமே வீடு பேருகும்.

உபநிடதங்களிலும், கீதையிலும் முக்தி என்ற பொருளிலே நிருவாணம் என்று கூறப்பெற்றுள்ளது. விகார உணர்ச்சிகளிலிருந்து விடுதலை பெறுவதுடன், பரம்பொருளோடு ஐக்கியமாவதையும் அச்சொல் குறிக்கும்.

விளக்கிலே எண்ணெய் உள்ளவரை தீபம் எரியும்; எண்ணெய் தீர்ந்தவுடன் சுடரும் அவிந்து விடுகின்றது. விறகு இருக்கும்வரை தீ எரியும்;

விறகு தீர்ந்தவுடன் தீயும் அணைந்துவிடுகின்றது. ஆசைகளற்று, மனச்சாந்தி பெற்ற நிருவாண நிலைக்கு இவைகளை உபமானமாகக் கூறுவதுண்டு. எண்ணெய், விறகு என்பவை கருமத் தொகுதி. ஒருவன், பின்னும் அநுபவிக்கவேண்டிய கருமப் பயன் எஞ்சியிராமல் முடித்துக் கொண்டால், அவன் நிருவாண நிலையை அடைவான். அத்துடன் அவனுக்குச் சம்சார பந்தம் அற்றுப்போகிறது, மேற்கொண்டு அவனுக்குப் பிறப்பில்லை. எனவே நிருவாணம் என்பது பிறவிப் பெருங் கடலைத் தாண்டிச் செல்வோர் அடையும் மறுகரையேயாகும்.

சுவர்க்கமும் நரகமும் எங்கோ இருப்பதாகவும், ஒவ்வொருவரும் இறந்த பிறகு அவற்றில் ஒன்றை அடைவர் என்றும் கூறாமல், இந்தப் பிறவியிலேயே, இங்கேயே நிருவாணம் அடைய முடியும் என்று பௌத்த தருமம் கூறுகின்றது. நிருவாணம் உபநிடதங்கள் முதலிய இந்து சமய சாத்திரங்கள் கூறும் முக்தி, அல்லது மோட்சம் போன்றது. நிருவாணத்தைப் புத்தர் பெருமான் 'பிருமப்ராப்தி' என்றும் 'பிருமபூதம்' என்றும் சொல்வதுண்டு. ஆசாபாசங்கள் யாவும் அகன்று, 'நான்' என்ற ஆணவம் அறவே அழிந்து, மன விகாரங்கள் அனைத்தும் ஒடுங்கி, சகல உயிர்களிடத்தும் கருணை பெருகி, அவற்றிற்கு அப்பால் பாவ புண்ணியங்கள் பற்றிய கருத்தும் அவிந்து, சித்தத்தில் தன் சிந்தனையே யில்லாத சாந்தி நிலையே நிருவாணம் எனலாம்.

உடலோடு இருக்கும் பொழுதே இந்த நிலையை அடைபவர்கள், பின்னும் உயிர் வாழ்ந்திருத்தல் கூடும். அதற்குக் காரணம் முந்திய வினைப் பயனில்



பூமி ஸ்பரிச முத்திரையுடன்
புத்தர் சிலை



நாலந்தாவிலிருந்த புத்தர்
வெண்கலச் சிலை

எஞ்சியுள்ள பகுதியே. அந்தக் குறையையும் உலகிலே அநுபவித்து முடிப்பதற்காகப் பின்னும் வாழ்ந்திருக்க நேரலாம். அப்படி வாழ்தல், குயவன் திகிரியைச் சுற்றுவதை நிறுத்திய பிறகும் திகிரி சிறிது நேரம் முந்திய வேகத்தால் சுற்றிக் கொண்டிருப்பதைப் போன்றது. ஆனால் நிருவாணப் பேறு பெற்றவர்களுக்குப் பின்னால் பிறவியில்லை. அவர்களுக்கும் இந்தப் பிரபஞ்சத்திற்கும் உரிய தொடர்பு அறவே அறுந்து போகும். பிரபஞ்சத்தின் நியதிகள் எதுவும் அவர்களைக் கட்டுப்படுத்துவதில்லை.

### விளக்கமுடியாத நிலை

நிருவாணத்தைப்பற்றி விவரமாக விவரித்துக் கூறப் புத்தர்பிரான் மறுத்துவிட்டார் அவருடைய மெய்யடியார்களும், அது வருணனைக்கு அடங்காத பெரும் பதம் என்பதாலும், வார்த்தைகளில் அதை வடித்துக்கொடுக்க முடியாது என்பதாலும், அதைப் பற்றிய கேள்விகளுக்கு நேரடியான மறுமொழி சொல்வதில்லை. ஒரு சமயம் தம்மதின்னா என்ற பிக்குணியிடம் விசாகன் என்பவன் நிருவாணம் என்பது என்ன என்று கேட்டான். அவள், '(உத்தம வாழ்க்கை)–தருமத்தைக் கைக்கொண்ட வாழ்க்கை– என்பது நிருவாணத்தில் தோய்ந்தது, அதன் குறிக்கோள் நிருவாணம், முடிவும் நிருவாணமே!' என்றாள். விசாகன் பின்னால் புத்தரிடம் சென்று கேட்டான். அவர் தம்மிடம் முதலில் கேட்டிருந்தாலும், தம்மதின்னா கூறிய பதிலையே தாமும் கூற நேர்ந்திருக்கும் என்று சொல்லிவிட்டார். புத்தர்பெருமான் பெற்ற மெய்ஞ்ஞானத்தைப் பற்றி விளக்கிக் கூற இயலாதென்றும், அது அட்சரங்கள், சொற்களுக்கு அடங்காதென்றும் பௌத்த நூல்கள் கூறுகின்றன.

அதுபோலவே தருமமும்; தருமம் முழுவதையும் விளக்கிக் கூறிவிட முடியாது, அது சொற்கடந்தது. அதை ஒவ்வொருவரும் அநுபவத்திலேயே தெரிந்து கொள்ள வேண்டும். இதைப் போன்றதுதான் நிருவாணமும்.

மன்னர் பிரசேனஜித் ததாகதர் பெற்ற நிருவாணத்தைப்பற்றி விளக்கும்படி கோரியதற்கு, க்ஷேமை என்ற பிக்குணி, 'ததாகதர் அதை விளக்க வில்லை!' என்றே பதில் கூறியதாக சம்யுத்தநிகாயத் தில் குறிக்கப் பெற்றுள்ளது. ததாகதர் ஏன் விளக்க வில்லை என்று கேட்டதற்கு, க்ஷேமை மறுமொழியாக இரண்டு வினாக்கள் கேட்டாள். கங்கைக் கரையி லுள்ள மணல்கள் எத்தனை? கடலிலுள்ள நீர் எத்தனை படி இருக்கும்? இந்த இரண்டு விஷயங் களையும் அளந்து கணக்கிட்டுரைக்க மன்னரிடம் கணக்கர் இருக்கிறாரா என்று க்ஷேமை கேட்டாள். 'பகவதி, இல்லை!' என்றார் மன்னர். 'ஏன் இல்லை?' என்ற கேள்விக்குப் பிரசேனஜித், 'பகவதி, சமுத்திரம் ஆழமானது, அளக்க முடியாதது, கண்டறிய முடியாத ஆழமுள்ளது!' என்று பதி லுரைத்தார். க்ஷேமை அந்தப் பதிலையே ஆதார மாய்க் கொண்டு, '(மானிட வாழ்க்கைக்கு ஆதார மாகக்) குறிப்பிடப்பெறும் சடலம் என்றதிலிருந்து விடுபட்ட ததாகதர் கடலைப்போல் ஆழமுடையவ ராயும், அளக்க முடியாதவராயும், கண்டறியமுடியாத ஆழமுள்ளவராயும் இருக்கிறார்!' என்று கூறினாள். உண்மையிலேயே நிருவாணத்தின் தன்மையைப் பற்றி, அதை அடையப் பெறாத புண் நாறும் உடலும், அளவினுள் அடங்கிய சிற்றறிவும் கொண்டவர்கள் எவ்வாறு விளக்கிக் கூற முடியும்? புத்தபகவர் தமது

முப்பத்தைந்தாவது வயதிலேயே அதை அடைந்திருப்பினும், ஒவ்வொருவரும் தாமாக அநுபவித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அதை முழுதும் விளக்காமல் விட்டுவிட்டார். அது அத்தகைய ஆழமுள்ளதுதான்.

### நிருவாணம் சூனிய நிலையா?

நிருவாணமடைதலுக்கு உபமானமாக எண்ணெய் விளக்கையும், விறகு தீர்ந்துபோன தீயையும் மேலே குறிப்பிட்டிருப்பதை ஓரளவுதான் உபமானமாகக் கருதலாம். ஏனென்றால், மேற்கூறிய இரண்டிலும், எண்ணெயும் விறகும் தீர்ந்தபிறகு, சுடரும் தீயும் அணைந்துபோய், எதுவும் மிஞ்சுவதில்லை. இவைகளைப் போலவே, நிருவாணம் என்பது சூனிய நிலை என்றும், மரணத்தோடு மனிதன் கதை முடிந்ததுதான் என்றும் சிலர் கூறிவந்தனர். எது நிருவாணம் என்பது பற்றியும் முன்னால் பல வாதங்களும் நடைபெற்றன. ஆனால், இக்காலத்தில், பாலி மொழியிலுள்ள பல நூல்கள் பிறமொழிகளிலும் வெளிவந்திருப்பதால், ஓரளவு அதைப்பற்றி நாம் தெளிவாக அறிந்துகொள்ள முடிகின்றது. எது எவ்வாறிருப்பினும், நிருவாணம் வெறும் சூனிய நிலை அன்று என்பதும், ஓயாமல் கணந்தோறும் சம்பவங்களின் பிரவாகமாக மாறிக்கொண்டேயிருக்கும் உலகத்திற்கு அது நேர்மாறான நிலையான சாந்தி நிலையம் என்பதும் தெளிவாகியுள்ளது.

நிருவாணம் செயலும், சிந்தனைகளும் அறவே ஒடுங்கிய நிலையன்று. அவ்வாறிருந்தால், உடலோடு இருக்கும் போதே அதைப் பெறுதல் இயலாது போகும். புத்தர் நிருவாணப் பேறு பெற்றபின் நாற்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்திருந்த பிறகே

பூத உடலை நீத்தார். எனவே, ஆசை, வெறுப்பு, அறியாமை ஆகிய பற்றியெரியும் நெருப்புக்கள் அவிந்து, மேலான பண்பாடுகள் யாவும் அமைந்து, உள்ளம் சமநிலையில் இன்பகரமாயுள்ள நிலையே நிருவாணம் என்று தெரிகின்றது. நிருவாண நிலையை அடையும் போது மனிதன் பூரண மெய்ஞ்ஞானமான போதியைப் பெறுகிறான். அந்த மெய்ஞ்ஞானம் ஸதி, தரும விசாரம், வீரியம், ஆனந்தம், மனனம், சமாதி, உபேட்சை என்ற ஏழு அங்கங்களுடையது என்பது முன்னரே விவரிக்கப் பெற்றுளது. பௌத்த தருமத்தைக் கடைப்பிடித்து, அருகத்து நிலையிலுள்ளவன் பூரணத்துவம் அடைவதையே நிருவாண நிலை எனலாம். இதற்கு மேலாக அவன் பெறவேண்டிய பக்குவமோ, பதமோ இல்லை. நிருவாண மடைந்தவன் மேலும் உலகில் வாழ்ந்திருந்தால், அவன் தாமரை இலை மேலுள்ள தண்ணீர் போல் விளங்குவான்; தன்னலமே யில்லாது அவன் பிறர்க்கு உரியவனாகவே யிருப்பான்.

### துக்கத்தின் முடிவு

ஆகவே புத்த பகவர் துக்கத்தின் முடிவான இடம் என்று தமது உபதேசத்திலே குறிப்பிடுவது நிருவாணமே என்று தெரிகின்றது. அந்த உபதேசம் வருமாறு :

*'நிலமும் நீரும் இல்லாத, ஒளியும் காற்றும் இல்லாத, எல்லையற்ற ஆகாயமும் (இடமும்) பிரக்ஞை உணர்வும் இல்லாத, வெறுமையும் (சூனியமும்) இல்லாத, அறிதலும் அறிதலற்றதும் இல்லாத, இந்த உலகம் அந்த உலகம் என்று இல்லாத, சூரியன் சந்திரன் இரண்டும் இல்லாத ஓர் இடம் (உலகம்) இருக்கின்றது. அதை வருதலும் போதலுமற்றது என்றும், நிற்றல், இயங்குதல், ஓய்வுறுதல், மரித்தல்,*

பிறத்தல் ஆகிய எந்நிலையுமற்றது என்றும் நான் கூறுகின்றேன். அதற்கு நிலையுமில்லை, சலனமுமில்லை, ஆதரவுமில்லை. அதுவே துக்கத்தின் முடிவு.'*

உடலோடு இருக்கும்போதே நிருவாணம் அடைந்திருத்தலை 'ஸோபாதிஸேஸ' என்றும், அருகத்துக்களும், புத்தர்களும் பூத உடலை நீத்த பிறகு அநுபவிக்கும் நிருவாண நிலையை 'அநுபாதிஸேஸ' என்றும் பௌத்த நூல்கள் கூறும்.

இனி நிருவாணத்தைப் பற்றிப் புத்தர் பெருமான் ஆங்காங்கே கூறியுள்ள சில குறிப்புக்களைப் பார்ப்போம். சின்னஞ் சிறு உபமானக் கதைகளைக் கூறி அவைகளின் மூலமாகவும் அவர் உபதேசித்துள்ளார்.

### உடல் ஓர் நகரம்

எல்லைப்புறத்திலே கோட்டை கொத்தளங்களோடு விளங்கும் ஒரு நகரம். கோட்டையில் ஆறு வாயில்கள் இருக்கின்றன. வாயில்களைக் காவல் புரிய அறிவாளியான ஒரு சேனாதிபதி அமர்ந்திருக்கிறான். நண்பர்களை உள்ளே புக அநுமதிப்பதும், பகைவர்களைப் புகவிடாமல் விரட்டுவதும் அவன் தொழிலாக அமைந்திருக்கிறது. கீழ்த் திசையிலிருந்து இரண்டு தூதர்கள் வேகமாக வந்து, 'அன்பா, இந்நகரின் அதிபதி எங்கேயிருக்கிறார்?' என்று கேட்கின்றனர். சேனாதிபதி, 'நான்கு சாலைகள் ஒன்றுகூடும் இடத்தில் அதோ அவர் அமர்ந்திருக்கிறார்!' என்று பதில் கூறுகிறான்.

* 'உதானம்': இந்த மேற்கோள் இதற்கு முந்திய மூன்றாம் இயலிலும் குறிக்கப் பெற்றுள்ளது.

பிறகு அந்தத் தூதர்கள் இருவரும் அதிபதியைக் கண்டு, சத்தியத்தின் செய்தி ஒன்றை அவரிடம் கொடுத்துவிட்டு, வந்த வழியே திரும்பிச் செல்கின்றனர்.

இதேபோல மேலைத் திசையிலிருந்தும், வடக்குத் திசையிலிருந்தும் இரண்டு, இரண்டு தூதர்கள் வந்து, சத்தியத்தின் செய்திகளை அளித்துவிட்டுச் செல்கின்றனர்.

இவ்வாறு ஓர் உபதேசக் கதையைச் சொல்லிப் புத்தர்பிரான் கதையின் விவரங்களை ஒவ்வொன்றாக விளக்கியுரைத்ததாகச் 'சுத்த நிபாத'த்தில் கூறப்பட்டுள்ளது.

நகரம் என்பது நான்கு கந்தங்களால் அமைந்த உடல்; ஆறு வாயில்கள் என்பவை ஆறு பொறிகள்; வாயில்களின் காவலனை சேனாதிபதி மனச்சான்று; வேகமாக வந்துசென்ற தூதர்கள் அமைதியும், உள்ளுணர்வான அறிவும்; நகரின் அதிபதி மனம்; நான்கு சாலைகள் என்பவை மண், நீர், தீ, காற்று; தூதர்கள் அளித்த செய்தி நிருவாணம் பற்றியது; அவர்கள் வந்துசென்ற பாதை நற்காட்சி, நல்லூற்றம், நல் வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நல்லூக்கம், நற் கடைப்பிடி, நல்லமைதி ஆகிய ஆரிய அஷ்டாங்க மார்க்கம்.

### கரையேறும் கட்டம்

'தீக நிகாய'த்திலே காணப்பெறும் ஒரு குறிப்பு வருமாறு :

முற்காலத்திலே கடல்மீது கப்பல்விட்டுச் செல்லும் வணிகர்கள் நிலம் கண்டுபிடிக்கும் பறவை

என்ற ஒருவகைப் பறவையைக் கொண்டுசெல்வது வழக்கம். கடலில் வெகுதூரம் சென்று, நிலமே கண்ணுக்குப் புலப்படாத நிலையில் அவர்கள் அந்தப் பறவையை அவிழ்த்து வெளியே விட்டுவிடுவார்கள். அது பறந்துசென்று, எங்காவது அருகே நிலம் தென்பட்டால், அந்த இடத்திற்குப் போய்விடும். நிலமே இல்லையானால், அது மீண்டும் கப்பலை வந்தடையும்.

அந்தப் பறவை நெடுந்தூரம் பறந்தும் நிலத்தைக் காணாமல் திரும்பக் கப்பலுக்கே வருதல்போல், புத்தருடைய சீடன், தான் தெரிந்துகொள்ள முடியாத அரிய விஷயங்களைப்பற்றி எவ்வளவு தூரம் ஆராய்ந்தும் பயனில்லாமல், பெருமானிடமே திரும்பிச்சென்று கேட்கிறான். அத்தகைய விஷயங்களில் ஒன்று, நீர், நிலம், நெருப்பு, ஜடப்பொருள், மனம், உடல் முதலிய எதுவும் இல்லாத இடம் எது என்பது.

அதற்குப் பகவர் அளித்த பதில் வருமாறு: '(நிருவாணத்தைப்பற்றி அருகத்து பெற்றுள்ள) விஞ்ஞானம் என்ற கட்புலனாகாத, எல்லையற்ற அறிவு நிலையே அது, எந்தத் திசையிலிருந்தும் சென்று கரையேறக்கூடிய நிலையே அது.'

சாதாரண விஞ்ஞானம் என்பது நான்கு கந்தங்களில் ஒன்று; அது அழிவுறக் கூடியது. ஆகவே இங்கே பகவர் குறித்துள்ள விஞ்ஞானம் அதற்கு மேம்பட்ட ஒன்று என்று கொள்ளவேண்டும். மன உணர்ச்சியும் அற்றுப்போன நிலையில் எஞ்சி நிற்கக் கூடியதாக அதைக் கொள்ளவேண்டும். அந்த நிலை தான் நிலம், நீர் முதலிய பூதங்களும், மனம், உடல் முதலியவைகளும் இல்லாத மேலான நிலை.

'காமம், குரோதம், மயக்கம் ஆகியவற்றை அழித்தலே (கந்தங்களின்) சேர்க்கையா யில்லாத நிலை' * என்றும் பகவர் அருளியுள்ளார்.

மற்றோரிடத்தில் பகவர் இவ்வாறு கூறியுள்ளார்:

'(பிறரைச்) சார்ந்து நிற்பவனிடம் சலனம் (உறுதியின்மை) இருக்கின்றது. சுதந்திரமாக உள்ளவனிடம் சலனமில்லை. சலனம் எங்கே யில்லையோ, அங்கே அமைதி உண்டு. அமைதி எங்கே உளதோ, அங்கே (மோகம் முதலிய வெறிகள் சம்பந்தமான) இன்பம் துய்க்கும் களியாட்டமில்லை. இன்பவேட்டை எங்கேயில்லையோ, அங்கே (பிறப்பு இறப்பாகிய) வருதலும் போதலும் இல்லை. வருதலும் போதலும் எங்கே யில்லையோ, அங்கே ஒரு நிலையிலிருந்து மற்றொன்றுக்கு மாறுதலும் இல்லை. ஒரு நிலையிலிருந்து மற்றொன்றுக்கு மாறுதல் எங்கே யில்லையோ, அங்கே " இங்கு " என்பதில்லை, " அப்பால் " என்பதில்லை, " இங்கும்—அங்கும் " என்பது மில்லை. அதுவே துக்கத்தின் முடிவு ?**

### அறப் படை வீரர்கள்

திரு. பால் கேரஸ் எழுதிய 'புத்தருடைய சுவிசேடம் (The Gospel of Buddha)' என்ற நூலில் கீழ்க்கண்ட மேற்கோள் ஒன்றைக் குறித்துள்ளார். இதில் நிருவாணம் தருமராஜ்யத்தின் தலைநகர் என்று அழகிய முறையில் கூறப்பட்டுளது:

'ததாகதர் வல்லமை மிக்க ஓர் அரசரைப் போலத் தமது இராஜ்யத்தை நீதியுடன் ஆண்டு வருகிறார். ஆனால் பொறாமை மிக்க பகைவர்கள் வந்து தாக்குவதால், அவர் தம் பகைவர்கள் மீது போர் தொடுக்கச் செல்கிறார். அரசர் தம் படைவீரர்கள்

* 'சுத்த நிபாதம்.'

** 'உதானம்'

போரிடுவதைக் காண்கையில், அவர்களுடைய வீரத்திஞல் அவர் களிப்படைகிருர், அவர்களுக்குப் பலவிதமான பரிசுகள் அளிக்கிருர். பிக்குகளே (சீடர்களே) ததாகதரின் படை வீரர்கள், தீவினைகளுக்கு அதிபதியான மாரனே பகைவன், அவனை வெல்ல வேண்டியதே அவசியமான வேலை. ததாகதர் தம் படைவீரர்களுக்குத் தருமராஜ்யத்தின் மாபெரும் தலைநகரமான நிருவாண நகரை அளிப்பார்......'

## நிராசையே நிருவாணம்

மேலே கூறியவற்றிலிருந்து நிருவாணம் எல்லாம் அழிந்த சூனிய நிலையன்று என்பது தெளிவாகும். அது காமத்தின் அழிவு, குரோதத்தின் அழிவு, உலோபத்தின் அழிவு, மோகத்தின் அழிவு. பிறப்புக்குக் காரணமான சார்புகளில் (நிதானங்களில்) முதன்மையான பேதைமைக்கு மாற்ருயுள்ளது அது; நிருவாணம் என்பது மெய்ஞ்ஞானமே. ஆசை அற்றுப் போகும் நிலையில், ஆணவம் அழிவுறும் நிலையில், அந்தப் பேறு கிடைக்கின்றது. '"இது நான்" என்று கருதாமையே விடுதலை'* என்று புத்தர் பிரான் கூறிஞர். '"நான் இருக்கிறேன்" என்ற எண்ணத்தை அழித்துவிட்ட பொழுது, பிக்கு தீயிலிருந்து வெளியேறுகிருன்'† என்றும் அவர் எடுத்துக் காட்டிஞர். ஆகவே, சுருக்கமாய்க் கூறிஞல், 'நான்' என்ற ஆணவத்தை அடியோடு அழித்து, ஞாலம் முழுவதையும் தான் எனக் கருத ஆரம்பித்துத் தன்னையும் உலகையும் ஒன்ருக எண்ணும் நிலை நிருவாணமாகும்.

---

* 'உதானம்'

† 'அங்குத்தர நிகாயம்'

‘தன்னைத் தான் அறிதல்’ என்று சொல்லப் பெறும் முறையில் உண்மை விளக்கமாகும் பொழுது, ‘நான்’ அழிந்து போகின்றது. ‘நான்’ அழிந்ததும், பேதைமை விலங்கும் அறுந்து விழுகின்றது. ‘நான்’ என்பதன் மரணமே விடுதலை, முக்தி, நிருவாணம். அதற்குப் பின்னால், மீண்டும் பிறத்தல், உற்பத்தியாதல், படைக்கப்பெறுதல், உருவம் பெறுதல் என்ற சம்சார பந்தத்திற்கு இடமேயில்லை. இதனால்தான், ‘எமது என்று எதுவுமில்லாத நாம் இன்பமாக வாழ்கிறோம்; தேசு மிகுந்த தேவர்களைப்போல் நாம் இன்பத்தைப் பருகிக் கொண்டே வாழ்வோம்!’ என்று புத்தர் ‘தம்மபத’த்தில் தெரிவித்துள்ளார்.

இராதா என்ற சீடருக்குப் பகவர் உபதேசிக்கையில், ‘உண்மையிலே, இராதா, ஆசையை அழித்தலே நிருவாணம்!’ என்று கூறியுள்ளார். சிறு குழந்தைகள், ஆசை இருக்கும் வரை, மணல் வீடுகள் கட்டி விளையாடியும், ஆசை மறைந்ததும், அவைகளைக் கலைத்து அழித்து விடுவதையும் உபமானமாகக் காட்டி, அதேபோல் மனிதன் ஆசை கொள்ளும் உடல், புலன்களின் உணர்ச்சிகள், மன உணர்வு முதலிய மணல் வீடுகளைக் கலைத்து அழித்து விட்டு, அவைகளில் ஆசை ஏற்படாவண்ணம் கவனமாயிருந்து வரவேண்டும் என்றும் அவர் விளக்கியுள்ளார்:

நிருவாண நிலையில் என்னதான் மிஞ்சி நிற்கின்றது? அதைப் பற்றிப் புத்தர் பெருமான் பரிநிருவாண சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

*‘புறத்தோற்றங்களான யாவும் ஒழிந்த பிறகு, தானென்ற உயிர்த் தத்துவம் மட்டும் எஞ்சி நிற்கின்றது: அது பிரபஞ்ச*

இயல்புகளுக்கு அப்பாற்பட்டுச் சுதந்திரமாயுள்ளது. விறகு தீர்ந்தபிறகும், சுடர் அணைந்தபிறகும், நித்தியமான ஒளியில் எரிந்து கொண்டிருக்கும் தீ அதுதான்; ஏனெனில் அந்தத் தீ சுடரிலுமில்லை, விறகிலுமில்லை. அந்த இரண்டின் உட்புறத்திலுமில்லை; ஆனால் மேலேயும், கீழேயும், எங்கும் உள்ளது அது.'

### நிருவாண மார்க்கங்கள்

நிருவாணத்திற்கு உரிய வழிகள் மூன்று என்று பௌத்த நூல்களிலே கூறப்பட்டுளது. அவை ஸம்மா ஸம்போதி, பிரத்தியேக போதி, சிராவக போதி என்பவை. புத்தபகவர், தாமே முயன்று, தமக்குத் தாமே வழி காட்டிக்கொண்டு, போதி யடைந்து, தாம் பெற்ற இன்பத்தை வையகமும் பெறவேண்டுமென்று உபதேசம் செய்து மற்ற மக்களும் கடைத்தேற வழி காட்டியது ஸம்மா ஸம்போதியாகும். பிரத்தியேக போதி என்பது, ஒரு புத்தருடைய உதவியில்லாமலே, ஒருவர் தாமாக முயன்று, தாம் மட்டும் போதியடைந்து, உலகிற்கு உபதேசியாமல் தனித்திருத்தலாகும். புத்தரை வழிகாட்டியாகக் கொண்டு, பத்துப் பாரமிதைகளை * மேற்கொண்டு அருகத்துகளாகிப் போதியடைதல் சிராவக போதி எனப்படும்.

---

* தானம், சீலம், பொறுமை, வீரியம், தியானம், பிரக்ஞை, உபாயம், தயை, பலம், ஞானம் ஆகியவை தச பாரமிதைகள்.

ஐந்தாம் இயல்

# பௌத்தமும் சாதிப் பிரிவினையும்

'பிறப்பினால் எவர்க்கும் — உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் — நல்ல
செய்கை வேண்டுமப்பா'

—ஆசிய ஜோதி

இந்திய நாட்டில் வேரூன்றி வளர்ந்திருந்த சாதிப் பிரிவினையை முதன்முதலில் எதிர்த்துச் சகல மக்களும் சமம் என்று போதித்தவர் புத்தபகவரே. பிறப்பினாலே பிராமணராகவோ, சண்டாளராகவோ இருக்க முடியாது என்றும், செய்கைகளும் ஒழுக்கமுமே மக்களை உயர்த்துவதும் தாழ்த்துவதும் என்றும் அவர் கூறிவந்தார். சாதிகளோடு அவர் நேரிடையாகப் போராடிக் கொண்டிருக்கவில்லை; ஆனால் அவைகளை மதிக்காமல் புறக்கணித்து விட்டார். அவருடைய பௌத்த தருமத்தை மேற்கொள்வதற்குச் சாதியும் நிறமும் குறுக்கே நிற்கவில்லை. அத் தருமத்தை மேற்கொண்டவர்கள், பல ஆறுகள் ஒரே கடலுள் கலந்து ஒன்றுவது போல், தருமத்திலே சேர்ந்து ஒன்றாகிவிட்டனர்.

அரசர்கள், அதிகாரிகள், வேதியர், மீன் பிடிப்போர், போர்வீரர், குப்பை கூட்டுவோர் முதலிய யாவரும், சாதிவேற்றுமையின்றிப் பிக்குகளின் சங்கத்திலே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். உபாலி என்ற நாவிதர் பிக்குகளின் தலைவர்களில் ஒருவராக விளங்கி விநய ஒழுக்க முறையைக் கவனித்து வந்தார். ஸுநிதன் என்ற குப்பை

கூட்டுவோனைப் புத்தரே நேரில் சங்கத்தில் சேர்த்துக் கொண்டார். அவன் பின்னால் ஸுநித முனி என்று அழைக்கத்தக்க பெருமை பெற்றிருந்தான். கொள்ளையும் கொலையுமே தொழிலாய்க் கொண்டிருந்த அங்குலிமாலனைப் பெருமான் ஆட்கொண்டமை 'போதி மாதவன்' என்ற புத்த சரிதையில் விவரிக்கப் பெற்றுள்ளது. அவனும் பின்னால் கருணை மிகுந்த முனிவனாக விளங்கினான். அம்பபாலி, விமலா என்ற கணிகையரும், தாழ்ந்த குலத்தார் என்று கருதப்பெற்ற பூர்ணா, சாபா முதலியோரும் சிறந்த பிக்குணிகளாக விளங்கிவந்தனர்.

இவ்வாறு சங்கத்திலே சேர்ந்த பிக்குகளும் பிக்குணிகளும் சாதிப்பற்றையும், சாதிப் பெயர்களையும் அறவே கைவிட்டுவிட வேண்டும் என்று புத்தர் பெருமான் விதித்திருந்தார். ஆனால் பௌத்த உபாசகர்களான பொதுமக்கள், தருமத்தில் சேர்ந்த பிறகு, தத்தம் சாதிகளை அடியோடு மறந்துவிட வேண்டும் என்று அவர் கண்டிப்பாக விதி செய்ய வில்லை என்று தெரிகின்றது. ஆயினும் பௌத்த தருமத்திற்கும் உபாசகர்களிடையே நிலவியிருந்த சாதிப் பிரிவினைகளுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. சாதிகள் சமுதாய வாழ்வில்—மக்களுடைய பழக்கவழக்கங்களில் மட்டுமே தென்பட்டன; சமயவாழ்வில் அவை தலைகாட்டவில்லை.

### புத்தர் காலத்தில் சாதிகள் நிலை

இந்து சமுதாயத்தில் சாதிப் பிரிவினை சமயத்தோடு சேர்ந்தே யிருப்பது. புத்தர் காலத்தில் சாதிகள் இரும்புச் சட்டங்களைப் போல் இறுகியிருக்க வில்லை என்றாலும், சாதிகள் அப்போதே பரவி

யிருந்தன என்பதும், அவைகளால் தீமைகள் பெருகி வந்தன என்பதும் புத்தர் உபதேசங்களி லிருந்தே தெரிகின்றன. முதலில் பிராமணர், இராஜந்யர் (க்ஷத்திரியர்) என்ற இரு பிரிவுகளே இருந்தன; பின்னாலேயே நான்கு வருணங்க ளாகவும், வேறு கிளைகளாகவும் வளர்ந்தன. மனிதனைப் பிராமணனாக்குவதும், அல்லாதவனாக்கு வதும் அவனுடைய ஒழுக்கந்தான் என்பதையும், ஒழுக்கத்தைக் கைவிட்டுவிட்டு, 'இந்திரனே வா, சந்திரனே காப்பாற்று' என்பவை போன்ற பிரார்த்தனைகள் செய்வது வீணாகும் என்றும் புத்தர் கூறிவந்தார். மேலும் அக்காலத்துப் பிராமணர் பலர், செய்யத்தகாத, விலக்கப்பெற்ற தொழில்கள் பலவற்றைச் செய்துவந்ததையும் அவர் எடுத்துக் காட்டிப் பரிகசித்துவந்தார். அவர்கள் பிருமத்தைத் தாமே நேரில் கண்டதுபோலப் பேசிவந்ததையும், சொந்த ஆராய்ச்சியில்லாமல், கிளிப்பிள்ளைகள் போல் பழைய சாத்திர வாசகங்களையே கூறி வந்ததையும் அவர் அவர்கள் முன்பாகவே கண்டித்துப் பேசிவந்தார். சாதிப் பிரிவினையோடு, ஜோசியம், மாந்திரிகம், புரோகிதம் முதலியவை களையும், மூடநம்பிக்கைகளையும் அவர் ஆணித் தரமாகக் கண்டித்து வந்தார்.

புத்தருடைய உபதேசங்களாலும், பௌத்த தரும வளர்ச்சியாலும், சாதிப் பாகுபாடுகள் மிகவும் தளர்ந்து உலைந்து போய்விட்டன. அமைதியாகவும் ஆழ்ந்த முறையிலும், அவரும் அவருடைய அடியார் களும் செய்துவந்த பிரசாரத்தினால், சாதிகளின் அடிப்படைகளே ஆடிப்போயிருந்தன.

### எதிர்ப்பு

இக்காரணங்களால்தான் பிற்காலத்தில் சாதிகள் ஒரேயடியாக அழிந்துவிடாமலிருப்பதற்காக இந்து சமூகத்திலே மிகக் கடுமையான விதிகளெல்லாம் ஏற்படுத்தப்பெற்றன. ஒரு சாதியாரோடு ஒரு சாதியார் உணவு உண்ணக் கூடாதென்றும், விவாகம் முதலியவை செய்துகொள்ளக் கூடாதென்றும் சட்டங்கள் செய்யப்பெற்றன. தொழிற் பாகுபாட்டினால் ஏற்பட்டிருந்த சாதிகள், பிறப்பையும் விவாகத்தையும் அடிப்படைகளாகக் கொண்டன. ஸ்மிருதிகள், தருமசாத்திரங்கள் என்ற பெயரால் தோன்றிய சட்டங்கள், இரும்பு விதிகளாக அமைந்து, மக்கள் என்றுமே ஒன்றுசேர முடியாதபடி பிரித்து வைத்துவிட்டன. ஆதியில் 'சாதுர் வருணங்கள்' என்று தோன்றிய சாதிகள் நாளடைவில் பல்லாயிரம் சாதிகளாகக் கிளைத்துவிட்டன.

வேத காலத்தில் பிராமணர் பூணூல் அணியும் வழக்கமில்லை என்று தெரிகிறது. பின்னால் 'பிராம்மணங்கள்' தோன்றிய பிறகே அவ்வழக்கம் தோன்றியது. 'சதபதப் பிராம்மண'மும், 'கௌஷீதகி உபநிடத'முமே பூணூல் அணிவதைப்பற்றி முதன் முதலாகக் குறிப்பிட்டுள்ளன. அவற்றின்படி வேதியர் காலையில் சூரிய நமஸ்காரம் செய்யும் போதும், வேள்வி செய்யும்போதுமே பூணூல் அணிந்துகொள்ள வேண்டியிருந்தது. பின்னால் கதிரவன் வணக்கமும், வேள்வியும் மறைந்து, இருபத்து நான்கு மணி நேரமும் பூணூல் அணியும் வழக்கம் மட்டும் நிலைத்துவிட்டது. முற்காலத்தில் பூணூல் மான்தோலினாலே முப்பிரியாக ஆக்கப் பெற்றிருந்தது; பின்னால் அது பருத்தி நூலாக மாறி

விட்டது. பௌத்தர்களிடையே இத்தகைய சாதிச் சின்னங்களுக்கு இடமில்லை.

### ஏற்றத் தாழ்வுகள்

இந்து சமயத்திலிருந்து ஒவ்வொரு காலத்திலும் இலட்சக்கணக்கான மக்கள் வெளியேறிப் பிற சமயங்களைத் தழுவுவதற்கு மூலகாரணமானவை அதிலுள்ள சாதிப்பிரிவினையும், அப்பிரிவினையின் கொடுமையுமே. பௌத்த தருமத்திலே சாதி வேற்றுமை இல்லை என்று முதன்முதலாக முழக்கப் பெற்றதால், சமுதாயத்தின் அடித்தலத்திலே வருந்தி வாழ்ந்து வந்த தாழ்த்தப்பெற்ற மக்கள் அனைவருக்கும் அது கதிமோட்சமாகத் தோன்றியிருக்கவேண்டும்.

*'நல்லகுலமென்றும், தீய குலமென்றும்*
*சொல்லள வல்லால் பொருளில்லை—தொல்சிறப்பின்*
*ஒண்பொருளன்றோ தவம், கல்வி, ஆள்வினை*
*என்றிவற்றின் ஆகும் குலம்'**

என்ற முறையில் புத்தர் ஒழுக்கத்தையே முக்கியமாகக் கூறி உபதேசித்து வந்ததால், அதன் உண்மையை அறிந்த மக்கள் யாவரும் அவரைத் தம் குருவாக ஏற்றுக்கொண்டனர். உண்மையில் நாட்டமுள்ள பிராமணர்கள், க்ஷத்திரியர்கள் பலரும் விகற்பமில்லாமல் அவருடைய உபதேசத்தை ஏற்றுக் கொண்டனர். நல்லதைச் சொல்லுலும், அதைச் சொல்லும் நல்ல முறையிலேயே வெற்றி விரைவாக

* 'நாலடியார்'

ஏற்படக்கூடும். புத்தர் துவேஷங்களையும், குரோதங்களையும் கிளப்பிவிடாமல் தமது கருத்தைச் சாந்தமான முறையிலே மக்களின் மனங்களில் பதிய வைத்ததால், அவர் சாதிகளின் ஏற்றத் தாழ்வுகளைத் தகர்க்க முடிந்தது. மக்களை அடிமைகளாக வைத்துக் கொண்டு வேலை வாங்கும் முறையையும் கருணை மிகுந்த புத்த பகவர் நீக்கினர்.

*'சாம்பலுக்கும் பொன்னுக்கும் குறிக்கத் தகுந்த வேற்றுமை உண்டு; ஆனால் ஒரு பிராமணனுக்கும் சண்டாளனுக்கும் அத்தகைய வேற்றுமை எதுவுமில்லை. காய்ந்த கட்டையைக் கடைவதில் எழும் தீயைப்போல் பிராமணன் உண்டாக்கப்பெறவில்லை; அவன் வானத்திலிருந்து இறங்கி வரவில்லை, காற்றிலிருந்து தோன்றவில்லை, பூமியிலிருந்தும் துளைத்துக்கொண்டு மேல் வரவில்லை. சண்டாளன் எவ்வாறு தோன்றினனோ, அதுபோலவே பிராமணனும் ஒரு ஸ்திரீயின் கருப்பையிலிருந்து பெறப்பட்டவனே யாவான். எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியான அங்கங்களைப் பெற்றிருக்கின்றனர்; எள்ளளவு வித்தியாசமும் இல்லை. அவர்களை வெவ்வேறு வர்க்கங்கள் என்று எப்படிப் பிரித்துக் கருத முடியும்? மனித குலத்திலே எத்தகைய குறிப்பிட்ட வேற்றுமையும் உளது என்று கருதுவதை இயற்கை மறுத்துக் காட்டுகின்றது.'*

மேலே குறித்துள்ளதே புத்தர் கொள்கை. எல்லாச் சாதியார்களும் அவருக்கு ஒன்றுதான். வான மண்டலத்திலிருந்து யாவர்க்கும் பொதுவாக மழை பொழியும் மேகம்போல, அவர் எல்லா மக்களையும் சமமாகக் கருதித் தண்ணருள் பொழிந்து வந்தார். உயர்ந்தோர், தாழ்ந்தோர், அறிஞர்,

அறிவிலார், சீலமுள்ளவர், சீலமற்றவர் முதலிய யாவருமே அவருடைய கருணை வெள்ளத்தில் பங்கு கொண்டனர். பரிசுத்தமான அவருடைய உபதேசம் எல்லோர்க்கும் பொதுவாகவே செய்யப் பெற்றது. தமது உபதேசம் தண்ணீர்போல் வேற்றுமையின்றி எல்லாவற்றையும் சுத்தம் செய்வது என்றும், எல்லாவற்றையும் எரிக்கும் நெருப்பைப் போலத் தீமைகளை எரிப்பது என்றும் அவரே கூறியிருக்கிறார். அவ்வுபதேசம் வானத்தைப்போல் விசாலமானது என்றும், அதிலே ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமிகள், வல்லவர், மெலிந்தவர் ஆகிய யாவர்க்கும் போதிய இடமுண்டு என்றும் அவர் சொல்லி வந்தார்.

ஒரு சமயம் காசியபருக்கு உபதேசம் செய்கையில் புத்தர் பெருமான் கூறிய வாசகம் வருமாறு :

*'உயிர்களுக்குத் ததாகதர் போதனை செய்கையில் பாரபட்சம் காட்டுவதே யில்லை. சூரியனும் சந்திரனும் நல்லவர் தீயவர் என்றோ, உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்றோ, மணமுள்ளவர் மணமற்றவர் என்றோ வேற்றுமை பாராமல், உலகம் முழுவதற்கும் ஒளி செய்வது போலவும், அவைகளின் கதிர்கள் பாரபட்சமின்றி எல்லாப் பொருள்களின் மீதும் பரவுதல் போலவும், ததாகதர் போதிக்கும் அறிவொளி உயிர்கள் அனைத்துக்கும் சமமாகவே வருகின்றது.'*

சாதிகள் எப்பொழுது, எவ்வாறு, ஏன் தோன்றின என்ற விஷயங்களைப்பற்றி எத்தனையோ மாறுபட்ட கருத்துக்கள் இதுவரை கூறப்பட்டிருக்கின்றன. சாத்திரங்களையும் சரித்திரத்தையும்

ஆராய்ந்து பார்க்கப் பார்க்க உண்மைகளைப் பார்க்கினும் குப்பைகளே அதிகமாகக் கண்டுபிடிக்கப் பெறுகின்றன. ஆனால் பகுத்தறிவைக் கொண்டு சாதிகளின் உண்மையை ஆராய்ந்தால், அவை தொழிற் பாகுபாடுகளை அடிப்படையாகக் கொண்டவை என்பதும், இந்திய நாட்டின் பூர்வ குடிமக்களும் பின்வந்த ஆரியர்களும் ஐக்கியமாகக் கலந்து, வாழ்க்கையில் சாதிகள் திட்டமான முறையில் அமைக்கப்பெற்றன என்பதும், பெரும்பாலான மக்கள் வேளாண்மையும் வாணிபமும் செய்யும் வைசியர்களாயும், மற்றைச் சாதியார்களுக்குத் தொண்டு செய்யும் சூத்திரர்களாயுமே இருந்து வந்தனர் என்றும், சிறு பான்மையோரான பிராமணரும் க்ஷத்திரியரும் சமுதாயத்தின் மேல் தட்டில் உயர்ந்த வாழ்வு நடத்துவதற்குரிய பல வசதிகளும் பெற்று விளங்கினர் என்றும் தெரியவரும். முற்காலத்துச் சாதி வரலாற்றை விளக்கச் சரித்திரம் அதிகத் துணையாக இல்லை. முன் ஒரு காலத்தில் சாதிப்பிரிவினை சமூகத்திற்கு நன்மையாகவே திகழ்ந்து, பின்னால் அது சீரழிந்துவிட்டதாகப் பல அறிஞர்களும், ஆசிரியர்களும் கூறுவது வழக்கமா யிருந்துவருவதைக் கண்டு, இக்காலத்தில் திரு. கே. எம். பணிக்கர் போன்ற ஆசிரியர்கள், 'எந்தக் காலத்தில் நன்மையாகத் திகழ்ந்தது?' என்று கேள்வி கேட்கின்றனர்.

சாதிப் பிரிவினையால் சமுதாயத்திலே ஏற்றத் தாழ்வுகள் தோன்றி நிலைத்ததோடு, சாதிப்பிரிவினையைச் சமயத்தோடும் பிணைத்துவிட்டதால், பெரும்பாலான மக்களின் சமய வாழ்வும் பாழ்படுத்தப்

பட்டுப் போயிற்று. இன்றுவரை கோடிக்கணக்கான மக்கள், சமயம் என்பது என்ன என்பதையும், இந் நாட்டில் தோன்றிய பல சமயங்களின் பண்பாடுகள் எவை என்பதையும், சமய நூல்கள் பலவற்றில் மக்களிடையே ஏற்றத் தாழ்வுகள் இருத்தலாகாது என்ற கொள்கை வலியுறுத்தப்பெற்றிருக்கிறது என்பதையும் உணர்ந்துகொள்ள முடியாமற் போய் விட்டது. இத்தகைய நிலையை ஆரம்பத்திலேயே எதிர்த்து நின்ற பெருமை பௌத்த தருமத்தைச் சேர்ந்ததே.

புத்தர் பெருமானுக்குப் பின்னுல், ஐந்து, ஆறு நூற்ருண்டுகளுக்குப் பின்னும்,பௌத்த தருமத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் சாதிப் பிரிவினையையும், பிராமணர்கள் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று கருதிச் செருக்குடன் இருந்ததையும் கண்டித்துப் பிரசாரம் செய்து வந்தார்கள் என்று தெரிகின்றது. இத்தகைய பிரசாரத்திற்காக எழுந்த நூல்களுள் 'வஜ்ரசூசி' என்பது ஒன்று. இது அளவிலே சிறிது எனினும், சாதிகளைக் குத்தித் தாக்குவதில், இதன் பெயருக்கு ஏற்ப வயிர ஊசியாகவே யுள்ளது. 'புத்த சரிதை'யை இயற்றிய ஆசிரியர் அசுவகோஷரே இதன் ஆசிரியர் என்று சொல்லப்படுகிறது.

பிராமணீயம் என்பது ஜீவனில் இருக்கிறதா, உடலில் இருக்கிறதா, பரம்பரையில் இருக்கிறதா, படிப்பில் இருக்கிறதா, ஆசாரங்களில் இருக்கிறதா, கருமங்களில் (செய்கைகளில்) இருக்கிறதா, வேதங் களை அறிவதில் இருக்கிறதா என்ற விஞக்களை எழுப்பி, இவை அத்தனையிலும் அது இல்லை என்று

தருக்க ரீதியில் 'வஜ்ரசூசி' எடுத்து விளக்கு கின்றது.

பௌத்தர்கள் சாதிப் பிரிவினையை அதிகமாய்த் தாக்கி வந்ததால், பிராமணர்கள் புதிய புதிய சாத்திரங்கள், புராணங்களின் மூலம் அதைப் பலப் படுத்த வேண்டியதாயிற்று.

சூத்திரர்களுக்குத் தரும உபதேசம் செய்யக் கூடாது என்ற மனு முதலிய ஸ்மிருதிகளின் கூற்றுக்கு மாறாகப் பௌத்த தருமத்தின் கதவுகள் யாவருக்கும் வேற்றுமையின்றித் திறந்து வைக்கப் பெற்றிருந்தன. புத்தரும் மற்றைப் பிக்குகளும், சண்டாளர் உட்பட எல்லோருக்கும் உபதேசம் செய்யத் தயங்கவில்லை.

### வேதியர் ஒழுக்கம்

புத்தர் காலத்திருந்த பிரமாணர்கள், பெரும் பாலும் சொத்துக்கள் சேர்ப்பதும், வேதமந்திரங்களை ஓதுவதும், தேவதைகளைப் பிரார்த்தனை செய்வதும் தவிர, ஒழுக்கத்தைப் பேணுமலும், மெய்ஞ்ஞானம் பெறக்கூடிய மார்க்கத்தைக் கண்டு அதிலே உறுதி யுடன் பயிற்சிபெற்று முன்னேறுமலும் இருந்து வந்தனர் என்று தெரிகின்றது. அவர்கள் நிலையைப் பற்றியும், அவர்களைப்பற்றிப் புத்தர் கொண்டிருந்த கருத்தைப்பற்றியும் 'தேவிஜ்ஜ சுத்தம்' (திரைவித்ய சூத்திரம்) என்ற சூத்திரத்தில் தெளிவாய்க் காண முடிகின்றது. புத்தர் பெருமான் வசிட்டன் என்ற அந்தண வாலிபனுக்குச் செய்த உபதேசம் இந்தச் சூத்திரத்திலே விரிவாகக் குறிக்கப் பெற்றுளது

கோசல நாட்டிலே ஐந்நூறு பிக்குகளுடன் புத்தர் யாத்திரை செய்கையில், செல்வம் மிகுந்த வேதியர் பலர் வசித்திருந்த மனஸாகதம் என்ற கிராமத்திற்கு அவர் விஜயம் செய்திருந்தார். அங்கே பாரத் துவாஜன் என்ற தோழனுடன் வசிட்டன் அவரிடம் சென்று தன் சந்தேகங்களை நீக்கியருள வேண்டினான். அப்போது அவனுக்கும் புத்தருக்கும் நிகழ்ந்த சம்பாஷணையில், அக்காலத்து வேதியர்கள் ஒழுக்கம் பேணாமல் வீண் பெருமை கொண்டு பேசி வந்ததைக் கண்டித்துப் பேணவேண்டிய ஒழுக்க முறைகளைப்பற்றிச் 'சுள்ள சீலம்', 'மஜ்ஜிம சீலம்', 'மகா சீலம்' என்ற மூன்று தலைப்புக்களில் புத்தர் பெருமான் விரிவாக எடுத்துரைத்தார். கருத்து நிறைந்த அந்த உரையாடலின் சுருக்கம் வருமாறு :

பிருமாவும் பிராமணரும்

**வசிட்டன்**—எல்லா வழிகளும் ஒரே ஊருக்குக் கொண்டு சேர்ப்பது போலச் சமயங்கள் யாவும் ஒரே முடிவுக்குத்தான் வழி காட்டுகின்றன அல்லவா?

**புத்தர்** — வசிட்ட, அவைகள் எல்லாம் சரியான இடத்திற்குத்தான் கொண்டு செல்கின்றன என்று நீ சொல்கிறாயா?

**வசிட்டன்** — ஆம், கௌதமரே!

**புத்தர்** — அப்படியானால், மூன்று வேதங்களையும் கற்றுத் தேர்ந்த பிராமணர்களிலே பிருமத்தை நேருக்கு நேராகக் கண்டவர் ஒருவராவது இருக்கின்றாரா?

**வசிட்டன்** — இல்லை!

**புத்தர்** — மூன்று வேதங்களையும் கற்றுத் தேர்ந்த பிராமணர்களின் சீடர்களில் பிருமத்தை நேருக்கு நேராகக் கண்டவர் ஒருவராவது இருக்கின்றாரா?

**வசிட்டன்** — இல்லை !

**புத்தர்** — சரி, வசிட்டா ! பிராமணர்கள் ஓதும் மூன்று வேதங்களையும் இயற்றியவர்கள் முற்காலத்து ரிஷிகள்; அவர்களுடைய மந்திரங்களையே பிராமணர்கள் அவர்கள் உச்சரித்த அதே முறையிலே, அதே குரலிலே, அத்தியயனம் செய்து வருகிறார்கள்; அத்தகைய ரிஷிகளாவது, 'நாங்கள் அதை அறிவோம், நாங்கள் அதைக் கண்டுள்ளோம், பிருமம் எங்கேயிருக்கிறது என்பதை நாங்கள் அறிவோம் !' என்று சொல்லியிருக்கிறார்களா ?

**வசிட்டன்** — அவ்வாறில்லை.

**புத்தர்** — ஆகவே, மூன்று வேதங்களையும் கற்று உணர்ந்த பிராமணர்கள் சொல்வது இதுதான் : 'எங்களுக்குத் தெரியாத, நாங்கள் பார்த்திராத ஒன்றை அடைவதற்கு நாங்கள் வழிகாட்ட முடியும்; "இதுதான் நேர் பாதை, இதன்படி செல்பவன் பிருமத்தோடு ஐக்கியமாவதற்கு இதுவே நேரான மார்க்கம்" என்று நாங்கள் கூற முடியும்.'

வசிட்டா, நீ என்ன நினைக்கிறாய் ? இது இவ்வாறு இருப்பதால், மூன்று வேதங்களையும் கற்றுணர்ந்தவர்களாயினும், அந்தப் பிராமணர்களுடைய பேச்சு அறிவீனமான பேச்சுத்தான் என்று ஏற்படுகிறதல்லவா ?

**வசிட்டன்** — அது (அவர்கள் பேச்சு) அவ்வாறு இருப்பதால், மூன்று வேதங்களையும் கற்றுணர்ந்த பிராமணர்களின் கூற்று அறிவீனமானதுதான் என்று ஏற்படுகின்றது.

**புத்தர்** — தாங்களே அறியாத, பார்த்திராத, பிருமத்தோடு ஐக்கியமாவதற்குப் பிராமணர்கள் வழி காட்டுதல் என்பது உலக இயல்புப்படி நடவாத காரியம் !

வசிட்டா ! குருடர்கள் ஒருவரை ஒருவர் பிடித்துக் கொண்டு நிற்கையில், முதலில் இருப்பவரும் பார்க்க

முடியாது, நடுவில் இருப்பவரும் பார்க்க முடியாது, கடைசியில் இருப்பவரும் பார்க்க முடியாது என்பதைப் போலவே, இந்தப் பிராமணர்களுடைய பேச்சும் இருப்பதாக நான் கருதுகிறேன். முதலில் இருப்பவரும் காணவில்லை, நடுவில் இருப்பவரும் காணவில்லை, கடைசியில் இருப்பவரும் காணவில்லை. ஆகவே இந்தப் பிராமணர்களுடைய பேச்சு பரிகாசத்திற்கு இடமாயும், வெறும் சொற் குவியலாயும், பொருளற்ற வெற்றுரையாயுமே இருக்கின்றது!

இவர்கள் சூரியனும் சந்திரனும் உதிக்கும் திசையையும், அடையும் திசையையும் பார்த்துப் பிரார்த்தனை செய்கிறார்கள், தோத்திரம் செய்கிறார்கள், கைகளைக் குவித்துத் திரும்பி நின்று அவைகளை வணங்குகிறார்கள்; இவர்கள் மற்ற மக்களைப்போல் சூரியனையும் சந்திரனையும் பார்க்க முடியுமா, வசிட்டா?

**வசிட்டன்** — நிச்சயமாக அவர்களால் முடியும்.

**புத்தர்** — மற்ற மக்களைப்போல் சூரியனையும் சந்திரனையும் பார்க்கக் கூடிய பிராமணர்கள், சூரியனோடும், சந்திரனோடும் ஐக்கியமாகும் வழியைக் குறித்துக் காட்ட முடியுமா?

**வசிட்டன்** — நிச்சயமாக முடியாது!

**புத்தர்** — ஆகையால், பிராமணர்கள் தாங்கள் நேரில் பார்க்கும் பொருளோடு ஐக்கியமாவதற்குக்கூட வழிகாட்ட இயலாதவர்கள் என்று நீ ஒப்புக்கொள்கிறாய்; அவர்களில் எவரும் பிருமத்தைக் கண்டதில்லை, அவர்களுடைய சீடர்களும் கண்டதில்லை, ஏழு தலைமுறைக்கு முந்திய அவர்களுடைய முன்னோர்களும் கண்டதில்லை. பழைய ரிஷிகளும்கூடப் பிருமத்தை அறிந்திருந்ததாகப் பாவனை செய்து கொள்ளவில்லை, பிருமம் எங்கேயிருக்கிறது என்பதைப் பார்த்துமில்லை. அப்படியிருந்தும், பிராமணர்கள், தாங்கள் பார்த்திராத, அறிந்திராத, ஒன்றோடு இரண்டறக் கலப்பதற்கு வழிகாட்ட முடியும்

என்று சொல்வது அறிவீனமான பேச்சுத்தானே, வசிட்டா?

**வசிட்டன்** — உண்மையில் அப்படித்தான் இருக்கிறது.

**புத்தர்** — இத்தகைய காரியம் உலகில்சாத்தியமில்லை. ஒரு மனிதன், 'இந்த நாட்டிலுள்ள தலைசிறந்த அழகியை நான் விரும்புகிறேன்; அவளிடம் எவ்வளவு காதல் கொண்டுள்ளேன்!' என்று சொல்வதாக வைத்துக் கொள்வோம். ஜனங்கள் அவனிடம், 'நல்லது, அன்ப! நீ காதல்கொண்டு உருகும் நாட்டிலே சிறந்த நல்லழகி க்ஷத்திரிய வமிசத்தைச் சேர்ந்தவளா, பிராமண குலத்தவளா, அல்லது வைசிய, சூத்திர குலத்தவளா?' என்று கேட்பார்கள்.

அப்போது அவன் என்ன பதில் சொல்லமுடியும்? 'தெரியாது' என்றுதான் சொல்வான்.

'அந்தத் தலைசிறந்த அழகியின் பெயர் யாது? அவளது குலப் பெயர் என்ன? அவள் நெடிய உருவமுள்ளவளா, குள்ளமானவளா? அவள் கறுப்பா, பொது நிறமா, சிவப்பா? அவள் எந்த நகர் அல்லது கிராமத்தில் வசிக்கிறாள்?' என்றெல்லாம் வினவினால், அவன் 'தெரியாது!' என்றுதான் பதில் சொல்ல முடியும்.

அப்போது ஜனங்கள், 'நண்பா! நீ தெரிந்திராத, பார்த்திராத, ஒரு பெண்ணிடம் காதல் கொண்டு நீ உருகுகிறாயா?' என்று கேட்பார்கள். அவனும் 'ஆம்' என்பான்.

அந்த மனிதனுடைய பேச்சு அறிவீனமான பேச்சல்லவா?

**வசிட்டன்** — ஆம்.

**புத்தர்** — அதைப் போலத்தான் இதுவும். பிரும்மம் இருக்கிறது என்றும், அதை அறியாமலும் பாராமலும்

இருப்பவர்கள், அதை அடைந்து அதனுடன் ஐக்கிய மாவதற்கு வழிகாட்ட முன்வருவதும் அறிவீனமானதேயாம்.

**வசிட்டன்** — ஆம்.

**புத்தர்** — அப்படி உலகில் சாத்தியமில்லை.

நான்கு சாலைகள் சந்திக்கும் ஓரிடத்தில் ஒருவன் மாடிக்குப் படிக்கட்டுக் கட்டுவதாக வைத்துக் கொள்வோம். அந்தப் படிக்கட்டு ஒரு மாளிகைக்கு மேலே ஏறிச் செல்வதற்காக. (மாளிகையை அமைக்காமல் படிக்கட்டு மட்டும் கட்டும்) அவனை ஜனங்கள் பார்த்து, 'எந்த மாளிகையின் மீது ஏறுவதற்கு இந்தப் படிக்கட்டுக் கட்டுகின்றாயோ, அந்த மாளிகை கிழக்கே யிருக்கின்றதா, தெற்கே யிருக்கின்றதா, அல்லது மேற்கே யிருக்கின்றதா, அல்லது வடக்கே யிருக்கின்றதா என்றும், அது உயரமானதா, தாழ்ந்ததா, நடுத்தரமானதா என்றும் கேள்விகள் கேட்பார்கள்.

அவன் 'இல்லை' என்றே பதில் சொல்வான்.

அப்போது ஜனங்கள், 'நண்பா! நீ எதன் மீதோ ஏறிச் செல்வதற்குப் படிக்கட்டுக் கட்டுகிறாய்; அடியில் மாளிகை இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறாய். ஆனால் உண்மையில் நீ அந்த மாளிகையை அறியவுமில்லை, பார்க்கவுமில்லை!' என்று சொல்வார்கள்.

அவன் 'ஆம்' என்பான்.

இந்த நிலையில் அந்த மனிதனின் பேச்சு அறிவீனமான பேச்சுத்தானே, வசிட்ட?

**வசிட்டன்** — உண்மையில் அப்படித்தான்!

**புத்தர்** — பிராமணர்கள் பிருமத்துடன் ஐக்கிய மாவதற்கு வழி காட்டுவதும் இத்தகைய அறிவீனமான பேச்சுத்தானே?

**வசிட்டன்** — ஆம்!

**புத்தர்** — உலகில் அப்படி சாத்தியமில்லை.

### முயற்சியின் அவசியம்

மேலும், இந்த அசிரவதி நதியில் கரைபுரண்டு வெள்ளம் வருகிறது; இங்கிருந்து வேலை காரணமாக அக்கரைக்குச் செல்லவேண்டிய ஒருவன், இங்கேயே நின்று கொண்டு அக்கரையைப் பார்த்து, 'அக்கரையே, இங்கே வா! இந்தப் பக்கத்திற்கு வா!' என்று கூவிப் பிரார்த்தனை செய்தால், அது வந்து விடுமா? அந்த மனிதனுடைய பிரார்த்தனை, நம்பிக்கை, புகழ்ச்சிக்காக அந்தக் கரை இங்கே வந்து விடுமா?

வசிட்ட! அதேபோல, மூன்று வேதங்களையும் கற்றுணர்ந்த பிராமணர்கள், தம்மை உண்மையான பிராமணராக்கக் கூடிய குணங்களைப் பயிலுவதை விட்டு விட்டு, எந்தக் குணங்கள் மனிதர்களைப் பிராமணராகச் செய்ய முடியாதோ அவைகளைப் பயிற்சி செய்து கொண்டு, அவர்கள் இந்திரனையும், வருணனையும், ஈசானுவையும், பிரஜாபதியையும், பிருமாவையும், மகித்தியையும், யமனையும் பிரார்த்தனை செய்து அழைக்கிறார்கள். அவசியமான ஒழுக்கங்கள் இல்லாமல், இத்தகைய பிரார்த்தனைகளால், மரணத்திற்குப் பின், உடல் கரைந்த பிறகு, பிருமத்தோடு ஐக்கியமாகிவிடலாம் என்று நம்புவதை என் சொல்வது? இது உலகில் சாத்தியமில்லை!

ஒரு மனிதன் அசிரவதியின் இக்கரையிலிருக்கும் போது, அவனுடைய கைகளை முதுகுப்புறமாக ஒரு சங்கிலியால் பிணித்துவிட்டால், அவன் மறு கரையை அடைய முடியுமா?

**வசிட்டன்** — நிச்சயமாக முடியாது, கௌதமரே!

**புத்தர்** — அது போலவே மனிதனுக்கு அவா உண்டாக்கும் ஐந்து தளைகள் இருக்கின்றன; அவைகள் சங்கிலிகள், விலங்குகளாக இருக்கின்றன. அவை கண்ணால் காண்பவை, காதால் கேட்பவை, நாசியால் முகர்பவை, நாவினால் சுவைப்பவை, உடலால் உணர்பவை ஆகியவை. அவாவுக்குக் காரணமான இந்த ஐந்திலும் பிராமணர்கள் பற்றுக் கொண்டிருக்கிறார்கள், அவைகளில் திளைத்து மயங்குகிறார்கள், அவைகளால் வரக்கூடிய அபாயத்தை அறியாமல், அவைகளைத் துய்த்து இன்பம் காண்கிறார்கள். அவர்கள் மரணத்திற்குப் பின்னால் பிருமத்திடம் ஐக்கியமாதல் எங்ஙனம் முடியும்? அது உலகில் சாத்தியமில்லை.

மேலும் ஒரு மனிதன் மறுகரைக்குச் செல்லவேண்டும் என்ற கருத்துடன், தன் தலை உட்படப் போர்வையால் போர்த்திக்கொண்டு அசிரவதியின் இக்கரையிலே உறங்குவதற்காகப் படுத்து விட்டால், அவன் அக்கரையை அடைய முடியுமா?

**வசிட்டன்** — நிச்சயமாக முடியாது!

**புத்தர்** — அது போலவே மனிதர் கண்களை மறைக்கும் திரைகள், தடைகள், ஐந்து இருக்கின்றன. அவை அவா, துவேஷம், மடிமை, செருக்கு, சந்தேகம் என்பவை. இந்த ஐந்து திரைகளாலும் பிராமணர்கள் மூடப் பெறுகிறார்கள், தடைசெய்யப் பெறுகிறார்கள்; அவர்கள் இவைகளிலே சிக்கி விடுகிறார்கள்.

அவசியமான ஒழுக்கங்களைப் பேணாமல், ஐந்து விலங்குகளையும் மாட்டிக் கொண்டு, ஐந்து திரைகளாலும் மூடப்பெற்று, பிராமணர்கள் மரணத்திற்குப் பின்னால் பிருமத்துடன் ஐக்கியமாகிவிடலாம் என்பது எங்ஙனம் முடியும்? உலகில் அது சாத்தியமில்லை.

வசிட்டா! பிராமணர்களிலே ஆசிரியர்களும் மாணவர்களும் பேசும் போதும், வயது முதிர்ந்த பெரியவர்கள்

பேசும் போதும் நீ என்ன கேட்டிருக்கிறாய்?

பிருமம் மனைவி செல்வம் முதலியவைகளைப் பெற்றிருக்கிறதா, இல்லையா?

**வசிட்டன்** — இல்லை.

**புத்தர்** — பிருமத்தின் உள்ளத்தில் கோபம் நிறைந்திருக்கிறதா, இல்லையா?

**வசிட்டன்** — கோபமில்லை.

**புத்தர்** — பிருமத்தின் உள்ளத்தில் துவேஷம் நிறைந்திருக்கிறதா, இல்லையா?

**வசிட்டன்** — துவேஷமில்லை.

**புத்தர்** — அதன் மனம் பரிசுத்தமானதா, களங்கமுற்றதா?

**வசிட்டன்** — பரிசுத்தமானது.

**புத்தர்** — அது தன்னடக்கமுள்ளதா, இல்லையா?

**வசிட்டன்** — அடக்கமுள்ளது.

**புத்தர்** — வசிட்டா! மூன்று வேதங்களையும் கற்றுணர்ந்த பிராமணர்கள் மனைவிமார்களையும், செல்வங்களையும் பெற்றிருக்கிறார்களா, இல்லையா?

**வசிட்டன்** — அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

**புத்தர்** — அவர்களுக்குக் கோபம் உளதா, இல்லையா?

**வசிட்டன்** — உளது.

**புத்தர்** — அவர்கள் இதயங்கள் பரிசுத்தமாயிருக்கின்றனவா, இல்லையா?

**வசிட்டன்** — இல்லை.

**புத்தர்** — அவர்கள் தன்னடக்கமுடையவர்களா, இல்லையா?

**வசிட்டன்** — இல்லை.

**புத்தர்**—பிராமணர்கள் மனைவிமார்களையும் செல்வங்களையும் பெற்றிருக்கிறார்கள்; ஆனால் பிருமம் பெற்றிருக்கவில்லை. ஆகவே, பிராமணர்களுக்கும் பிருமத்திற்கும் ஒற்றுமையோ, ஐக்கியமோ ஏற்பட முடியுமா?

**வசிட்டன்** — நிச்சயமாக முடியாது.

**புத்தர்** — உலகில் அது சாத்தியமில்லை.

பிராமணர்கள் உள்ளங்களில் கோபம், துவேஷம் ஆகியவைகளைப் பெற்றிருக்கிறார்கள், பாவமுடையவர்களாகவும், புலனடக்கமில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். பிருமம் கோபமற்றும், துவேஷமற்றும், பாவமற்றும், தன்னடக்கமுள்ளதாயும் விளங்குகின்றது. எனவே பிராமணர்களுக்கும் பிருமத்திற்கும் ஒற்றுமையோ, ஐக்கியமோ எப்படி ஏற்பட முடியும்?

**வசிட்டன்** — நிச்சயமாக முடியாது!

**புத்தர்** — உலகில் அது சாத்தியமில்லை.

ஆகவே பிராமணர்கள் மூன்று வேதங்களையும் கற்றுணர்ந்திருப்பினும், அவர்கள் (நம்பிக்கையோடு) அமரும் பொழுது, (சேற்றில்) ஆழ்வதுபோலக் கீழே ஆழ்ந்து விடுகிறார்கள்; அப்படி ஆழ்ந்து, எங்கோ அபாயகரமான இடத்திற்குச் செல்வதுபோல எண்ணிக்கொண்டு, அவர்கள் நம்பிக்கையையே இழந்துவிடுகிறார்கள்.

இதனால்தான் மூன்று வேதங்களையும் கற்றுணர்ந்த அவர்களுடைய மூவகை ஞானமும் நீரில்லாத பாலை என்றும், வழியேயில்லாத வனம் என்றும், அழிவுநிலை என்றும் கூறப்படுகின்றது.

**வசிட்டன்** — சிரமண கௌதமருக்கு (தங்களுக்கு)ப் பிருமத்தை அடையும் மார்க்கம் தெரியுமென்று சொல்லப்படுகின்றது......

**புத்தர்** — ஆம், மனஸாகதம் என்ற இந்தக் கிராமத்திலேயே பிறந்து வளர்ந்தவனுக்கு இதற்கு வரும் பாதைகள் யாவும் தெரிந்திருக்கும் அல்லவா?

**வசிட்டன்** — ஆம்.

**புத்தர்** — அது போல்தான் ததாகதரும். அவர் பிருமலோகத்திலேயே பிறந்திருக்கிறார், வசித்திருக்கிறார். அதற்குச் செல்லும் மார்க்கமும் அவருக்குத் தெரியும்.

**வசிட்டன்** — அப்படித்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். எங்களுக்குப் பிருமத்தோடு ஐக்கியமாகும் மார்க்கத்தைக் காட்டுங்கள்! பிராமண சாதியைத் தாங்களே காப்பாற்ற வேண்டும்!

**புத்தர்** — வசிட்ட, நான் பேசுவதைச் செவிமடுத்துக் கவனமாகக் கேட்பாயாக!

பூரண ஞானம் பெற்ற ஒரு ததாகதர் (புத்தர்) வெவ்வேறு காலங்களில் இவ்வுலகில் தோன்றுவதுண்டு. அவர் தாமாகவே இந்த உலகையும், பாதலத்திலுள்ள தேவதைகள் உலகத்தையும், உயரேயுள்ள மாரலோகம், பிருமலோகம் முதலியவைகளையும் பார்க்கிறார். சத்தியத்தை அவர் (கண்டு) போதிக்கிறார்: சொல்லிலும் பொருளிலும் அதை வெளிப்படுத்துகிறார், அதன் தொடக்கமும் இனியது, நடுவும் இனியது, முடிவும் இனியது. பரிசுத்தத்தோடும், பூரணமான செம்மையுற்ற நிலையோடும், உயரிய வாழ்க்கையை அவர் தெரிவிக்கிறார்.

இல்வாழ்வான் (அதைக் கேட்டுத்) தன்னுடைய துயரம் நிறைந்த நிலையைப் பற்றி எண்ணிப் பார்க்கிறான், குடும்பப் பாசங்களையும், தடைகளையும்பற்றிக் கருத்துக் கொள்கிறான். பிறகு தலையை முண்டனம் செய்து கொண்டு, தாடியை எடுத்துவிட்டுக் காவியுடை அணிந்து, புத்தரைப் பின்தொடர்ந்து வீடற்ற வாழ்க்கையை மேற்கொள்கிறான். அவன் ஏகாங்கியாகிறான், தன்னடக்கத்தை மேற்கொள்கிறான், பாதிமொக்கம் (பிராதி மோட்சம்)

என்ற நெறியிலுள்ள விதிகளை அநுஷ்டிக்கிறான். நேரிய ஒழுக்கமே அவனுக்கு இன்பமாயுளது. தருமத்தில் கூறப் பட்டுள்ள விநய ஒழுக்கங்களை அவன் முறைப்படி நிறை வேற்றி, அவைகளுக்குத் தக்கபடி தன்னை மாற்றிக்கொள் கிறான். சொல்லிலும், செயலிலும் அவன் புனிதமான சூழ்நிலையை அமைத்துக் கொள்கிறான். பரிசுத்தமான முறையிலேயே தன் வாழ்க்கையை நடத்துகிறான். அவன் ஒழுக்கம் செம்மையானது, அவனுடைய பொறிகளின் கதவுகள் கட்டுக் காவலுக்கு அடங்கியிருக்கின்றன, கருத்தோடும், தன்னடக்கத்தோடும், அவன் முற்றிலும் இன்பமாக இருக்கிறான்.

## ஒழுக்கத்தைப் பற்றிய விதிகள்

வசிட்டா! அவனுடைய ஒழுக்கம் நல்லதாயுளது என்றால், எதிலே?

உயிரோடு இருப்பது எதையும் கொலை செய்யாமை யினால், அவன் உயிரை அழிப்பதிலிருந்து விலகிவிடுகிறான். கம்பையும், கத்தியையும் அவன் விலக்கிவைத்து விடு கிறான்; அடக்கமும் தயையும் நிறைந்து, ஜீவனுள்ள சகல பிராணிகளிடத்திலும் அவன் அன்போடும் கருணையோடும் விளங்குகிறான்!

இதுதான் அவன் பெற்றுள்ள நல்லொழுக்கம். தனக் குரியதா யில்லாத எதையும் தான் திருடிக்கொள்வதை விட்டுத் தனக்குக் கொடுக்கப்படாத எதையும் அவன் எடுத்துக்கொள்வதில்லை. ஆதலால் அவன் திருப்தியுடன், நேர்மையாகவும், இதயத் தூய்மையுடனும் தன் வாழ்க்கை யைக் கழிக்கிறான்.

இதுவும் அவன் பெற்றுள்ள நல்லொழுக்கம்.

காம இன்பத்தை விரும்பாமல், நெறி தவறாமல், அவன் கற்பும், தூய்மையும் நிறைந்த வாழ்க்கையை நடத்துகிறான்.

இதுவும் அவன் பெற்றுள்ள நல்லொழுக்கம்.

அவன் பொய்யைப் புறக்கணித்துத் தவறானதைப் பேசுவதிலிருந்து தப்பித்துக் கொள்கிறான். சத்தியத்தி லிருந்து அவன் விலகுவதில்லை. நம்பிக்கைக்குப் பாத்திர மாயும், விசுவாசத்துடனும் நடப்பதால், அவன் தன்னோடு வாழும் மக்களை ஏமாற்றித் தீங்கு செய்வதில்லை.

இதுவும் அவன் பெற்றுள்ள நல்லொழுக்கம்.

அவதூறாகப் பேசுவதை அகற்றிவிட்டு, அவன் பிறரைத் தூஷணை செய்யாமலிருக்கிறான். தான் கேள்விப் படுகிற விஷயங்களைக் கதைகளாகத் திரித்துப் பேசி அவன் மக்களிடையே சச்சரவை உண்டாக்குவதில்லை. இவ்வாறு அவன் பிரிந்திருப்பவர்களை ஒன்றுசேர்ப்பவனாகவும், நண்பர்களை உற்சாகப் படுத்துபவனாகவும், சமாதானம் விளைப்பவனாகவும், சாந்தியை விரும்புபவனாகவும், சாந் திக்காகவே பாடுபடுபவனாகவும், சாந்தியை விளக்கும் சொற்களையே பேசுபவனாகவும் விளங்குகிறான்.

இதுவும் அவன் பெற்றுள்ள நல்லொழுக்கம்.

இன்னாச் சொற்களையும், கடுமொழிகளையும் அவன் தன் பேச்சிலிருந்து விலக்கிவிடுகிறான். மனிதப் பண்புக்கு ஏற்ற சொல்லாகவும், செவிக்கு இனியதாகவும், அழகிய தாகவும், இதயத்தைத் தொடக்கூடியதாகவும், நாயம் முடையதாகவும், மக்களுக்கு உவகையூட்டுவதாகவும், மக்கள் விரும்புவதாகவுமுள்ள சொற்களையே அவன் பேசுகிறான்.

இதுவும் அவனுடைய மேன்மைக் குணமாகும்.

அவன் வீண் பேச்சை விலக்கிவிடுவதால், அறிவீன மான சம்பாஷணை அவனிடமில்லை. அவன் தக்க காலத்தி லேயே பேசுகிறான்; உள்ளதையே பேசுகிறான்; நடப் பதையே சொல்கிறான்; நல்ல தருமக் கொள்கைகளையே

கூறுகிறான்; நல்ல ஒழுக்க நெறியையே பேசுகிறான்; சரியான சமயத்திலேயே எதையும் கூறுகிறான்; மேலும், நன்மை விளைப்பதாயும், ஆதாரமுள்ளதாயும், விளக்க முற்றதாயும், அறிவு நிறைந்ததாயுமே அவன் பேச்சு விளங்குகின்றது.

இதுவும் அவனுடைய மேன்மைக் குணமாகும்.

அவன் எந்தத் தாவரத்திற்கும், பிராணிக்கும் தீங்கு செய்வதில்லை. ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவே புசிக்கிறான்; நடனம், பாட்டு, இசை, இன்பக் காட்சிகள் ஆகியவற்றை அவன் விலக்கிவிடுகிறான்; மலர், மாலைகள், வாசனைகள், தைலங்கள் முதலியவற்றால் அவன் தன்னை அலங்கரித்துக் கொள்வதையும், அவைகளை உபயோகிப்பதையும் விலக்கிவிடுகிறான்; உயர்ந்த கட்டில்கள், பெரிய மெத்தைகள் முதலியவற்றையும் அவன் ஒதுக்கிவிடுகிறான்.

இதுவும் அவனுடைய மேன்மைக் குணமாகும்.

அவன் வெள்ளியையோ, தங்கத்தையோ யாரிடத்தும் பெறுவதில்லை; சமைக்காத தானியத்தையும், பச்சைப் புலாலையும் பெறுவதில்லை; எந்த ஸ்திரீயையோ, பெண்ணையோ ஏற்றுக் கொள்வதில்லை; ஆடவராயினும் பெண்டிராயினும் அடிமைகளையும் ஏற்றுக் கொள்வதில்லை; செம்மறியாடுகள், வெள்ளாடுகள், கோழிகள், பன்றிகள், யானைகள், கால்நடைகள், குதிரைகள், வயல்கள் அல்லது நிலங்கள் முதலியவைகளையும் அவன் பெறுவதில்லை.

இதுவும் அவனது மேன்மைக் குணமாகும்.

அவன் எதையும் வாங்கி விற்பதில்லை. கள்ளப் படிகளை உபயோகித்து, உலோகங்களைக் கலப்படமாக்கியும், கள்ள அளவைகளைப் பயன்படுத்தியும் அவன் பிறரையும் ஏமாற்றுவதில்லை.

இதுவும் அவனது மேன்மைக் குணமாகும்.

அவன் எவரையும் காயப்படுத்துவதில்லை, வதை செய்வதில்லை, பந்தனப் படுத்துவதில்லை; வழிப்பறி செய்வதில்லை, கிராமங்களைச் சூறையிடுவதில்லை, பலாத்காரத்தால் பயமுறுத்திப் பணம் பறிப்பதுமில்லை.

இதுவும் அவனது மேன்மைக் குணமாகும்.

## பிக்குகளும் பிராமணர்களும்

இதற்குப் பின்னால் புத்தர் பெருமான் பிக்கு தருமத்தை மேற்கொண்டவனுக்கும் பிராமணர்களுக்குமுள்ள வேற்றுமைகளை விரிவாக எடுத்துரைத்தார். சில பிராமணர்கள் இறைச்சி, பானவகைகள், உடைகள், படுக்கைகள், வாசனைத் திரவியங்கள், தானியங்கள் முதலியவைகளைச் சேர்த்து வைத்துக் கொள்வதும், நாட்டியம், பாட்டு, கூத்துக்கள் முதலியவைகளைக் கண்டும் கேட்டும் இன்புறுவதும், யானைச் சண்டை, குதிரைச் சண்டை, மாட்டுச் சண்டை, சிலம்பம், குஸ்தி முதலியவைகளில் ஈடுபடுவதும், சதுரங்கம், சூது, பந்தயங்கள் முதலிய ஆட்டங்கள் ஆடுவதும், ஆடம்பரமான கட்டில்கள், கம்பளத்தால் செய்த உயர்ந்த போர்வைகள், சரிகை வேலைப்பாடுள்ள தலையணைகள் அல்லது மெத்தைகள், புலித்தோல், மான்தோல் முதலியவற்றை உபயோகிப்பதும் வழக்கமாயிருக்கையில், பிக்கு அவை அனைத்தையும் விலக்கிவிடுகிறான் என்று அவர் கூறினார். சிலபிராமணர்கள் அரசர்கள், கொள்ளைக்காரர்கள், மந்திரிகள் முதலியோரைப் பற்றியும், அற்பமான துணிகள், உணவு முதலிய உலகப் பொருள்களைப் பற்றியும், சோதிடம், புதையல்கள் முதலியவை பற்றியும் உண்மையும் பொய்யுமான கதைகளைக் கூறி வீண் பேச்சில் ஈடுபடுவதைப்போல் பிக்கு ஈடுபடுவதில்லை என்றும்,

சமயப் பூசல்கள், தத்துவம் பற்றிய விவாதங்கள் முதலியவற்றில் சில பிராமணர்களைப்போல் பிக்கு தலையிடுவதில்லை என்றும், அரசர்கள், மந்திரிகள், படை வீரர்கள், செல்வந்தர்கள் முதலியோரிடையே சில பிராமணர்கள் தூதர்களாயிருந்து ஏவிய பணிகளைச் செய்வதுபோல் பிக்கு செய்வதில்லை என்றும் அவர் எடுத்துக் காட்டினார்.

சாமுத்திரிகா லட்சணங்களை ஆதாரமாய்க் கொண்டு பலன்கூறுதல், குறி, ஆரூடம் முதலியவை பார்த்துச் சொல்லல், கனவுப் பலன்கள், சகுனப் பலன்கள், எலிகள் கடித்த துணிகளைப் பார்த்து அதிருஷ்டங்களைக் கூறல், அக்கினி தேவனுக்கு யக்ஞங்கள் செய்தல், உயிர்ப் பலியிட்டு யாகங்கள் செய்தல், போரில் வெற்றி பெறவும், பிசாசுகளை ஓட்டவும், நல்ல தானியங்கள் விளையவும், பாம்பு விஷம், எலி விஷம் முதலியவற்றை இறக்கவும் என்று மந்திரங்களைப் போதித்தல், விலங்கினங்களின் பாஷைகளை அறிந்ததுபோல் பாவனை செய்தல், இரத்தினங்கள், ஆயுதங்கள், உடைகள் முதலியவற்றின் குணதோஷங்களைக் கூறுதல், ஆடவர், பெண்டிர், இளைஞர், மங்கையர், அடிமைகள் முதலியோருடைய குணதோஷங்களையும், யானைகள், குதிரைகள், மாடுகள் முதலிய மிருகங்களின் குணதோஷங்களையும் பார்த்துக் கூறுதல், எதிர்கால நிகழ்ச்சிகளை அறிந்து கூறுதல், திருமணம், தம்பதிகளின் பிரிவு முதலியவைகளில் பொய் கலந்த ஆலோசனைகள் கூறுதல், சொத்துச் சேர்க்கவும், பிறருக்கு வறுமையுண்டாக்கவும், குழந்தைகள் பெறவும், உடலின் அங்கங்களை முடக்கவும் மந்திரங்கள் சொல்லிக் கொடுத்தல், மருந்துகள் தயாரித்து வைத்தியம் செய்தல் முதலிய எத்தனையோ

காரியங்களைச் சில பிராமணர்கள் செய்து வந்ததைக் கண்டித்து, அவைகளில் எதையும் பிக்கு செய்வதில்லை என்று புத்தர் கூறினார்.

பிக்கு தியானத்தில் அமர்ந்து, உலகின் ஒரு திசை முழுவதிலும் தன் அன்பு நிறைந்த சிந்தனைகள் பரவும்படி செய்து, பின்னர் அதுபோலவே மற்ற மூன்று திசைகளிலும் பரவச்செய்து, எல்லா உயிர்களையும் அன்போடும், ஆதரவோடும், தயையோடும் தழுவிக்கொண்டு, உலகம் முழுதிலும், உயரேயும், கீழேயும், சுற்றிலும், எங்கணுமே அன்பு வெள்ளம் பெருகும்படி செய்வதே பிருமத்தோடு ஐக்கியமாகும் வழி என்று பெருமான் இறுதியாக வசிட்டனுக்கு எடுத்துரைத்தார்.

சரணாகதி

அவனும் பாரத்துவாஜனும், புதையற்பொருளைக் கண்டெடுத்ததுபோல், மனமகிழ்ந்து, ஐயனையும், தருமத்தையும், சங்கத்தையும் அடைக்கலமாக ஏற்றுக்கொண்டு, 'இன்று முதல் எங்கள் உயிருள்ள வரை எங்களைச் சீடர்களாக, தருமத்தில் உண்மையான நம்பிக்கையுள்ளவர்களாக, அங்கீகரிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டனர்.

ஆரும் இயல்

# பௌத்த சங்கம்

'இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.'

— திருக்குறள்

புத்தர், தருமம், சங்கம் ஆகிய மும்மணிகளேயும் பௌத்தர்கள் சரணங்களாகக் கொள்வர். உலகிற்கு ஒளியளித்து வழிகாட்டியவர் புத்தர், அவர் போதனை தருமம், அப்போதனையை ஏற்றுக் கொண்ட துறவிகளான பிக்குகளின் கூட்டம் சங்கம். புத்தர் மெய்ஞ்ஞானம் பெற்றதும், தரும உபதேசம் செய்ததும் உலக சரித்திரத்திலே மாபெரும் நிகழ்ச்சி களாம். ஆனல் அவருடைய தருமம் உலகிலே இருபத்தைந்து நூற்றுண்டுகளுக்கு மேலாக நிலைத்து நிற்பதற்கும், கோடிக்கணக்கான மக்கள் அதனைச் சார்ந்து மனச் சாந்தி பெறுவதற்கும் காரணமாக நின்றது சங்கமேயாகும்.

பொறிகளேயும், புலன்களேயும் அடக்கி உயர்ந்த ஒழுக்க முறைகளான சீலங்களைக் கைக்கொண்டு, உலகப் பொருள்களிலே பற்றற்று, ஞானத்தாலும், தியானத்தாலும், அன்பாலும், அருளாலும் மேம் பாடுற்று விளங்கிய பிக்குகளின் பெருமையை அளவிட்டுரைக்க முடியாது. நீத்தார்களின் பெருமைக்கு அவர்கள் எடுத்துக்காட்டாக விளங்கி ஞர்கள். அத்தகையோர் ஒரே திருக்கூட்டமாக ஒன்றுசேர்ந்து விளங்கியதே சங்கமாக நிலைத்து நிற்கின்றது. கால வெள்ளத்திலே இராஜ்யங்கள் மாறினும், மன்னர்கள் மாறினும், இச்சங்கம்

மட்டும் பல நாடுகளிலும் மாருமல் நிலைத்து நிற்கின்றது.

சங்கத்திலே சேர்ந்த பிக்குகள் அனைவருமே மகாஞானிகள் என்ரே, எல்லோரும் நிருவாணத் திற்கு உரியவர்கள் என்ரே, எல்லோருமே முதல் தரமான ஒழுக்க நிலையில் நின்றனர் என்ரே கருத வேண்டியதில்லை. ஆனல் சங்கமே அவர்கள் அனைவருக்கும் பயிற்சிக் கூடமாக விளங்கியது. துறவிகள் தனித்தனியாக, வழிகாட்டுவோரின்றித் தவிக்காமல், சங்கம் அவர்களுக்குத் தாரகமாக உதவி வந்தது. பௌத்த தருமமே வாழ்க்கைப் பயிற்சி, மெய்வழிப் பயிற்சி என்பது முன்னல் கூறப் பட்டுள்ளது. அத்தகைய பயிற்சியில் கண்ணுங் கருத்துமா யிருந்து, வளர்ச்சி பெறுவதற்குச் சங்கமே துணையாகவும், தக்க சூழ்நிலையாகவும் அமைந் திருந்தது. தற்பயிற்சி—தன்னைத் தானே திருத்திக் கொள்ளல் — என்ற முறைக்குப் போதிமாதவரான புத்தர் பெருமான் காட்டிச்சென்ற அறவழியைப் பற்றிய உபதேசங்கள் முதலில் தெரிய வேண்டும். காகிதமும், அச்சு வாகனமும் இல்லாத பண்டைப் பழங்காலத்திலே இவ்வுபதேசப் பொக்கிஷங்களைச் சங்கமே பாதுகாத்து வந்தது; அவைகளுக்குத் தெளிவான உரைகளைத் தயாரித்து வைத்தது. அது மட்டுமன்று. ஆதியில் சுமார் 500 ஆண்டுகள் வரை புத்தருடைய உபதேசங்கள் எழுதாக் கிளவியாகவே பரவி வந்தன. அந்நிலையிலும் அவைகளைத் தொகுத்துத் தக்கமுறையில் பாதுகாத்துவந்த பிக்கு களின் பரம்பரை சங்கமாகும்.

வெறும் போதனைகள் மக்களை வெகுதூரம் கொண்டுசெல்ல முடியாது. இடையிடையே எழும்

சந்தேகங்களுக்கு விளக்கம் கூறவேண்டும்; மயக்கம் ஏற்படும்போது அறிவுச் சுடரைத் தூண்டித் தெளிவிக்க வேண்டும். இந்த உதவிகளைப் பல்லாண்டுகள் பிக்குகளாக விளங்கிப் பயிற்சிபெற்ற தேரர்கள் (ஸ்தவிரர்கள்) செய்து வந்தனர். மேலும் பிக்குகளின் நெறிகளையும், பயிற்சியையும் பற்றி இளைஞர்கள் சிறு வயதிலேயே நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளவும் சங்கம் உதவி வந்தது. இலங்கை, பர்மா முதலிய நாடுகளில் சங்கம் பொது மக்களின் கல்விக்கும் இடைவிடாது தொண்டு புரிந்து வந்திருக்கிறது.

துறவு வாழ்க்கையை மேற்கொண்ட பிக்குகள் தங்கள் உடை, உணவு, உறையுள் முதலியவற்றிற்காக நாள்தோறும் கவலைகொண்டு திரியாமல், அவர்கள் உயர்தர வாழ்க்கையில் பயிற்சி பெறுவதையே தொழிலாய்க் கொண்டிருக்கச் சங்கமும் பேருதவியாக விளங்கிவந்தது.

பௌத்த சங்கம் குருமார்களுடைய கூட்டமன்று; அதில் பூசாரிகளும், புரோகிதர்களும் இல்லை; அது பயிற்சிபெறும் துறவிகளின் கூட்டமேயாகும். எத்தனை ஆண்டுகளாகப் பயிற்சிபெற்று வந்தார்கள் என்பதையும், விநய ஒழுக்கத்தில் எவ்வளவு முன்னேறியிருந்தார்கள் என்பதையும் ஆதாரமாய்க் கொண்டே பிக்குகள் மதிக்கப்பெற்று வந்தார்கள்.

### சங்கத்தின் பெருமை

சங்கத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே பிக்குகளுக்குச் சமூகத்தில் மிக உயர்ந்த மதிப்பு இருந்து வந்தது. பிக்குகளும், பிக்குணிகளும் பாடிய பாடல்கள் அடங்கிய 'தேரகாதை', 'தேரிகாதை'

ஆகியவற்றிலும், பிற நூல்களிலும், சரித்திரங்களிலும் இதைப்பற்றி விரிவாகக் காண முடிகின்றது.

'தேரிகாதை'யில் ஒரு தந்தைக்கும் மகளுக்கும் நிகழ்ந்த உரையாடலாக ஓர் அரிய பாடல் உளது. ஆரம்பக்காலத்தில் சங்கம் பெற்றிருந்த மகோன்னத நிலையை அது அழகாகச் சித்திரித்துக் காட்டுகின்றது. அதன் கருத்து வருமாறு :

*தந்தை* — *ரோகிணீ ! 'புனிதமான பிக்குகளைப் பார், தந்தாய் !' என்று நான் தூங்கும் பொழுதுகூட எழுப்பிக் கூறுகின்றாயே ! எந்நேரமும் அவர்கள் புகழையே பாடுகின்றாய் ! மகளே, நீயும் அவர்களோடு சேரப் போகின்றாயா ? நான் தேடிவைத்திருப்பதிலிருந்து எடுத்து அவர்களுக்கு உணவளிக்கிறாய். இந்தத் துறவிகளிடம் உனக்கு ஏன் இவ்வளவு பற்று ?*

*உழைத்துப் பாடுபடும் உத்தமர்களின் உணவைத் தின்று கொழுத்திருக்கும் ஒன்றுக்கும் உதவாத சோம்பேறிக் கூட்டம் இவர்கள் ! பிச்சைக்காரர்களாகிய இவர்கள் நேர்த்தியான உணவில் மட்டும் ஆசையுள்ளவர்கள். மகளே, இவர்களிடம் உனக்கு ஏன் இவ்வளவு பற்று என்பதை என்னிடம் சொல்லு !*

**மகள்** — *அப்பா ! எத்தனையோ முறை நீ என்னிடம் இப்படிக் கேட்டாயிற்று. இப்பொழுது சொல்லுகிறேன் அவர்கள் செய்யும் உன்னத வேலையைப்பற்றி, அவர்கள் உண்மையிலேயே தலைசிறந்த வேலை செய்பவர்களே; துவேஷத்தையும் ஆசையையும் எதிர்த்து அவர்கள் சளைக்காமல் எப்பொழுதும் போர் செய்துகொண்டேயிருக்கிறார்கள் !*

*அவர்களை நான் நேசித்தலாகாதா? அவர்களுடைய வேலை புனிதமானது, சிந்தனையிலும், மொழியிலும், செயலிலும் அது புண்ணியமானது; கடல் முத்து அல்லது*

வெண் சங்கைப்போல் அது பரிசுத்தமானது, பிரகாச மானது; துவேஷம், மடிமை, பேராசை ஆகிய கறைக ளில்லாத வேலை அது.

தருமத்தை அவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். அவர்கள் உபதேசிக்கும் தரும முறைப்படியே தாங்களும் நடந்துவருகிறார்கள். கல்வி நிறைந்து, புலன்களை அடக்கி, எப்பொழுதும் அவர்கள் விழிப்போடு விளங்குகிறார்கள்.

அவர்களையா நான் நேசிக்கக்கூடாது? அவர்கள் வெளியே அலைந்து திரிகிறார்கள்; எவ்வளவு அறிவுடன், எவ்வளவு தாழ்மையுடன், எவ்வளவு விநயமாக அவர்கள் நடந்து செல்கிறார்கள்! ஒவ்வொரு துக்கத்தையும், சோகத்தையும் முடிவு கண்டவர்கள் அவர்கள்! அப்பா, அவர்கள் கிராமத்துத் தெருவில் அடிவைத்துச் செல்லும் அழகினைப் பார்!

கவிழ்ந்த (முகத்துடன்) கண்கள் தரையைப் பார்க் கின்றன; அவர்களின் நடை அளவோடு உறுதியாக வுள்ளது. இடதுபுறமோ, வலதுபுறமோ திரும்பிப் பாராமல், அவர்கள் தியானம் செய்கிறார்கள். அழிந்து மறையக்கூடிய செல்வத்தை அவர்கள் மண்ணுலகில் சேர்த்து வைப்பதில்லை; அவர்களுடைய உள்ளொளி உன்னதமானது!

அவர்கள் ஏழைகளே, ஆயினும் தங்கத்தையும் வெள்ளியையும் தீண்டுவதில்லை; அவர்களுடைய சொற்பத் தேவைகள் அன்றாடம் பூர்த்தியாகிவிடுகின்றன. அவர்கள் எத்தனையோ நாடுகள் நகரங்களிலிருந்து சங்கத்தில் வந்து சேருகின்றனர்; அன்புமயமான செயல்களே அவர்களைப் புனித முறையிலே ஒன்றுசேர்த்துப் பிணித்திருக்கின்றன.

**தந்தை** — பெண்ணே, நீ பிறந்த நாள் அதிருஷ்ட நாள்தான்! திரிசரணங்களில் உனது நம்பிக்கை உறுதியாக அமைந்துள்ளது. இவர்கள் செய்வதும் ஒருவகை விவசாயமே! இதிலே நல்ல விளைவு கண்டிருக்கிறது.

உண்மையான மதிப்புயர்ந்த இத்தத் துறவிகளுக்கு நானும் ஊழியம் செய்கிறேன்! அத்தகைய ஊழியம் பன்மடங்கு பயனளிக்கும்!

**மகள்** — அப்பா! விரைவாகச் சென்று புத்தர் பெருமானைச் சரணடைவாயாக! அவர் உபதேசங்களைக் கேட்டுத் தீமைகளை யெல்லாம் களைந்துவிடுவாயாக!

**தந்தை**—இதோ நேராகப் புத்தரிடம் சரணடையச் செல்கிறேன்! அவர் போதனைகளைப் பிக்குகளிடம் கேட்கிறேன்! நானும் தரும விதிகளைக் கடைப்பிடித்து, மண்ணுலகில் தலைசிறந்த இன்பத்தைப் பெறுகிறேன்!

(பின்னால்)

இதற்கு முன்னால் நான் பிறப்பினால் மட்டும் பிராமணனா யிருந்தேன், இன்று நான் உண்மைப் பிராமணனாக ஆகிவிட்டேன்!

### சங்க விதிகள்

'திரிபிடகங்கள்' என்ற மூன்று பிரிவுகளான பௌத்தத் திருமுறைகளிலே சங்கத்திற்குரிய விதிகள் மட்டும் ஒரு தனிப் பிரிவாகும். அதுவே விநய பிடகம். பௌத்தர்களுக்கு அது மிக மிக முக்கியமானது. விநய பிடகத்தில் ஐந்து பெரு நூல்கள் அடங்கியிருக்கின்றன: அவை 'மகா விபங்கம்', 'பிக்குணி விபங்கம்', 'மகாவக்கம்', 'சுள்ள வக்கம்', 'பரிவாரம்' என்பவை. விநிய பிடகத்தில் பிக்குகளின் ஒழுக்க நியமங்களைத் தொகுத்துக் கூறும் பகுதி 'பாதி-மொக்கம் (பிராதி மோட்சம்)' என்பது. பிக்குகள் இதிலுள்ள விதிகளை நன்றாக அறிந்திருக்க வேண்டும். மாதத்திற்கு இருமுறை சங்கத்திலுள்ள பிக்குகள் ஒன்றாகக் கூடியிருக்கையில், பாதி-மொக்கத்தை எல்லோரும் ஓதுவதுண்டு. 'மகா விபங்கம்'

இதன் விதிகளுக்கு விரிவுரையாக அமைந்துள்ளது. விநய பிடகத்தோடு அதைவிடப் பெரிதாக அமைந்துள்ள அதன் வியாக்கியானத்தையும் பிக்குகள் கற்றுணர வேண்டும். பிக்குகளுக்குப் பாதி-மொக்கம் அமைந்திருப்பது போலவே, பிக்குணிகளுக்குரிய விதிகளைப் 'பிக்குணி விபங்க'த்திலே காணலாம்.

ஒவ்வொரு பிக்குவும் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் 227 என்று வகுக்கப்பெற்றுள்ளன. இவைகளைத் தவிர, பௌத்த மடாலயங்களின் தலைவர்களான தேரர்கள் அவ்வப்போது கூறும் நியமங்களையும் பிக்கு ஏற்று நடந்துகொள்ள வேண்டும்.

புத்தர் காலத்தில் பிக்குகள் சங்கம், பிக்குணிகள் சங்கம் என்று சங்கம் இரண்டு பிரிவுகளாகச் செயற்பட்டு வந்தது. சுமார் 500 ஆண்டுகளுக்குப் பின்னால், பிக்குணிகள் சங்கம் நிறுத்தப்பட்டு விட்டது. அதன் பின்னர் இன்றளவும் பிக்குகள் சங்கம் மட்டுமே நடந்துவருகின்றது.

பிக்குகள் சங்கத்தில் இரண்டு வகையான உறுப்பினர்கள் இருப்பார்கள். ஏழிலிருந்து இருபது வயதுக்கு உட்பட்ட வித்தியார்த்திகள் முதல் வகையினர். இரண்டாம் வகையினர் இருபது வயதும் அதற்கு மேற்பட்டுமுள்ள பிக்குகள். வித்தியார்த்திகள் கொல்லாமை முதலிய பத்துச் சீலங்களையும் மேற்கொண்டு ஒழுகி வரவேண்டும். பர்மாவில் ஒவ்வொரு சிறுவனும் ஏழிலிருந்து இருபது வயதுக்குள், எப்பொழுதாவது பௌத்த மடத்திற்குச் சென்று தங்கியிருந்து, வித்தியார்த்தியாகப் பயிற்சி பெறுவது இன்றும் வழக்கமாயுள்ளது. ஆனால் இதற்குப் பெற்றோர்கள் அல்லது போஷகர்களுடைய அநுமதி

வேண்டும். சங்கத்தில் ஒருமுறை சேர்ந்தபிறகு அவர்கள் எப்போது வேண்டுமாயினும் அதைவிட்டு வெளியேறலாம். வித்தியார்த்திகளும் மற்றப் பிக்குகளைப் போலவே மஞ்சள் நிறமான சீவர ஆடை புனைந்து கொள்வார்கள். ஒவ்வொரு நாளும் நண்பகலுக்கு முன்னால் பிக்குகளோடு ஒரே வேளை உணவருந்துவார்கள். அவர்கள் மடாலயங்களில் பிக்குகளுக்குத் தொண்டு செய்வதும், தண்ணீர் கொண்டுவருதல், தரையைச் சுத்தம் செய்தல் முதலிய காரியங்களைச் செய்வதும், வெளியே தெருக்களுக்குச் சென்று உணவுப் பிட்சை யெடுத்து வருவதும் வழக்கம். வேலை நேரம் போக எஞ்சிய நேரங்களில், பாலிமொழி கற்றல், திரிபிடகங்கள் கற்றல், பெரியோர்களிடம் உபதேசம் கேட்டல் முதலிய நற்காரியங்களை மேற்கொள்வார்கள். காலையிலும் மாலையிலும் அவர்கள் பிக்குகளோடு கலந்திருந்து திருமுறைகள் ஓதுவார்கள். இருபது வயது நிறைந்த பிறகு, அவர்கள் முழுத் துறவிகளாகிப் பிக்குகள் என்று அழைக்கப்பெறுவார்கள். பிக்குகளாகச் சங்கத்திலே சேருவோர் உடனேயே அங்கீகரிக்கப் பெற்ற துறவிகளாகிறார்கள். சில குறிப்பிட்ட நோயுள்ளவர்கள், கடன்பட்டிருப்பவர்கள், அரச சேவையிலிருப்பவர்கள் ஆகிய சிலருக்கு மட்டும் சங்கத்திற் சேர அநுமதியில்லை. சங்கத்தில் பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் துறவியாயிருந்த பிக்குவைத் தேரர் (ஸ்தவிரர்) என்று அழைப்பார்கள். அத்தகைய தேரரே புதிதாய்ச் சங்கத்திற்கு வருகிறவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒருவர் சங்கத்தில் பிக்குவாகச் சேர்வதைப் பிரவ்ரஜ்யை (பாலியில் பப்பஜ்ஜா) என்று சொல்வார்கள்—அதாவது உலகைத் துறத்தல், அல்லது வீடற்ற வாழ்க்கையை மேற்கொள்ளுதலாம். இது முதற் படி. இதிலேயிருந்து பயிற்சி பெற்ற பின், உபஸம்பதை என்ற முழுத் தீக்கை பெற்று முழுத் துறவியாகலாம். உபஸம்பதையே பௌத்த சங்கத்தின் உறுப்பினராவதைக் குறிக்கும். வெகு சிலருக்கு மட்டும் பிரவ்ரஜ்யை, உபஸம்பதை ஆகிய இரண்டு தீக்கைகளும் முதலிலேயே அளிக்கப் பெறுவதும் உண்டு. பிரவ்ரஜ்யைப் படியில் ஏறும்போதே திரிசரணங்களை மூன்று முறை கூறித் தசசீலங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

பிக்கு எட்டுப் பொருள்களைத் தவிர வேறு எதையும் தன் உடைமையாகக் கொள்ளக் கூடாது. அந்த எட்டும் மூன்று சீவர உடைகள், பிட்சைப் பாத்திரம், இடுப்பில் கட்டும் கச்சை, தண்ணீர் வடி கட்டுவதற்குரிய துணி, தலையை மழித்துக் கொள்ளத் தக்க கத்தி, கிழிந்த துணிகளைத் தைப்பதற்கான ஊசி ஆகியவை. பிக்கு தலையை முழுதும் முண்டனம் செய்து முகத்தையும் மழித்துக் கொள்வது வழக்கம். மடாலயத்திலுள்ள பிக்குகள் ஒருவருக் கொருவர் இந்த உதவியைச் செய்து கொள்வர். பிக்குகள் உடல் முழுவதையும் மறைத்துத் தங்கள் சீவர உடையால் போர்த்துக்கொள்வார்கள்; வலது தோள் மட்டும் திறந்திருக்கும். அவர்கள் தங்கத்தையோ, வெள்ளியையோ, பணத்தையோ தீண்டக்கூடாது.

பிக்குகள் பிட்சை எடுத்து வந்த உணவையே உண்டு வரவேண்டும். காலையிலிருந்து மதியத்திற்குள் அவர்களுடைய ஒரு வேளை உணவு முடிய

வேண்டும். சில சமயங்களில் பௌத்த தருமத்தைச் சேர்ந்த உபாசகர்கள் விரும்பி அழைத்தால், அவர்களுடைய இல்லங்களிலும் போய் உணவருந்தலாம்.

பிக்குகள் நாள் முழுவதையும் நற்காரியங்களிலேயே கழித்து வருவார்கள். வித்தியார்த்திகளுக்குக் கல்வி போதித்தல், சாத்திர ஆராய்ச்சி, திருமுறைகளைப் பார்த்துப் பிரதிகள் எழுதுதல், பாலி மொழி பயிலுதல் முதலியவை அவர்களுக்குரிய தொழில்கள். பல பிக்குகள் தியானம் செய்து பழகுவதும் உண்டு. பிக்குகள் பௌத்த மடங்களான விகாரைகளிலோ, சோலைகளிலோ, வனங்களிலோ தங்கியிருந்து இவ்வாறு சாந்தியுடன் பயிற்சி செய்து கொண்டிருப்பார்கள்.

ஒரு பிராந்தியத்தில் வசிக்கும் பிக்குகள் அனைவரும் மாதத்தில் இருமுறை ஒரே யிடத்தில் கூடுவார்கள். அமாவாசியை, பௌர்ணமி ஆகிய தினங்கள் இதற்குக் குறிப்பிடப் பெற்றுள்ளன. இப்படிக் கூடுவதற்கு உபவஸதம் * என்று பெயர். உபவஸத நாளில் பிக்குகள் கூடிப் பக்தி சிரத்தையோடு திருமுறைகளைப் பாராயணம் செய்வார்கள். இரவில் விளக்கைச் சுற்றி யாவரும் அமர்ந்திருப்பார்கள். அப்போது பிராதிமோட்ச நூலில் குறித்துள்ள விநய விதிகள் வாசிக்கப்பெறும். பிக்குகளில் முதன்மையான தேரர் எழுந்திருந்து சங்க விதிகளின்படி முக்கியமான குற்றங்களாகக் கருதக் கூடிய

* உபவஸதம் — பட்டினி, உபவாசம்; இங்கே விரத நாள் என்று கொள்ளலாம்.

விஷயங்களை ஒவ்வொன்ருகச் சொல்வார். கூட்டத்தில் எவரேனும் அவைகளில் எந்தக் குற்றத்தையாவது செய்திருந்தால், அவர் அதை அப்போது வெளிப்படையாகக் கூறி மன்னிப்பும் கோர வேண்டும். பிக்குகள் தம் குறைகளைத் தாமே உணர்ந்து சீர்திருந்துவதற்காகப் புத்தர் பிரான் இந்தப் பிராதி மோட்சத்தை ஏற்பாடு செய்திருந்தார். அது 2,500 ஆண்டுகளாக இன்றுவரை, பௌத்தர்களுள்ள இடங்களிலே, அவர் நியமித்த முறையிலேயே நிகழ்ந்து வருகின்றது. பிராதி மோட்சம் (பாதி-மொக்கம்) என்பது ஒருவர் தம் பாவங்கள் அல்லது குற்றங்களிலிருந்து விமோசனம் பெறுதலே. குற்றங்களை மறவாமல் நினைவில் வைத்திருந்து சங்கத்தின் முன்பாகக் கூறுவதில் அவைகளின் பாரம் அல்லது சுமை குறைகின்றது.

சங்கத்திலே நான்கு குற்றங்கள் மிகவும் கொடியவையாகக் கருதப்படும். பிருமசரிய விரதம் (சிற்றின்பத்தை அறவே விலக்கியிருத்தல்) பங்கமாதல், பலாத்காரம் அல்லது ஏமாற்றுச் செய்து பிறர் பொருளை அபகரித்தல், உயிர்க்கொலை (இங்கே முக்கியமாக மானிட உயிரே கருதப்படும்), அருகத்தாகிவிட்டதாகவோ, இருத்தி ஆற்றல்களைப் பெற்றிருப்பதாகவோ பொய்யுரைத்தல் ஆகிய நான்குமே அப்பெருங் குற்றங்கள். இவைகளில் ஒரு குற்றத்திற்காக மட்டுமே ஒருவரைச் சங்கத்திலிருந்து வெளியேற்றிவிடலாம்.

பிக்குகளின் ஒழுக்கத்தைக் கண்காணித்து வருவதற்குச் சங்கத்தின் பிராதி மோட்சம் மிக்க உதவியாகின்றது. அதைத் தவிர, பௌத்த நாடுகளில் பொது மக்களும் உன்னிப்பாய்க் கவனித்து வருவார்கள்.

பர்மாவில் பிக்குவைப் 'பெரும்புகழ்' என்று பொருள்படும் 'புங்கி' என்ற பெயராலேயே மக்கள் குறிப்பிடுவர். பிக்குவை எங்கே கண்டாலும், ஆண்களும் பெண்களும் அவரை வணங்கி மிக்க மரியாதையுடன் நடந்து கொள்வர். பிக்குகள் நடந்து செல்வதற்கு நடை பாவாடை விரிப்பதற்குப் பதிலாகப் பக்தியுள்ள பெண்கள் தங்கள் நீண்ட கூந்தலை அவிழ்த்துத் தரையில் விரித்து, அதன்மீது அவர்களுடைய திருவடிகள் பதியும்படி செய்வார்கள் என்ருல், அந்நாட்டில் பௌத்தத் துறவிகளுக்குரிய பெருமை நன்கு விளங்கும். ஆனல் பிக்குகள், சீல விரதங்களில் நழுவி, ஒழுக்கம் குன்றி நடக்க ஆரம்பித்தால், பொதுமக்களும் அவர்களை மதிக்க மறுத்து விடுவார்கள்.

பிக்குகளின் சங்கத்தைப் போலவே, பிக்குணிகளின் சங்கத்திற்கு உரிய விதிகளையும் புத்தர் பெருமான் நியமித்திருந்தார். அவைகளில் முக்கியமானவை எட்டு.* பிற்காலத்தில் பிக்குணிகளுக்குச் சங்கம் இல்லாமலே போய்விட்டது.

சங்கத்திலே சேர்ந்து வாழும் பிக்குகளிலே நிருவாண வழியில் நன்கு பயிற்சி பெற்று, உடம்பு

* பிக்குவை வணங்குதல், வசிக்கும் இடம், பிக்குகளிடம் உபதேசம் கேட்டல், வருஷா கால முடிவில் சங்கத்தின் விசாரணைக்கு உட்பட்டிருத்தல், பெருந்தவறுகளுக்குப் பரிகாரம், பயிற்சியின் முடிவு, பிக்குவிடப் பேசாமை, பிக்குவிடம் காட்டும் மரியாதை ஆகியவை பற்றிய விதிகள்.

உண்மை யென்னும் எண்ணத்தையும் (ஸத்காய திருஷ்டி), சந்தேகத்தையும் (விசிகித்ஸை), பயன் கருதிச் செய்யும் கிரியைகளான சடங்குகளையும் (சீல விரதம்) கைவிட்டு மேலே வந்தவர்களை ஸ்ரோதாபன்னர் (ஸோதாபன்னர்) என்பர்; அதாவது ஆற்றைக் கடக்கும் நோக்கத்துடன் ஆற்றுள் இறங்கி விட்டவர்கள் என்று கருதப்படுவார்கள். அந்த நிலையிலே அவர்களுக்கு மேலும் ஏழு பிறப்புக்கள் உண்டென்று கூறப்படும். இதற்கு மேல்நிலையிலுள்ளவர்கள் ஸக்ருதாகாமிகள் (ஸகதாகாமிகள்) எனப்படுவர். அவர்களுக்கு மேலும் ஒரு பிறப்பு உண்டு. மூன்ருவதான உயர்ந்த நிலையிலுள்ளவர்கள் அநாகாமிகள். அவர்களுக்கு இனிமேல் பிறப்பில்லை. நான்காவது முடிவான மகோன்னத நிலையிலுள்ளவர்கள் அருகத்துகள் எனப்படுவர்; அவர்கள் பரிபூரணமான பயிற்சி பெற்று விளங்குபவர்கள். அவர்கள் இந்தப் பிறப்போடு நிருவாண நிலைக்கு உரியவர்கள்.

சங்கம் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒன்ருக இருந்து வருகின்றது. பௌத்த சங்கத்திலே சேர்ந்து வாழும் பிக்குகள், தமக்கு விருப்பமில்லை என்ருல், எப்போது வேண்டுமானுலும் அதைவிட்டு விலகி, மீண்டும் இல்லறத்தை மேற்கொள்ளலாம். இதைப் போலவே பயிற்சிகளிலும் அவரவர் சொந்த விருப்பப்படி முயற்சி செய்து கொள்ளலாம். ஆனல் ஒழுக்கத்தை மட்டும் யாவரும் உயிருக்கு மேலாகப் பாவித்து வரவேண்டும்.

*'ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர், இழுக்கத்தின்*
*ஏதம் படுபாக் கறிந்து.'*

ஏழாம் இயல்

# பௌத்தத் திருமுறைகள்

'போதி நீழற்
சோதி பாதம்
காத லால்நின்(று)
ஓதல் நன்றே!'

புத்தர் பெருமான் பரிநிருவாண மடைந்த பிறகு மகா காசியபர், அநுருத்தர், ஆனந்தர், உபாலி முதலியோரும், மற்ற பிக்குகளும், மேற்கொண்டு பெருமானின் போதனைகளைப் பரிசுத்தமாகக் காப்பாற்றி வைத்திருப்பதுபற்றிக் கூடிப் பேசினார்கள். உபாலி, ததாகதருக்குப் பின்னால் அவர் அருளிய தருமமே ததாகதர் என்று கருதி, அதை மாசுபடாமல் புனிதமாகப் போற்றி வரவேண்டும் என்று கூறினார். 'புத்தர் பெருமானின் உபதேசங்களின் உட்பொருளைக் கைவிட்டுவிட்டு, அவருடைய தாதுக்களுக்காகத் தகோபாக்களை நிறுவுவதில் என்ன பயன் உண்டு?' என்றும் அவர் வினவினார். அநுருத்தர் எழுந்து நின்று, சத்தியமே உருவாகிவந்தவர் கௌதம சித்தார்த்தர் என்றும், அவர் தோன்று முன்பும் இந்த உலகிலே உண்மையிருந்து வந்தது என்றும், அவருக்குப் பின்னாலும் அது நிலைத்து நிற்கும் என்றும் அவரே கூறியுள்ளார் என்றும் பேசினார். 'நாம் சத்தியத்திற்கு மரியாதை செய்வோம்; சத்தியத்தை ஆராய்ந்து எடுத்துக் கூறுவோம்; சத்தியத்திற்குப் பணிந்து நடப்போம். ஏனெனில் சத்தியமே நமது குருநாதரும், தலைவரும்,

பிரபுவுமான புத்தர்!' என்று அவர் உருக்கத்தோடு கூறினர். மகாகாசியபர், புத்தர் பிரான் தருமமாகிய காயத்தோடு (உடலோடு) விளங்குகிருர் என்பதை விளக்கிச் சொன்ஞர். பெருமானுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளேயும், உபதேசங்களேயும், வரலாறுகளே யும் சங்கம் பாதுகாத்து வைத்துக்கொண்டிரா விட்டால், பிற்காலத்துச் சந்ததியார்கள் மாபெரும் முனிவராகிய சாக்கிய முனிவரைப் பற்றி எதுவும் அறிந்துகொள்ள வழியில்லாமற் போய்விடும் என்று அவர் எச்சரிக்கை செய்தார்.

அப்போது பிக்குகள் அனைவரும் பிற்காலத்துச் சந்ததியார்களுக்காகப் புத்தபகவரின் கொள்கைகளே யும், தத்துவங்களேயும், விதிகளேயும், அவைகளில் கலப்பு ஏற்படாதபடி, புனிதமான நிலேயில் முறைப் படுத்தி வைப்பதற்காக விரைவிலே இராஜகிருக நகரில் 500 பிக்குகளேப் பிரதிநிதிகளாகக் கொண்ட மகாநாட்டைக் கூட்ட வேண்டும் என்று தீர்மானித்தனர்.

### முதல் மகாநாடு

அந்தத் தீர்மானத்தின்படி நான்கு மாதங் களுக்குப் பின் இராஜகிருக நகருக்கு அருகிலிருந்த ஸத்தபனி மலேக் குகையிலே பௌத்த பிக்குகளின் முதலாவது மகாநாடு கூடிற்று. மகா காசியபர் அதற்குத் தலேமை வகித்தார். மகத மன்னர் அஜாதசத்துரு அதற்கு வேண்டிய எல்லா உதவி களேயும் செய்து கொடுத்தார். மகாநாட்டில் ஆனந்தர் மேடைமீது ஏறிநின்று, யாவரையும் வணங்கிவிட்டுத் தாம் கேள்விப்பட்ட முறையில் புத்தர் பெருமானின்

உபதேசங்களைக் கூறிவந்தார். முதலாவதாக அவர் 'தரும சக்கரப் பிரவர்த்தன சூத்திர'த்தை ஓதுகையில் அஜ்ஞாத கௌண்டின்யர், தாம் சாரநாத்தில் மான் தோட்டத்திலே பெருமானுடைய திருவாயிலிருந்து கேட்ட முறையிலேயே அச் சூத்திரம் அமைந்திருந்ததாகவும், அதை முதலில் கேட்டதனால் தமக்கு மேற்கொண்டு பிறப்பை ஒழிக்கும் ஞானம் ஏற்பட்டதாகவும் கூறினார். அப்போது பெருமானின் நினைவு வந்ததால், அவர் சிறிது நேரம் மெய்ம்மறந்து விழுந்துவிட்டார். மேற்கொண்டு ஆனந்தர் கூறி வந்த சூத்திரங்களை மகாகாசியபரும், கூடியிருந்த பிக்குகள் அனைவரும் சரிதான் என்று ஏற்றுக் கொண்டபிறகு, மற்றச் சூத்திரங்களும் வரிசையாகக் கூறப்பெற்றன. ஆனந்தர் கூறியவைகளைத் தொகுத்து, அவதானங்கள் பற்றியவை, கந்தங்கள் பற்றியவை, இருத்தி ஆற்றல்கள் பற்றியவை, புத்தரின் விளக்கங்கள் என்றவாறு சூத்திரங்கள் பிரிக்கப் பெற்றன. சில தொகுதிகள் நீளத்தை வைத்துத் தீக (நீண்டது) என்றும், மஜ்ஜிம (மத்திமம் அல்லது நடுத்தரமானது) என்றும், சுள்ள (குள்ளமானது) என்றும் பிரிக்கப்பெற்றன. பாடல்களாக உள்ளவை வேறுபடுத்தப் பெற்றன. ஆனந்தர் கூறியவை தருமம் சம்பந்தமான சூத்திரங்களே. அவைகள் 'சுத்த பிடகம் (சூத்திர பிடகம்)' என்ற தலைப்பில் பல பகுதிகளுள்ள ஒரே தொகுப்பாக்கப் பெற்றன. சுத்தம் (பாலி) என்பது சூத்திரம்; பஞ்சினால் நூற்கும் நூலைச் சூத்திரம் என்பது போல், கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறும்

வாசகங்களுக்கும் சூத்திரங்கள் என்று பெயருண்டா யிற்று. பின்னால் பல சூத்திரங்களைக் கொண்ட நூலுக்கும் சூத்திரம் என்று பெயருண்டாயிற்று.

ஆனந்தரைப் போல உபாலி விநய ஒழுக்கங்கள் பற்றிய சூத்திரங்களை ஓதினர். அவை அனைத்தும் சரியா யிருந்ததால், சபையோர் கேட்டு ஏற்றுக் கொண்டனர். அவை 'விநய பிடகம்' என்ற நூலாகத் தொகுக்கப் பெற்றன.

கடைசியில் அபிதரும (தருமம் பற்றிய சூத்திரங் களுக்கு விளக்கம்) சூத்திரங்களைத் தலைவர் மகா காசியபரே ஓதினர். அவைகளும் அங்கீகரிக்கப் பெற்று 'அபிதரும பிடகம்' என்ற நூலாகத் தொகுக்கப் பெற்றன.

இவ்வாறு பௌத்த பிக்குகளின் முதல் மகா நாட்டிலே திரிபிடகங்கள் தொகுதிகளாகத் தொகுக்கப்பெற்றன. அப்போது முதலில் தருமம், விநயம் ஆகிய இரண்டு பிடகங்களே தொகுக்கப் பெற்றதாயும், பின்னால் அந்த இரண்டுமே மூன்றாகப் பிரிக்கப்பெற்றன என்றும் சொல்லப்படுகின்றது. சூத்திரங்களைத் தொகுக்கும் பணியிலே முதன்மையா யிருந்தவர்கள் அனைவரும் புத்தர் பெருமானுடன் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்தவர்கள்.

### இரண்டாம் மகாநாடு

முதல் மகாநாட்டிலிருந்து ஒரு நூற்றாண்டுக்குப் பின் பிக்குகளின் சங்கத்திலே புதிதாகத் தோன்றிய சில பழக்கங்களை நீக்க வேண்டும் என்று முயற்சி செய்யப்பட்டது. பெரும்பாலான பிக்குகள் பழைய

விதிகளின் புனிதத்திற்குப் பாதகமானவைகளைப் களைந்துவிட வேண்டும் என்று தீர்மானித்தனர். ஆனால் வேறு பல பிக்குகள் அதை எதிர்த்தனர். அந்நிலையில் வைசாலி நகரில் 700 பிக்குகளைக் கொண்ட மகாநாடு கூடி, எட்டு மாதங்கள் ஆராய்ச்சிகளும் விவாதங்களும் நிகழ்ந்த பின், புதியன புகுவதைத் தடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப் பெற்றது. இந்த முடிவை ஏற்றுக்கொள்ளாத பதினாயிரம் பிக்குகள் பழைய சங்கத்திலிருந்து தனியாகப் பிரிந்து சென்றுவிட்டனர்.

### மூன்றாம் மகாநாடு

இதற்குப் பின்னால் சுமார் 125 ஆண்டுகள் கழிந்த பிறகு, அசோக சக்கரவர்த்தி காலத்தில், அவருடைய மகத சாம்ராஜ்யத்தின் தலைநகரான பாடலிபுரத்தில் பிக்குகளின் மூன்றாம் மகாநாடு நடத்தப்பெற்றது. அதிலும் குறைபாடுகள், கலப்புக்கள் யாவும் நீக்கப்பெற்றுத் திரிபிடகங்கள் பரிசுத்த நிலையில் வைக்கப்பெற்றன. அந்த மகாநாட்டைச் சக்கரவர்த்தியே கூட இருந்து சிறப்பாக நடத்தி வைத்தார்.

### நான்காம் மகாநாடு

இதற்கு இரண்டு நூற்றாண்டுகட்குப் பிறகு கனிஷ்க சக்கரவர்த்தி காலத்தில் நான்காவது முறையாக ஒரு மகாநாடும் நடத்தப் பெற்றது.

கிறிஸ்துநாதர் பிறப்பதற்குச் சில வருடங்களுக்கு முன்னால் இலங்கைத் தீவை ஆண்டுவந்த

வட்டகாமினி அபயன் காலத்திலேதான் திரிபிடகங்கள் எழுத்தில் எழுதி வைக்கப்பட்டதாக இலங்கை வரலாறுகள் கூறுகின்றன.

### பௌத்த சமயப் பிரிவுகள்

மகத நாட்டில் புத்தர் காலத்தில் வழங்கிவந்த அர்த்தமாகதி என்ற பாலிமொழியிலேயே அவர் பேசியும் உபதேசித்தும் வந்தார். அதற்கு முன்னால் சமய சம்பந்தமான விஷயங்கள் யாவும் வடமொழியாகிய சமஸ்கிருதத்திலேயே கூறப்பெற்று வந்தன. ஆனால் புத்தர், மக்கள் பேசும் மொழியிலேயே, எல்லோரும் புரிந்துகொள்ளும்படி உபதேசம் செய்து வந்தார். எனவே திரிபிடகங்கள் பாலிமொழியிலேயே அமைந்துள்ளன.

திரிபிடகங்களையே ஆதாரமாய்க் கொண்டு அவைகளை ஓதி, அவைகளின்படி நடந்துவரும் பௌத்தர்கள் இலங்கை, பர்மா, தாய்லாந்து முதலிய நாடுகளிலே வசித்து வருகிறார்கள். அவர்கள் பின்பற்றும் பௌத்த தருமத்திற்குத் **தேரவாத பௌத்தம்** (தேரர்களுடைய பௌத்தம்) என்று பெயர்.

பிற்காலத்தில் வட இந்தியாவில் பௌத்த தருமத்தைப் பற்றியும், புத்தர் சரித்திரம் பற்றியும் வடமொழியிலே பல நூல்கள் தோன்றின. பௌத்தர்களிலே ஒரு பிரிவினர் தேரவாத பௌத்தம் பூரணமானதன்று என்று கருதிப் புதிய கருத்துக்களையும், தத்துவங்களையும் ஆராய்ந்து தமது தருமத்தோடு சேர்த்துக் கொண்டனர். இவர்களுடைய பௌத்த தருமத்திற்கு **மகாயான பௌத்தம்**

என்று பெயர். மகாயானம் என்பதற்குப் பெரிய அல்லது மேலான வாகனம் என்றும் சொல்வதுண்டு. நிருவாணப் பேற்றுக்கு அழைத்துச் செல்லும் மேலான வாகனம் மகாயானம் என்பதே கருத்து. திபேத்து, சீனு, ஜப்பான் முதலிய நாடுகளிலுள்ள பௌத்தர்கள் மகாயானத்தைச் சேர்ந்தவர்கள். மகாயான பௌத்தர்கள், தேரவாத பௌத்தம் தம்முடைய தருமத்திலும் குறைந்தது, குறைபாடுள்ளது என்ற கருத்தில் அதை ஹீனயானம் (சிறிய அல்லது தாழ்ந்த வாகனம்) என்று குறிப்பிடுவார்கள். ஆனால் தேரவாத பௌத்தர்கள் அந்தப் பெயரை ஏற்றுக்கொள்வதில்லை.

தேரவாத பௌத்தமே புத்தர் பெருமானின் மூல உபதேசங்களை அப்படியே போற்றிப் பின்பற்றி வருவது. மகாயான பௌத்தர்கள், புத்தர் பிரான் வெளிப்படையாக மக்களுக்குக் கூறிய செய்திகளையும் உபதேசங்களையும் மட்டுமே தேரவாதம் அடிப்படையாகக் கொண்டிருப்பதாயும், அவர் தம் அந்தரங்கச் சீடர்களான உயர்ந்த படியிலுள்ள பிக்குகளுக்குச் செய்த உபதேசங்களைத் தாங்கள் பின்பற்றுவதாயும், பெருமானின் உபதேசங்களின் உட்கருத்தை அறிந்து தாங்கள் நடந்து வருவதாயும் கூறுவர்.

மகாயானம் வேதாந்திகளுடைய அத்வைதக் கொள்கைக்கு நிகராகக் கருதப்படுவது. அதைக் கொண்டே வேதாந்தத்தை ஆதாரமாய்க் கொண்ட அத்வைதிகளை மற்ற சித்தாந்தத் தலைவர்கள் 'பிரச்சன்ன பௌத்தர்கள்— (மறைமுகமான பௌத்தர்கள்' என்று கூறுவதுண்டு. மகாயானத்தில் சமயங்களுக்கு வேண்டிய கோட்பாடுகளும், கிரியைகளும் சேர்த்துக் கொள்ளப் பெற்றன. தத்துவ

விசாரங்களும் அதில் அதிகமுண்டு. தனித் தனியாக மனிதர்கள் முயற்சி செய்து முக்திபெற இயலாது என்றும், ஜீவராசிகள் அனைத்தையும் கருத்திற் கொண்டே ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும் என்றும் மகாயானம் வற்புறுத்தும். சுருக்கமாய்ச் சொன்னால், அது வேதாந்தம், இஸ்லாத்தில் ஸூபிகளின் கொள்கை, தென்னாட்டுச் சித்தர்களின் கூடமான சித்தாந்தங்கள் ஆகியவற்றைப் போன்றது எனலாம். எனவே பௌத்தம் வாழ்க்கை நெறி அல்லது தருமம் என்ற நிலை மாறி, மகாயானத்தில் அது ஒரு பூரணமான சமயமாக அமைந்துளது. சிலை வணக்கம் உட்படப் பலவித வணக்க முறைகளுக்கும் அது இடம் கொடுக்கும். அது புத்தரைத் தெய்விக நிலைக்கு உயர்த்திக் கூறும். மொத்தத்தில் மகாயானம் மக்களின் மனத்தைக் கவரக்கூடிய பல அமிசங்களையும் தன்னுள்ளே கொண்டது.

தேரவாத பௌத்தம், ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தானே தீபமாயிருந்து, தானே இடைவிடாது முக்திக்கு முயற்சிசெய்து வரவேண்டும் என்று கருதுவது. நம்பிக்கையைவிட அதற்கு ஒழுக்கமே பிரதானம். வெளியிலிருந்து புதுத் தத்துவங்கள் தன்னுள் கலந்துவிடக் கூடாது என்பதில் அது கண்ணும் கருத்துமா யிருந்து வருவது. புத்தர் பெருமானை அது எவ்வளவு உயர்வாகப் போற்றி வந்த போதிலும், அவரும் மனிதரே என்ற கொள்கையைப் புறக்கணிப்பதில்லை.

மகாயானத்தைப் பின்பற்றுவோரிலும் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒரு பிரிவினர் மாத்தியமிகர், மற்றொரு பிரிவினர் யோகாசாரர். இதேபோலத்

தேரவாதத்தைப் பின்பற்றுவோரிலும் சௌத்திராந்திகர், வைபாஷிகர் என்ற இரு பிரிவினர் உண்டு.

மகாயானம் தேரவாதம் ஆகிய இரண்டு பெரும் பிரிவுகளைத் தவிர பௌத்த சமயத்திலே நாளடைவில் வேறு சில சிறு பிரிவுகளும்* ஏற்பட்டிருந்தன. முக்கியமாகப் பௌத்தக் கொள்கைகள் வெளிநாடுகளிலே பரவிய காலங்களில் ஆங்காங்கே நிலவிவந்த பழைய சமயங்களின் கொள்கைகள் சிலவும் அவைகளோடு கலந்து விடுவது இயல்பாயிருந்தது. இவ்வாறு கலப்பினால் தோன்றிய ஒன்றுதான் ஜென் பௌத்தம் என்பது. இது சீனாவிலும் ஜப்பானிலும் பிரபலமாயுள்ளது. 'ஜென்' என்ற ஜப்பானிய மொழிக்குத் தியானம் என்று பொருள். ஜென் பௌத்தம் தியான மார்க்கமாகும். சீனாவில் முன்பு நிலைத்திருந்த 'டாவோ' மதமும் மகாயான பௌத்தமும் கலந்து இது தோன்றியது என்பர். இதை முதலில் சீன தேசத்திலே போதித்தவர் போதிதருமர் என்பவர். இவர் தமிழ் நாட்டில் காஞ்சீபுரத்திலிருந்து பௌத்த மதப் பிரசாரத்திற்காக வெளிநாடுகளுக்குச் சென்றவர்.

---

* இப்பிரிவுகளைச் சேர்ந்தவர்களில் முக்கியமானவர்கள் ஸர்வாஸ்திவாதிகள், வாத்ஸிபுத்ரியர், தருமகுப்திகர், காசியபியர், மகாசங்கிகர், பகுசுருதியர், சைத்தியகர்.

திபேத்து, நேபாளம், சீனம், ஜப்பான் ஆகிய நாடுகளிலும் பல பிரிவினர்கள் இருக்கின்றனர்.

போதிதருமருக்கு ஆதாரமாயிருந்த நூல்களுள் 'இலங்காவதார சூத்திரம்' ஒன்று. அதிலே காணப் பெறும் கீழ்க்கண்ட வாக்கியங்கள் தியான மார்க்கத் தின் சிறப்பை எடுத்துக் காட்டுபவை:

*'உண்மையை உணராமல் வீணுக விவாதம் செய்வோர் விஞ்ஞானங்களாகிய (உலகியல் அறிவுகளாகிய) காட்டில் அங்குமிங்கும் அலைந்து திரிந்து, தங்களுடைய "நான்" என்னும் அகம்-பிருமவாதத்திற்கு நியாயம் காட்ட முயன்று மறைந்து விடுவார்கள். உங்களுடைய உள்ளுணர்வின் அடித்தலத்திலே உணரப்படும் "அகம்" (அந்தராத்மா) தனது பரிசுத்த நிலையிலுள்ளது; அதுவே ததாகத-கர்ப்பம் (புத்தக் கரு), அது அறிவால் மட்டும் ஆராய்ந்து கொண் டிருப்பவர் காணக்கூடியதன்று.'*

பிற்காலத்தில் சில பௌத்தர்கள் தாந்திரிக முறைகளை மேற்கொண்டு, அவற்றின் மூலம் அரிய சித்துக்களை அடையலாம் என்று முயன்று வந்தனர். அவர்களுடைய முயற்சியால் புத்த வணக்கமும், சக்தி யாகக் கருதப்படும் தாராதேவி வணக்கமும், வஜ்ர வணக்கமும் ஏற்பட்டன. இத் தெய்வங்களுக்காகப் பல ஆலயங்களும் அமைக்கப் பெற்றன. பொது மக்களின் உள்ளங்களைக் கவருவதற்கு ஆலயங்கள், சிலைகள், திருவிழாக்கள், ஊர்வலங்கள் முதலிய வைகள் மிகவும் பயன்பட்டு வந்தன. இவ்வாறு திபேத்து முதல் சீனு வரையிலும் பௌத்தர்க ளிடையே சில பகுதியினர் சிலைகள் முதலிய வற்றை வணங்குவது வழக்கமாயிற்று. சீனுவிலும் ஜப்பானிலும் அமிதாப புத்தர் என்ற சிலையின் வணக்கம் மிகப் பிரபலமா யிருந்தது. அமிதாப என்றால் அமிதமான, அல்லது எல்லையற்ற பிரபை அல்லது ஜோதி என்று பொருள்.

எந்தச் சமயமும், சித்தாந்தமும் அதை நிறுவும் தலைவருடைய முறைப்படி சிறிது காலம் நிலைத்திருப்பினும், பின்னால் நாளடைவில் அது மக்களிடையே பரவும்போது, அது அவர்களுடைய மனப் பண்பாடுகளுக்குத் தக்கபடி பல மாறுதல்களை அடைவது இயற்கை. ஆற்று நீர் தான் பாயும் நிலங்களின் தன்மையைப் பெறுவது போன்றது இது.

இந்திய நாட்டில் தோன்றிய பௌத்த தருமம் சீன நாட்டுக்குச் சென்று எத்தகைய மாறுதலையடைந்தது என்பதற்குச் சீன அறிஞர் ஒருவருடைய கீழ்க்கண்ட உரையைப் பார்த்தால் தெரியவரும். இது சித்தர்களுடைய வாக்கைப்போலப் பொருட் செறிவுடன் விளங்குகின்றது :

'உள்ளொளி புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் அப்பாற் பட்டது; ஆகாசத்தைப்போல அது எல்லையற்றது, எனினும் அது இங்கேயேயுள்ளது, நம்முள்ளே உறைவது, தனது தெளிந்த சுடருடன் பூரணமாயுள்ளது.

'நீ தேடிப்பிடிக்க முயலும் போதுதான் அதை நீ இழந்துவிடுகிறாய், உன்னால் அதைப் பற்றிப்பிடிக்க முடியாது, அதைவிட்டு நீ விலகியிருக்கவும் முடியாது, இரண்டும் உன்னால் இயலாத நிலையில், அது தன்வழியே போய்க்கொண்டுதான் இருக்கின்றது.

'நீ மௌனமா யிருக்கும்போது, அது உரையாடுகின்றது; நீ உரையாடும்போது, அது மௌனத்தில் ஆழ்ந்துவிடுகின்றது.

'நீதியால் வந்த நெடிய தருமநெறி முற்றிலும் திறந்தேயுள்ளது; அதிலே தடைகள் எதுவுமில்லை.'


திரிபிடகம்
விநய பிடகம்
(5 புத்தகங்கள்)
சுத்த பிடகம்
(5 தொகுப்புக்கள்)
அபிதரும பிடகம்
(7 புத்தகங்கள்)
சுத்த - விபங்கம்
கந்தகை
பரிவாரம்
மகாவக்கம்
சுள்ளவக்கம்
மகா-விபங்கம்
பிக்குணி-விபங்கம்
தம்ம-சங்கணி
விபங்கம்
தாது-கதை
புக்கல-பண்ணத்தி
கதா-வத்து
யமகம்
பட்டானம்
தீக-நிகாயம்
மஜ்ஜிம-நிகாயம்
சம்யுத்த-நிகாயம்
அங்குத்தர-நிகாயம்
குத்தக-நிகாயம்
(15 புத்தகங்கள்)
குத்தக-பாடம் (1)
தம்மபதம் (2)
உதாநம் (3)
இதிவுத்தகம் (4)
சுத்தநிபாதம் (5)
விமான-வத்து (6)
பேத-வத்து (7)
தேர-காதை (8)
தேரி-காதை (9)
ஜாதகம் (10)
நித்தேசம் (11)
படிஸம்பிதாமக்கம் (12)
அவதானம் (13)
புத்த வம்சம் (14)
சரியா-பிடகம் (15)

## திருமுறைகள்

மேலே கூறிய பௌத்த சமயப் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் ஆதாரமான நூல்கள் பல இருக்கின்றன. மகாயானம், தேரவாதம் ஆகிய முக்கியமான இரண்டு பிரிவுகளுக்கும் முறையே வடமொழியிலும், பாலிமொழியிலும ஆதார நூல்கள் உள்ளன. இவைகளில் பாலியிலுள்ள திரிபிடகங்களே சரித்திர பூர்வமாக முதலில் ஏற்பட்டவை. அவைகளே திருமுறைகள் என்று போற்றப் படுகின்றன.

பிடகங்கள் *சுத்த பிடகம், விநய பிடகம், அபிதரும பிடகம்* என்று மூன்று தொகுதிகளாயுள்ளன. சுத்த பிடகம் புத்தர் பிரானின் உபதேசங்களைச் சூத்திரங் களாகக் கொண்டது; விநய பிடகம் சங்கத்திற்குரிய ஒழுக்க நியமங்களைக் கொண்டது; அபிதரும பிடகம் சூத்திரங்களுக்குரிய விளக்கங்களையும், மற்றும் நுணுக்கமான தத்துவங்களையும் கொண்டது. முதற் பிடகத்திலுள்ள எல்லாச் சூத்திரங்களுமே உபதேசங் கள் என்று சொல்வதற்கில்லை; அவைகளில் கதை களும், வரலாறுகளும் கலந்தேயிருக்கின்றன.

## சுத்த பிடகம்

*தீக நியாகம், மஜ்ஜிம நிகாயம், சம்யுத்த நிகாயம், அங்குத்தர நிகாயம், குத்தக நிகாயம்* என்ற ஐந்து நிகாயங்கள் (தொகுதிகள்) சுத்த பிடகத்தில் அடங்கியுள்ளன.

1. *தீக நிகாயம்:* இது ஒரு நீண்ட தொகுதி. இது *சீலக் கந்தவக்கம், மகா வக்கம், பாடிக வக்கம்* என்ற மூன்று வக்கங்கள் (பகுதிகள்) உள்ளது.

சீலக்கந்த வக்கத்தில் அருகத்து நிலை அடைவதற்குரிய சீலம், சமாதி, பிரஞ்ஞை முதலியவை கூறப்பட்டிருக்கின்றன. புத்தர் காலத்துப் பிராமணருடைய ஒழுக்க முறைகளில் காணப்பெற்ற தவறுகளையும் குறைகளையும் அவர் எடுத்துக் காட்டிப் பௌத்த பிக்குகள் சீலத்தைப் பேணவேண்டிய முறைகளை விளக்கிக் கூறியுள்ள வாசகங்கள் இந்த வக்கத்திலுள்ள 'பிரம்மஜால சுத்தம்' 'தேவிஜ்ஜ சுத்தம்' ஆகிய இரண்டு சுத்தங்களில் இருக்கின்றன. மற்றவைகளில் துறவிகள் அடையும் பேறுகள், உபாசகர்கள் கடமைகள், வைதிக கருமங்களாகிய யாகம் முதலியவை, நால்வகை வாய்மைகள், சாதி முறை, உயிர்ப்பலி மறுப்பு, தெய்விக தரிசனம், உயிர் – உடல் பற்றிய விசாரம், உடலைத் துன்புறுத்தித் தவம் செய்தலைக் கண்டித்தல், ஆன்மா, ஆசிரியர் கடமைகள் முதலிய விஷயங்கள் விவரிக்கப் பெற்றுள்ளன.

மகா வக்கத்தில் பத்துச் சூத்திரங்கள் அமைந்துள்ளன. அவைகளில் புத்தருடைய பூர்வ ஜன்ம வரலாறுகள் சிலவும், காரண – காரியத் தொடர்புகளும், ஆன்மா பற்றிய தத்துவங்களும், புத்தருடைய அந்திம கால நிகழ்ச்சிகளும், அவர் ஓர் இயக்கனுக்குக் கூறிய கதையும், தேவர்கள் புத்தரைத் தரிசித்த வரலாறும், சக்கன் என்னும் தேவனுடைய பத்துக் கேள்விகளுக்கு அவர் கூறிய மறுமொழிகளும், நான்கு தியானங்கள் பற்றியும், பாயாசி என்பவரைச் சங்கத்திலே சேர்த்த விவரமும் குறிக்கப்பட்டுள்ளன. அவைகளில் மிக முக்கியமானது புத்தருடைய அந்திம கால நிகழ்ச்சிகளைக் கூறும் '*மகா - பரி - நிருவாண சூத்திர*' மாகும்.

பாடிக வக்கத்தில் பதினேரு சூத்திரங்கள் இருக்கின்றன. பிரபஞ்ச உற்பத்தி, நிக்ரோதருக்கும் புத்தருக்கும் நிகழ்ந்த உரையாடல், மைத்திரேய புத்தரைப்பற்றிய செய்தி, வருணங்கள், ஜைன சமயத் தலைவர் நாதபுத்தருடைய மரணச் செய்தியைக் கேட்டுப் புத்தர் செய்த உபதேசம், மகான்கள், சக்கரவர்த்திகளின் 32 இலக்கணங்கள், சிங்காலனுக்குச் செய்த உபதேசம், பாவா நகரில் சாரீபுத்திரர் செய்த உபதேசம் முதலிய விஷயங்கள் அச்சூத்திரங்களில் விவரிக்கப் பெற்றுள்ளன.

2. *மஜ்ஜிம நிகாயம்*; இது நடுத்தர நீளமுள்ள தொகுதி. இதில் 15 வக்கங்களாக 152 சூத்திரங்கள் இருக்கின்றன. பௌத்த தருமத்திற்குரிய பல விஷயங்களைப் பற்றிய புத்தருடைய உரையாடல்களும், பிரசங்கங்களும், சாரீபுத்திரர்-மௌத்கல்யாயனருடைய சம்பாஷணையும் அடங்கியிருக்கின்றன. சில அழகிய உபதேசக் கதைகளையும் இதிலே காணலாம். அறிவுள்ள ஆயர்கள் தங்கள் பசுக்களையும் கன்றுகளையும் ஆற்றில் இறக்கித் திறமையுடன் மறுகரையில் சேர்ப்பதையும், அறிவற்றவர்கள் அவைகளை வெள்ளத்தோடு போகவிடுதலையும் உபமானங்களாகக் காட்டிப் புத்தர் பிரான் தாம் நல்லாயரைப்போல மக்களைக் கரையேற்றிவிட வந்தவர் என்று ஒரு சூத்திரத்தில் விளக்கிக் கூறியுள்ளார். 'அரிய பரியேசன சூத்திரம்' என்பதில் பெருமான் தாம் அரண்மனையைத் துறந்து, வனம் புகுந்ததையும், இரண்டு ஆசிரியர்களிடம் அறம் கேட்டதையும் விவரித்துள்ளார். கபிலவாஸ்துவில் சங்கத்திற்காக அமைக்கப்பெற்ற ஒரு மண்டபத்தைத் திறந்து வைத்ததும், ஆனந்தர் அப்போது நிகழ்த்திய

சொற்பொழிவும் ஒரு சூத்திரத்திலே குறிக்கப் பெற்றுள்ளன. ஒன்றில் பெருமான் பிருமலோகம் போய் வந்த செய்தி கூறப்பட்டிருக்கின்றது. அவர் கோசல மன்னர் பிரசேனஜித்துக்குச் செய்த போதனையும், ஜைன சமயத் தலைவரான நாதபுத்தரால் அனுப்பப் பெற்ற உபாலி அவருடன் செய்த விவாதமும், முடிவில் உபாலி அவரை அடைக்கலமாக ஏற்றுக் கொண்டமையும், கொள்ளைக்காரனாகிய அங்குலி மாலனைப் பெருமான் திருத்தி ஆட்கொண்டமையும் தனித்தனிச் சூத்திரங்களிலே விவரிக்கப் பெற்றுள்ளன. உயிர்க்கொலை, புலால் உணவு ஆகியவை பற்றிப் புத்தர் ஜீவகருக்குப் போதித்தது 55–ஆவது சூத்திரத்திலுளது. கௌசாம்பியில் ஒருசமயம் பிக்குகளுக்குள்ளே பிளவுண்டாகி, அதனால் பெருமான் அவர்களைவிட்டுப் பிரிந்து சென்றதும், மீண்டும் அவர்கள் அவரை யடைந்து மனம் திருந்தியதும் பற்றிய வரலாறு இரண்டு சூத்திரங்களில் அமைந்துள்ளது. மற்றும் ஆஸவங்களை அழிக்கும் வழிகள், பிக்குகள் தருமத்தின் வழித்தோன்றல்களாக விளங்க வேண்டிய முறை, அவர்கள் விரும்பத் தகாத பொருள்கள், ஆசைகள், உணர்ச்சிகள் பற்றிய விளக்கம், மனிதரைப் பிணிக்கும் 'தச சம்யோஜனங்கள்' எனற விலங்குகள், சிறப்பும் செல்வமும் பெறுதலிலுள்ள அபாயங்கள், கரும நியதி, பிக்குகளின் நியமங்கள், சுவர்க்க நரகங்கள், நால்வகைத் தியானங்கள், சமயக் கொள்கைகள், வனத்தில் ஏகாந்த வாசம், பயிற்சி முறைகள் ஆகியவைகள் பல சூத்திரங்களில் விளக்கப் பெற்றிருக்கின்றன. தலைகளை ரம்பம்கொண்டு அறுக்கும்பொதும் பிக்குகள் வெகுளியை விலக்கிப் பொறுமையோ டிருக்க வேண்டும் என்று புத்தர் ஒரு சூத்திரத்தில் உபதேசம்

செய்திருக்கிறார். மானுக்காக வேடன் காத்திருப்பது போல், மனிதனைப் பற்றிக்கொள்ள மாரன் காத்திருப்பதாக ஓரிடத்தில் அவர் விளக்கியுள்ளார். பிராமணர்களையும் சாதிகளையும் பற்றிப் புத்தருடைய கருத்துக்கள் 91 முதல் 100 வரையுள்ள பத்துச் சூத்திரங்களில் கூறப்பட்டுள்ளன.

*சம்யுத்த நிகாயம்:* இது 56 சம்யுத்தங்களைக் கொண்ட ஐந்து வக்கங்களுள்ளது. ஐந்து வக்கங்களும் ஸகாதா வக்கம், நிதான வக்கம், கந்த வக்கம், சளாயதன வக்கம்,* மகா வக்கம் என்பவை. ஒன்றோடொன்று தொடர்புடைய சூத்திரங்களைக் கொண்டிருப்பதால் 'சம்யுத்தங்கள்' (இணைப்புள்ளவை) என்று கூறப்பட்டுள்ளன. இந்த நிகாயத்தில் 2889 சூத்திரங்கள் இருக்கின்றன.

புத்தர் பெருமான் காசி நகருக்கு அருகே சாரநாத் என்ற க்ஷேத்திரத்திலே முதன் முதலாகத் தம்முடைய ஐந்து சீடர்களுக்குத் தரும உபதேசம் செய்து அற ஆழி உருட்டியதுபற்றிய '*தரும சக்கரப் பிரவர்த்தன சூத்திரம்*' இதிலேயுள்ளது. மற்றும் சில விரோதியாகிய மாரன் புத்தரையும், முக்கியமான சீடர்களையும், சில பிக்குணிகளையும், நிருவாண வழியிலிருந்து பிரிக்க முயல்வது பற்றியும், தேவர்களைப் பற்றியும், நீதிநெறி பற்றியும், கந்தங்களைப் பற்றியும், புலன்களைப் பற்றியும், பெண்களின் தன்மைகள் பற்றியும் பல சம்யுத்தங்களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. முதலாவது வக்கத்திலே இனிய பாடல்கள் பல அமைந்திருக்கின்றன.

---

* சளாயதனம்—ஷடாயதனம்,

4. *அங்குத்தர நிகாயம்:* இது 11 நிபாதங்கள் என்ற பகுதிகளையுடையது; இதில் 2308 சூத்திரங்களுள்ளன. மற்ற நிகாயங்கள் பெரும்பாலும் புத்தரை மனிதராகவே கூறுவனவா யிருக்கையில், இந்த நிகாயத்திலுள்ள சூத்திரங்கள் பல அவரைத் தெய்வமாகவே பாவிக்கும்படி அமைந்திருக்கின்றன. இதிலே தம்பதிகள் வாழவேண்டிய முறைகளும், பெற்றோர்க்குச் செய்யவேண்டிய கடமைகளும், பெண்கள் இயல்புகளும், பிறப்பு, இறப்புக்களைப் பற்றிய ஆராய்ச்சிகளும், மற்றும் பெருமானுடைய பல சம்பாஷணைகளும் குறிக்கப்பெற்றுள்ளன.

5. *குத்தக நிகாயம்:* சிறு நூல்களைப் பெற்றிருப்பதால் இந்த நிகாயத்திற்கு இப்பெயருண்டாயிற்று. இது 15 பிரிவுகளைக் கொண்டது. அவையாவன: *குத்தக பாடம், தம்மபதம், உதாநம், இதிஉத்தகம், சுத்தநிபாதம், விமான வத்து, பேத வத்து, தேரகாதை, தேரி காதை, ஜாதகம், நித்தேசம், படிஸம்பிதா மக்கம், அவதானம், புத்த வம்சம், சரியா பிடகம்.*

குத்தக பாடம்: இதில் 9 பிரிவுகள் உண்டு. இதில், 'சரணத்தயம்' (சரணத்திரயம்) என்ற பிரிவில் திரிசரணங்களும், தசசீல விரதங்களும் கூறப்படுகின்றன. உடலின் உறுப்புக்கள் பற்றி இரு பகுதிகளில் கூறப்படுகின்றன. புதிதாகப் பௌத்த தருமத்தை மேற்கொள்ளும் வித்தியார்த்திகள் எளிதாக நினைவில் வைத்துக்கொள்ளக்கூடிய முறையில் பத்துக் கேள்விகளும் பதில்களும் நான்காவது பகுதியாகிய 'குமாரபன்ஹ — சிறுவர் வினா-விடை' என்பதில் அமைந்துள்ளன. 'மங்கள சூத்திர'த்தில் ஒரு தேவனுடைய வினாக்களுக்குப்

புத்தர் அளிக்கும் மறுமொழிகள் உள்ளன. 'ரத்ன சூத்திரம்' புத்தர், தருமம், சங்கம் ஆகிய மூன்று இரத்தினங்களின் பெருமையைக் கூறுகின்றது. தென்புலத்தாருக்குச் செய்யவேண்டிய கடமையும். தானம், நீதி, தன்னடக்கம் ஆகியவையே புதையல் தனம் என்பதும், சகல உயிர்களையும் தாயன்புடன் நேசிக்கவேண்டும் என்பதும் பிற்பகுதிகளில் விளக்கப்படுகின்றன.

**தம்மபதம் :** புத்தர் பெருமானின் அரிய உபதேசங்களை ஒரே சிறு நூலில் பார்க்க வேண்டுமென்றால், அதற்குரியது 'தம்மபதம் (தருமபதம்)' என்ற இந்த அறநெறியேயாகும். இதிலுள்ள உபதேசங்கள் சுருக்கமானவை, கவிதைச் சுவை பொருந்தியவை. ஆங்கில மொழியிலே, புகழ்பெற்ற மாக்ஸ்முல்லர், 'பாரத ரத்னம்' ஸர் எஸ். இராதா கிருஷ்ணன் ஆகியோருடைய மொழிபெயர்ப்புக்கள் உட்பட நாற்பதுக்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புக்கள் இந்நூலுக்கு இருக்கின்றன. லத்தீன், ஜெர்மன், பிரஞ்சு முதலிய பல ஐரோப்பிய மொழிகளிலும், இந்திய மொழிகளிலும், சீன, ஜப்பானிய, சிங்கள மொழிகளிலும் 'தம்மபதம்' பிரபலமாக விளங்குகின்றது.

'தம்மபத'த்தில் 423 சூத்திரங்கள் 26 வக்கங்களாக அமைந்துள்ளன. இந்தச் சூத்திரங்கள், புத்தர், பிக்குகள், பிராமணர், ஞானிகள், முனிவர், சான்றோர், பேதையர் ஆகியோர்களைப் பற்றியும், அறியாமை, அவா, பற்று, கோபம், மடிமை, பொய், போலித்துறவு, காமம், பிறர் மனை இச்சித்தல், கூடா நட்பு, தீயொழுக்கம், தண்டனை, பொறுமை, புலனடக்கம், மனத்தூய்மை, கொல்லாமை, இன்பம்,

களிப்பு, உலகம், ஆன்மா, நிலையாமை, முதுமை, கருமம், கருத்துடைமை, சிந்தனை, தியானம், நட்பு, அன்பு முதலிய பல விஷயங்களைப் பற்றியும் சுருக்க மாகவும் பொருட் செறிவுடனும் எடுத்துக் கூறு கின்றன.

*உதாநம்:* இதில் 8 வக்கங்களில் புத்தருடைய விசேடமான 80 உதாநங்கள் என்ற கட்டுரைகள் இருக்கின்றன. உதாநம் என்பதற்கு 'உயிர்க்கப் பெற்றது' என்று பொருள் கூறுவர் — அதாவது புத்தரால் உயிர்க்கப் பெற்றது — கூறப்பெற்றது என்று பொருள்படும்.

*இதி உத்தகம்:* உரையும் பாட்டும் கலந்து நான்கு நிபாதங்களில் 112 சிறு சூத்திரங்கள் இதில் அமைந்திருக்கின்றன. புத்தர் 'இப்படிக் கூறினார்' என்று குறிப்பதே இதி உத்தகம்.

*சுத்த நிபாதம்:* இது ஐந்து வக்கங்களுள்ளது. செய்யுளும் வசனமும் இதிலே கலந்து வருகின்றன. புத்தருடைய வரலாற்றுப் பகுதிகள் சிலவற்றை அவரே கூறிய முறையில் இதிலே காணமுடிகின்றது. வேறு பல அரிய விஷயங்களும் இதிலிருப்பதால், இந்த நிபாதம் மிகவும் போற்றப்பெறும் நூலாகும். காசி பாரத்துவாஜர் என்ற அந்தணர் புத்தருக்கு உணவளிக்க மறுக்கையில், பெருமான் தாமும் தொழில் செய்யும் ஓர் உழவர் என்பதை விளக்கிக் கூறுதல் இதிலேயுள்ள சூத்திரமாகும். 'சுத்த நிபாதம்' என்பதற்குச் சூத்திரங்களின் தொகுதி என்று பொருள்.

*விமான வத்து:* இது கரும நியதியை விளக்கு வதற்காக எழுந்த நூல். தேவர்கள் சிலர், முன்னால்

செய்த நற்கருமங்களின் பயனாக விமானங்கள் பெற்ற கதைகளைக் கூறுவதாக இது அமைந்துள்ளது.

*பேத வத்து:* பிரேதங்கள் (ஆவிகள்) தாங்கள் முன்செய்த பாவங்களின் பயனாக அலைந்து திரிய நேர்ந்ததைக் கூறுவதாக இது அமைந்துள்ளது.

*தேர காதை:* 284 தேரர்கள் பாடிய பாடல்கள் இதில் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. பல வாழ்க்கை வரலாறுகளும், அநுபவங்களும் இப்பாடல் களில் உணர்ச்சிச் சித்திரங்களாக அமைந்திருக் கின்றன.

'துயர்களால் வருந்துவோர் நடுவே துயரின்றி நாம் இன்பமாக வாழ்கிறோம்; துயரப்படுவோர் நடுவே நாம் துயரின்றித் திரிகிறோம்!' என்று புத்தர் பெருமான் 'தம்மபத'த்தில் கூறியுள்ளதுபோல், பகையும், கவலையும், துயரமும் நீத்த தேரர்கள் அநுபவத்தோடு பாடியுள்ள செய்திகள் மிகவும் இன்பமளிப்பவை, மனச்சாந்தியளிப்பவை.

*தேரி காதை:* இதுவும் 'தேரகாதை'யைப் போன்ற இனிய கவிதைத் தொகுதி. 100 தேரிகள் பாடிய பாடல்கள் இதில் அமைந்திருக்கின்றன.

*ஜாதகம்:* புத்தர் போதிசத்துவராயிருந்து பல பிறவிகளெடுத்த கதைகளின் தொகுதி இது. பெரிதும் சிறிதுமாக இதில் 574 கதைகளைப் பற்றிய பாடல்கள் இருக்கின்றன; இடையிடையே உரை நடையும் கலந்திருக்கின்றது. பொதுவாக மக்களைப் பற்றியும், விலங்குகள், பறவைகளைப் பற்றியும் பல அரிய கதைகள் இதிலே யுள்ளன. நீதிக் கதை களும் பல இருக்கின்றன. இந்த அழகிய கதைத்

தொகுதியிலிருந்து பல கதைகள், இந்தியா மட்டு மின்றி, ஐரோப்பிய நாடுகளிலேயும் பரவி, வேறு ஆசிரியர்களின் பெயரால் உலவிவருகின்றன. ஜாதகக் கதைகளிலே தலைசிறந்த காவியமாகக் கருதப்படுவது வெஸ்ஸந்தரன் தான் பெற்றிருந்த செல்வங்களையும், மனைவி, மக்களையும் தானமாகக் கொடுக்கும் கதை. ஜாதகக் கதைகள் பல பிற மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பெற்றிருக்கின்றன.

*நித்தேசம்:* சுத்த நிபாதத்தின் முக்கியமான பகுதியில் சிலவற்றிற்கு இது விளக்கமாகும். 'நித்தேசம்' என்பதற்கு விளக்கம் என்று பொருள்.

*படிஸம்பிதா மக்கம்:* இது பொருள்களைப் பிரித்து அறியும் மார்க்கத்தைக் கூறுவது. இதில் 3 பகுதிகளுண்டு.

*அவதானம்:* செய்யுள் வடிவில் அருகத்து களுடைய அரிய செயல்கள் பலவற்றையும், அவர் களுடைய பூர்வ ஜன்ம வரலாறுகளையும் கதைகளாகக் கூறுவது இந்நூல். இதில் சாரீபுத்திரர், மௌத்கல்யா யனர், காசியபர், அநுருத்தர், ஆனந்தர், உபாலி, இராகுலர், புத்தரின் சிற்றன்னை கௌதமி, க்ஷேமை, கிஸா கௌதமி முதலியோருடைய சரித்திரங்களையும் காணலாம். 'அவதானம்' என்றால் புகழுக்குரிய செயல் அல்லது வீரச் செயலாகும்.

*புத்த வம்சம்:* இதில் புத்தர் வரலாறும், முந்திய 24 புத்தர்களுடைய சரித்திரங்களும் காணப்பெறு கின்றன.

*சரியா பிடகம்:* செய்யுள் வடிவான ஜாதகக் கதைகளில் 35 இதிலே சுருக்கி அமைக்கப் பெற்றிருக் கின்றன.

## விநய பிடகம்

பிக்குகள், பிக்குணிகளுடைய ஒழுக்கங்களுக்குரிய விதிகளைத் தொகுத்துக் கூறுவது விநய பிடகம்: இதன் 3 பகுதிகள் சுத்த விபங்கம், கந்தகை, பரிவாரம் என்பவை. சுத்த விபங்கத்தில் மகாவிபங்கம், பிக்குணி விபங்கம் என்ற இரு பிரிவுகள் உண்டு. இது போலவே கந்தகையிலும் மகாவக்கம், சுள்ளவக்கம் என்ற இரு பிரிவுகள் உண்டு. 'பரிவாரம்' என்பது ஓர் அநுபந்தமேயாகும். மகா விபங்கத்தில் பிக்குகளின் குற்றங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. பிக்குணி விபங்கத்தில், பிக்குகளுக்குரிய விதிகளைப் போல், பிக்குணிகளுக்குரிய விதிகள் குறிக்கப் பெற்றுள்ளன.

கந்தகையின் முதற் பகுதியான மகா வக்கமும் பிக்குகள், பிக்குணிகளின் ஒழுக்க முறைகளைக் கூறுவது. புத்த சரித்திர வரலாறுகள் சிலவும் இதிலுள்ளன. இதன் 10 பிரிவுகள் வருமாறு:

1. பிக்குகள் சங்கத்திற்குப் புதிதாக வருபவர்களைச் சேர்த்துக் கொள்ளும் முறை.

2. உபவாசதமும்,* பாதி - மொக்கமும் (பிராதிமோட்சமும்).

3. மழைக் காலத்தில் பிக்குகள் ஓரிடத்தில் சேர்ந்து தங்கியிருக்கும் முறை.

4. பவாரணைக் கொண்டாட்டம்.

5. பாதங்களில் அணியும் செருப்புக்கள், ஆசனங்கள், வாகனங்கள் முதலியவை பற்றிய விதிகள்.

6. பிக்குகளுக்குத் தேவையான மருந்து முதலியவை.

7. பிக்குகளுக்குரிய கொண்டாட்டங்கள்.

---

* உபவாசதம்-பக்கம் 183-அடிக்குறிப்பைப் பார்க்கவும்: பாலியில் உபோசதம்.

8. பிக்குகளின் உடைகள்.

9. சங்கத்தின் அங்கத்தினர்கள் சம்பந்தமான நீதி முறைகள்.

10. சங்கத்திற்கு எதிரான கட்சிகள்.

இவைகளில் இரண்டாவதான பிரிவில் பாதி-மொக்கம் மிகவும் முக்கியமானது.* இதிலுள்ள விதிகள் 227.

சுள்ள வக்கத்தில் 12 பகுதிகள் இருக்கின்றன. அவை வருமாறு:

1. சாதாரணக் குற்றங்களுக்குரிய நடவடிக்கைகள்.

2. சீர்திருந்துவதும் கழுவாயும் (பிராயச்சித்தமும்).

3. ஷை ஷை

4. சங்க உறுப்பினருள் தோன்றும் மனஸ்தாபங்களைத் தீர்த்து வைத்தல்.

5. பிக்குகளின் தினசரி வாழ்க்கை முறை.

6. வசிக்கும் இடங்களும், அங்கு உபயோகிக்கும் சாமான்களும்.

7. சங்கத்துள் ஏற்படும் தகராறுகள்.

8. பிக்குகளில் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ள வேண்டிய முறைகள்.

9. பாதி-மொக்கக் கூட்டத்திற்கு வராமலிருப்பது பற்றிய நியமங்கள்.

10. பிக்குணிகளின் ஒழுக்க முறைகள்.

11. இராஜகிருகத்தில் நடந்த பிக்குகளின் மகாநாடு.

12. வைசாலியில் நடந்த பிக்குகளின் மகாநாடு.

---

* பாதி-மொக்கம் பற்றி முன் 179-ஆம் பக்கம் பார்க்கவும்.

### அபிதரும பிடகம்

சுத்த பிடகத்தில் கூறப்பெற்றுள்ள தருமத்திற்கு இது விளக்கமாக அமைந்திருக்கின்றது. இதில் தத்துவங்களும் கொள்கைகளும் மிக விரிவான முறையில் வெவ்வேறு தலைப்புக்களில் வகுக்கப் பெற்றுள்ளன. இதிலுள்ள வினா-விடைகள் மேலும் பொருள்களை விளக்குவனவாயுள்ளன.

தம்ம சங்காணி, விபங்கம், தாது கதை, புக்கல பண்ணத்தி, கதா வத்து, யமகம், பட்டானம் ஆகிய ஏழு பகுதிகள் அபிதரும பிடகத்தில் இருக்கின்றன.

உடலுக்கும் மனத்திற்கு முள்ள சம்பந்தங்கள், மனோதரும இயல்புகள், குணத்தினால் மனிதர்களிடம் தோன்றும் வேறுபாடுகள், பிற்காலத்திலே தோன்றிய பௌத்தக் கொள்கைகளுக்கும், போலி வாதங்களுக்கும் பதில்கள் முதலிய பல விஷயங்கள் இதிலே இடம் பெற்றிருக்கின்றன. இதிலுள்ள முதற் பகுதியான 'தம்ம சங்காணி' ஒரு தரும சங்கிரகமே யாகும். இது மிகவும் புகழ் பெற்றுள்ள பகுதி.

### வேறு பாலி நூல்கள்

பிற்காலத்தில் பாலி மொழியில் தோன்றிய பௌத்த நூல்கள் பலப் பல. அவைகளிலே மிகவும் பிரசித்தமானவை 'மிலிந்த பந்ஹா' என்ற மிலிந்தன் பிரச்னைகள், 'விசுத்திமக்கம்' என்ற விசுத்தி மார்க்கம், 'நெத்திப் பகரணம்', 'நிதான கதை' முதலியவையும், பலவகை வியாக்கியானங்களுமாம்.

அவைகளில் 'மிலிந்தன் பிரச்னைகள்' (*மிலிந்த பந்ஹா*) என்ற நூல் பாலி மொழியில் திரிபிடகங்களுக்குப் பின்னால் தோன்றிய நூல்களிலே முதன்மையானது என்று எங்கும் போற்றப் பெறுகின்றது. உண்மையிலேயே இது பெரும் புகழுக்குரிய நூல்தான். கி.மு. முதல் நூற்றாண்டிலே இந்தியாவின் வடமேற்குப் பகுதியையும் ஆப்கானிஸ்தானத்தையும் ஆண்டுகொண்டிருந்த மிலிந்தன் (மினாந்தர்) என்ற யவன மன்னனுடைய வினாக்களும், பௌத்த பிக்குவான நாகசேனருடைய விடைகளும் இதில் அடங்கியுள்ளன. மிலிந்தன் அறிவும், ஆற்றலும், அறவழியில் பற்றுமுள்ளவன். அவனுக்கு முன்னாலேயே கிரேக்க நாட்டில் பௌத்த தருமம் பிரசாரம் செய்யப் பெற்றிருந்தது. அத்தருமத்தைப்பற்றி அவன் மனத்தில் பல ஐயப்பாடுகள் நிறைந்திருந்தன. அவைகளை நீக்கி உண்மையை உணர்ந்து கொள்வதற்காக அவன் பல முயற்சிகள் செய்து கொண்டேயிருந்தான். ஆனால் அதற்கேற்ற ஆசிரியர் மட்டும் அகப்படவில்லை. 'இந்தியாவே வெறுமையாய்க் கிடக்கின்றது...என் ஐயங்களைத் தீர்த்து வைக்கும் ஒரு துறவியையோ, பிராமணரையோ காண முடியவில்லையே!' என்று அவன் வருந்திக் கொண்டிருந்தான். திடீரென்று ஒரு நாள் மகா மேதையாகிய பிக்கு நாகசேனர் தெருவில் பிட்சையேற்றுக் கொண்டிருக்கையில், அவன் அவருடைய அடக்கத்தையும், முகப் பொலிவையும் கண்டு பரசவமானான். மறுநாள் முதலே ஐந்நூறு யவனர்களை அழைத்துக்கொண்டு அவன் அவரிடம் சென்று விவாதிக்கலானான். விவாதம் 'ராஜவாத' முறையி லன்றிப் 'பண்டிதவாத' முறையிலேயே நிகழ்ந்தது. இறுதியில் மிலிந்தன், ஐயம் திரிபுகள் யாவும் தீர்ந்து,

நாகசேனரையே குருநாதராகக் கொண்டு, பௌத்த மும்மணிகளைச் சரணமடைந்தான். பேரருள் வள்ளலான அசோகருக்குப் பின்னால் பௌத்த தருமத்தை வளர்த்துவந்த பெருமை இந்தக் கிரேக்க மன்னனைச் சேர்ந்தது. பிக்குகளுக்காக 'மிலிந்த-விகாரை' ஒன்று அமைத்து, அதை அவன் தன் குருவுக்கு அர்ப்பணித்தான்; பிக்குகளின் சங்கத்திற்குப் பெருந்தொகைகளை அள்ளிக் கொடுத்து வந்தான். பிற்காலத்தில் அவன், தன் மைந்தனிடம் இராஜ்யத்தை ஒப்படைத்து விட்டுத் துறவு பூண்டு, பிக்குவாக வாழ்ந்து, முடிவில் அருகத்து நிலையையும் அடைந்ததாக 'மிலிந்த பந்ஹா' கூறுகின்றது.

'விசுத்தி மார்க்கம்' (-பரிசுத்தமான வழி அல்லது பாதை) என்ற பாலிமொழி நூலை யாவரும் ஒருமுகமாகப் புகழ்ந்துள்ளனர். ஆதிப் பௌத்த இலக்கியத்தின் அமிசங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பகுதி அதிலே அடங்கியிருப்பதாகக் கூறுவதுண்டு. பௌத்தத் திருமுறைகளான திரிபிடகங்கள், அவற்றின் வியாக்கியானங்கள் ஆகியவற்றின் சாரம் இது என்று சொல்லலாம். புத்தர் போதித்த புராதன மார்க்கத்தின் சுருக்கத்தை அப்படியே மாறுபாடின்றி இதில் தெளிவாகக் காணலாம். இதை இயற்றியவர் பேராசிரியர் புத்தகோஷர். பேரறிவாளரான இவர் வட இந்தியப் பார்ப்பனர் என்பது மரபு. மகாபண்டிதராக விளங்கிய இவரை, கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் புத்தகயையில் பௌத்த சங்கத் தலைவராக விளங்கிய மகாஸ்தவிரர் ரேவதர் என்பவர் சங்கத்தில் சேர்த்துத் தரும, விநய நூல்களையெல்லாம் போதித்தார். புத்தகோஷர் இயற்றிய முதல் நூல் 'ஞானோதயம்.' பின்னால் இவருடைய ஞானகுருவின் சொற்படி

இவர், இலங்கைக்குச் சென்று, அங்குள்ள திரிபிடகங்களையும், சிங்கள மொழியிலிருந்த அவைகளின் உரைகளையும் பயின்றுவர முற்பட்டார். இலங்கைப் பிக்குகள் இவரது தகுதியையும் புலமையையும் சோதிக்கக் கருதி, இரண்டு பாலிமொழிச் சூத்திரங்களைக் கூறி, அவைகளை விளக்கும்படி கோரினர். இரண்டு சூத்திரங்களை மட்டும் விளக்குவதற்குப் பதிலாகப் புத்தகோஷர் திரிபிடகம் அனைத்தையுமே விளக்கி ஒரே நூலாக எழுதிவிட்டார். அதுவே 'விசுத்தி மார்க்கம்'. புத்தகோஷர் எழுதிக் குவித்த நூல்கள் பலப் பல. தீக-நிகாயம், மஜ்ஜிம-நிகாயம், சம்யுத்த-நிகாயம், அங்குத்தர-நிகாயம் ஆகிய நான்கு நிகாயங்களுக்கும் இவர் விளக்க உரை எழுதியுள்ளார். ஒரு மனிதர் தம் ஆயுளில் இத்தனை நூல்களை எப்படி எழுத முடிந்தது என்று வியப்புறும்படி இவர் தம் எண்ணற்ற நூல்களின் மூலம் பௌத்த தருமத்திற்கு ஈடில்லாத சேவை செய்திருக்கிறார். பிற்காலத்தில் இவர் கம்போடியா நாட்டில் வசித்திருந்து நிருவாணம் பெற்றதாகத் தெரிகிறது. அங்கே 'புத்தகோஷர் விகாரை' என்ற விகாரையும் இருக்கின்றது.

### மகாயான நூல்கள்

மகாயானத் திரிபிடகங்கள் சூத்திரம், அபிதருமம், விநயம். மகாயானத் திருமுறைகளிலே 86 நூல்கள் இருந்ததாக ' மகாவியுத்பத்தி ' நூல் கூறும்.

மகாயான நூல்கள் வடமொழியிலே யுள்ளவை. அவைகளில் 'லலிதவிஸ்தரம்,' 'சத்தரும புண்டரிகம்,' 'இலங்காவதாரம்,' ' புத்த சரிதை ' முதலியவை

மிகவும் முக்கியமானவையாகக் கொண்டாடப் பெறுகின்றன.

இவற்றுள் 'லலிதவிஸ்தரம்' மகாயானத்திற்கு ஆதார நூலாகக் கொள்ளப் பெறுகின்றது. இதில் புத்தர் பெருமானின் வாழ்க்கை வரலாற்றில் பெரும் பகுதி உளது. பாட்டும் வசனமும் கலந்துள்ள இவ்வரலாறு படிக்க இனிமையாயும், பக்திச்சுவை நிறைந்ததாயும் அமைந்துள்ளது. பெருமானைப் பற்றி ஓரளவாவது தெரிந்து கொள்ளத் தக்க ஐந்து வரலாற்று நூல்களுள் இது சிறப்புடையது. இதன் விவரங்களை அநுசரித்துப் பிற்காலத்தில் ஜாவா தீவிலுள்ள போரோபுதூர் பௌத்த ஆலயத்தில் சிலைகளும் சிற்பங்களும் செய்து வைக்கப் பெற்றுள்ளன.

'சத்தரும புண்டரிகம்' மகாயான பௌத்தத்தை விளக்கும் ஆதி நூல்களுள் மிக முக்கியமானது. சீன மொழியில் இதற்கு 8 அல்லது 9 மொழி பெயர்ப்புக்கள் இருந்தனவாம்; இப்போது மூன்று மட்டுமே அகப்பட்டிருக்கின்றன. சீனாவிலும், ஜப்பானிலுமுள்ள சில பௌத்த சமயப் பிரிவினர்களுக்கு இதுவே ஆதார கிரந்தமாக அமைந்திருக்கின்றது. தியான மார்க்கத்தைப் பின்பற்றும் 'ஜென்' பௌத்தப் பிரிவைச் சேர்ந்த ஆலயங்களில் இது தினந்தோறும் ஓதப்படும். தேரவாத பௌத்தம் சாதாரண அறிவுள்ள பொது மக்களுக்காகப் புத்தரால் உபதேசிக்கப் பெற்றது என்றும், முழு உண்மையும் அதில் விளக்கப்பெறவில்லை என்றும், அதன் மூலம் அடையக்கூடிய நிருவாணம் வெறும் ஓய்வு பெறும் தலந்தான் என்றும், புத்தர்கள் கையாளும் ஸம்யக் - ஸம்போதி மார்க்கத்தின்படி, எல்லாப் பொருள்களையும் சமதிருஷ்டியுடன் சமமாகப்

பார்க்கும் முறையில் முடிவான 'நிர் - விருத்தி' என்ற சாந்தி கிடைக்குமென்றும் இந்நூலுள் விரிவாக விளக்கப்பெற்றிருக்கின்றது.

அசுவகோஷர் இயற்றிய 'புத்த சரிதை' ஓர் அமர காவியம். கவிஞரும் தத்துவ ஞானியுமான இவ்வாசிரியர் மகாகவி காளிதாஸனுக்கும் பாஸனுக்கும் வழிகாட்டியாக விளங்கியவர். இவர் காலத்திற்கு 2 அல்லது 3 நூற்றாண்டுகட்கு முன்பே மகாயான பௌத்தம் பரவியிருந்த போதிலும், இவருடைய காவியத்திலே அது விளக்கம் பெற்றது. 'புத்த சரிதை' பல மொழிகளில் பெயர்க்கப் பெற்றுளது. சீன மொழிபெயர்ப்பில் இக்காவியம் 28 படலங்கள் கொண்டுளது; ஆனால் நம் நாட்டிலுள்ள வடமொழி மூல காவியத்தில் 17 படலங்களே அகப்பட்டுள்ளன. அசுவகோஷர் 'சாரீபுத்திரப் பிரகரணம்' போன்ற சில நாடகங்களையும் இயற்றியுள்ளார்.

'இலங்காவதாரம்' விஞ்ஞான வாதத்தை விளக்கும் நூல். மேலே குறித்தவைகளைத் தவிர அவதானங்கள், அலங்காரங்கள், தோத்திரங்கள், காதைகள், மகாத்மியங்கள், தாரணிகள், தந்திரங்கள் முதலிய மகாயானச் சார்பான நூல்கள் பிற்காலத்தில் எண்ணற்றவையாகப் பெருகிவிட்டன.

### நவீன வெளியீடுகளும் ஆராய்ச்சிகளும்

சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்வரை ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் பாலி மொழியிலுள்ள பௌத்த இலக்கியங்களைப் பற்றிய விவரம் எதுவும் தெரியாமலிருந்தது. வடமொழி மூலத்திலிருந்து சீனா, ஜப்பான் நாடுகளில் மொழி

பெயர்த்துப் பாதுகாக்கப் பெற்றிருந்த நூற்றுக் கணக்கான நூல்களையும் வெளிநாடுகள் அறியாம லிருந்தன. திபேத்து மொழியிலும், இலங்கைச் சிங்கள மொழியிலும் அமைந்திருந்த பௌத்த வரலாறுகள், சாத்திரங்கள், விளக்க உரைகள் யாவும் புதையல் நிதிகளைப் போல் மறைந்தே கிடந்தன. சென்ற நூற்றாண்டின் இறுதியில் சில ஐரோப்பிய அறிஞர்கள் இந்தக் குறைகளைப் போக்க முன்வந்தனர். ஆடம்பரமில்லாமல், அடக்கமாக அவர்கள் செய்துவந்த அரிய பெரிய தொண்டினுல் பௌத்த தரும சம்பந்தமான நூல்கள் பல வெளி வந்தமையால், 2500 ஆண்டுகளுக்குப் பின்னும் புத்தரைப் பற்றியும், அவரது தருமத்தைப் பற்றியும் உலகிலேயே ஒரு புதிய உணர்ச்சியும் எழுச்சியும் தோன்றியுள்ளன. அந்த நூல்களெல்லாம் ஆதியில் தோன்றிய புனித நாடான இந்தியாவும் அவைகளைப் பற்றித் தெரியாமலே இருந்து வந்தது. ஐரோப்பிய அறிஞர்களின் ஓய்வு விடாத உழைப்பையும், பெருமையையும் கண்ட பிறகுதான் நம் நாடும் பௌத்த தரும இலக்கியங்களிலே நாட்டங்கொண்டு விழித்தெழுந்தது. மற்ற ஆசிய நாடுகளிலும் அறிஞர் கள் இருக்கும் நூல்களின் விவரங்களைச் சேகரிக்கவும், ஆராயவும், மொழிபெயர்க்கவும் முன்வந்தனர்.

மேலை நாட்டு அறிஞர்களான ஜெர்மானிய மேதை மாக்ஸ் முல்லர் (Max Muller), பேராசிரியர் வின்ஸெண்ட் பாஸ்போல் (Prof. Vincent Fausboll of Copenhagen), கோஸ்மா டி. கோரோஸ் (Cosma de Koros), ஹாட்ஜ்ஸன் (B. H. Hodgson), யூஜன் பர்னேப் (Eugene Burnouf), ஹெர்மான் ஓல்டன் பர்க் ( Hermann Oldenberg) , கர்னல் ஆல்காட்

( Col. H. S. Olcott) , பேராசிரியர் எச். கெர்ன் ( Prof. H. Kern of Leyden ), பேராசிரியர் ரைஸ் டேவிட்ஸ் ( Prof. T. W. Rhys Davids ), அவருடைய மனைவியார் திருமதி ரைஸ் டேவிட்ஸ் (Mrs. C.A.F. Rhys Davids), சால்மெர்ஸ் பிரபு (Lord Chalmers), வில்லியம் கெய்கர் ( William Geiger ), வுட்வர்ட் (F. L. Woodward), இ. ஹார்டி (E. Hardy), இ. பி. கோவெல் (E. B. Cowell), ஸாமுவெல் பீல் (Samuel Beal), கே.இ. நியூமன் (K. E. Newmann), மினயேவ் (Minayeff), மாக்ஸ் வால்லெஸ்ஸர் (Max Wallesser), ஸில்வெயின் லெவி (Sylvain Levi), ஷெர்பட்ஸ்கி (Th. Stcherbatsky) முதலியோர் பௌத்த இலக்கியப் பொக்கிஷங்களை உலகுக்குத் தேடி அளித்த பெருமைக்கு உரியவர்கள்.

பாஸ்போல் 'தம்மபத'த்தை லத்தீனில் மொழி பெயர்த்ததோடு, நேபாளத்திலிருந்த வடமொழிப் பௌத்த நூல்களையும் வெளியிட்டு வந்தார் (1821—1841). கோஸ்மா டி கோரோஸ் திபேத்திய மொழி பயின்று, அதிலிருந்த இலக்கியங்களை வெளிக் கொணர்ந்ததோடு, அம்மொழிக்கு ஆங்கில அகராதியும் வெளியிட்டார் (1834). பாலி–ஆங்கில அகராதி ஒன்று 1875-ல் ஆர். ஸி. சைல்டர்ஸால் (R. C. Childers) வெளியிடப் பெற்றது. பாலியிலுள்ள மூல நூல்களைப் பரிசோதித்து வெளியிடப் 'பாலி நூல் கழகம்' (Pali Text Society) ஒன்று நிறுவப்பட்டு, திரு. ரைஸ் டேவிட்ஸ் தலைமையில் அரிய வேலைகள் செய்து வந்தது. வேதங்கள் முதலிய வடமொழி நூல்களுக்கு மாக்ஸ் முல்லர் எவ்விதம் தொண்டு செய்தாரோ, அதே போல் பாலி மொழி நூல்களுக்கு ரைஸ் டேவிட்ஸ் செய்துள்ளார். அவர் எழுதிய

'பௌத்தம்', 'பௌத்த இந்தியா' ஆகிய ஆங்கில நூல்கள் மிகவும் பிரசித்தமானவை. அவருடைய மனைவியார் அவருடைய இலக்கிய சேவையில் பங்கு கொண்டிருந்ததுடன், தாமும் பல நூல்கள், கட்டுரைகளை வெளியிட்டு வந்தார். 'தேர காதை', 'தேரி காதை' இரண்டையும் அவர் இனிய செஞ்சொல் நிறைந்த ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். பர்னேப் சமஸ்கிருத நூல்களை ஆராய்ந்து வெளியிட்டதுடன், 'சுத்த நிபாதம்' போன்ற நூல்களை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்துள்ளார். 1877 முதல் 1897 வரை ஆர்வத்தோடு உழைத்துப் புத்த ஜாதகக் கதைகளை அவர் ஆறு பெரிய தொகுதிகளாக வெளியிட்டார்.

ஹெர்மான் ஓல்டன்பர்க் வடமொழியில் மகா விற்பன்னர், வைதிக நூல்களில் அவர் முழுத் தேர்ச்சி பெற்றவர். விநய பிடகம் முழுவதையும் அவர் பதிப்பித்தார். 'பாதி மொக்கம்', 'மகா வக்கம்', 'சுள்ள வக்கம்' ஆகிய நூல்களை, ரைஸ் டேவிட்ஸ் அவர்களுடன் சேர்ந்து, அவர் ஆங்கிலத்தில் எழுதினர். ஜெர்மன் மொழியில் அவர் எழுதிய புத்தர் வரலாறு (The Buddha) 1882-ல் ஆங்கிலத்திலும் வெளி வந்தது. 'ஜாதகமாலை', 'சத்தர்ம புண்டரிகம்' என்ற இரண்டு வடமொழி நூல்களையும் பேராசிரியர் கெர்ன் 1891-ல் ஆராய்ந்து பதிப்பித்தார். பிரெஞ்சுப் பேராசிரியர் ஸில்வெயின் லெவி சமஸ்கிருதப் பௌத்த நூல்களை வெளியிடுவதில் அளவற்ற சேவை புரிந்தவர். அவர் சீன மொழி, திபேத்திய மொழி ஆகியவற்றிலும் பண்டிதர். பன் மொழிப் பாண்டித்தியம் பெற்றிருந்ததால், பதிப்பு வேலையிலும், மொழிபெயர்ப்பிலும் அவர் வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தப் பெற்றது. ரஷ்ய ஆசிரியர்

சிலரும், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கில ஆசிரியர்களும், அமெரிக்க ஹார்வர்டு சர்வகலாசாலையைச் சேர்ந்த சில ஆசிரியர்களும் எழுதிய அரிய மொழி பெயர்ப்பு நூல்கள் அமெரிக்காவிலும் மேலே நாடுகளிலும் அதிகமாய்ப் பரவி அறிஞர்களை விழிப்படையச் செய்து விட்டன. அதனால் ஆராய்ச்சிகளும், வரலாறுகளும் ஏராளமாக வெளிவரலாயின. மக்கள் மனங்களும் பௌத்த தருமத்தில் ஈடுபட ஆரம்பித்தன.

ஐரோப்பிய ஆசிரியர்களின் சலியாத உழைப்பையும், வெற்றிகளையும் கண்டுணர்ந்த நம் நாட்டு ஆசிரியர்களும் பௌத்த இலக்கியங்களிலே ஆர்வங் கொண்டு பணியாற்ற முன்வந்தனர். 1892-ல் கல்கத்தாவில் 'பௌத்த நூல் கழகம்' (Buddhist Text Society) ஒன்று நிறுவப் பெற்றது. சரத் சந்திர தாஸ், டாக்டர் சதீஷ் சந்திர வித்யா பூஷண், தர்மானந்த கோசாம்பி, பி. எம். பருவா, மகா மகோபாத்யாய ஹர பிரசாத் சாஸ்திரி, மகாமகோபாத்யாய விதுசேகர் சாஸ்திரி, டாக்டர் பி. ஸி. லா, ராகுல் சாங்கிருத்யாயனர் முதலிய பலர் பல பௌத்த நூல்களைப் பதிப்பித்தும், மொழிபெயர்த்தும் வெளியிட்டனர். கல்கத்தா சருவகலாசாலையும், பூனா பெர்கூஸன் கல்லூரியும் இத்தொண்டில் பங்கு கொண்டன. பம்பாயிலும், பரோடாவிலும் ஆராய்ச்சிகள் அதிகரித்தன. மொத்தத்தில் நாடு முழுதுமே ஒரு புத்துணர்ச்சி உண்டாகிவிட்டது.

இப்போது இந்திய அரசாங்கமே பௌத்தத் திருமுறைகளையும், பிற நூல்களையும் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் பல நாடுகளிலும் சிதறிக்கிடக்கும் முக்கியமான பௌத்த நூல்கள் ஏராளமாக வெளிவரக்கூடும்.

---

## இந்நூலை எழுத உதவிய நூல்கள்


மணிமேகலை — டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்

சிலப்பதிகாரம் — ,, ,,

திருக்குறள் — திருவள்ளுவர்

வீர சோழியம் — ராவ்சாகிப் தாமோதரம் பிள்ளை பதிப்பு

நீலகேசி — A. சக்கரவர்த்தி நயினார் பதிப்பு

இலக்கிய உதயம் (பகுதி II) — எஸ். வையாபுரிப் பிள்ளை
பி. ஏ., பி. எல்

ஆசிய ஜோதி — கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

புத்த சரித்திரம், பௌத்த தருமம்,
பௌத்த சங்கம் — டாக்டர் உ. வே. சாமிநாதையர்

தமிழ் நூல்களில் பௌத்தம் — திரு. வி. கலியாணசுந்தர

பௌத்தமும் தமிழும் — மயிலை சீனி. வேங்கடசாமி

புத்த தருமச் சுருக்கம் — பிக்கு நாரத

போதி மாதவன் — ப. ராமஸ்வாமி

புத்த ஞாயிறு — ,,

புத்தர் போதனைகள் — ,,

தம்மபதம் அல்லது அறவழி — ம. ரா. அப்பாதுரை
வெளியீ

தம்மபதம் — பிக்கு ஸோமானந்த

ஷை — ப. ராமஸ்வாமி

# Bibliography


*The Buddha-Charita of Aswagosha* — E. B. Cowell

*The Light of Asia* — Sir Edwin Arnold

*The Life of Buddha* — A. Ferdinand Herold

*The Life of Buddha*
(from the Tibetan) — W. W. Rockhill

*The Life or Legend of Gaudama*
(from the Burmese) — R. Rev. Bigandet

*The Life of Buddha in Legend & History* — E. J. Thomas, M. A., D. Litt.

*Gotama The Buddha* — Ananda K. Coomaraswamy & I. B. Horner

*I, The Buddha* — J. Vijayatunga

*Buddhism* — Christmas Humphreys

*Do* — T. W. Rhys Davids

*Do* — Mrs. Rhys Davids

*Do* — Pandit Sheo Narain

*Buddhist Bible*— Dwight Goddard

*Buddhism in Translations* — Henry Clarke Warren

*Buddhist India* — T. W. Rhys Davids

*Buddhist Popular Lectures* — Dr. Annie Besant

*Chinese Buddhism* — Rev. Joseph Edkins, D. D.

*The Essence of Buddhism* — Prof. P. Lakshmi Narasu

*A Buddhist Catechism* — Col. H. S. Olcott

*A Manual of Buddhism* — R. Spence Hardy

*Message of Buddhism* — **Bhikkhu Subadra**

*Buddha & The Gospel of Buddhism* — **Ananda K. Coomaraswamy**

*The Gospel of Buddha* — **Paul Carus**

*The Basic Conception of Buddhism* — **Vidhushekara Battacharya**

*Some Sayings of the Buddha* — **F. L. Woodward**

*A Comparative Study of Jainism & Buddhism* — **B. S. Prasadji**

*The Pilgrimage of Buddhism* — **J. B. Pratt**

*A Study of Caste* — **Prof. P. Lakshmi Narasu**

*Dhammapada* — **F. Max Muller**

*Do* — **Dr. S. Radhakrishnan**

*The Chinese Dhammapada* — **Samuel Beal**

*Mahavamsa* — **William Geiger**

*Discovery of India* — **Pandit Jawaharlal Nehru**

*Glimpses of World History* — ,, ,,

*A Short History of the World* — **H. G. Wells**

*Asoka: The Buddhist Emperor of India* — **Vincent Smith**

*Sacred Books of the Buddhists Series* —

*Sacred Books of the East Series* —

# இதே ஆசிரியரின் இதர நூல்கள்

1. போதி மாதவன் ரூ. 5—0
(புத்தர் வாழ்க்கைச் சரிதை)

2. புத்த ஞாயிறு ரூ. 3—0
(ஆறு தீர்க்கதரிசிகள் வரலாறு)

3. புத்தர் போதனைகள் ரூ. 1—8
(புத்தரின் உபதேசக் களஞ்சியம்)

4. தம்மபதம் ரூ. 1—4
(புத்த தேவரின் 423 உபதேச
ரத்தினங்கள்)

5. **Thus Spake The Buddha** ரூ. 1—8
(ஆங்கிலத்தில்
புத்தரின் மணிமொழிகள்)

**பாரி நிலையம்**
59 — பிராட்வே சென்னை - 1